திருமலை நாயக்கர் வரலாறு

ஆசிரியரின் பிற நூல்கள்

மதுரை நாயக்கர் வரலாறு

வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும்

நல்ல தமிழ் எழுத வேண்டுமா?

கவிஞராக

பேச்சாளராக

வாழ்க்கைக் கலை

திருக்குறளும் புதுமைக் கருத்துகளும்

பன்னிரு கட்டுரைகள்

தமிழிலக்கியம் கற்க

புரட்சிக் கவிஞர்கள்

மறுமலர்ச்சிக் கவிதைகள்

எங்கள் தோட்டம்

திருமலை நாயக்கர் வரலாறு

அ. கி. பரந்தாமனுர், எம். ஏ.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1

இந்நூலின் © காப்பிரைட்டு (உரிமை)
1973க்கு உரியவர் ஆசிரியர் புதல்வர்
அ. ப. சோமசுந்தரன், பி.ஏ. ஆவார்.

விலை ரூ. 5-00

வெளியிட்டோர்:
அல்லி நிலையம்,
18, முத்து முதலி தெரு,
சென்னை - 600007.

அச்சிட்டோர்:
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,
சென்னை-600002.

அணிந்துரை

திருவாளர் இரா. நாகசாமி அவர்கள், M.A.
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
தமிழ்நாட்டரசு, சென்னை-28.

தமிழக வரலாற்றில் ஒரு மாபெரும் தனி அரசராய் ஆண்ட கடைசி இந்து அரசர் என்று கூறும் அளவுக்குச் சிறந்தவர் திருமலைநாயக்கர். மதுரையின் வரலாற்றுடன் இணைந்து நிற்கும் இம்மன்னர் ஆற்றல் மிகுந்தவர் மட்டுமல்லர்; கலை ஆர்வம் நிறைந்தவர். மதுரையின் இன்றைய பெரும் அமைப்புக்குக் காரணமானவர் இவரே எனில் மிகையாகாது. அங்கயற்கண்ணி ஆலயத்தில் அரும்பணியாற்றிய இம்மன்னரது கைவண்ணம் சிற்பங்களாகவும், செப்புத் திருமேனிகளாகவும், பொன் அணிகளாகவும் திகழ்வதை இன்றும் காணலாம். அங்கயற்கண்ணியின் அடியாராகத் திகழ்ந்த இம்மன்னர் ஆலவாயழகரின் கோயில் நிர்வாகத்தைச் சீராக்கினர் என்பர். ஆண்டுதோறும் அங்கயற்கண்ணியிடமிருந்து செங்கோல் பெற்றுத் தன்நாட்டைச் சீராக ஆண்ட இம்மன்னரது உருவச் சிலைகள் பல இன்றும் உள்ளன. புதுமண்டபத்தில் குதிரை மீது அமர்ந்து விளங்கும் இவரது உருவம் ஏற்றம் மிகுந்தது. ஆலவாயழகர் கோயிலில் மனம் லயித்து நின்ற இம்மன்னர், மிகவும் பரந்த சமயநோக்கு உடையவர். ஈசனிடம் எவ்வளவு ஈடுபாடு உண்டோ அவ்வளவு ஈடுபாடு திருமாலிடத்தும் இவருக்கிருந்தது என்பதற்கு அழகர் கோயிலும் திருவில்லிபுத்தூர் ஆலயமும் இன்றும் சான்று பகர்கின்றன. இவ்வளவு பரந்த உள்ளம் உள்ளவரானதால்தான் இவரால் கிறிஸ்தவ சமயத்துக்கும் ஆதரவு அளிக்க முடிந்தது.

இவ்வளவு சிறந்த அரசரைப் பற்றிய நல்ல தமிழ் நூல் ஒன்று இல்லாதிருந்தது ஒரு பெருங்குறையாகவே இருந்தது. அக்குறையை முதுபெருந் தமிழ்ப்புலவர், அ.கி. பரந்தாமனுர் அவர்கள் இந்நூலை எழுதுவதன்மூலம் நீக்கியிருக்கிருர்கள். அவர்கள் வரலாற்றுக்குப் புதியவர்கள் அல்லர்; மதுரை நாயக்கர் வரலாற்றைப் பற்றிய நல்ல சிறந்த நூலை வெளியிட்டு அருந்தொண்டாற்றிய அறிஞர். நல்ல எளிய தமிழில், விருப்பு வெறுப்பின்றி, வரலாற்று நெறியில் நூல்களை எழுத ஆர்வமுள்ளவர்கள், அ. கி. பரந்தாமனுர் அவர்களின் நூலை முன்னேடியாகக் கொள்ளல் வேண்டும். குறையை மிகைப்படுத்தாது, மிகையைக் குறைப்படுத்தாது எழுதும் அவர்களது நெறி செந்நெறி; போற்றத்தகுந்த நெறி. திருமலை நாயக்கரின் வாழ்க்கையையும், அவர் அரசியலையும், கலைப்படைப்புகளையும் திறம்பட உரைக்கும் ஆசிரியர், திருமலை மன்னரிடத்தில் குறைபாடுகளும் உண்டு என்று கூறும்போது ஒரு பெரும் வரலாற்று உண்மையைக் கூறுகிருர். "குறையற்றவர்கள் குவலயத்தில் இல்லை. நீருக்கும் நுரையுண்டு; நெல்லுக்கும் உமியுண்டு" என்று கூறும்போது அவ்வுண்மை உள்ளத்தைத் தொடுகிறது. திருமலை மன்னரின் மறைவு பற்றிய கதைகளைக் கூறி, "அவை வரலாறு அல்ல. அவர் இயற்கையாகவே இறந்தார்" என்று ஆசிரியர் கூறுவதே ஏற்புடையது. ஆசிரியர் நெடுங்காலம் வாழ்ந்து, வரலாற்று நூல்கள் அதிகம் இல்லாத குறையைத் தீர்க்க, அங்கயற்கண்ணியோடு அமர்ந்துள்ள ஆலவாயழகரின் அருளை இறைஞ்சுகின்றேன்.

13-3-1973
சென்னை-28

இரா. நாகசாமி

முன்னுரை

மாமதுரை நன்னாட்டை விஜயநகரப் பேரரசின் மேலாட்சிக்குட்பட்டு ஆளுநர்களாய் ஆட்சிபுரிந்த பதின்மூவர்களுள் ஏழாவது ஆளுநராய் வந்தவர் திருமலை நாயக்கர். இவர் சிதைந்த விஜயநகரப் பேரரசின் தலைவராய் வந்த மூன்றாம் ஸ்ரீரங்கரோடுபோராடி முழுவுரிமை மன்னரானவர். இவர் மதுரை நாட்டை மாட்சியுற ஆட்சி செய்தவராய் விளங்கியதோடு, மாமதுரை நன்னகரைக் கலைநகராகவும் விழாநகராகவும் இலங்குமாறு செய்தவர். இவர் மதுரைத் திருநகரில் தென்னகத்துத் தாஜ்மகால் என்று ஏத்திப் போற்றும்படி வனப்புமிக்க பெரிய அரண்மனையைக் கட்டியவர். இவர் தமிழகத்தில் அழகு மிக்க மைய மண்டப முள்ள பெரிய தெப்பக் குளத்தையும் வெட்டுவித்தவர். இவர் கலைவளம் மிக்க புதுமண்டபத்தை எழுப்பியவர். இவர் சிவராசதானியாகிய மதுரையம்பதியில் மீனாட்சியம்மன் திருக்கோயில் பெருவிழாவையும், அதைத் தொடர்ந்து வையையாற்றில் கள்ளழகர் எழுந்தருளும் சித்திரைப் பெருவிழாவையும் ஏற்படுத்திச் சைவ-வைணவ சமரசப் பான்மையை மக்கள் மனத்தில் நிலவச் செய்தவர். இவர் தமது பிறந்த நாளை என்றும் நின்று நிலவுமாறு தைப்பூசத் தெப்பத் திருவிழாவைச் சித்திரைப் பெருவிழாவுக்கு அடுத்த திருவிழாவாக இருக்குமாறு ஏற்பாடு செய்தவர். இத்தகைய பெருஞ்செயல்கள் செய்த திருமலை நாயக்கரின் வரலாற்றை மாணவர்களும் பொதுமக்களும் மதுரையைக் கண்டுகளிக்க வருபவர்களும் நன்கு தெரிந்துகொள்ளும்படி இந்நூல் எளிய இனிய நடையில் படங்களுடன் வெளிவந்துள்ளது.

திருமலை நாயக்கர் வரலாற்றை நன்கு புரிந்துகொள்ளும் பொருட்டுப் பாண்டிநாட்டு வரலாறும், விஜயநகர ஆட்சி

தமிழகத்தில் புகுந்தவிதமும், திருமலைக்கு முன்னிருந்த ஆட்சியாளர் அறுவரைப் பற்றிய சிறுகுறிப்புகளும், திருமலை நாயக்கர் காலத்து அரசியல் பொருளாதார சமுதாய கல்வி நிலையைப்பற்றிய செய்திகளும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

இந் நூலுக்குத் தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பொதுவாக அரும்பணி ஆற்றிவருபவரும், சிறப்பாக மதுரைத் திருமலை நாயக்கர் மகாலைக் காண்பவர்கள் நன்கு தெரிந்துகொள்ளுமாறு விளக்கக் குறிப்பேடுகள் வெளியிட்டு சிறப்புப் பணிபுரிந்து வருபவருமாகிய பெருந்தகை தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி, M.A., அவர்களை அணிந்துரை எழுதித் தருமாறு வேண்டிக் கொள்ள, அவர்களும் அன்போடு இசைந்து அணிந்துரை எழுதித்தந்துள்ளார்கள். அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18, முத்து முதலி தெரு,
சென்னை - 600007.
13-4-1973

அன்புள்ள,
அ. கி. பரந்தாமனார்.

பொருளடக்கம்

தலைப்புகள்		பக்கங்கள்
1.	பாண்டி நாட்டு வரலாறு	5
2.	பாண்டி நாட்டின் மீது முஸ்லீம் படையெடுப்பும் விஜய நகர ஆட்சி தமிழகத்தில் ஏற்படுதலும்	17
3.	திருமலைக்கு முன்னுண்ட மதுரை நாயக்கர்கள்	33
	திருமலை நாயக்கர்	
4.	திருமலையும் நாடும் தலைநகரும்	46
5.	முதல் மைசூர்ப் போர்	56
6.	திருவாங்கூர் மீது படையெடுப்பு	63
7.	சேதுபதியுடன் போர்	65
8.	மூன்றும் ஸ்ரீரங்கரோடு போர்	75
9.	மூக்கறுப்புப் போர் அல்லது இரண்டாவது மைசூர்ப் போர்	91
10.	கோயில் திருப்பணிகள்	99
11.	மதுரைக் கோயில் சீர்திருத்தம்	103
12.	கட்டிய அரிய கட்டடங்களும் வெட்டுவித்த தெப்பக்குளமும்	112
13.	அன்றாட வாழ்க்கையும் இறுதிக் கால முடிவு பற்றிய ஆராய்ச்சியும்	131
14.	நாயக்கரும் ஐரோப்பியரும்	142
15.	கிறிஸ்தவ சமயப் பணியும் நாயக்கர் மேற்கொண்ட நெறியும்	146
16.	திருமலை நாயக்கரின் பண்பாராய்ச்சி	154
17.	திருமலை நாயக்கர் காலத்து அரசியல் முதலிய பொதுச் செய்திகள்	166

படங்கள்

திருமலை ஆட்சிக்குட்பட்ட மதுரை நாடு
திருமலை நாயக்கர்
வண்டியூர்த் தெப்பக்குளம்
மஹாலின் சிதைந்த பகுதி
நாடக சாலை
சொர்க்க விலாசம்
மஹாலின் வடபகுதி
புதுமண்டபத்தின் உட்புறத் தோற்றம்

1. பாண்டி நாட்டு வரலாறு

முன்னுரை :

தமிழ்த் திருநாடு உலகத்திலே பழம் பெருமை மிக்க பெருநாடு. இது தொன்மை மிகுந்த சீனநாடு, எகிப்து நாடு, கிரேக்க நாடு, உரோம நாடு ஆகிய இவற்றை ஒத்த அல்லது மிகுந்த தொன்மை வாய்ந்த நாடு என்பது உலகறிந்த உண்மை. இத் திரு நாட்டிற்குப் பண்டைக் காலத்தில் தமிழகம் என்று பெயர் வழங்கி வந்ததைச் செந்தமிழ் இலக்கியங்களில் காணலாம். ''வையகவரைப் பில் தமிழகம் கேட்ப' என்று புறநானூற்றுப் பாடலும், 'இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க' என்று பதிற்றுப் பத்தும், 'இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய' என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும், ''சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்' என்று தமிழ் மக்களுக்கு அணியென இலங்கும் மணிமேகலையும் குறிப்பிடுவதால் இவ்வுண்மை புலனாகிறது. இத் தமிழகத்தை ஒல்காப் புகழ் மிக்க தொல்காப்பியப் பாயிரம், 'வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று பாராட்டு கிறது. இருபதாவது நூற்றாண்டில் வாழ்ந்த நம் தேசீய மக்கட் பெருங் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரோ, 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்று தம் உணர்ச்சியைத் தெரிவித்ததோடு நில்லாது, வீரம் செறிந்த தமிழ் நாடு என்றும், செல்வம் எத்தனை உண்டு புவி மீதோ அவை யாவும் படைத்த தமிழ்நாடு என்றும், கல்வி சிறந்த தமிழ்நாடு என்றும், கம்பன் பிறந்த தமிழ்நாடு என்றும், பல்விதமான சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும்

தமிழ் நாடு என்றும், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்றும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி யாரம் படைத்த தமிழ்நாடு என்றும், சிங்களம் புட்பகம் சாவகம் ஆதிய தீவு பலவினுஞ் சென்றேறி அங்குத் தங்கள் புலிக் கொடியும் மீன் கொடியும் நின்று சால் புறக் கண்டவர் தாய் நாடு என்றும், சீனம் மிசிரம் யவனரகம் இன்னும் தேசம் பலவும் புகழ் வீசிக் கலை ஞானம் படைத் தொழில் வாணிகமும் மிக நன்று வளர்த்த தமிழ்நாடு என்றும் தமிழகத்தின் தனிச் சிறப்புகள் பலவற்றை மிகமிக இனிமையாயும் இரத்தினச் சுருக்கமாயும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இத்தகைய தமிழகம் பண்டைக் காலத்தில் சேர சோழ பாண்டி மண்டங்களாய் பிரிந்து முறையே சேர சோழ பாண்டிய அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இவ்வுண்மையைத் தொல்காப்பியமும், 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடுவதால் அறிய லாகும். இம்மூன்று மண்டலங்களும் மிகப் பழமை யானவை என்பதில் ஐயமில்லை. தொண்டை நாடு முதலில் சோழ நாட்டின் பகுதியாய் இருந்து பிற் காலத்தில் தனி நாடாகிவிட்டது. தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள் அடங்கிய கொங்குநாடு சேரர்க்கும் பாண்டியர்க்கும் கைமாறிக் கொண்டேயிருந்தது. இக்கால மலையாள நாடு பண்டைச் சேர நாடாகும். தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை ஆகிய மாவட்டங்கள் அக்கால சோழ நாடாகும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் அடங்கியிருந்த பகுதியே அக்காலப் பாண்டி நாடு.

பாண்டி நாட்டின் தொன்மை :

கி. பி 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ வாழ்ந்த மாணிக்கவாசகர், 'பாண்டிநாடே பழம்பதி' என்று தமது திருவாசகத்தில் பாடியருளினர். அவர் கூறியது மிகமிக உண்மையாகும். கி. மு. 5-ஆம் நூற்றாண்டிலோ கி. மு. 4-ஆம் நூற்றாண்டிலோ நூல் வடிவில் வந்த இராமாயண பாரத இதிகாசங்கள் சேர சோழ பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகின்றன. இலங்கையின் பண்டை வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்னும் நூல் கி. மு. 478-ல் இலங்கையை ஆண்ட வேந்தனை விசயன், ஒரு பாண்டியன் மகளை மணந்ததாய்க் கூறுகிறது. கி. மு. 4-ஆம் நூற்றாண்டினரான கௌடில்யர் தமது அர்த்த சாத்திரத்தில் பாண்டி நாட்டு முத்தையும் மென்துகிலையும் குறிப்பிட்டிருக்கிறார். கி. பி. 350-ல் வாழ்ந்தவரும் தமிழ்நாட்டினராய்க் கருதப்படுபவருமான காத்தியாயினர் தமக்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த பாணினி இயற்றிய வடமொழி இலக்கணத்திற்கு எழுதிய உரையில் 'பாண்டிய' என்னும் சொல்லுக்கு இலக்கணக் குறிப்புக் கூறியுள்ளதாய் அறிகிறோம். கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் மகத நாட்டை மாட்சியுற ஆட்சி புரிந்த புத்த சமயப்பெரு வேந்தரான அசோகர் தமது கற்றூண் கட்டளைகளில் சேர சோழ பாண்டியர்களைத் தமது நட்பு அரசர்களாய்க் குறிப்பிட்டுள்ளார். கலிங்க நாட்டில்—இக்கால ஒரிசாவில்—ஆட்சி செய்த காரவேலர், கி. பி. 150-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு மன்னர் ஒருவரைப் போரில் வென்ற செய்தி கூறப்படுகிறது. பெரிபிளஸ் (கி. பி. 70) நூலின் ஆசிரியர் பாண்டி நாட்டுக் கொற்கைத் துறையில் முத்துக் குளிப்பதைக் கூறியுள்ளார். கி.பி. 79-ல் இறந்தவராகக் கூறப்படும்

உரோமநாட்டு வரலாற்றுசிரியரான பிளினி என்பார், தம் நாட்டின் பொன்னும் வெள்ளியும் தமிழகத்திற்குப் போய்க் குவிவதைக் குறைகூறும் செய்தியையும் அறிகிறோம்.

உலகப் பொது நூலாகிய திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர்,

"வழங்குவ(து) உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று"

என்னும் குறளுக்குத் தொன்று தொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார், தாம் கொடுக்கும் பொருள் பண்டையில் சுருங்கிய விடத்தும் தம் பண்புடைமையின் நீங்கார் என உரை கூறித் 'தொன்று தொட்டு வருதல்' என்பதை விளக்குமிடத்து, "சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று அக்காலச் செவிவழிச் செய்தியை அறிந்து குறிப்பிட்டிருக்கிறார். இது மிகைபடக் கூறப்பட்டிருப்பினும் சேர சோழ பாண்டியர் மிகத் தொன்மையான மரபில் வந்தவர்கள் என்பது வெள்ளிடை மலை என விளங்கும். இதுகாறும் கூறிய சான்றுகளால் பாண்டியர் குடியும், அக்குடியினர் ஆண்ட பாண்டி நாடும் தொன்மை வாய்ந்தவை என்று நன்கு அறியலாகும்.

பாண்டி நாட்டுச் சிறப்பு :

இத்தொன்மை மிக்க நன்னாட்டைப் பண்டைக் காலத்தில் ஆண்டவர்கள் பாண்டியர்கள். பாண்டியர் ஆண்ட நாடு பாண்டி நாடு. இதில் இன்றைய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் அடங்கியிருந்தன. பாண்டி நாட்டின் அக்காலப் பரப்பு ஐம்பத்தாறு காதம் என்று தனிப் பாடல்

ஒன்று குறிப்பிடுகிறது. தமிழிலக்கியங்களும் இலக்கணங்களும் பாண்டி நாட்டைச் செந்தமிழ் நாடென்றும் பாண்டியனைத் தமிழ்நாடன் என்றும் கூறுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மீனாட்சி அம்மையார் கன்னியாய் இருந்தபோது இந்நாட்டை ஆண்டதாய்த் திருவிளையாடற் புராணம் கூறுவதால், இதற்குக் கன்னி நாடு என்னும் பெயரும் வழங்கி வரலாயிற்று. இப் பாண்டி நாட்டின் தலைநகரம் பெரும்புகழ் பெற்ற மதுரை நகரமாகும்.

இந்நாடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களையும் கொண்டது. பாண்டி நாட்டில் பெரும் பெயர் முருகன் திருப்பதியாகிய திருப்பரங்குன்றமும், பெருமாள் திருப்பதியாகிய திருமாலிருஞ் சோலைமலையும், அகத்தியர் இருந்ததாய்க் கதை கூறும் பொதிய மலையும், அருவிக்கும் இயற்கையழகுக்கும் இருப்பிடமான குற்றாலத் திரிகூடமலையும், திருச்செந்தூர்க் கடற்கரையும், பாரி ஆண்ட பறம்பு நாடும் இந்நாட்டில் உள்ளன. இந்நாட்டை வளம்படுத்தும் தலைசிறந்த ஆறுகள் வையையும் தாமிரபருணியுமாகும். சிலப்பதிகாரம் வையையை 'உலகு புரந்தூட்டும் உயர் பேர் ஒழுக்கத்துப் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி வையை என்னும் பொய்யாக் குலக்கொடி' என்று சிறப்பித்துப் பாடுகிறது. பரிபாடல் என்னும் நூலில் இருக்கும் எட்டுப் பாக்களில் அக்கால வையை ஆற்றின் புதுப்புனல் வெள்ளச் சிறப்பையும் அக்கால மதுரை நகர ஆடவரும் மகளிரும் அவ்வாற்றுப் புனலில் நீராடி மகிழ்ந்ததையும் காண்கிறோம். இவ்வாற்றின் நீளம் 165 மைல் ஆகும். இது மேற்கு மலைத் தொடர்ச்சியில் இருக்கும் ஏலக்காய் மலையில் வருஷநாடு என்னும் பள்ளத்தாக்கில் தோன்றி, வடக்கிழக்கே நிலவளம் மிகுந்த கம்பம் பள்ளத்தாக்கு வழியே ஓடுகிறது; பின்பு

தென் கிழக்காய்த் திரும்பிச் சோழ வந்தான், மதுரை, பரமக்குடி ஆகியவற்றின் வழியே சென்று, இராமநாத புரத்தின் தென்கிழக்கே 11 கல் தொலைவிலிருக்கும் பெரிய ஏரியில் கலந்து பாக் சல சந்தியில் விழுகிறது. சிற்ருறு என்னும் நிலையில் வருஷ நாட்டுப் பள்ளத் தாக்கில் தோற்றம் கொண்ட வையையாருனது முல்லையாறு, சுருளியாறு முதலிய சிற்ருறுகளின் சேர்க்கையால் பேராருக ஓடி மதுரை மாவட்டத் தையும் இராமநாதபுரத்தில் ஒரு பகுதியையும் வளம் செய்கிறது. இன்று வற்றிப்போயிருப்பினும் வையை யாற்று அணையால் அது பாண்டி நாட்டுப் பகுதிகளை வளம்படுத்தி வருகிறது. தாமிரபருணியாறு நெல்லை மாவட்டத்தில் ஓடும் பேராறு. இதனைத் தண் பொருநை என்பர். இது மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த பெரிய பொதிகை என்னும் அகத்திய மலையில் தோன்றி மன்னுர்குடாக் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றின் நீளம் 75 மைல். இந்த ஆறு 1750 சதுர மைல் பரப் புடைய நிலப் பகுதியைச் செழிப்பாக்குகிறது. தென்காசி, அம்பா சமுத்திரம், திருநெல்வேலி முதலிய ஊர்களின் வழியே ஓடுவது இந்த ஆறுதான்.

இந்த ஆறுகளாலும் வேறு பல சிற்ருறுகளாலும் பாண்டி நாடு வளம் மிகுந்து விளங்குகிறது. ஒருபிடி படியும் சிறிடம் எழுகளிறு புரக்கும் நிலவளம் வாய்ந்த சோழநாட்டைப் போலப் பாண்டிநாடு பெரு வள முள்ளதாய் இல்லாவிடினும், சேரநாட்டையும் தொண்டை நாட்டையும் விட வளம்மிக்கது என்பதில் ஐயமில்லை,

பாண்டிய வேந்தர்கள் பெருமை :

பாண்டிய வேந்தர்கள் வீரத்திலும் ஈரத்திலும் அறமுறையிலும் ஆட்சித் திறனிலும் சிறந்து விளங்

கின்றர்கள். பாண்டிநாட்டை ஆண்ட மன்னர்கள் வரலாறு,தொடர்ச்சியாகக் கூறுதற்குச்சான்றுகள் இல்லையாயினும் சங்க இலக்கியத்தினின்றும் பிற்காலக் கல்வெட்டுகளிலிருந்தும் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு பார்க்கும்போது, அவர்கள் சிறப்புக் குன்றின் மேலிட்ட விளக்குப் போல ஒளிபெற்று இலங்குவதைக் காணலாம். சங்ககாலம் என்பது வரலாற்றுக்காலம்; கி. பி. முதல் மூன்று நூற்றுண்டுகளாகும். இக்காலம் ஆரியர்கள் வடநாட்டிலிருந்து குழு குழுவாய் வந்து தங்கள் வேத மதத்தைத் தமிழகத்தில் பரப்பக் குடியேறி நிலைத்து விட்டகாலம். இக்காலம் தமிழகத்தில் இலக்கியத்திலும் வாணிகம்முதலியவற்றிலும் பொற்காலம். இக்காலத்தில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இளம் பெருவழுதி, பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், உக்கிரப் பெருவழுதி ஆகிய குறிப்பிடத்தக்க பாண்டிய வேந்தர்கள் பாண்டி நாட்டைச் சீரும்சிறப்புமுறக் குளம் வெட்டி வளம் பெருக்கிக் குடிமக்களுக்கு இடையூறு வாராதவாறு வீரம் மிக்கவர்களாயும் ஈரமுள்ளவர்களாயும் மாண்புடன் ஆண்டார்கள்.

சங்ககாலம் ஏறக்குறையக் கி. பி. 250-ல் முடிவடைந்தது. ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் பாண்டி நாட்டில் இருள் சூழ்ந்துவிட்டது. பாண்டிநாடு ஏறக்குறையக் கி. பி. 300 லிருந்து களப்பிரர் என்ற கன்னட இனத்தவர்களுக்கு அடிமைப்பட்டு, அவர்களுடைய ஆட்சியில் ஏறத்தாழ கி. பி. 600 வரை சிக்குண்டு கிடந்தது. இக்களப்பிரர்கள் முதலில் பௌத்தத்தையும் பின்பு சமணத்தையும் ஆதரித்ததால் சைவமும் வைணவமும் மூலையில் முடங்கி விட்டன.

பாண்டியன் கடுங்கோன் என்ற வீரமன்னன் தோன்றிப் பாண்டிநாட்டைக் களப்பிரரிடமிருந்து மீட்டுக் கி. பி. 575 முதல் 600 வரை மாட்சியுற ஆட்சி புரிந்தான். இவனே இடைக்காலத்தில் முதல் பாண்டியப் பேரரசுக்கு அடிகோலியவன். இவன் மகன் மாறவர்மன் அவனி சூளாமணி (கி. பி. 600-625) இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனுக்குப் பின் சடையவர்மன் அரிகேசரி கி பி. 640-ல் பட்டம் எய்தி முப்பது ஆண்டுகள் நல்லாட்சி புரிந்தான். கூன் பாண்டியன் எனவும் நெடுமாறன் எனவும் குறிப்பிடப்படுபவன் இவனே. சுந்தர மூர்த்தி நாயனுர் இவனை 'நின்ற சீர் நெடுமாறன்' என்று தமது திருத்தொண்டத் தொகையில் அறுபான் மும்மை அடியார்களுள் ஒருவனுகக் குறிப்பிட்டுள்ளார். இவன் பெருவீரனுக விளங்கியதோடு அரிய சிவனடியானுகவும் இலங்கியவன். இடைக்காலப் பாண்டியப் பேரரசை விரிவடையச் செய்தவனும் இவனே. இவன் மனைவி, "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்குலக்கொழுந்து" என்று சேக்கிழாரால் பாராட்டப்படும் மங்கையர்க்கரசி. இவ்வம்மை மணிமுடிச் சோழன் மகள்; சைவசமயத்தைப் பாதுகாத்த செல்வி. திருஞான சம்பந்தர் இவ்வம்மையை, 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி பங்கயச் செல்வி பாண்டிமாதேவி" என்று தேவாரத்தில் பாராட்டிப் பாடியுள்ளார். இவ்வம்மை 'மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய்' விளங்கினுள். இப்பாண்டியன் முதலில் சமணனுகிப் பின்பு ஞானசம்பந்தப் பெருமானுல் திரும்பவும் சைவ சமயத்தைத் தழுவினவன். இவன் காலத்தில் பாண்டி நாட்டுக்கு வருகை புரிந்த சீன வழிச்செலவினன் யுவான் சுவாங் பாண்டி நாட்டு

மக்கள் கரிய நிறத்தினராயும் கடுமையானவர்களாயும் அவசரப் பண்புள்ளவர்களாயும் பண்பாட்டைப் பற்றிக் கவலையற்றவர்களாயும், ஆனால் வாணிகத்தில் சிறந்தவர்களாயும் இருந்ததாய்க் குறிப்பிட்டுள்ளான். இச் சீன வழிச்செலவினன் பேரறிவுமிக்க துறவியாவான்; புத்தர் பெருமான் பிறந்த நாட்டைக் கண்ணுரக் காணவேண்டுமென்று கி. பி. 629-ல் இந்தியாவிற்கு வந்து பல இடங்களைப் பார்த்துவிட்டுச் சீன நாட்டுக்குக் கி. பி. 645-ல் திரும்பியவன். இத்துறவி எழுதிவைத்த குறிப்புகள் நம் நாட்டு வரலாற்றை அறியத் துணைபுரிகின்றன. நெடுமாறனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த வரகுண பாண்டியன் குறிப்பிடத்தக்கவன். இவன் இராசசிம்மன் மகன்; கி. பி. 792-ல் முடிசூடி நாற்பத்து மூன்று ஆண்டுகள் நாட்டை ஆண்டவன். இவனைக் "கொற்றவர்கள் தொழுகழற்கால் கோ வரகுண மகாராசன்" என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் பாராட்டுகின்றன. 'வரகுணனும் தென்னவன் ஏத்தும் சிற்றம்பலத்தான்' என்றும், 'வரகுணன் வெற்பின் வைத்த' என்றும் மாணிக்கவாசகர் தமது திருக்கோவையாரில் முறையே 306வது பாட்டிலும் 327வது பாட்டிலும் குறிப்பிட்டுள்ளார். இவன் சோழநாட்டையும் தொண்டை மண்டலத்தின் தென்பகுதியையும் வென்று தன் பேரரசை மிகவும் விரிவடையச் செய்த பெருவீர மன்னன்; சைவ சமயத்திருவேந்தன்; திருக்கோயிலைத் தூய்மையாய் வைத்திருப்பதில் முனைந்து நின்ற பெரியோன்.

3 பிற்காலப் பாண்டியர்களுள் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவன் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியவன். இவன் கி. பி. 1251-ல் அரியணை ஏறிக் கி. பி. 1268-ல் இந்நிலவுலகை விட்டு மறைந்தான்.

இவன் பிற்காலப் பாண்டிய மன்னர்களுள் இரண்டாவது பேரரசின் ஆதிக்கத்தைப் பெருக்கி நெல்லூர், கடப்பை மாவட்டங்கள் வரையில் தென்னகத்தைத் தன்னக மாக்கிப் பேரரசை விரிவாக்கி மாற்றலரும் போற்றுமாறு வாழ்ந்த தலைசிறந்த வேந்தர் திலகமாவான். இவன் காலத்தில் பாண்டி நாட்டின் புகழ் உச்சநிலையடைந்தது. பெரும் புகழ்பெற்ற சோழர்கள் இவனால் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனார்கள். ஹொய்சளர்கள் மைசூர்ப் பகுதியில் ஆட்சி புரிந்தவர்கள். அவர்கள் தமிழ்நாட்டுக் காவிரிக் கரையிலும் நுழைந்து திருவரங் கரத்துக்கு அருகிலிருக்கும் கண்ணனூர்க் குப்பத்திலும் தங்கள் ஆட்சியை நிறுவியிருந்தார்கள். இவ்வீர மன்னன் அந்த ஹொய்சளர்களைக் கண்ணனூரை விட்டுத் துரத்தி மைசூர்ப் பகுதிக்குள் அடங்கி முடங்கிக் கிடக்குமாறு செய்தான்; தொண்டை நாட்டுக் கச்சி நகரைக் கைப்பற்றி அதனைப் பாண்டியப் பேரரசின் இரண்டாவது கோநகரமாக்கினான்; இலங்கையைத் தன் கீழ் அடக்கித் திறைப் பணம் கட்டுமாறு செய்தான்; சேர மன்னர்களைச் சிற்றரசர்களாக்கிக் கப்பம் செலுத்தும்படி அடக்கி வைத்திருந்தான். இவ்வாறு சடையவர்மன் சுந்தர பாண்டியன் பல நாடுகளை வென்று, "எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டியதேவர்" என்று வழங்கும்படியாய்ப் புகழ் பெற்று ஒப்பாரும் மிக்காரும் இன்றிப் பெருவேந்தனும் சமயப் பெருநோக்குக் கொண்டவனும் அரிய வீர மன்னனும் விளங்கி மறைந்தான்.

முதலாம் சுந்தர பாண்டியனுக்குப்பின் அரசுக் கட்டில் ஏறிய பெருமன்னன் வீரவேந்தன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனாவான். இம்முடி வேந்தன் கி. பி. 1268 முதல் கி. பி. 1308 வரை சீரும்

சிறப்புமாகப் பேரரசை மாட்சியுற ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில் பாண்டிய நாடு செழிப்புற்று விளங்கியது. முதலாம் சுந்தர பாண்டியனைப் போலவே இவனும் பெருவீர மன்னனாக விளங்கினான். இவன் கீழ்ச் சிற்றரசர் பலர் பேரரசின் பற்பல பகுதிகளை ஆண்டு வந்தனர். இக்குலசேகரன் கி. பி. 1279-ல் ஹொய்சள வேந்தனாகிய இராமநாதனையும் சோழ நாட்டு மன்னனான மூன்றாம் இராஜேந்திரனையும் ஒருங்கே வென்றான். இப்பெரு வெற்றியால் ஹொய்சளர் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழகப் பகுதிகளும் சோழ நாடும் பாண்டியப் பேரரசிற்குள் புகுந்து இணைந்து விட்டன. இவ்வெற்றியுடன் இவன் நின்றுவிடவில்லை. இலங்கையையும் இவன் வென்று அந்நாட்டில் இருந்த புத்தபிரானின் நினைவுச் சின்னமாகிய அப்பெருமானின் பல்லையும் கைப்பற்றிப் பாண்டி நாட்டிற்குக் கொண்டு வந்துவிட்டான். இது முதலாம் புவனைக்க பாகு என்ற இலங்கை வேந்தன் காலத்தில் கி.பி. 1284-ல் நிகழ்ந்தது. இருபது ஆண்டுகள் ஈழநாடாகிய இலங்கை குலசேகரன் ஆட்சியில் இருந்து வந்தது. கி. பி. 1303-ஐ அடுத்து ஈழநாட்டு அரியணை ஏறிய மூன்றாம் பராக்கிரமபாகு தான் தெய்வமாய்ப் போற்றிவந்த அறம் வளர்த்த அண்ணலின் சின்னத்தை, புத்தபிரான் பல்லைப் பாண்டி நாட்டிற்கு வந்து குலசேகரனின் திருவடியை வணங்கி வேண்டிப் பெற்றுச் சென்றான். குலசேகரன் மறைவுக்குப் பின் பாண்டி நாட்டில் நிகழ்ந்த குழப்பத்தால் ஈழநாடு இழந்திருந்த உரிமையை மீட்டுக் கொண்டது. இவன் காலத்தில் பாண்டி நாட்டிற்கு வருகை புரிந்த இத்தாலி நாட்டு வேனிஸ் நகரத்தவனான மார்க்கபோலோ இவனது ஆட்சியின் மாட்சியை மிகவும் சிறப்பித்துக் குலசேகரன் நடுவுநிலை தவறாது செங்கோல் செலுத்திய

பெருவளம் மிக்க அருந்திறல் மன்னன் என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளான். அக்காலத்தில் பாண்டி நாட்டிற்கு வந்த வாசப் என்பவனும் இவ்வேந்தன் ஆட்சியைப் புகழ்ந்திருப்பதோடு இம்மன்னன் தலை நகரில் ஆயிரத்திருநூறு கோடிப் பொன்னையும் முத்துகளையும் வைத்திருந்தான் என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். ஒரு பொன் என்பது நான்கு குன்றி மணி எடையுடையது.

இத்தகைய பெருவீரனை பாண்டியனோடு இரண்டாவது பேரரசு அடியோடு மறையும் அழிவுப் பாதையில் அடியெடுத்து வைக்கத் தொடங்கிவிட்டது. மாற்றார் அஞ்சி நடுங்கிய மாவீரன் முடிவும் போற்றத்தகாத முறையில் ஏற்பட்டுவிட்டது. குலசேகர பாண்டியனுக்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்று இரு புதல்வர்கள் இருந்தார்கள். முன்னவன் பட்டத்து மனைவிக்குப் பிறந்தவன்; பின்னவன் காதற் கிழத்திக்குத் தோன்றியவன். இவ்விருவருள் வீரபாண்டியனே ஆண்மையும் ஆட்சித் திறமையும் வாய்ந்தவனாய் இருந்தான். அதனால், நாட்டு நலன் கருதிய குலசேகரன் தன் காதற் கிழத்திக்குப் பிறந்த வீரபாண்டியனுக்குக் கி.பி. 1296-ல் இளவரசுப் பட்டம் கட்டிவைத்தான். கோப்பெருந் தேவியின் மகனான சுந்தரபாண்டியனோ தன் தந்தையின் செயலை வெறுத்து உற்ற தந்தை என்றும் கருதாது அற்றம் பார்த்திருந்து கி. பி. 1310-ல் மாறவர்மன் குலசேகரனைக் கொன்றுவிட்டான். மாவீரன் மாண்டான். பாண்டி நாட்டில் அரசுரிமைப் போர் தொடங்கிவிட்டது. இவ்வரசுரிமைப் போரால் தண்ணார் தமிழ் வளர்த்த தண்பாண்டி நன்னாட்டில் ஈண்டிய புகழ் மிக்க பாண்டியர் ஆட்சி மாறிவிட வழியும் ஏற்பட்டுவிட்டது.

2. பாண்டிய நாட்டின்மீது முஸ்லீம் படையெடுப்பும் விஜயநகர ஆட்சி தமிழகத்தில் ஏற்படுதலும்

மாலிக்கபூர் படையெடுப்பு (1311) :

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரத நாட்டின் வடக்கே உள்ள தொன்னகராகிய டில்லியில் முஸ்லீம் ஆட்சி தொடங்கிய போதிலும் ஒரு நூற்றாண்டு வரையில் அம்முஸ்லீம் சுல்தான்களின் கவனம் எப்படியோ தென்னகத்தின் மேல் செல்ல வில்லை. அல்லாவுதீன்தான் தென்னகத்தின்மீது முதல் முதலாகப் படையெடுத்தவன். கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் தென்னகத்தின் வடபகுதியை யாதவப் பேரரசும் காகதீயப் பேரரசும், தென்பகுதியை ஹொய் சளப் பேரரசும் பாண்டியப் பேரரசும் பகிர்ந்துகொண்டு முழுவுரிமையோடு ஆட்சி புரிந்துவந்தன. தென்னகத்து மன்னர்களிடமும் கோயில்களிலும் பொன்னும் பொருளும் மிகுதியாய் இருந்தன. இச்செல்வ நிலையை அறிந்த அல்லாவுதீன் முதலில் யாதவர் நாட்டின் மீதும் பின்பு காகதீய நாட்டின் மீதும் தன் படைத் தலைவனை அனுப்பி வெற்றிகண்டு பொன்னும் பொருளும் பெற்றான். தென்னகத்தில் வெற்றிமேல் வெற்றி கண்ட அல்லாவுதீன் மேலும் பொன்னையும் பொருளையும் கொள்ளையடித்து வருமாறு தன் படைத் தலைவனான மாலிக்கபூரை ஹொய்சள நாட்டின்மீது படை யெடுத்துச் செல்லுமாறு அனுப்பினான். அப்போது

ஹொய்சள நாட்டை ஆண்டவன் மூன்றும் வல்லாளன். இவன் பெருவீரனுயினும் பெரும் படையுடன் வந்த மாலிக்கபூருடன் மாறுபட்டு வீறுகொண்டு போர் புரியத் துணியாமல், திறை செலுத்த இசைந்து அவனேடு சந்து செய்து கொண்டான்; யானைகளையும் குதிரைகளையும் பெரும்பொருளையும் கொடுத்தான். இவ்வளவு பெற்றும் மாலிக்கபூர் டில்லிக்குத் திரும்பாமல் பாண்டி நாட்டின்மீது படையெடுக்க ஹொய்சள நாட்டுத் தலைநகரமாகிய துவாரசமுத்திரத்தில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தான். அவன் பாண்டி நாட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த அரசுரிமைப் போரைப் பற்றியும் தெரிந்து கொண்டான்.

மதுரையில் வீரபாண்டியனுக்கும் சுந்தர பாண்டியனுக்கும் அரசுரிமைப் போர் நடந்துகொண்டிருந்தது. வீரபாண்டியன் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த உறையூருக்கு அருகில் கோநகரை அமைத்துக் கொண்டு நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தான். சுந்தர பாண்டியனே மதுரையிலிருந்து நாட்டின் மற்றொரு பகுதியை ஆட்சி புரிந்தான். பாண்டி நாட்டின்மீது படையெடுக்க வந்த மாலிக்கபூர் இச்சமயத்தைப் பயன்படுத்தக் காத்துக் கொண்டிருந்தான். இந்த நேரத்தில் சுந்தரபாண்டியன் துவார சமுத்திரத்தில் மாலிக்கபூர் இருந்ததை தெரிந்துகொண்டு, அங்கே ஒரு தூதுவனை அனுப்பி, அவனைத் தனக்கு உதவி செய்யுமாறு வேண்டினன். இவ்வேண்டுகோள், அவனுக்குக் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல ஆயிற்று. இவ்வாய்ப்பை அவன் வாளா விடுவானு? உடனே மாவீரன் மாலிக்கபூர் மதுரை நாட்டில் இருந்துவந்த குழப்பத்தையும் சுந்தர பாண்டியனது வேண்டுகோளையும் பயன்படுத்திக் கொண்டு சிறிதும் தயங்காமல் கி. பி. 1311-ல் பாண்டி-

நாட்டின் மீது படையெடுக்கப் புறப்பட்டான். அவனிடம் தோற்றுச் சந்து செய்துகொண்ட மூன்ரும் வல்லாள மன்னனே முன்சென்று வழிகாட்ட, மாலிக்கபூர் காடு மேடு ஆறு மலே இவையெல்லவற்றையும் கடந்து சோழ நாட்டை அடைந்து உறையூரைத் தாக்கினன். சிதறிக் கிடந்த சிற்றரசர்கள் இந்த நேரத்தில் ஒற்றுமையோடு ஒன்றுபட்டுப் பகைவனே எதிர்த்தார்கள்; எதிர்த்தும் பயனில்லே. மாலிக்கபூர் உறையூரைக் கைப்பற்றினன். வீரபாண்டியன் பகைவனது பெரும்படையை எதிர்ப்பது அரிதென்று தெரிந்துகொண்டு 120 யானைகளின் மீது பல பொருள்களே ஏற்றிக்கொண்டு வருமாறு செய்து உறையூரை விட்டகன்று எவரும் இடங்கண்டுபிடிக்க முடியாத அடர்ந்த காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். ஓடிவிட்ட வீரபாண்டியனேக் கண்டுபிடிக்க மாலிக்கபூர் தேடியலேந்தான். வீரபாண்டியன் அகப்படவில்லே. ஆனல், அவன் ஏற்றியனுப்பிய யானைகளும் பொருள் களும் மாலிக்கபூரிடம் அகப்பட்டன. அகப்பட்ட 120 யானைகளேயும் பொருள்களேயும் திரட்டிக்கொண்டு மாலிக்கபூர் தன் படையுடன் தன்னே உதவிக்கு அழைத்த சுந்தரபாண்டியன் ஆண்டுகொண்டிருந்த மதுரை மாநகரை நோக்கிப் புறப்பட்டான். உதவி செய்யவா? இல்லே, இல்லே, மதுரைமீது படையெடுத்து வந்து தன் பகைவனேடு போர் புரிந்து வெற்றி பெற்றிட உதவி வேண்டிய அந்தச் சுந்தர பாண்டி யனேயே தாக்க முனேந்தான். இதை அறிந்த சுந்தர பாண்டியனே தன் மனேவி மக்களுடன் தான் ஆண்டு கொண்டிருந்த மதுரை நகரை விட்டோடி வேருே ரிடத்தில் மறைந்து கொண்டான். மாலிக்கபூர் படை, மாநகர் மதுரையை அடைந்தது. சுந்தரபாண்டியன் மாமனன விக்கிரம பாண்டியன் படைதிரட்டி அஞ்சாது எதிர்த்து நின்று மாலிக்கபூரோடு வெஞ்சமர் புரிந்து

வெற்றி பெற்ருன். நிலைமாறியது கண்ட மாலிக்கபூர் தலை தப்பினுல் போதும் என்று கருதிக் கொள்ளையிட்ட பெரும் பொருள்களோடும் யானை குதிரைகளோடும் 23-4-1311-ல் மதுரையை விட்டு டில்லி நகரை நோக்கித் திரும்பி 1311-ஆம் ஆண்டு அக்டோபர் பத்தொன்பதில் அந்நகரை அடைந்தான். மாலிக்கபூர் பாண்டி நாட்டில் வெற்றியடையவில்லையெனினும் தமிழகத்தின் பெரும்பொருளைக் கொள்ளையடித்துச் சென்ருன். அவன் 613 யானைகளையும் 96,000 மணங்கு பொன்னையும், பல பெட்டிகள் நிறைய முத்துகளையும் நகைகளையும், 20,000 குதிரைகளையும் டில்லிக்குக் கொண்டு சென்ருன். அந்தோ! மாலிக்கபூர் படையெடுப்பால் தென்னுட்டு பெருஞ்செல்வம் பறிபோயிற்று. மதுரையிலும் பிற இடங்களிலும் இருந்த கோயில்கள் இம் முஸ்லீம் வீரர்களால் பாழ்பட்டன. இராமேஸ்வரத்தில் இம்மாலிக்கபூர் பள்ளிவாசல் ஒன்று கட்டியதாகவும் சொல்லப்படுகிறது.

அல்லாவுதீன் :

கி. பி, 1312க்குள் அல்லாவுதீன் வடநாட்டில் சில நாடுகளையும், தென்னுட்டில் யாத்வநாடு, ஹொய்சள நாடு, காகதீயநாடு ஆகியவற்றையும் தன் ஆதிக்கத்தில் ஓரளவு கொண்டு வந்தான். இவனுக்கு நாடு பிடிக்கும் ஆர்வம் முற்றும் இல்லை என்று சொல்ல இயலாது; கூடுதலாகப் பெருஞ்செல்வம் சேர்க்கும் பேராசையே மிகுதியாய் இருந்தது. இவன் கல்வியே கல்லாதவனுயினும் கற்றவர்களையும் கலைஞர்களையும் பாராட்டினன்; அழகிய கட்டடங்களைக் கட்டினன்; திறமையாய் ஆட்சியும் புரிந்தான்; நாட்டில் உள்நாட்டுப் போரும் குழப்பமும் கலகமும் நிகழாதவாறு பற்பல திட்டங்களைத் தீட்டினன். இவன் பிற்காலத்தில்

மது அருந்துவதை அறவே விட்டு, அரண்மனையிலிருந்த மதுக்கோப்பைகளை உடைத்தெறிந்து, டில்லி நகரில் இருந்த மதுக்கடைகளின் மதுச்சாடிகளிலிருந்து மதுவைத் தெருக்களில் ஆருக ஓடுமாறு கொட்டிவிடச் செய்து, ஒருவரும் மதுவைக் குடிக்கக் கூடாது என்று வற்புறுத்தி, மதுவிலக்கு நிலையைத் தலைநகரில் உண்டாக்கி வைத்தான்; செல்வர்கள் விருந்து நடத்தவும், கூட்டம் கூட்டவும் கூடாது என்று கட்டளை பிறப்பித்தான்; செல்வர்கள் தங்கள் குடும்பத்தில் திருமணம் நடத்தவும் சுல்தான் இசைவு பெறவேண்டும் என்று ஆணைபிறப்பித்தான். மேலும் இவன், நாட்டில் நிலைப்படையை (Standing Army) நிறுவினன்; நாட்டில் நடக்கும் சூழ்ச்சி, சதி முதலியவற்றையும் அறிந்து கொள்ள உளவுத் துறையை (C. I. D.) ஏற்படுத்தினன்; படையில் ஊழல் நிகழாதவாறு கண்காணிக்கச் செய்தான்: யாரிடமும் அளவுக்குமேல் செல்வம் தேங்காமல் வாழ்க்கை நடத்துவதற்குப் போதிய அளவே இருக்குமாறு திட்டங்களை வகுத்தான்; பொன்னை வைத்திருந்தவர்கள் நிலவரியைப் பொன்னுகவே தருமாறு வற்புறுத்தினன்; ஆறில் ஒன்ருக இருந்த நிலவரியை ஆறில் மூன்ருக உயர்த்தினன்; நாட்டில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்துகொண்டிருந்ததால், பொதுமக்களுக்கு உணவுப் பஞ்சம் ஏற்படாத வகையில் தகுந்த பலப்பல திட்டங்களை வகுத்திருந்தான். இவன் பெருவணிகர்களை டில்லி நகரின் பக்கத்தில் வாழுமாறு செய்து, அவர்களுடைய பெயர்களை அரசாங்கப் பதிவேட்டில் பதியுமாறு வற்புறுத்தினன்; உணவு தானியங்களுக்கு விலையை ஏற்படுத்தி அவன் குறிப்பிட்ட விலைக்கு மேல் விற்றவர்களுக்குக் கடுந்தண்டனை விதித்தான்; துணி, சர்க்கரை, எண்ணெய், பருப்புவகை

இவற்றை விற்கவேண்டிய விலைக்குமேல் விற்கக்கூடாத வாறும், போருக்கு வேண்டிய கருவிகள், குதிரைகள் இவற்றின் விலைகளும் மிகுதியாய் உயராதவாறும் சட்டம் செய்தான். இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலத்தில் இந்தியாவிலும்-ஏன்?—பிற நாடுகளிலும் அரசுகள் கையாண்ட வழிமுறைகள் எல்லாவற்றையும் விட மிகுதியாகவே இவன் அந்தப் பதினன்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் செய்ததைக் காணும் போது, நாம் அவன் கொடியவனுயிருப்பினும், அவனைப் பாராட்டாமல் இருக்க இயலுமா? மக்களுக்கு வேண்டிய நன்மைகள் யாவற்றையும் செய்த அல்லாவுதீன் கி. பி. 1316-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5-ஆம் நாள் இயற்கையாகவே நோய்வாய்ப்பட்டு மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்தான்.

டில்லி சுல்தான் அல்லாவுதீன் இறந்ததும் அப்போது அதிகாரத்தில் இருந்த மாலிக்கபூர் ஆட்சி புரியலானுன். இவன் அரியணை ஏறிய முப்பத்தைந்தாம் நாள் கொல்லப்பட்டான். அல்லாவுதீன் புதல்வர்களுள் ஒருவனுன முபாரக்ஷா டில்லிக்குச் சுல்தானுனுன். அவன் தன் காலத்தில் தமிழகத்தையும் டில்லிப் பேரரசுக்குள் இணைக்கும் எண்ணத்தோடு குஸ்ருகானைத் தமிழ் நாட்டின் மேல் படையெடுத்துச் செல்லுமாறு கி. பி. 1317-ல் அனுப்பிவைத்தான்.

குஸ்ருகான் படையெடுப்பு (1317):

மாலிக்கபூர் திரும்பிய பின்பும் பாண்டி நாட்டில் வீரபாண்டியனுக்கும் சுந்தர பாண்டியனுக்கும் அரசுரிமைப்போர் நடந்து கொண்டிருந்தது. வீரபாண்டியன் அப்போது திருவாங்கூர் அரசனுன ரவிவர்மனுடைய உதவி பெற்றுச் சுந்தர பாண்டியனேடு போர்புரிந்து கொண்டிருந்தான். சுந்தர பாண்டியனே காகதீய

நாட்டு மன்னனது படைத்துணையோடு வீரபாண்டியனை எதிர்த்தான். ரவிவர்மன் தோற்றுத் தன் நாட்டுக்குத் திரும்பினான். சுந்தர பாண்டியனே நாட்டுக்கு மன்னனானான். இச்சமயத்தில் 1317-ல் குஸ்ருகான் பாண்டி நாட்டை அடிமைப் படுத்த அந்நாட்டின் மீது படையெடுத்து வந்து சேர்ந்தான். மாலிக்கபூர் படையெடுப்பில் ஓடிவிட்டது போலவே இப்பொழுதும் சுந்தரபாண்டியன் நாட்டை விட்டு ஓடிவிட்டான். அச்சமயத்தில் பாண்டி நாட்டில் பெருமழை பெய்து கொண்டிருந்தது. குஸ்ருகான் அப்பெருமழையில் போரிட்டுப் பாண்டிநாட்டைக் கைப்பற்ற இயலவில்லை. அது மட்டுமன்றிக் குஸ்ருகானே பாண்டிநாட்டில் இருந்தபோது டில்லி சுல்தானுக்கு எதிராகச் சதி செய்யத் தொடங்கினான். குஸ்ருகானின் சதியை அறிந்த பொறுப்புமிக்க மற்றப் படைத்தலைவர்கள் அவனை விலங்கிட்டு டில்லிக்குக் கொண்டுசென்றார்கள். இதனால், குஸ்ருகான் படையெடுப்பும், மாலிக்கபூர் படையெடுப்புப் போலவே பயனற்றுப் போயிற்று.

உலுகான் படையெடுப்பு (1323):

டில்லிக்குக் கொண்டு போகப்பட்ட குஸ்ருகான் தன்னைப் படைத்தலைவனாக்கிய சுல்தான் முபாரக் ஷாவைக் கொன்று சுல்தானாகிச் சில திங்களே ஆட்சி புரிந்தான். கியாஸ்-உத்தீன்-துக்ளக் என்பவன் இக் குஸ்ருகானைக் கொன்று கி. பி. 1320-ல் டில்லி சுல்தானாக முடி சூடிக்கொண்டான். இவன் இமயம் முதல் குமரி வரை உள்ள நாடுகளை தன் குடைக்கீழ்க் கொண்டுவரக் கருதினான். அதனால், இவன் மகன் உலூகான் பாண்டி நாட்டை அடிமைப்படுத்தக் கி. பி. 1323-ல் பெரும்படையை அனுப்பினான். அப்பொழுது சுந்தர பாண்டியனுக்குப் பின் பாண்டி நாட்டை ஆண்டு

கொண்டிருந்த பராக்கிரம தேவ பாண்டியன், வந்த படையுடன் அஞ்சாது வெஞ்சமர் புரிந்து தோற்றுச் சிறைப்பட்டான். பாண்டியருக்கு உரியதாயிருந்த பாண்டி நன்னாடு டில்லி சுல்தான் ஆட்சியில் இணைந்து விட்டது.

டில்லி சுல்தான் கியாஸ்-உத்தீன்-துக்ளக் ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாகவே ஆட்சி புரிந்து தன் மகன் உலூகான் சதிக்கு இரையாகி 1325-ல் மாண்டான். தந்தை இறந்த மூன்று நாள்களுக்குப் பின் உலூகான் கி. பி. 1325 பெப்ரவரி-மார்ச்சுத் திங்களில் முகமது-பின்-துக்ளக் என்னும் பெயரோடு அரியணை ஏறியமர்ந்து ஆட்சிபுரியலானான். இவன், அருட்பண்பு இல்லாத கொடியவனாயினும் பொதுவாக அக்காலக் கலைகள் எல்லாவற்றையும், சிறப்பாகக் கணிதத்தையும் மருத்து வத்தையும் கற்றவனாயிருந்தான்; நோயாளிகளின் நோய்களைக் கண்டு ஆராய்ந்து மருந்து கொடுத்துத் தீர்க்கவல்லவனாயும் இருந்தான்.

விடுதலை இயக்கம் :

உலூகானாகிய இம்முகம்மது-பின்-துக்ளக் ஆட்சியை ஏற்றபோது தொன்மை மிக்க தென்னகத்தின் பெரும் பகுதி டில்லி ஆதிக்கத்தில் புகுந்துவிட்டது. பாண்டி நாடும் துக்ளக்கின் பேரரசுக்குரிய 23 மாநிலங்களுள் ஒன்றாகியது. பாண்டி நாட்டில் இத் துக்ளக்கால் ஜலால்-உதீன் அசன்ஷா அரசப்பிரதிநிதியாக நியமிக்கப் பட்டான். தமிழ் நாட்டில் ஆங்காங்கு முஸ்லீம் பாதுகாப்புப் படைகளும் நிறுவப்பட்டன. தென்ன கத்தில் ஹொய்சள மன்னனான மூன்றாம் வல்லாளன் மட்டும் சுல்தான் ஆட்சிக்குட்பட்டுச் சுதந்தர மன்னனாய் இருந்து வந்தான். மதுரையில் ஜலால்-உதீன்

அசன்ஷா என்பவன் டில்லி சுல்தானின் பிரதிநிதியாய் இருந்து ஆட்சி புரிந்து வந்தான்.

இச்சமயத்தில் தென்னகத்தில் முஸ்லீம் ஆட்சியை ஒழிக்க விடுதலை இயக்கம் தோன்றியது. வீர சைவ சமயமும் இந்துமதத் தலைவர்களும் மடாதிபதிகளும் மக்களுக்கு ஊட்டிய ஆர்வத்தாலும், முஸ்லீம் அலுவலர்கள் மக்களைத் துன்புறுத்தியதாலும் தென்னாட்டில் தோன்றிய விடுதலை இயக்கம் மலரத் தொடங்கியது. சிற்றரசர்கள் துக்ளக்கின் வல்லாட்சியை உதறித்தள்ளி முழுவுரிமை மன்னர்களாகித் தத்தம் பகுதிகளை ஆளத் தொடங்கிவிட்டார்கள். மதுரையில் டில்லிசுல்தானின் அரசப் பிரதிநிதியாய் ஆட்சி புரிந்து வந்த ஜலால்-உதீன் அசன்ஷாவும் பேரரசின் ஆட்சியை உதறித்தள்ளி முழுவுரிமை மன்னனுகி மதுரை நாட்டை ஆளத் தொடங்கிவிட்டான். இவன் கி.பி. 1335-ல் தன் பெயராலேயே வெள்ளிக் காசுகளையும் வெளியிட்டான். இவ்விடுதலை இயக்கம் துக்ளக்கின் தென்னிந்திய ஆதிக்கத்துக்குச் சாவுமணி அடித்துவிட்டது.

சம்புவ ராயர்கள் :

இப்பொழுது தென்னாட்டில் பெருவீர மன்னனுய்த் திகழ்ந்தவன் ஹொய்சள நாட்டு வேந்தனுகிய மூன்றும் வல்லாளன் ஒருவனே ஆவான். இவன் நெடுங்காலமாய் முஸ்லீம் ஆதிக்கத்தை ஒழிக்க வழிதேடி முயன்று வந்தவன். இப்பெருவீர மன்னன் வாரங்கலை முஸ்லீம் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தான்; தொண்டை மண்டலத்தில் இருந்த முஸ்லீம் பாதுகாப்புப் படையைத் துரத்திவிட்டு ஆட்சியை அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த சம்புவராயர்களிடம் ஒப்படைத்தான். சம்புவராயர்களது ராச்சியம் செங்கழு நீர்ப்பட்டு, (செங்கற்பட்டு), வடஆற்காடு, தென்னுற்காடு ஆகிய

மாவட்டங்களும் சித்தூரில் ஒரு பகுதியும் அடங்கியதாய் இருந்தது. இவர்களின் முன்னோர்கள் திண்டிவனப் பகுதியில் இருந்த ஒய்மான் நாட்டினின்றும் வந்தவர்கள்; வன்னிய குல க்ஷத்திரிய மரபைச் சேர்ந்தவர்கள். இவர்களைப் படையாட்சிகள் என்றும் கூறுவர். சென்னை, செங்கற்பட்டுப் பகுதிகளில் இவர்களுக்கு நாய்க்கர், அல்லது நாயகர் என்னும் சாதிப் பட்டம் உண்டு. தென்னாட்டு நாயக்கர்கள் தெலுங்கர்கள். அவர்கள் விஜயநகரப் பகுதியிலிருந்து தமிழகத்தில் குடியேறிச் சில நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருபவர்கள். இப்படையாட்சிகள் தமிழர்கள். இவர்கள் பல்லவ மரபினராவார்கள். இவர்கள் முதலில் சோழர்களிடம் படைத் தலைவர்களாயிருந்து, சோழப் பேரரசின் வீழ்ச்சியின் பின்பு பாண்டியர்களிடம் படைத் தலைவர்களாகியும் சிற்றரசர்களாகியும் இருந்து, மாலிக்கபூர் படையெடுப்புக் குழப்பத்தில் முழுவுரிமை மன்னர்களாகி விட்டவர்கள். இவர்கள் கோயில் கட்டியும், குளங்கள் வெட்டியும், பல அறங்கள் செய்தும் நாட்டுமக்களிடம் மதிப்புப் பெற்றுவிட்டார்கள். இவர்கள் சைவசமயத்தவர்களாதலால், இடபத்தைத் தங்களுக்குச் சின்னமாகக் கொண்டிருந்தார்கள். இச்சம்புவராயர்களுள் வென்றுமண்கொண்ட ஏகாம்பர சம்புவராயனும் (கி. பி. 1321 - 1339), அவன் மகன் இராசநாராயண சம்புவராயனும் (1339 - 1363) குறிப்பிடத்தக்கவர்கள். ஏகாம்பர சம்புவராயன் முஸ்லீம்களிடமிருந்து தொண்டை நாட்டை 1327ல் வென்று சகலலோக சக்கரவர்த்தி என்ற பட்டத்தை ஏற்றான். இவன் மகன் பட்டத்துக்கு வந்ததும் தன் நாட்டை விரிவாக்கி வேலூருக்கு அருகிலிருக்கும் விரிஞ்சி புரத்தைத் தலை

நகராய்க் கொண்டு *இராச கம்பீர ராச்சியத்தை ஆண்டான். மூன்றும் வல்லாளன் முஸ்லீம் படைகளைத் துரத்தியடித்து அப்போது அங்கு ஆண்டு கொண்டிருந்த சம்புவராயர்களிடம் தொண்டை நாட்டை ஒப்படைத்தான்.

மதுரைச் சுல்தான்கள் (1333 - 1378):

மதுரை நாட்டை ஜலால்-உதீன் அசன்ஷா டில்லி சுல்தான் பிரதிநிதியாயிருந்து ஆண்டு கொண்டிருந்து விடுதலை இயக்கக்காலத்தில் மற்றவர்களைப் போல முழுவுரிமை சுல்தானுகி ஆறு ஆண்டுகள் ஆண்டான். கி. பி. 1340-ல் இவன் கொல்லப்பட்டான். இவன்தன் அலுவலர்களுள் ஒருவனும் பெருவீரனுமாகிய அல்லாவுதீன் உடௌஜி இவனுக்குப் பின் மதுரை நாட்டின் சுல்தானுனன். இவன் வல்லாளனேடு பகைமை கொண்டு போர் புரிந்து கொண்டிருந்த போது, எவனே ஒருவன் இவன் மார்பில் திடீரென்று அம்பை எய்து இவனைக்கொன்றுன். இதனுல், தோல்வி ஏற்பட இருந்த வல்லாளனுக்கு வெற்றி ஏற்பட்டது. இந்த அல்லாவுதீன் உடௌஜி ஓராண்டே ஆட்சி புரிந்தான். இவனுக்குப்பின் இவன் மருமகனுன குத்புதீன் மதுரைச் சுல்தானுனன். இவன் நாற்பது நாள்களுள் கொல்லப்பட்டான். அடுத்துக் கி. பி. 1341-ல் அரியணை ஏறியவன் கியாஸ் உத்தீன் தம்கானி என்பவன். இவன் மிகக் கொடியவன்.

---

*தொண்டை மண்டலத்தில் பற்பல பகுதிகளில் பல்லவர் வீழ்ச்சிக்குப்பின் பல்லவ குலச் சிற்றரசர்களுள் சிலர் சம்புவராயர் என்ற பட்டப் பெயருடன் கி. பி. 12- ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இருந்தனர். அவர்களுள் சிறந்து விளங்கியவன் இராஜ கம்பீரச் சம்புவராயன். இவன் காலத்தில் நாடு பெருகியதோடு இராச கம்பீர ராச்சியம் என்ற பெயரையும் எய்தியது.

இவன் மதுரைச் சுல்தானாய் இருந்த காலத்தில் மூன்றாம் வல்லாளன் முஸ்லீம் பாதுகாப்புப் படை தங்கியிருந்த கண்ணனூர்க் குப்பத்தைத் தாக்கி முற்றுகையிட்டிருந்தான். இம்முற்றுகை ஆறு திங்கள் நடைபெற்றது. உணவுப் பொருள்கள் பதினான்கு நாள்களுக்குமேல் தாங்காது என்றறிந்ததும், உள்ளிருந்த முஸ்லீம் வீரர்கள் வல்லாளனுக்கு அடிபணிந்து சந்து செய்து கொள்ள உடன்பட்டு மதுரைச் சுல்தானிடம் இசைவு பெறவும், 14 நாள்களுக்குப் போர் நிறுத்தும் செய்யவும் அனுமதி வேண்டினார்கள். வல்லாளன் சிந்தனையின்றி அவ்வீரர்கள் மதுரைச் சுல்தானோடு தொடர்பு கொள்ள இசைந்துவிட்டான். இவ்விசைவு தனக்கே அழிவை உண்டாக்கும் என்று வல்லாளன் ஒரு சிறிதும் சிந்திக்கவில்லை. இச்சிந்தனையற்ற செயல் தியாக மூர்த்தியாகிய மூன்றாம் வல்லாளன் உயிருக்கே உலைவைத்துவிட்டது. முற்றுகைச் செய்தியைத் தூதவனால் அறிந்த மதுரைக் கியாஸ்–உத்தீன், கண்ணனூருக்குப் பெரும் படையுடன் 1342-ல் வந்து கடும்போர் புரிந்து, வெற்றிகண்டு, தன்னிடம் தோற்ற வல்லாளனைச் சிறைப்படுத்தி, அவனிடமிருந்து யானை குதிரைகளையும் பெருஞ் செல்வத்தையும் பறித்துக் கொண்டான்; பின்பு எண்பது வயதுடைய அவ்வீர வல்லாளனை உயிரோடு தோலை உரித்து, அத்தோலில் வைக்கோலை அடைத்து, அப்படி அடைத்த அத்திரு மேனியை மதுரைநகர மதிலில் தொங்கவிட்டான். தென்னகத்தில் முஸ்லீம் ஆதிக்கத்தை ஒழிக்க இடைவிடாது அரும்பாடுபட்டுத் தாய் நாட்டின் விடுதலைக்காகத் தன் உடல் உயிர் பொருள் அனைத்தையும் அர்ப்பணம் செய்த தியாக மூர்த்தியாகிய மூன்றாம் வல்லாளனின் திருவுடல் செந்தமிழ் மதுரைத் திருநகர்

மதிலில் தொங்கிக் கொண்டிருந்ததை அப்போது இந்தியாவுக்கு வந்திருந்த இபின் பதூதா என்ற மூர் இனத்தைச் சேர்ந்த முஸ்லீம் வழிச்செலவினன் கி. பி. 1342-ல் கண்டதாய்க் குறிப்பிட்டுள்ளான். கொடியவனுன இந்தக் கியாஸ்-உத்தீன் தன் குடும்பத்துடன் கக்கல் கழிச்சலால் (வாந்திபேதி) மாண்டான். இவனுக்குப் பின் நாசர் உத்தீன் கி. பி. 1344-ல் மதுரைச் சுல்தானுனன். அடில்ஷா என்பவன் 1356 முதல் 1359 வரை மதுரை நாட்டை ஆண்டான். பக்ருதீன் முபாரக்ஷா கி. பி. 1361 முதல் ஆட்சி புரிந்தான். மதுரை நாட்டை ஆண்ட கடைசிச் சுல்தான் அல்லாவுதீன் சிக்கந்தர் என்பவன். இவன் கி. பி. 1370 முதல் 1378 வரை ஆண்டான்.

கம்பணர் படையெடுப்பு :

முற்கூறிய இராச நாராயண சம்புவராயன் காலத்திற்றுன் விஜய நகர வேந்தரான புக்கரின் புதல்வர் இரண்டாம் கம்பணர் தென்னகத்துக்குப் படையெடுத்து வந்து முதல்முதல் இராச நாராயண சம்புவராயனே வென்று, தொண்டை நாட்டைக் கைப்பற்றினுர். அப்போது கம்பணர் கன்னட நாட்டில் முல்பகால் என்ற இடத்தில் மகா மண்டலேஸ்வராய் இருந்து விஜய நகரப் பேரரசைக் கண்காணித்து வந்தார். இவர் ஒரே சமயத்தில் தொண்டைநாடு முழுவதையும் வென்றுவிடவில்லே. இராச நாராயணனே வெல்வதற்கு முன்னரே அவனுக்குரியதாய் இருந்த திருவண்ணுமலேப் பகுதியைக் கைப்பற்றியிருக்கவேண்டும். முடிவாக 1362-ல் நவம்பர்த் திங்களில் அவர் இராச நாராயணனேடு போர்புரிந்து தொண்டை நாட்டை வென்று, அவனே விஜய நகரப் பேரரசுக்கு அடங்கியாட்சி புரியுமாறு செய்தார்; பின்பு கடலூரையும் சிதம்பரத்தையும் கைப்பற்றி இராச

கம்பீர ராச்சியத்தில் இணைத்தார். காஞ்சியும் குமார கம்பணர் ஆட்சிக்கு மற்றொரு தலைமைப் பீடமாயிற்று.

ஹொய்சளரை வென்றபோதே திருப்பதிப் பகுதி விஜயநகரப் பேரரசில் சேர்ந்துவிட்டது. மதுரை நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்பே கொங்கு நாடு விஜயநகரப் பேரரசில் சேர்ந்துவிட்டது. தஞ்சை நாடானது இராச கம்பீர ராச்சியத்தைக் கைப்பற்றிய பத்து ஆண்டுகளுக்குப் பின்பே பேரரசில் இணைக்கப் பட்டது.

கம்பணர் தொண்டை மண்டலத்தை வென்றதும் மதுரையை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். அப் போது மதுரைநாடு மகமது துக்ளக்கின் பேரரசினது 23 மாநிலங்களுள் ஒன்றாய் மட்டும் இருந்ததே தவிர டில்லிப் பேரரசின் ஆட்சியில் இல்லை. அப்போதிருந்த மதுரைநாடு காவிரியாற்றின் தென்கரையிலிருந்து இராமேஸ்வரம் வரையில் பரவியிருந்தது. திருச்சிராப்பள்ளியும் மதுரை நாட்டில் அப்போது அடங்கியிருந்தது. மதுரை நாட்டில் சுல்தான்கள் கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்தார்கள். கம்பணர் மனைவி கங்காதேவி தனது 'மதுரை விஜயத்தில்' மிருதங்க ஒலி கேட்ட இடங்களில் நரிகள் ஊளையிடுவ தாயும், வேள்விப் புகை தெரிந்த பார்ப்பனக் குடியிருப்பில் முஸ்லீம்கள் இறைச்சியை வறுத்த நெருப்புப் புகையே காணப்பட்டதாயும், மதுரைநகரச் சுற்றுப்புறத் தோப்பு களில் தென்னைமரங்கள் வெட்டப்பட்டுக் கழுமரங்கள் நடப்பட்டிருந்ததாயும் குறிப்பிட்டுள்ளாள்.

முஸ்லீம் ஆட்சியில் மதுரைநாட்டில் நிகழ்ந்த கொடு மைகளைப் பழைய நூல்களும் சாசனங்களும் பரக்கக் கூறு கின்றன. கோயில்கள் இடிக்கப்பட்டன; கோயிற்கோபுரங் கள் குலைக்கப்பட்டன. பலகோயில்கள் பள்ளிவாசல்களாய் மாற்றப்பட்டன. இந்துக்களின் சொத்துகள் பறிக்கப்

பட்டன. இந்துமக்களின் சமய நெறிகள் தடை செய்யப் பட்டன. அவர்களுடைய நூல்கள் எரிக்கப்பட்டன. மதுரைத்தல வரலாறு என்னும் சிறு நூல், "துலுக் காணியமாக, நாயனர் மதுரைக்கு வாய்த்த பெருமாளும் நாஞ்சில் போக, பஞ்சாக்ஷரத் திருமதிலும் பதினன்கு கோபுரமும் தெரு வீதிகளும் இடிக்கப்பட்டன. நாயகர் கோயில் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் வரைக்கும் தப்பியிருந்தது" என்று கூறுகிறது. *சாசனம் ஒன்று, "காலம் துலுக்காணியமாயிருந்தது. கடவுளின் தேவதான நிலங்களுக்கு வரி போடப்பட்டது, அப்படியிருந்தும் கோயில் பூசை குறைவின்றி நடைபெற வேண்டியிருந்ததால், ஊர் மக்கள் கோயில் நிலங்களை முறை போட்டுக்கொண்டு உழுது பயிரிட்டார்கள்" என்று கூறுகிறது.

இந்து சமயத்தைப் பாதுகாக்கவும் தென்னகத்தில் ஏற்படக்கூடிய முஸ்லீம் படையெடுப்பைத் தடுத்து நிறுத் தவும் தோன்றிய விஜயநகர வேந்தரான முதலாம் ஹரி ஹரர் (1336 - 1357) ஆட்சிக் காலத்திலேயே முதலாம் புக்கர் மதுரை நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அப் போது சிறிதுகாலம் ஆட்சி செய்த ஹசன்கங்கு என்பவனை வென்றதாக அண்ணாமலைப் பல்கலைக்கழக வாசகர் டாக்டர் கிருஷ்ணசாமி தமது அரிய நூலில் குறிப்பிட் டிருக்கிறர். ஆனல், இந்தவெற்றி நிலையாக இருக்கவில்லை. இரண்டாம் கம்பணர் கி. பி. 1371-ல் இராச நாராயண சம்புவராயனது உதவியுடன் மதுரைக்குப் படை யெடுத்துச் சென்று, அப்போது மதுரைச் சுல்தானய் இருந்த முபாரக்ஷாவை வென்று மதுரை நாட்டைக் கைப் பற்றினர். எனினும், முபாரக்ஷாவின் பின் வந்தோர்

*'Administration and Social Life Under Vijayanagar' - Madras University Publication - Page 103.

மதுரை நாட்டின் ஒரு பகுதியைச் சில காலம் 1378 வரை ஆண்டு கொண்டு வந்தனர்; நாணயங்களை வெளியிட்டும் வந்தனர். இரண்டாம் ஹரிஹரர் காலத்தில்தான் (1377-1404) மதுரைச் சுல்தான் ஆட்சி அறவே ஒழிக்கப் பட்டுவிட்டது. இறுதியில் ஆண்ட அல்லாவுதீன் சிக்கந்தர் தோற்றோடியிருக்க வேண்டும்; அல்லது கொல்லப்பட்டிருக்கவேண்டும். பொல்லாத சுல்தான் ஆட்சியானது 1378-ல் சிக்கந்தரோடு முடிவுற்றது. சுல்தான் ஆட்சி மதுரையில் ஏற்பட்டபோதே பாண்டியர்கள் மதுரையை விட்டுத் தென்காசிக்குப் போய்ச் சிறுசிறு பகுதிகளை ஆளத் தொடங்கிவிட்டார்கள். சுல்தான் ஆட்சியைக் கம்பணர் ஒழித்து மதுரை நாட்டை விஜயநகரப் பேரரசுக்குள் சேர்த்த பின்னும் பாண்டியர்கள் மதுரைக்குத் திரும்பி வர வாய்ப்பே ஏற்படவில்லை. நாகமர் மதுரையில் மண்டலேஸ்வரராக இருந்தபோதும் பாண்டியர்கள் அங்கில்லை. நாகமரைப் பற்றி வழங்கும் செவிவழிச் செய்தி வெறுங் கட்டுக்கதையே அன்றி உண்மை அன்று.

கம்பணர் மதுரை முஸ்லீம் ஆட்சியை ஒழித்துக் கட்டி முதல் மகாமண்டலேஸ்வரராய் இருந்து தமிழகத்தையும் மேற்பார்த்துக்கொண்டிருந்து 1374 நவம்பர்த் திங்களில் காலமானார்.

தண்டமிழ்ப் பாண்டி நன்னாட்டில் இப்போது வடுகரது விஜயநகர ஆட்சி ஏற்பட்டது. விசுவநாதர் 1529-ல் மதுரை நாட்டில் நேரடி ஆட்சியைத் தொடங்குவதற்கு முன் அது, மகாமண்டலேஸ்வர்களால் கண்காணிக்கப் பட்டு வந்தது. இனி மதுரை நாட்டில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டதைக் குறித்துக் காண்போம்.

3. திருமலைக்கு முன்னுண்ட மதுரை நாயக்கர்கள்

முன்னுரை :

பண்டைப் பெருமை வாய்ந்த தண்பாண்டி நன்னாட்டில் எண்டிசையும் போற்ற எழிலறம் வகுத்துச் செங்கோல் செலுத்திச் சங்கம் பல வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் பரம்பரை, விழுந்தும் எழுந்தும் வாழ்ந்து, மாறவர்மன் குலசேகரனுக்குப் பின் ஏற்பட்ட அரசுரிமைக் கலகத்தில் சுந்தரபாண்டியன் வேண்டு கோளுக்கு இணங்கி உதவிக்கு வந்த அல்லாவுதீனின் படைத்தலைவனை மாலிக்கபூராலும், அவனுக்குப் பின் வந்த குஸ்ருகானாலும், அவனை அடுத்து வந்த உலூகான் கட்டளைப்படி நடைபெற்ற முஸ்லீம் படையெடுப்பாலும், மாமதுரைத் திருநகரில் முடிவாக ஆட்சி புரிந்த பராக்கிர தேவன் தோல்வியாலும் தமிழ் நிலைபெற்ற நன் மதுரைத் திருநகரை விட்டுத் தென்பாண்டி நாட்டுப் பகுதிக்குப் போக வேண்டியதாயிற்று. இந்து சமயத்தைப் பாதுகாக் கவும் முஸ்லீம் படையெடுப்பைத் தென்னகத்தில் தடுத்து நிறுத்தவும் 1336-ல் தோன்றிப் பேரரசாக மலர்ந்து வளர்ந்து கொண்டிருந்த விஜயநகர வேந்தரின் புதல்வ ரான இரண்டாம் கம்பணர் மதுரை நாட்டில் முஸ்லீம் படையெடுப்பால் 48 ஆண்டுகளாய் ஏற்பட்டிருந்த கொடிய முஸ்லீம் ஆட்சியைத் தொண்டைநாட்டு இராசநாராயண சம்புவராயன் உதவியோடு ஒழித்துக் கட்டிப் பாண்டி நாடும் அடங்கிய தமிழகத்தை விஜய நகரப் பேரரசில் இணைத்து, அதற்குத் தட்சிண மகா மண்டலேஸ்வரராய் இருந்து கண்காணித்து வந்து, நாடு

முழுதும் வருந்த 1374ல் இம்மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்தார்.

விஜயநகரப் பேரரசு இரண்டாம் கம்பணர் வெற்றிக்குப் பின்பு கிருஷ்ணையாறு முதல் குமரிமுனைவரை யில் பரந்து விளங்கியதால், அப்பேரரசின் பெருவேந்தர்கள் ஆந்திரம், கருநாடகம், சந்திரகிரி, செஞ்சி, தஞ்சை, மதுரை என்று மாநிலங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நாயக்கரை அதிகாரியாய், மண்டலேஸ்வராய், பிரதிநிதியாய் நியமித்து அப்பகுதிகளைக் கண்காணித்து வந்தார்கள். இப்படி விஜய நகரக் கண்காணிப்பில் தமிழ்நாடு 166 ஆண்டுகள் இருந்து வந்தது.

நாயக்கர் என்னும் சொல் :

நாயக்கர் என்னும் சொல் நாயக என்னும் வடசொல்லின் திரிபாகும். இச்சொல் முதலில் தலைவன் என்னும் பொருளில் வழங்கி வந்து, பின்பு படைத் தலைவனைக் குறிக்கலாயிற்று. விஜயநகரப் பேரரசில் இச் சொல், அதன் பகுதிகளாய் இருந்த மதுரை, தஞ்சை, வேலூர் ஆகியவற்றை அரசச்சார்பாளர்களாகவோ (Viceroys) ஆளுநர்களாகவோ (Governors) இருந்து ஆட்சி செய்தவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாயிற்று. பிற் காலத்தில் இந்த நாயக்கர் என்னுஞ் சொல் சாதிப் பெயராகவே அமைந்துவிட்டது. விசுவநாத நாயக்கர் விஜயநகரத்தைச் சேர்ந்தவர்; வடுகர். இங்கு மதுரை நாயக்கர்கள் என்று குறித்திருப்பதற்குக் காரணம் உண்டு. இவர்கள் அரசர்களாய் நாட்டை ஆளவில்லை; விஜயநகர வேந்தர்களின் சார்பில் அவர்களால் நியமிக் கப்பட்ட ஆளுநர்களாகவே இருந்தவர்கள். திருமலை நாயக்கர் மட்டும் அவர் காலத்தில் சிதைந்த விஜயநகரப் பேரரசின் வேந்தராய் இருந்த மூன்றாம் ஸ்ரீரங்கரோடு போர் புரிந்து அவரை வென்று முழுவுரிமை அரச

ரானவர். எனவே, திருமலைக்குப்பின் மதுரையை ஆண்டவர்கள் முழுவுரிமை மன்னர்களாய் விளங்கியவர்கள் என்பதறிக.

விசுவநாத நாயக்கர் :

விசுவநாதர் மதுரை விஜயநகர ஆட்சியைத் தொடங்கி வைத்தார் என்று கருதுவது தவறு. விசுவநாதருக்கு முன்னரே சிலர் மண்டலேஸ்வரர்களாய் இருந்து அந்த அந்தப் பகுதிகளை ஆட்சி புரிந்து வந்தார்கள். விஜயநகரப் பெருவீர வேந்தராயும் கவியரசராயும் விளங்கிய கிருஷ்ண தேவ ராயர் (1509-1529) விசுவநாதரின் தந்தையாரான அருந்திறன் மிக்க நாகம நாயக்கரைப் பாண்டி நாட்டிற்கு மண்டலேஸ்வரராய் நியமித்தார்; தஞ்சைக்கு நரச நாயக்கரை மண்டலேஸ்வரராய் ஏற்படுத்தினர். எக்காரணத்தாலோ கிருஷ்ண தேவ ராயரின் இறுதிக் காலத்தில் அவர் நோய் வாய்ப்பட்டு எங்கும் செல்ல இயலாதிருந்த காலத்தில் நரச நாயக்கர் தஞ்சையில் அப்பெருமன்னருக்கு மாருகப் பெருங்கிளர்ச்சி செய்து தண்டனைக்கு அஞ்சித்திருவிதாங் கூருக்கு ஓடிவிட்டார். மதுரையிலும் நாகம நாயக்கர் கிருஷ்ணதேவ ராயரின் கட்டளைக்கு எதிர்த்து நடந்து கொண்டார். நரச நாயக்கரைப் போல நாகமரும், மதுரையில் பெருங்கிளர்ச்சி செய்திருக்கவேண்டும் என்றும், தஞ்சையைப் பார்க்கிலும் மதுரையானது விஜய நகரத்துக்கு நெடுந்தொலைவில் இருந்ததால் அவர் அஞ்சியோடி எங்கும் தஞ்சம் புகவில்லை என்றும் வரலாற்றுசிரியர்கள் கருதுகிருர்கள். கிருஷ்ண தேவ ராயரை எதிர்த்துக் கொண்ட நாகமர் நிலை என்னுயிற்று என்பது தெரியவில்லை. ஒருவேளை கிருஷ்ண தேவ ராயர், அவர் செய்த பெருங்குற்றத்தைப் பொருட்

படுத்தாது அவரைப் பதவியிலிருந்து மட்டும் நீக்கிவிட்டு, அவருடைய இடத்தில் அவர் மகனை விசுவநாதரை ஆளுநராக நியமித்திருக்கவேண்டும் என்று உய்த்துணரலாம்.

செவிவழிச் செய்தியோ வேறு வகையாகக் கூறுகிறது. விஜயநகரப் பேரரசுக்கு அடங்கிச் சோழ நாட்டையும் பாண்டி நாட்டையும் முறையே ஆட்சி புரிந்தவர்களான வீரசேகர சோழனுக்கும் சந்திரசேகர பாண்டியனுக்கும் எக்காரணத்தாலோ போர் மூண்டதாகவும், சோழன் பாண்டி நாட்டைக் கைப்பற்றிவிட்டதால் பாண்டியன் வருந்தி வேறொன்றும் செய்வதின்றி விஜய நகரம் சென்று நேரில் கிருஷ்ண தேவ ராயரிடம் முறையிட்டதாகவும், இராயர் சோழனை வென்று நாட்டைப் பாண்டியனிடம் ஒப்படைக்குமாறு நாகமருக்குக் கட்டளையிட்டதாகவும், அப்படி மீட்ட நாட்டை நாகமர் பாண்டியனிடம் ஒப்படைக்காது தாமே ஆட்சி செய்து வந்ததாகவும், அதைக் கேட்டு இராயர் சினந்து, "நாகமரை யாராவது சிறைப்படுத்தி வரவேண்டும்" என்று சொல்ல, ஒருவரும் அவ்வாறு செய்ய முன்வாராதபோது நாகமரின் புதல்வரான விசுவநாதர் முன்வந்து அப்படிச் செய்துவர உடன்பட்டதாகவும், அதனால், விசுவநாதர் அருந்திறன் மிக்க பெருந்தகையான வீரம் மிக்க அரியநாத முதலியாரது உதவியுடன் மதுரைமீது படையெடுத்துச் சென்று நாகமரைச் சிறைப்படுத்தி விஜயநகரத்துக்குக் கொண்டு சென்றதாகவும் அச்செய்தி கூறுகிறது. இந் நிகழ்ச்சி நடக்கக்கூடியதாயினும் இதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாமையால் இதை நம்பி ஏற்றுக் கொள்வதற்கில்லை.

கிருஷ்ண தேவராயரது அமர்த்தாணையை ஏற்று விசுவநாதர் மதுரைக்கு வந்து அங்குத்தங்கி விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியாய் இருந்து நேரடி ஆட்சியை மேற்கொண்டவரே அன்றி, அங்குப் பேரரசின் ஆட்சியை தொடங்கி வைத்தவர் அல்லர் என்பதறிக, ஆனல், அவர் மதுரை நாட்டைப் பொறுத்தவரையில் நாயக்கர் நேரடி ஆட்சியைத் தண்டமிழ்ப் பாண்டி நாட்டில் தொடங்கிவைத்த முதல்வர் என்று கூறுவது தவருகாது; முற்றும் உண்மையேயாகும்.

கிருஷ்ண தேவ ராயர் காலமானதும் விஜய நகரப் பேரரசுக்கு அவர்தம் தம்பி அச்சுதராயர் பட்டத்துக்கு வந்தார். அவர் விசுவநாதரை மண்டலேஸ்வரராய் உயர்த்திஞர்; மதுரை நாட்டோடு திருச்சிராப்பள்ளியைச் சேர்த்துச் சீரமைப்பும் செய்தார். விசுவநாதர் ஆட்சி 1529 முதல் 1564 வரை 35 ஆண்டுகள் நடைபெற்றது.

1529-ல் விசுவநாத நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அங்குத் தங்கியிருந்து மதுரை நாட்டைப் பேரரசின் சார்பில் பெருவேந்தருக்கு அடங்கி ஆட்சி புரியலாஞர். பஞ்சபாண்டியர்கள் மதுரை நாட்டிற்கு உரிமை கொண்டாடி நாட்டில் கலகம் செய்தார்கள். விசுவநாதரும் அரிய நாதரும் சேர்ந்து அக்கலகத்தைத் தக்க முறையில் அடக்கிஞர்கள். நாட்டில் பாதுகாவலான ஆட்சியை நடத்தும் பொருட்டும், அமைதியை நிலைநிறுத்தும் பொருட்டும் 72 பாளையப்பட்டு முறை அமைக்கப்பட்டது. மதுரை நாடு 72 பாளையங்களாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒவ்வொருவர் அதிகாரியாய் அமர்த்தப் பட்டார். பாளையக்காரர்கள் தாங்கள் ஆளும் பாளையங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் மூன்றில்

ஒரு பகுதியை மதுரை நாயக்கருக்குக் கொடுக்க வேண்டும்; மற்றொரு பகுதியைத் தாங்கள் அமைதி காக்க வைத்திருக்கும் படைவீரர்களுக்குச் செலவிட வேண்டும்; இன்னொரு பகுதியைச் தங்கள் சொந்த செலவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இவர்கள் தங்கள் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டும். போர்க் காலங்களில் மதுரை நாயக்கர்களுக்குப் படைத் துணை புரியவேண்டும். இவர்களே தங்கள் பகுதிகளில் ஏற்படக் கூடிய வழக்குகளையும் விசாரித்து நீதி வழங்கவேண்டும். இம்முறையால் அமைதிக்கால ஆட்சியும் போர்க்காலப் படையாட்சியும் கலந்த வல்லாட்சி நாட்டில் ஏற் படுத்தப்பட்டது. இதனால், நாட்டில் அமைதி நிலவியது.

விசுவநாதர் திருச்சிராப்பள்ளியில் சில சீர்திருத்தங் களைச் செய்தார்: இப்பொழுதுள்ள தெப்பக் குளத்தை வெட்டுவித்தார்; தாயுமானவர் கோயிலைச்செப்பனிட்டார்; காவிரியாற்றின் இருபக்கங்களிலும் கள்ளர்களுக்கு உறைவிடமாயிருந்த காடுகளை அழித்துச் சாலைகளை அமைத்துக் கள்ளர் தொல்லைகளை ஒழித்தார்; திருவரங்கப் பெருங்கோயிலைச் சீர்திருத்தி, அக்கோயிலைச் சுற்றித் தெருக்களை அமைத்து, வீடுகளைக் கட்டி, மக்களைக் குடியேற்றினர். இச்சீர்த்திருத்தங்களால் மதுரை நாட்டின் வடஎல்லையாய் இருந்த திருச்சிராப் பள்ளியில் ஒழுங்கும் அமைதியும் ஏற்பட்டன.

தென்பாண்டி நாட்டிலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. தாமிரபருணி ஆற்றின் இருமருங் கிலும் இருந்த காடுகள் அழிக்கப்பட்டுச் சாலைகள் போடப்பட்டன. இதனால், தென்பாண்டி நாட்டில் இருந்த கள்ளர் தொல்லையும் ஒழிந்தது. நெல்லையப்பர் கோயிலும் பழுதுபார்க்கப்பட்டது. திருநெல்வேலி நகரம் விரிவாக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதிகள்

செய்யப்பட்டன. பயிர்த்தொழில் இதனுல் வளர்ச்சியுற்றது.

மாலிக்கபூர் முதலியோர் நடத்திய படையெடுப்புகளாலும் அவற்றின் பின்னர் ஏற்பட்ட முஸ்லீம் ஆட்சியாலும் மதுரை மீனுட்சியம்மன் கோயில் மதிற்சுவர்கள் தரைமட்டமாக்கப்பட்டதையும் கோபுரங்கள் குலேக்கப்பட்டதையும் முன்னரே கண்டோம். பண்டைய சமயத்தை உயிர்ப்பிக்கவும் கலேப்பண்ணேகளாகிய திருக்கோயில்களேப் புதுப்பிக்கவும் எண்ணங்கொண்டவரான இரண்டாம் கம்பணர், மதிற்சுவர்களேயும் கோபுரங்களேயும் கட்டுவித்தார் என்றும், நாஞ்சில் நாட்டுக்குப் பாதுகாப்புக்காகக் கொண்டு போகப்பட்ட திருவுருவங்களே மதுரைக்குக் கொண்டுவரச்செய்து அவற்றை மதுரைக்கோயிலில் பிரதிஷ்டை செய்து அவற்றிற்குத் திருவாபரணங்களே அளித்து நாள்தோறும் வழிபாடு செய்வதற்காகத் திருவிளேயாடற் கிராமமும் விட்டுக் கொடுத்தார் என்றும் செவிவழிச் செய்தி கூறுகிறது. தாண்டவ மூர்த்திப் பண்டாரம் இயற்றிய திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலே* என்னும் நூலிலுள்ள ஒரு செய்யுளும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறது. அச் செய்யுள் வருமாறு:

''பின்னெருகாலம் திருக்காப்பு
நீக்கித்தன் பேரன்பினுல்
முன்னுள ஊர்களும் பின்புதி
தாய்விட்டு முக்கணர்க்கு

---

* இது திருவாலவாயில் (மதுரையில்) உள்ள திருக்கோயிலில் கோபுரம்,மண்டபம், திருக்குளம்,வாகனம் முதலிய திருப்பணிகள் இன்ன இன்ன காலத்தில் இன்னுர் இன்னுரால் இவ்வாறு இயற்றப்பட்டன என்பதை முறைப்படத் தமிழ்ப் பாவில் அமைத்துப் பாடப் பட்டதொரு நூல். மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் இது வெளியிடப்பட்டது.

மன்னிய பூசை திருப்பணி
கூடல் வளரச்செய்தான்
கன்னியும் பொன்னியும் கங்கையும்
கொண்டருள் கம்பணனே.''

கம்பணர் செய்த திருப்பணிகள் ஏறக்குறைய 150 ஆண்டுகளான பின்பு மதுரை மீனாட்சியம்மன் கோயில் பழுதுபடாமல் இருக்குமா? விசுவநாதர் மதுரை நாட்டு ஆட்சியை ஏற்றபின்பு பழுதுபட்டுக் கிடந்த அக் கோயிலைத் தம் கைப்பொருளைச் செலவிட்டுக் கட்டினார்.

இவ்வாறு பல சீர்த்திருத்தங்கள் செய்த விசுவநாதர் 35 ஆண்டுகள் நல்லாட்சி புரிந்து மக்கள் எல்லாம் வருந்துமாறு 1564ல் காலமானார்.

விசுவநாதருக்குப் பின்வந்தோர் :

விசுவநாதருக்குப் பின்வந்த ஆட்சியாளரான முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், பாளையப்பட்டுக் காரர்களுள் ஒருவரான தும்பிச்சி செய்த கலகத்தை அடக்கி ஒடுக்கினார். இதனால், பாளையப்பட்டுக்காரர்கள் நாட்டில் கலகம் செய்ய அஞ்சினார்கள். இவர் திருநெல் வேலியில் இருக்கும் பாளையங்கோட்டைக்கு அருகில் கிருஷ்ணபுரம் என்னும் ஊரை அமைத்தார்; நெல்லைக்கு மேற்கே கடையத்துக்கு அருகில் தம் பெயராலேயே வேறொரு கிருஷ்ணபுரத்தை அமைத்தார்; இங்கே திருவேங்கடநாதர் கோயிலைக் கட்டினார்; மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும் திருப்பணிகள் செய்தார். இவரது ஆட்சி 1564 முதல் 1572 வரை 8 ஆண்டுகள் நடைபெற்றது.

வீரப்ப நாயக்கர் 1572 முதல் 1595 வரை ஏறக் குறைய 23 ஆண்டுகள் ஆட்சியாளராயிருந்தார். இவர் தமது ஆட்சிக் காலத்தில் நடந்த வாணதிராயன்

கலகத்தை அடக்கினார்; தில்லையில் கூத்தப்பிரான் கோயிலிலும் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலிலும் திருப்பணிகள் செய்தார்; நீதிமுறை வழுவாது ஆட்சி புரிந்தார். இவர் ஆட்சியில் நாட்டில் அமைதி குலையாமல் இருந்தது.

இவருக்குப் பின் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியேற்றார். இவர் 1595 முதல் 1601 வரையில் ஏறக்குறைய 5 ஆண்டுகளும் 9 திங்களும் ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சியும் அமைதி நிலவிய ஆட்சியாய் விளங்கியது. நான்கு ஆட்சியாளர் காலத்தும் தளவாயாய் இருந்து அவர்களுக்கெல்லாம் வேண்டும்போது வேண்டிய ஆலோசனைகளைக் கூறி, நாட்டில் தோன்றிய கலகங்களை அடக்கி அமைதியை நிலைநாட்டி, மன்னர்களும் மக்களும் போற்றிப் புகழுமாறு வாழ்ந்துவந்த அருந்திறல் மிக்க பெருவீரரான தளவாய் அரியநாதர் மிகுந்த முதுமைப் பருவத்தில் இவ்வரசர் ஆட்சிக் காலத்தில் கி. பி. 1600-ல் இறைவன் திருவடி நீழலை எய்தினார். குதிரைமேல் இருப்பது போன்ற இவரது உருவச்சிலை மதுரைக் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தின் முகப்பில் இருந்து கொண்டு நமக்கு இவரை நினைப்பூட்டி வருகிறது. படைத் தலைமைப் பதவியும் தலைமை அமைச்சர் பதவியும் இணைந்த பதவியே தளவாய்ப் பதவியாகும். தளவாய் அரிய நாதர் இறப்பே இக்கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் நடந்த முக்கியமான நிகழ்ச்சியாகும்.

1601 முதல் 1609 வரையில் ஆட்சி புரிந்தவர் முத்து கிருஷ்ணப்ப நாயக்கர். இவர் தந்தையாரான இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் இறந்ததும், இவருக்குத் தம்பியான கஸ்தூரி ரங்கப்பர் ஆட்சியைக் கைப்பற்றி ஏழு நாள்களே ஆண்டார். இவ்வொரு வாரத்திற்குள் இவர் குடிமக்கள் எதிர்ப்பால் கொலை யுண்டார். எனவே,

இம்முத்துக் கிருஷ்ணப்பர் ஆட்சியாளரானர். இவர் மதுரை நாட்டுக்கு அடங்கிய இராமநாதபுரத்து மறவர் நாட்டில் சீர்திருத்தம் செய்து அமைதியை நிலைநாட்டினர்; கோபுரங்கள் கட்டியும் குளங்களை வெட்டியும் நகரங்களை அமைத்தும் மக்களுக்கு நன்மை செய்தார். இவர் மதுரைப் பசுமலைக்கு அருகில் கிருஷ்ணபுரம் என்னும் ஊரை ஏற்படுத்தியதாகவும் கூறுவர்.

இம்முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு முத்து வீரப்பர், திருமலை, குமாரமுத்து எனப் புதல்வர் மூவர் இருந்தனர், தந்தையார் 1609-ல் இறந்ததும் மூத்த மைந்தரான முத்துவீரப்ப நாயக்கர் (1609 - 1623) மதுரைப் பெருநாட்டின் ஆட்சியை ஏற்ருர். இப் பெயரினர் மூவர் மதுரை நாட்டை ஆண்டதால், இவர் முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் எனக் குறிப்பிடப் படுகிருர். இம்முதலாம் முத்துவீரப்பருடைய ஆட்சியில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது, இவர் முழு வுரிமை மன்னராக முயற்சி செய்ததாகும். இது வரைக்கும் மதுரை நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் விஜய நகரப் பேரரசுக்கு அடங்கி உண்மையோடு அப்பேரரசின் பிரதிநிதிகளாகவே ஆட்சி செய்தார்கள்.

விஜய நகரப் பேரரசானது புவியரசரும் கவியரசரும் அருங்கலைஞரும் பெருவீரருமாகிய கிருஷ்ணதேவ ராயர் காலம் வரை மாற்ருரும் போற்றும் வகையில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. பகைவர்களும் மாநில அதிகாரிகளும் அடங்கி ஒடுங்கியிருந்தார்கள். மதுரை நாட்டு நாயக்கர்களும் உண்மையன்போடு பேரரசுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தார்கள். உள் நாட்டுக் கிளர்ச்சிகளும் அடக்கப்பட்டுவந்தன. கிருஷ்ண தேவராயர்தம்பி அச்சுத ராயர் பட்டத்துக்கு வந்தார். இவருக்குப் பின் இவர்தம் மைந்தன் முதலாம்

வேங்கடன் பட்டத்திற்கு வந்தான். இதனுல், பேரரசில் கலகம் ஏற்பட்டது. முதலாம் வேங்கடனும் அவனுடைய குடும்பத்தாரும் பகைவன் திருமலையால் கொல்லப்பட்டார்கள். இராம ராயர் என்பவர் சதாசிவ ராயரின் பெயரால் பேரரசைக் கைப்பற்றி அவருக்கு 1543-ல் பட்டம் சூட்டி அவரைப் பெயரளவில் அரசராய் இருக்கச் செய்து பேரரசின் ஆட்சியை நடத்திவந்தார். இப்போது உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுதியாய் ஏற்பட்டன. இச்சமயத்தில் ஆமது நகர், கோல்கொண்டா, பிஜபூர், பீடார், பிரார் ஆகிய ஐந்து முஸ்லீம் நாடுகள் ஒன்றுக் கொன்று போரிட்டுக் கொண்டிருந்தன. ஒருவர் போரிட்டபோது மற்ருெருவருக்கும், இன்ஞெருவர் போரிட்டபோது மற்ருெருவருக்கும் மாறிமாறி இராமராயர் உதவி செய்துவந்தார். முடிவில் இந்த ஐந்து முஸ்லீம் நாடுகளுள் நான்கும் ஒன்று சேர்ந்து விஜய நகரத்தைத் தாக்க முனைந்தன. கி. பி. 1565ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23ஆம் நாள் செவ்வாய்க் கிழமையன்று நடந்த தலைக்கோட்டைப் போரில் இராமராயர் கொல்லப்பட்டார். இராமராயர் போரில் கொல்லப் படவே, அவர் தம்பி திருமலைராயர் கிடைத்த பொருள்களை 1,500 யானைகளின் மேல் ஏற்றிக்கொண்டு விஜயநகரத்தைப் பாதுகாப்பின்றி விடுத்து, அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுடன் தென்னுட்டில் உள்ள பெனுகொண்டாவிற்குப் போய்விட்டார். வெற்றிகண்ட முஸ்லீம்கள் இரக்கமின்றி அரக்க மனத்தோடு நகர மக்களைக் கொன்று குவித்து விஜய நகரத்தை அழித்துவிட்டார்கள்; அங்கு அழியா அழகுடன் விளங்கிய ஆலயங்களை அழித்தார்கள்; உயர்ந்த கலைச் சிற்பங்களை உடைத்தார்கள்; அரசர்கள் வாழ்ந்த அரண்

மனைகளையும் குடிமக்கள் வசித்த வீடுகளையும் எரித்தார்கள். ஐந்து திங்கள்வரையிலும் இந்த அழிவு வேலை நடைபெற்றது. உலகிலே எந்த நகருக்கும் இந்த அழிவு ஏற்பட்டிருக்க இயலாது என்று 'மறைந்த பேரரசு' என்னும் பெயரில் விஜய நகர வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவரும் இந்தியாவில் மாவட்ட ஆட்சியாளராய்ப் பணி புரிந்தவருமான இராபர்ட் சீவல் உள்ளம் நொந்து எழுதியிருக்கிறார். சிறந்து விளங்கிய விஜய நகரப் பேரரசு சிதைந்துவிட்டது. ஒரு காலத்தில் வெற்றிநகரமாய் விளங்கிய விஜய நகரம் அழிந்துவிட்டது.

இக்குழப்பமான காலத்தைப் பயன்படுத்திச் செஞ்சி நாயக்கரும் தஞ்சை நாயக்கரும் ஏறக்குறைய முழு வுரிமை மன்னராய் விட்டார்கள். மதுரை நாயக்கரான முதலாம் கிருஷ்ணப்பரோ சிதைந்த விஜய நகரப் பேரரசுக்கு அடங்கியே உண்மை அன்போடு மதுரை நாட்டை ஆட்சி புரிந்தார்; அதுமட்டுமல்லாமல் தலைக் கோட்டை என்ற இடத்தில் இராமராயரோடு முஸ்லீம்கள் நடத்திய போரில் படையுதவி செய்யத் தளவாய் அரியநாதரை விஜய நகரத்துக்குப் படையுடன் அனுப்பியிருந்தார். விஜய நகரம் சென்ற தளவாய் அரியநாதர் இரண்டு ஆண்டுகள் கழித்து (1566-67) மதுரைக்குத் திரும்பினார். வீரப்ப நாயக்கரும் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரும் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரும் நேர்மையுடன் சிதைந்த பேரரசின் தலைவருக்கு அடங்கியே ஆண்டார்கள்.

ஆனால், முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் 1609-ல் பட்டத்துக்கு வந்தபோது சிதைந்த பேரரசின் ஆதிக்கத்தைப் புறக்கணித்து முழுவுரிமை மன்னராக வித்திட்டார். இவர் 1623வரை 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவர்தாம் மதுரையில் இருந்த தலைநகரைத் தஞ்சை

யுடன் போர்புரியும் நோக்கத்தோடு 1616-ல் காவிரிக் கரையிலிருக்கும் வலிமை மிக்க கோட்டைகளைக் கொண்டிருந்த திரிசிர புரத்துக்கு மாற்றிவிட்டார். முழுவுரிமை மன்னராக இவர் எடுத்த முயற்சி முற்றுப்பெறவில்லை. இம்முயற்சி நிறைவேறச் செய்தவர் இனி நாம் விரிவாகப் படிக்கப் போகும் திருமலை நாயக்கர் என்பது குறிப்பிடத் தக்கது. முத்துவீரப்பர் சந்ததியின்றி மறைந்தார். பின் வரும் பேரொளிக்கு முன் விளங்கிய சிற்றொளியாய் இவர் திகழ்ந்தார் எனலாம்.

4. திருமலை நாயக்கர்

திருமலையும் நாடும் தலைநகரும்

கலை மலிந்த திருமலை :

உயர்ந்த உருவம், பருத்தவுடல், திரண்ட தோள்கள், சரிந்த தொந்தி, கடைந்தமைத்தாற்போன்ற மூக்கு, முறுக்கிய மீசை—இவை திருமலை நாயக்கர் வடிவம். இரு மனைவியருடன் கூடிய திருமலை நாயக்கர் உருவத்தை மதுரை மீனுட்சியம்மன் திருக்கோயிலில் காணலாம். இன்னும் திருப்பரங்குன்றத்துத் திருமுருகன் கோயிலிலும், திருமாலிருஞ் சோலை மலையிலிருக்கும் கள்ளழகர் கோயிலிலும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலிலும் இவருடைய உருவம் தூண்களில் பொறித்திருத்தலையும் பார்க்கலாம்.

திருமலை நாயக்கருக்கு முன்னே அறுவர் ஆட்சிப் பீடத்தில் ஏறி ஆட்சி புரிந்தனர்; பின்னே அறுவர் முழுவுரிமையோடு மதுரை நாட்டை ஆட்சி செய்தனர். முன்னிருந்த அறுவருள்ளும் பின்னுண்ட அறுவருள்ளும் 'நுங்கள் மரபினேர் புகழ்கள் எல்லாம் உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் என்று குகப் பெருமாள் பரதனுக்குக் கூறியவாறு, முன்னேர் பின்னேர் புகழ்கள் எல்லாம் தம் புகழாக்கிக்கொண்டு மதுரை நாட்டைத் தம் ஆட்சியின் பிற்பகுதியில் முழுவுரிமையுடன் ஆண்டவர் திருமலை நாயக்கரே ஆவார். இவர் இறந்தும் இறவாத புகழ் பெற்றுர். ஈண்டிய புகழோடு பாண்டி நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களை மறந்தோம்; மங்காப்புகழ்பெற்ற மங்கம்மாளையும் மறந்தோம்; மற்ற நாயக்கர்களையும் மறந்தோம்; ஆனல், மதுரை நாட்டை ஆண்ட பெருமை

திருமலை நாயக்கர்

[By Courtesy of Archaelogical Survey of India]



புது மண்டபத்தின் உட்புறத் தோற்றம் [By Courtesy of Archaelogical Survey of India]

மிக்க திருமலை நாயக்கரை மட்டும் இன்னும் நாம் மறக்கவில்லை. ஏன்? திருமலை நாயக்கருடைய பொற்புறு நற்பண்புகளாலோ? அன்று. மாட்சி மிகுந்த ஆட்சித் திறமையாலோ? அன்று. பின்பு எதனால்? தமிழ்நிலை பெற்ற மதுரை நகரை அழகுள்ள கட்டடங்கள் கட்டியும், தெப்பக்குளம் வெட்டியும், புதுமண்டபம் எழுப்பியும் கலைநகராக்கிய காரணத்தினாலேதான். திருமலை நாயக்கரது பண்பு குறித்து மாறுபட்ட கருத்துண்டு; ஆனால், அவர் கலை யார்வத்தால் திருமதுரை நன்னகரைத் தென் தமிழ்நாட்டு 'ஏதென்ஸ்' நகராக்கியது பற்றி வேறுபட்ட கருத்தே இல்லை. ஆதலால், மறவாச் சிறப்புப் பெற்றார் திருமலை நாயக்கர் எனலாம்.

இவ்வாறு மறத்தற்கரிய பெருமை மிக்க திருமலை நாயக்கர், மதுரை நாட்டை ஐந்தாவது நாயக்கராய் ஆட்சி புரிந்த முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு இரண்டாவது குமாரர். முத்துக் கிருஷ்ணப்பருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். மூத்த புதல்வர் முதலாம் முத்து வீரப்பர்; இரண்டாம் புதல்வர் திருமலை, மூன்றும் புதல்வர் குமாரமுத்து நாயக்கர். திருமலை சவுரி நாயினு அய்யுலுகாரு—இதுதான் முழுப் பெயர்—கி. பி. 1584-ஆம் ஆண்டு ஜனவரி பிப்பிரவரித் திங்களுக்குச் சரியான சாலிவாகன சகன் ஆண்டு 1505-க்கு மேற்செல்லாநின்ற பார்த்திப ஆண்டு, தைத்திங்கள், பூசத்திருநாளில் பிறந்தார். முத்துக் கிருஷ்ணப்பர் 1609ல் இறந்ததும், மூத்த புதல்வரான முதலாம் முத்து வீரப்பர் ஆட்சிப் பீடத்தில் ஏறினார். இவர் கி. பி. 1609-ஆம் ஆண்டிலிருந்து மதுரைப் பெருநாட்டை 1623-ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்து வந்தார். இம் முதலாம் முத்துவீரப்பர் திரிசிரபுரத்தில் சந்ததியின்றி மண்ணுலக வாழ்வை விட்டு மறையவும், இவருக்கு உடன்பிறந்தவரான திருமலை, ஆட்சியை

ஏற்றார். திருமலை ஆட்சிப் பீடத்தில் ஏறியது 1623 ஆக இருக்கவேண்டும். திருமலை ஆட்சியை ஏற்ற போது அவருக்கு 43 வயது இருந்திருக்கும்.

மதுரை நாயக்கர் வரலாற்றை இயற்றிய பேராசிரியர் சத்தியநாத ஐயர், திருமலை நாயக்கரைப் பெருந்திறன் வாய்ந்த அரும்பெருமன்னர் என்று பாராட்டியுள்ளார். ஏசு கழகத் தொண்டர்கள் அக்காலத்தில் எழுதிய கடிதங்களைத் திரட்டிச்சேர்த்து வெளியிட்ட பெட்ராண்டு பாதிரியார், "மதுரையை ஆண்ட மன்னர்களுள் மலிபுகழ் மிக்கவர் திருமலை நாயக்கர்" என்று குறிப்பிட்டிருக்கிறார். திருமலை நாயக்கருடைய பண்புகளைக் குறித்து மாறுபட்ட கருத்துகள் இருந்து வரினும், அவர் உண்மையில் பெரும்புகழ் வாய்ந்த அருந்திறல் மன்னர் என்பதில் ஐயமில்லை. பல்லவ வேந்தர்களுள் மகேந்திரப் பல்லவர் சிறந்து விளங்கினார். பிற்காலச் சோழர்களுள் இராசராச சோழர் இணையற்று இலங்கினார். அவர்களைப் போலவே மதுரை நாயக்கர்களுள் திருமலை சவுரியும் பெரும்புகழ் பெற்று விளங்கினார். திருவால வாயுடையார் கோயில் திருப்பணிமாலை திருமலை நாயக்கரை,

"பரராச சேகரன் பரராச பூஷணன்
பரராச ராச திலகன்
பரராசர் பணிமுத்துக் கிருஷ்ணப்ப பூபன்ருள்
பாலதிரு மலைபூபனே"

என்று பாராட்டுகிறது.

திருமலை காலத்து மதுரை நாடு :

திருமலையின் காலத்தில் மதுரைப்பெருநாடு மதுரை, திண்டுக்கல், திருச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவனந்தபுரத்தில் ஒரு பகுதி, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டப் பகுதிகளைக் கொண்ட பெரும்பரப்புடைய நாடாய் இருந்தது.

திருமலை நாயக்கர் ஆட்சிக்குட்பட்ட மதுரைநாடு



சேதுபதி முதலானர்கள் திருமலைக்குக் கீழ்ப்பட்டே ஆண்டார்கள்.

மதுரை தலைநகரமானது :

விசுவநாதர் காலத்தில் மதுரையே மதுரை நாட்டின் தலைநகராய் இருந்தது. முதலாம் முத்து வீரப்பர் 1616-ல் மதுரையிலிருந்து தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினர். திருமலை தம் முன்னோர்களைப் போலவே மதுரையில் முடிசூடிக்கொண்டு, திருச்சிராப்பள்ளியிலே ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் இருந்து ஆட்சி செய்து வந்தார்.

திருமலை நாயக்கரின் தமயனர் மதுரையைத் தலைநகராகக் கொள்ளாததற்குச்சிலகாரணங்கள் உண்டு. மதுரையில் தக்க காவலுடன் கூடிய அரண்கள் இல்லாமல் இருந்தன. காவிரியைப் போன்று வையை யாறு நீர் பெருகியோடும் ஆருக இல்லை. எப்பொழுதும் மதுரையில் காய்ச்சல் பரவிக் கொண்டிருந்தது. ஆதலால், அவர் திரிசிரபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டார்.

திருமலை நாயக்கரோ, 1634ல் தலைநகரைத் திரிசிர புரத்திலிருந்து மதுரைக்கு மாற்றிவிட்டார். அவ்வாறு தலைநகரை மாற்றியதற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. திரிசிபுரத்திலிருந்த பொழுது திருமலை பூபதி, சில காலமாக மண்டைச்சளி நோயால் (கடுமையான தடுமத்தால்) துன்புற்று நலிந்துவந்தார். பலவகை மருந்துகளை அருந்தியும் நோய்தீரவில்லை. திருவரங்கப் பெருங்கோயிலிலும் திருவானைக்காவிலுள்ள ஜம்பு கேஸ்வரர் ஆலயத்திலும் நாயக்கர் பலபல நேர்த்திக் கடன்களைச் செய்துகொண்டும் அந்நோய் நீங்கவில்லை. அதனுல், நாயக்கர் ஆருத் துன்பமுற்று வருந்திக்கொண் டிருந்தார். மதுரையில் மீனுட்சியம்மன் திருக்கோயில்

பெருவிழா நடைபெற்றது. அப்பொழுது நடைபெற்ற அங்கயற்கண்ணி அம்மையாரின் முடி சூடும் திருவிழா வினிலே, அம்மையார்க்குப் பிரதிநிதியாக அரசாளும் நாயக்கர், தம் கையில் அங்கயற் கண்ணியின் செங்கோலை வாங்குவது வழக்கமானதால், தம் முன்னோர்கள் வழக்கப்படி செங்கோல் வாங்க அந்நோயை மிகவும்பொறுத்துக்கொண்டு, திருமலை நாயக்கர் மதுரைக்குப் பயணமானார். பிரயாணத்தால் அவருக்கு நோய் மிகுதியாயிற்று. ஆகையால், அவர் நேரே மதுரைக்குப் போகாமல், வழியில் திண்டுக்கல்லில் தங்கினார். அன்று இரவு மதுரைச் சோமசுந்தரப்பெருமான் அவரை ஆட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு மன்னரது கனவில் சித்தர் வடிவத்தில் தோன்றி, "அரசரே, பழம்பெரு நகராகிய திருமதுரையில் நிலையாகத் தங்கி, அங்கயற்கண்ணி அம்மையார்க்கும் சொக்கநாதப் பெருமானுக்கும் வழிபாடு, திருவிழா முதலியன நடத்திக்கொண்டு ஆட்சிபுரிந்து வந்தால், உன்னைப் பிடித்த நோய் ஒரு நொடியில் நீங்கும். இத்திருநீற்றைச் சிறிது வாயிற்போட்டுக்கொண்டு மற்றதை உடலில் பூசிக்கொள்" என்று சொல்லி மறைந்தருளினார். நாயக்கர் விழித்தெழுந்து, "ஆண்டவன் திருவருள்கைகூடட்டும்!" என்று கூறிக்கொண்டு விடியும்வரை உறங்காமல் விழித்துக்கொண்டிருந்தார். பொழுது விடிந்ததும் திருமலை தம்முடன் வந்தவர்களிடம் கனவில் நடந்ததைக் கூறினார். அவர்கள் கடவுளின் திருவுளப்பாங்கின்படி நடப்பதே நலம் என்றார்கள். உடனே அவர், "அந்த மீனாட்சியம்மையுடன் அமர்ந்த சோமசுந்தரப் பெருமான் திருவருளால் என் நோய் நீங்குமானால், நான் நிலையாகவே மதுரையில் தங்கி ஆட்சி செய்வதோடு, ஐந்து லட்சம் பொன்னுக்குத் திருப்பணி திருவாபரணம் பண்ணிவைக்கின்றேன்''' என்று வேண்டிக்

கொண்டார். பின்பு அவர் பல் விளக்கிக் கொண்டு முகத்தைக் கழுவி மூக்கைச் சிந்தியபோது சளி கூட்டோடு கழன்று விழுந்தது. அவர், நோய் தீர்ந்தது என்று எண்ணினர்; திண்டுக்கல்லிலிருந்து புறப்பட்டு மதுரைக்குப் போய்ச் சேர்ந்து தம் முன்னோர்கள் அரண் மனையில் தங்கியிருந்து, கோயிலுக்குச் சென்று, அங்கயற்கண்ணி அம்மையையும் சொக்கநாதப் பெருமானையும் வழிபட்டு வந்தார். நாளடைவில் மண்டைச்சளி நோய் முற்றும் நீங்கியது.

திண்டுக்கல்லில் வேண்டிக்கொண்டவாறு திருமலை நாயக்கர், அக்கால வழக்கப்படி, கோயில் ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த அபிஷேக பண்டாரம் என்பவரிடமிருந்து ஆட்சியைப் பெற்றுக் கோயில் திருப்பணிகளைச் செய்துமுடித்தார்; நாட்டு வருவாயில் லட்சம் பொன்னுக்கு ஆயிரம் பொன் விகிதம் இறை வழிபாட்டிற்கும், நாற்பதினாயிரம் பொன் விழாக்களுக்கும் எழுதி வைத்தார்; இன்னும் திருவாபரணங்கள் செய்துவைத்தார்; கோயிலாட்சியைப் பெற்றுக்கொண்டதற்கு அபிஷேக பண்டாரத்துக்கு நிலம் முதலானவைகளை அளித்து, அவர் பெயரால் ஒரு சிறிய கோயிலும் கட்டிக் கொடுத்து, அங்கே இருந்து வருமாறு செய்தார். + அக்கோயிலுக்கு அபிஷேக பண்டாரக் கோயில் என்பது பெயர். அது மதுரை அந்திக்கடைப் பொட்டலுக்கு மேற்கே திருமதிலை அடுத்திருந்ததாம் அக்கோயில் ஏறக்குறைய இற்றைக்கு 87 ஆண்டுகளுக்கு முன்னர் இடிக்கப்பட்டுவிட்டது என்பர். இது தலைநகரைத் திருமலை நாயக்கர் மாற்றியதற்குக் கூறும் கதை.

நோய் நீங்கியது ஒரு காரணமாக இருக்கக்கூடும். ஆனால், வேறு காரணங்களும் இல்லாமல் இல்லை. தலைக் கோட்டைப் போரில் விஜயநகரப் பேரரசு சிதைந்துவிட்டது. மூன்றும் ஸ்ரீரங்கர் சிதைந்த பேரரசின் தலைவராய்

இருந்தார். இவர் தமக்குக் கீழடங்கியவர்களை அடக்கி யாண்டு கப்பம் கட்டுமாறு வற்புறுத்தினர். திருமலை நாயக்கரோ மூன்றும் ஸ்ரீரங்கரிடமிருந்து விடுபெற்று முழுவுரிமை மன்னராய் ஆட்சி புரிய எண்ணினர். ஆதலால், திருச்சிராப்பள்ளியை மாற்றியாக வேண்டும், திரிசிரபுரம் தலைநகராய் இருந்தால் வேலூரிலிருந்து ஆட்சிசெய்து வந்த மூன்றும் ஸ்ரீரங்கர் திரிசிரபுரத்தை மிக எளிதாகத் தாக்கி வெற்றியடையக்கூடும். தலைநகரம் வீழ்ச்சியுற்றால் மதுரை நாட்டு ஆட்சியும் வீழ்ச்சி யடையும் என்று சொல்லத் தேவையில்லை. திரிசிரபுரம் அடிக்கடி போருக்கு இலக்கானதைத் திருமலை நாயக்கர் நன்கறிந்திருந்தார். மதுரை நகரோ, ஸ்ரீரங்கரது ஆட்சிப்பீடமான வேலூருக்கு நெடுந்தொலைவில் உள்ளது. மதுரையைக் கைப்பற்ற வேண்டுமென்றால் திருச்சிக்கோட்டையையும் திண்டுக்கல் முதலான இடங்களிலிருந்த கோட்டைகளையும் முதலில் பிடித்தாக வேண்டும். இவற்றைப் பகைவர்கள் கைப்பற்றுவதற்குள் மதுரைப்படைகள் மிகத் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, அப்போது சிதைந்தபேரரசுக்குத் தலைவராய் வேலூரில் இருந்து வந்த மூன்றும் ஸ்ரீரங்கர் படையெடுத்து வந்து மதுரையை எளிதாகத் தாக்கிக் கைப்பற்றுவது இயலாது. இது நடைமுறை அனுபவத்தால் உணர்ந்த தகுதியான காரணமாகும்.

மேலும், மதுரை நாட்டுக்கு மையமான இடத்தில் இருப்பது மதுரை நகரம். நாட்டை நன்முறையில் ஆட்சி புரிய வேண்டுமானால், தலைநகரம் நடுவிடத்தில் இருக்க வேண்டும். இதனாற்றான், முகமது-பின்-துக்ளக்கு, தனது பெரு நாட்டுக்கு மையமாய் இருந்த தேவகிரிக்குத் தலை நகரை மாற்றினன். ஆதலால், திருமலை நாயக்கரும்

மதுரை நாட்டின் மையமான இடத்தில் தலைநகரம் அமைந்திருக்க வேண்டும் என்று கருதினர்.

இன்னும் தென்தமிழ் நாட்டில் மதுரை தொன்று தொட்டுப் புண்ணிய ஸ்தலமாய் விளங்கிவருவது. அவனிமிசை சிவராஜதானியாகக் கருதப்படுவது மதுரை. ஆதலால், திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராக்க எண்ணியிருக்கக் கூடும். இதனோடு சோமசுந்தரப் பெருமான் திருவருளால் பிணி நீங்கியதும் சேர்ந்தது.

மற்றும் பொங்கு தமிழ் வளர்த்த சங்க காலத்தி லிருந்து கி. பி. 1310 வரையில் பன்னெடுங்காலமாகத் தென் மதுரைத் தொன்னகரம் பாண்டியர்களுக்குத் தலைநகராய் இருந்து வந்துள்ளது. இது மட்டுமா? பைந்தமிழ்நாட்டின் புகழ்பெற்ற பண்பாட்டு நகரமாய் விளங்கி வந்தது மதுரைமாநகரம். 'தமிழ் கெழு கூடல்' என்று மதுரையைப் புறநானூறு புகழ்கிறது. சிறுபாணாற்றுப்படையோ, 'தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மதுரை' என்று சிறப்பிக்கிறது. பழம் பாடல் ஒன்று, 'பாடுதமிழ் வளர்த்த கூடல்' என்று பாராட்டுகிறது. சிலப்பதிகாரமோ, 'மதுரை மூதூர்,' 'மாடமதுரை', 'ஓங்குசீர் மதுரை,' 'மதுரை மூதூர் மாநகர்,' 'தென் தமிழ் நன்னாட்டுத் தீது தீர்மதுரை,' 'மாண்புடை மரபின் மதுரை,' 'வானவர் உறையும் மதுரை,' 'மாட மதுரை மாநகர்,' 'மணிமதுரை' என்று பற்பல சொற்றொடர்களால் சிறப்பித்துப் புகழ்கிறது. மதுரைக் காஞ்சி, 'புத்தேள் உலகம் கவினிக் காண்வர, மிக்குப்புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை' என்று மாண்புறப் பாடுகிறது. மணிவாசகப் பெருமான் இயற்றிய திருவாசகமும், 'மதுரைப் பெருநன் மாநகர் என்று மதுரையை மாண்புறப் புகழ்கிறது. பிற்காலத்தில் தோன்றிய பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணமும்,

‘திக்கெலாம் புகழ் மதுரை’ என்று மதுரைக்குப் பெரும்புகழ் சூட்டுகிறது. இவ்வாறு எண்ணற்ற தொன்மைமிக்க தண்டமிழ் இலக்கியங்களும் பின்வந்த சமய இலக்கியங்களும் இத் தொன்னகரைப் பாராட்டுகின்றன.

இத்தகைய மதுரைப்பெருமைகளைக் கேட்டறிந்த பெருந்திறனும் அருங்கலையுள்ளமும் சமய உணர்ச்சியும் வாய்க்கப் பெற்ற திருமலை நாயக்கர் நீடு நினைந்து, கி. பி. 1634-ஆம் ஆண்டில் தலை நகரைத் திரிசிரபுரத்திலிருந்து மதுரைக்கு மாற்றினார் என்று கூறுவது பொருத்தமானது.

5. முதல் மைசூர்ப்போர்

பாதுகாப்பு ஏற்பாடுகள்:

திருமலை நாயக்கர் ஆட்சிப் பீடம் ஏறியதும் மதுரை நாட்டைப் பாதுகாக்க வேண்டியவற்றைச் செய்வதில் முற்பட்டார். இதனால், இவர் இரண்டு கோட்டைகளைக் கட்டினார்; 30,000 வீரர்களைக் கொண்ட படையைத் திரட்டினார். இவர் இவ்வாறு பாதுகாப்பு எற்பாடுகளைச் செய்தது முழுவுரிமை மன்னராக விரும்பியதாலாகும் என்று நாயக்கர் வரலாற்றை முதலில் எழுதிய நெல்சன் துரை மகனார் குறிப்பிட்டுள்ளார். ஆனால், திருமலை நாயக்கரே முதல் முதல் பேரரசின் ஆதிக்கத்தை உதறித் தள்ளி முழுவுரிமை மன்னராக, சுதந்தர வேந்தராக விரும்பி விட்டார் என்று கருதுவதற்கில்லை. இவருக்கு முன்னிருந்த இவர் தமையனாரான முதலாம் முத்து வீரப்பரே இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆனால், அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை. தமயனார் நோக்கத்தை நிறைவேற்றினார் தம்பியாராகிய திருமலைநாயக்கர். இவர் மட்டும் இவ்வாறு பேரரசின் தலைமையை முதல்முதல் உதறித் தள்ளி முழுவுரிமைமன்னரானார் என்பதில்லை. பேரரசின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த மைசூர் வேந்தர் இராச உடையார் கி.பி. 1610-ல் முழுவுரிமை மன்னரானார். அவரைப் பின்பற்றி முதலாம் முத்துவீரப்பர் முயன்றார். மைசூர் மன்னரான இராச உடையாரைப் பின்பற்றியும், தம் தமையனாரின் நோக்கத்தை நிறைவேற்றவும் திருமலை நாயக்கர் பேரரசின் மேலாதிக்கத்தைப் புறக்கணித்துத் தள்ள முற்பட்டார் எனலாம். வரலாற்றுப் பேராசிரியர் எஸ். கிருஷ்ணசாமி

ஐயங்கார், இரண்டாம் வேங்கடர் உயிரோடிருந்த போதும் இராச உடையார் மேற்போக்காகப் பார்ப்பதற்கு உண்மையான சிற்றரசராய்க் காணப்பட்டாரே யன்றி, உண்மையில் கப்பம் கட்டியாண்டவராய் இல்லை என்றும், மதுரைதான் முதல்முதலாக மேலாதிக்கத்தை உதறித்தள்ளியது என்றும் திரு. சத்தியநாதர் இயற்றிய மதுரைநாயக்கர் வரலாற்றில் திருமலை நாயக்கரைப் பற்றிய செய்தியில் அடிக்குறிப்பாக எழுதியுள்ளார். மைசூர் மன்னர் இராச உடையார் திருமலைநாயக்கருக்கு வழிகாட்டியதாகக் கூறக் கிருஷ்ணசாமி ஐயங்கார் விரும்பவில்லை. மைசூர் மன்னர் எப்படியோ சுதந்தர மன்னராகி விட்டார். பேரரசின் தலைவர் இரண்டாம் வேங்கடரும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். சிதைந்த பேரரசின் தலைமையைப் புறக்கணிக்கத் திருமலை நாயக்கரும் முயன்றதில் தவறில்லை. அவர் அவ்வாறு முயன்றதற்கு அக்கால நிலையே காரணமாகும். பெரும்பாலாரான மன்னர்களும் இந்தக் குறுக்கு வழியில் வந்தவர்களே. வேங்கட மன்னருக்குப்பின் பேரரசின் தலைமையேற்ற மூன்றும் ஸ்ரீரங்கர் தம் தலைமையை வற்புறுத்தும் வன்மை பெற்றிருந்தார். எனவே, திருமலை நாயக்கர் தம் கருத்தை நிறைவேற்றவும் மைசூர்ப் படையெடுப்புக்கு அஞ்சியும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார் என்று கருதுவது தவறாகாது. பின் வந்த போர்கள் திருமலை நாயக்கரது அரசியல் திறனை மெய்ப்பிக்கின்றன.

போருக்கிடையில் கலையார்வம்:

திருமலை நாயக்கர், ஆட்சியை ஏற்றதும், ஐந்து பெரும்போர்கள் நடத்த வேண்டியவரானார். முந்திய பகைமையாலும் செந்தமிழ் மதுரை நாட்டின் செழிப்

பாலும் மைசூர்மன்னர் மதுரைமீது படையெடுத்த போது, நாயக்கர் எதிர்த்துப் போராட வேண்டிய வரானார்; கட்ட வேண்டிய கப்பத்தைக் கட்டாததனால் திருவாங்கூர் மன்னருடன் போர் புரியலானார்: விஜய நகரப் பேரரசின் பிடியிலிருந்து விடுபட்டு முழுவுரிமை மன்னராகப் பேரரசை எதிர்க்க வேண்டியவரானார்; இராமநாதபுரத்தில் அரசுரிமைக்கலகங்கள் ஏற்பட்ட காலத்தில் அவற்றை அடக்கி அமைதியை நிலை நிறுத்தப் போர் செய்ய வேண்டியவரானார்; மைசூர் மன்னர் படைகள் மதுரை நாட்டைத் தாக்கிக் குடிமக்கள் மூக்குகளை அறுத்து அவமானப்படுத்திய தனால் இரண்டாம் முறை பழிக்குப்பழிவாங்க மூ. கறுப்புப் போர் நடத்த வேண்டியவரானார். இவ்வாறு திருமலை நாயக்கர் தமது வாழ்நாள் முழுதும் பெரும்போர் புரிந்துகொண்டே இருக்க வேண்டிய வராய் இருந்ததுமன்றி, அப்போர்களுக்காகப் பெரும் பொருள் செலவு செய்ய வேண்டிய நிலையிலும் இருந்து வந்தார். இப்போர்களால் மதுரை நாட்டு மக்கள் சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆளானார்கள். இப்படிப் போர்களிற் சிக்குண்ட திருமலை நாயக்கர் எப்படி மதுரையம்பதியில் அழகிய அரண்மனையையும் சிற்பக் கலையழகுகள் மிக்க அற்புதமான புது மண்டபத் தையும் தென்னிந்தியாவிலே மிகப் பெரியதாய் விளங்கும் அழகிய தெப்பக்குளத்தையும் அமைத்தார் என்று வியப்படையாமலிருக்க இயலவில்லை. தலை நகரான மதுரை நகரில் பெரும்பாலும் அமைதி நிலை பெற்றிருக்க வேண்டும். திருமலை நாயக்கருடைய மாறுத இறையன்பும் ஆறுத கலையார்வமுமே கோயில் திருப்பணிகளைச் செய்யவும் அழகிய கட்டடங்களைக் கட்டி முடிக்கவும் இப்போர்களுக்கிடையே தூண்டி யிருக்க வேண்டும். இது நிற்க.

முதல் மைசூர்ப்போர்:

திருமலை நாயக்கர் முதல்முதலில் நடத்திய போர் மைசூரோடாகும். மைசூர் மன்னரே 1630-ல் திருமலை நாயக்கரோடு போர் தொடுத்தார். சத்தியநாத ஐயர் இப்போர் 1633-ல் நடந்திருக்கும் என்பர். திருமலை நாயக்கர் காலத்தில் மைசூரை ஆண்டவர் சாமராஜ உடையார். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முதல் முதலாக மைசூர் முழுவுரிமை நாடாகிவிட்டது. முதலாம் முத்துவீரப்பர் காலத்திலே மைசூருக்கும் மதுரை நாட்டிற்கும் பகைமை ஏற்பட்டிருந்தது. அதனோடு மதுரை நாட்டின் செழிப்பும், அக்காலத்தில் மைசூர் மன்னராய் இருந்த சாமராஜ உடையார் மனத்தைக் கவர்ந்திருந்தது. ஆதலால், மதுரை நாட்டைக் கைப்பற்ற எண்ணி மைசூர் மன்னர், மதுரை நாட்டு ஆட்சியைத் திருமலை நாயக்கர் ஏற்ற சில ஆண்டுகளுக்குள் பெரும்படையை ஹரிசூர நந்தி ராஜா என்ற படைத் தலைவரின்கீழ் அனுப்பி வைத்தார். மைசூர்ப் படைத்தலைவர், அரசரது கட்டளைப்படி படை வீரர்களை நடத்திக்கொண்டு, மதுரையின் வடமேற்கு எல்லை வழியாய்ச் சென்று, அங்கே இருந்த கோட்டைகளைக் கைப்பற்றித் திண்டுக்கல்லை அணுகி அதனை முற்றுகையிடத் தொடங்கினர்.

மைசூர்ப் படையெடுப்பை அறிந்த திருமலை நாயக்கர், பெரும்படையைத் திரட்டி இராமப்பய்யர் தலைமையில் திண்டுக்கல்லுக்கு அனுப்பினர். மதுரைப் படைத்தலைவரான இராமப்பய்யர் அக்காலத்தில் வீரப் புகழ் பெற்றவர். இவர் மதுரைக்கு அடுத்து ஏழு கல் தொலைவிலிருக்கும் சதுர்வேதி மங்கலம் என்றும் கூத்தியார்குண்டு என்றும் வழங்கும் சிற்றூரில் பிறந்து வளர்ந்தவர்; சிறந்த சிவநெறிச் செல்வர். இவர்

சதுர்வேதி மங்கலத்தில் ஒரு சிவன் கோயிலைக் கட்டியுள்ளார். அக்கோயிலில் இராமப்பய்யர் உருவச்சிலையும் திருமலை நாயக்கர் உருவச்சிலையும் இருப்பதாக அறிகிறோம். இராமப்பய்யர் திண்டுக்கல்லை அடைந்து, முற்றுகையிட்டிருந்த மைசூர்ப் படைவீரர்களை வளைத்துக் கொண்டார். திண்டுக்கல் அருகிலிருக்கும் கன்னிவாடிப்பாளையக்காரராகிய அரங்கண்ண நாயக்கர் உடனே நாயக்கருக்கு 7,000 பொன்னைக் (ரூ. 14,000) கொடுத்துதவினார். மற்றப் பாளையக்காரர்களும் உதவியளித்தார்கள். இராமப்பய்யர் எதிரிகளைக் கடுமையாகத் தாக்கிப் புறங்காட்டி ஓடுமாறு செய்தார். மைசூர் படை வீரர்கள், தாங்கள் கொண்டு வந்த படைக்கலங்களை அங்கங்கே அப்படி அப்படியே போட்டுவிட்டுத் தலை தப்பினால் போதும் என்று நிலைகலங்கி ஓடினார்கள். மதுரைப் படைத்தலைவரான இராமப்பய்யர் எதிரிகளை விடாமல் துரத்திச் சென்று மைசூருக்குள் புகுந்து அங்கிருந்த கோட்டையை முற்றுகையிடத் தொடங்கினார்.

மைசூர்க் கோட்டையை இராமப்பய்யர் முற்றுகையிட்டுக்கொண்டிருந்தார். வெற்றிகிட்டும் நிலை இருந்தது. இப்படியிருந்த நிலையில், மதுரையில் இராமப்பய்யர் மீது பொறாமை கொண்ட சிலர் நாயக்கரிடம் சென்று. ''அரசரே! இராமப்பயர் வஞ்சகர்; அவர் பிடித்த பகுதிகளைத் தம்வயமாக்கிக்கொண்டு உம்மையும் கொன்று ஆட்சியை மேற்கொள்ள முனைவார். மைசூர்ப் போரை முடித்துக்கொண்டு திரும்பி வந்ததும் உங்களைக் கொல்வது உறுதி. வெள்ளித்தடி ஏந்திய இரு கட்டியக்காரர்களை அனுப்பி அவரைக் கையோடு அழைத்துவரச் சொல்லுங்கள். அவர் உடனே வந்துவிட்டால் நாங்கள் கூறுவது பொய் என்று தள்ளுங்கள். அவர் வாரா

விட்டால், நாங்கள் சொல்வது மெய் என்று கொள்ளுங்கள்,'' என்றனர். நாயக்கர், அவர்கள் கூறியதை உண்மை என்று நம்பி, இரண்டு கட்டியக்காரர்களை அனுப்பி, அவரை மடியிற்கைபோட்டு மதுரைக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அங்ஙனமே அவ்விருவரும் மைசூருக்குச் சென்று நாயக்கர் சொன்னதை இராமப்பய்யரிடம் கூற அஞ்சி, அரங்கண்ண நாயக்கரிடம் போய்த் தாம் இருவரும் மதுரையிலிருந்து வந்திருப்பதையும், இராமப்பய்யரை அழைத்து வருமாறு அரசர் கட்டளையிட்டிருப்பதையும் கூறினர். அரங்கண்ண நாயக்கர் இவ்விருவரையும் அழைத்துச் சென்று இராமப்பய்யரிடம் அரசர் கட்டளையைத் தெரிவித்தார். இராமப்பய்யரோ அவர்களிடம், "நான் இப்பொழுது வரமுடியாது,'' என்று உறுதியாகக் கூறினார். என்றாலும், கட்டியக்காரர் இருவரும், "கண்டிப்பாய் அழைத்து வரவேண்டும் என்பது அரசரது கட்டளை,'' என்று இராமப்பய்யர் மடியில் கைபோட்டு இழுத்தார்கள். இராமப்பய்யர் எப்படி இதனைப் பொறுத்திருப்பார்? மிகுந்த சினங்கொண்டு மடியில் கை போட்டவர்கள் கைகளை வெட்டிவிடுமாறு கட்டளையிட்டார். அரங்கண்ண நாயக்கர் அவர்களை அவ்வாறு செய்தல் கூடாது என்று தடுத்தும் அய்யர் கேட்கவில்லை. அய்யர் கட்டளைப்படி கட்டியக்காரர்கள் கைகள் வெட்டப்பட்டன. கைகள் வெட்டுண்ட கட்டியக்காரர் இருவரும் மதுரைக்குத் திரும்பிச் சென்று திருமலை நாயக்கரிடம் முறையிட்டனர். இது நிற்க.

இராமப்பய்யர் மைசூரில் கோட்டையைப் பிடிக்கும் தறுவாயில் இருந்த பொழுது, இப்படி மன்னர் கட்டளை வந்ததை எண்ணி, என்ன செய்வது என்று தோன்றாது இருதலைக்கொள்ளி எறும்புபோலத் திகைத்தார்; சிறிது

சிந்தித்துப் பகைவரை வெல்வதே தமது கடமை என்று முடிவுசெய்து, முற்றுகையை விடாது தொடர்ந்து நடத்திச் சில நாள்களில் அக்கோட்டையைக் கைப்பற்றி வாகை மாலே சூடினர். இராமப்பய்யர் தம்மைப்பற்றித் தவருகக் கூறிய வஞ்சகர்களின் நெஞ்சத்தில் அச்சம் ஊன்ற வெற்றிக்கொடியுடன் மதுரைக்குத் திரும்பினர்; மன்னரைக் கண்டு தம்மைப் பொறுத்தருளுமாறு வேண்டி நின்ருர். தம் கட்டளையை அவமதித்தாலும் வாகை சூடித் திரும்பியதால், திருமலே நாயக்கர், உண்மை யறிந்து இராமப்பய்யரை அன்புடன் ஏற்றுக் கொண்டார். அவர் அரங்கண்ண நாயக்கரை மிகவும் பாராட்டி, அவர் தமக்குச் செலுத்த வேண்டிய தோப்பாப் பணத்தையும் (கப்பத்தையும்) தள்ளி விட்டார். இப்படிச் செய்ததால், உயர்ந்த நேர்மையும் உண்மை அன்பும் அரிய வீரமும் உள்ள இராமப்பய்யரின் ஆதரவும், உண்மை மிக்க அரங்கண்ண நாயக்கரது உறுதியான தொடர்பும் திருமலே நாயக்கருக்குக் கிடைத்தன; நாயக்கருடைய படை வன்மையும் ஆட்சித் திறனும் மேன்மையுற்றன. உண்மையை அறிந்து கொண்டால் ஒருவர்மேல் தவருகக் கொண்ட கருத்தை மாற்றிக்கொள்ளும் பண்பு திருமலே நாயக்கருக்கு இருந்தது பாராட்டத்தக்கது.

6. திருவாங்கூர்மீது படையெடுப்பு

முதல் மைசூர்ப் போர் ஒருவாறு முற்றுப்பெற்றது. இதற்கு அடுத்து நிகழ்ந்தது திருவாங்கூர்மீது நாயக்கர் எடுத்த படையெடுப்பாகும். அச்சுத ராயர் காலத்தில் தூத்துக்குடிக் கடற்கரைப் பகுதியில் பிரான்ஸிஸ் சேவியர் சமயத்தொண்டு புரிந்தது காரணமாகத் தென் பரதவக் குடிமக்கள் ரோமன் கத்தோலிக்கச் சமயத்தைத் தழுவினர்கள். இவர்கள் விஜயநகரப் பேரரசுக்குட் பட்டிருந்த தமிழ் நாட்டில் வாழ்ந்த குடிமக்கள்; அச்சுத ராயருக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள். இவர்களிடம் சமயத்தொண்டு புரிந்து வந்த போர்ச்சுகல் நாட்டுப் பாதிரிமார்கள், இவர்களை "நாங்கள் போர்ச்சுகல் மன்னருக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களே அன்றி, அச்சுத ராயருக்கு அடங்க வேண்டியவர்கள் அல்லோம்," என்று சொல்லுமளவிற்கு மனம் மாறும்படி செய்துவிட்டார்கள். இவ்வாறு தென்பரதவர்களுடைய மனம் மாறியதால், தூத்துக்குடிக் கடற்கரைப் பகுதியே போர்ச்சுகல் மன்னருக்கு உரியதாய்விடும் போல இருந்தது. இந்த நிலையில் திருவாங்கூர் மன்னர் தம் ஆட்சியைத் தூத்துக்குடி வரையிலும் விரிவுபடுத்தி ஆதிக்கம் செலுத்தலானர். இச்சமயத்தில் திருவாடானை யில் பாண்டியர் பரம்பரையினர் என்று சொல்லிக் கொண்டவர்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். இந்தக் காலத்திற்றான் விசுவநாதர் மதுரை நாட்டுக்கு மண்டலேஸ்வரராய் இருந்தார். இக்காலத்தில் பேரரசின் முடிவேந்தராய் இருந்த அச்சுதராயர், தம் உறவினரான இராம ராஜ விட்டலர் என்பவரை இக்குழப்பங்களை

அடக்கி ஒடுக்குமாறு அனுப்பினர். இவர் தெற்கே படை யெடுத்து வந்து திருவாடானைப் பாண்டியர்களை அடக்கினர்: தூத்துக்குடிப் பரதவரது செருக்கையும் ஒடுக்கினர்; திருவாங்கூர் மன்னரையும் அடக்கினர். இவர் மதுரையில் பத்து ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்பொழுது விசுவநாதரும் அவருக்குப் பின் வந்த முதலாம் கிருஷ்ணப்பரும் இந்த இராம ராஜ விட்டலருக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

இராமராஜ விட்டலர் படையெடுப்புக்குப் பின் திருவாங்கூர், மதுரை நாட்டுக்கு அடங்கியே கிடந்து கப்பம் கட்டி வந்தது. ஆனல், திருமலை நாயக்கர் காலத்தில் திருவாங்கூர் மன்னராய் இருந்த உண்ணி கேரளவர்மா, வழக்கம்போலக் கட்டி வந்த கப்பத்தைக் கட்ட மறுத்து விட்டார். இவ்வுண்ணி கேரள வர்மா 1631-ல் பட்டத்துக்கு வந்தவர். இவர் கப்பம்கட்ட மறுக்கவும், திருமலை நாயக்கர் பேரரசின் சார்பில் 1634 அக்டோபர் திங்களுக்கும் 1635 மார்ச்சுத் திங்களுக்கும் இடையில் திருவாங்கூர்மீது படையெடுக்குமாறு தம் படையை அனுப்பினர். இராமப்பய்யர் படையெடுத்துச் சென்று வாகை சூடித் திரும்பினர். இது முதல், திருவாங்கூர் மன்னர்கள் மதுரை நாட்டுக்கு அஞ்சியே ஆட்சி புரிந்து வந்தார்கள் என்று அறிகின்றோம். திருவாங்கூர் மன்னர்கள் மதுரை நாயக்கர்களுக்கு அஞ்சிப் பதினுயிரம் நாயர் வீரர்கள் அடங்கிய படையை நிரந்தரமாக வைத்திருந்ததை டச்சுக்காரரான ஜான் நியூஹாப் என்பவர் 1664-ல் குறிப்பிட்டிருப்பதைப் பேராசிரியர் சத்தியநாத ஐயர் எடுத்துக்காட்டியுள்ளார்.

7. சேதுபதியுடன் போர்

திருவாங்கூர் மன்னரோடு செய்த போர் வெற்றியோடு முடிவடைந்தது. 1637-ல் திருமலை நாயக்கர் சேதுபதியுடன் போரிடலானார். இராமநாதபுரத்துச் சீமையைச் சேது நாடு என்றும், மறவர் சீமை என்றும் கூறுவர். சேது நாட்டு மறவர் குல மன்னர்களைச் சேதுபதிகள் என்பர். சேதுபதிகள், நாயக்கர் ஆட்சிக்கு முன்னர்ப் பாண்டியர்களுக்குக்கீழ் அடங்கித் தங்கள் பகுதியை ஆண்டவர்கள். நாயக்கர் ஆட்சி தொடங்கிய பின்னும் சேது நாடு, மதுரை நாயக்கர்களுக்கு அடங்கிய நாடாகவே இருந்து கப்பம் கட்டி வந்தது.

மறவர் குல மக்கள் வீரம் மிக்கவர்கள்; அஞ்சாது வெஞ்சமர் புரியும் ஆற்றல் வாய்ந்தவர்கள்; தமிழகத்தின் வீர இனத்தைச் சேர்ந்தவர்கள். கி. பி. 1659ல் புரொயென்சா என்ற மேலை நாட்டினர் எழுதிய தமது கடிதத்தில் ஐரோப்பியர்களுக்கு எதிராக வெற்றி பெறும் முறையில் நற்றிறனோடு போரிட்ட வீர மக்கள் என்று மறவர்களைச் சாலப் பாராட்டிக் கூறியுள்ளாரெனில், மறவர்களின் வீரச் சிறப்பை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? இங்ஙனம் ஐரோப்பியராலும் பாராட்டப்பட்டுள்ள போராடும் வீர இனத்தவர்களே தீரம் மிக்க மறவர்கள்.

வீரம் மிக்க மறவர் மக்களைக் கொண்ட தொன்மை வாய்ந்த சேது நாடு நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சீர் கெட்டுச் சிதைந்து கிடந்தது. போர்ச்சுகீசியர் ஆதிக்கம் கீழைக் கரையில் தலை தூக்கத் தொடங்கிற்று. கீழைக் கரையில் அயல் நாட்டாரது ஆதிக்கத்தை ஒடுக்கவும்

வருவாயைப் பெருக்கவும் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609) ஆட்சியை ஏற்றதும், முதல் வேலையாக இராமநாதபுரச்சீமையைச்சீர் திருத்த முயற்சியெடுத்தார். அவர் உடையான் சேதுபதி என்ற முதலாம் சடையத் தேவரை இராமநாதபுரத்துக்கு மன்னராக்கி, மறவர் நாட்டுக்குப் புத்துயிரளித்தார். முதலாம் சடையத் தேவரை முதலாம் சடைக்கத்தேவர் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். சடையத்தேவர் என்பதே பொருத்தமாகும். பின் வந்த இரண்டாம் சடையத்தேவரையும் சடைக்கத்தேவர் என்றே இராமப்பய்யர் அம்மானை குறிப்பிடுகிறது. இப்பெயர் சடைக்கத்தேவர் என்றே வழங்கி வந்தது போலும்! பதினேழு ஆண்டுகள் நன்முறையில் ஆட்சி புரிந்த மன்னர் முதலாம் சடையத்தேவர், 1623-ல் காலமானார். அவருக்குப் பின் அவர் மைந்தர் கூத்தன் சேதுபதி ஏறக்குறையப் பதின்மூன்றாண்டுகள் அமைதியாய்ச் சேது நாட்டை ஆட்சி செய்து 1635-ல் மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்தார். இவருக்குச் சடையத் தேவர் என்ற மைந்தரும், கண்காணும் நாச்சியார் என்ற மகளும் இருந்தார்கள். கூத்தன் சேதுபதியின் புதல்வரான சடையத்தேவர், பட்டத்துக்கு வந்து இரண்டு ஆண்டுகள் எந்த விதமான குழப்பமும் கலகமும் இன்றிச் சேதுநாட்டை அமைதியாக ஆண்டுவந்தார். இந்தச் சடையத்தேவருக்கு இரண்டாம் சடையத்தேவர் என்றும், இரண்டாம் சடைக்கத்தேவர் என்றும், தளவாய்ச் சேதுபதி என்றும் பெயர்கள் வழங்கும். இவரது இல்லறத்தை விளக்கச் செல்வக்குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை. ஆதலால், இவர், தம் தங்கை புதல்வர் இரகுநாத சேதுபதியை மகன்மை (ஸ்வீகாரம்) செய்துகொண்டு, தமக்குப் பின் இந்த இரகுநாதசேதுபதிக்கு அரசுரிமை வழங்கப் போவதாக வெளியிட்டார்.

இச்செய்தியை அறிந்ததும், காலஞ்சென்றகூத்தன் சேதுபதியின் காமக்கிழத்தி புதல்வர் தம்பி என்பவர், தளவாய்ச் சேதுபதி அரசரானதையே எதிர்த்து, அவருக்கு அரசாளும் உரிமை இல்லை என்று கூறி, மதுரையை அடைந்து, திருமலை மன்னரைக் கண்டு முறையிட்டுத் தம்மையே மறவர்நாட்டு மன்னராக்கு மாறு வேண்டினார். உண்மையை உணராத திருமலை நாயக்கர், தம்முடைய தளவாய் இராமப்பய்யரையும், அவருக்குத் துணைப்படைத் தலைவராக அரங்கண்ண நாயக்கரையும் இராமநாதபுரச் சீமைமீது படையெடுத்துச்சென்று, சேதுபதியை வென்று, தம்பியை அம்மறவர் நாட்டு மன்னராக்க வேண்டுமென்று கூறிக் கட்டளையிட்டனுப்பினார். தம்பியை மன்னராக்க விரும்பியதே சேதுபதி போருக்குக் காரணம் என்று நெல்சன் பாதிரியார் கூறியுள்ளார். ஆனால், டெய்லர் பாதிரியாரோ, திருமலை நாயக்கருக்குத் தளவாய்ச் சேதுபதி கப்பங்கட்டாது அவர் கட்டளையை ஏற்காமல் இருந்ததே காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆதலால், இப்போருக்கு எதுதான் உண்மையான காரணம் என்பது புலப்படவில்லை. எக்காரணம் கொண்டோ நாயக்கர் சேதுபதியோடு போர் தொடுத்துவிட்டார்.

பெருவீரர்களான இராமப்பய்யரும் அரங்கண்ண நாயக்கரும் வஞ்சி சூடி இராமநாதபுரம் சென்று வெஞ்சமர் புரியலாயினர். தளவாய்ச் சேதுபதி மதுரைப் படைக்கு ஒரு சிறிதும் அஞ்சாது கடும்போர் புரிந்தார். சில முறை தோற்றுத் தோற்று முடிவில் இராமப்பய்யர் சேது நாட்டை இராமநாதபுரம் வரைக்கும் கைப்பற்றலானார். இந்நிலையைக்கண்ட தளவாய்ச் சேதுபதி இராமேஸ்வரத் தீவில் புகுந்து ஒளிந்து கொண்டார். மதுரைப்படைத்தலைவர் தம் முயற்சியைக்

கைவிடவில்லை; எப்படியும் சேதுபதியைச் சிறைபிடிக்க வேண்டும் என்று உறுதி கொண்டு பாம்பன் மேல் ஒரு பாலத்தை விரைவில் கட்டச் செய்து படையை அதில் நடத்திச் சென்று சேதுபதியைச் சிறை பிடித்து, மதுரைத் தலைநகருக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சிறைக்கூடத்தில் இரும்புச் சங்கிலியால் கட்டி வைத்தார். இப்போரில் திருமலை நாயக்கர் போர்ச்சுகீசியருடைய உதவியை நாடிப் பெற்றார்.

இராமப்பய்யர் அம்மானை என்னும் நாட்டுப் பாடல் நூல், திருமலை நாயக்கர் கட்டளையால் சேதுபதியுடன் இராமப்பய்யர் செய்த போரினை விரிவாகக் கூறுகிறது. இந்நூல் நாட்டுப் பாடலாய் இருப்பினும், வரலாற்றுச் சிறப்புடையது என்பதில் ஐயமில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் இந்நூலை 1951ல் வெளியிட்டிருக்கிறது. இது 1637ல் திருமலை நாயக்கர் இரண்டாம் சடைக்கத் தேவரோடு (தளவாய்ச் சேதுபதி என்னும் இரண்டாம் சடையத் தேவரோடு) போர்தொடுத்து நடத்தியதைக் கூறுகிறது. அது வருமாறு:

இராமப்பய்யர் சடைக்கத் தேவர்மீது படையெடுக்க எண்ணித் திருமலை நாயக்கரை நோக்கி,

> ''ஆண்டவனே இப்போது அடியேன்சொல் விண்ணப்பம்கேள்;
> மதுரை நகராளும் மன்னவனே, நீர்கேளும்!''

என்று வேண்ட, மன்னர்,

> ''விருது புகழ் இராமா, நீ வீரியங்கள் பேசாதே;
> ... ...
> வேண்டா மடாராமா, வீரியங்கள் பேசாதே
> ... ...
> சேதுக் கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை;
> வாளுக் கிரையிட்ட மறவன் வலுக்காரன்;

துப்பாக்கி மெத்தவுண்டாம் தோலா மறவனுக்கு;
தன்னரசு நாடும் தனிக்கோட்டை ஆளுவனும்;
மதுரைப் படையென்ருல் மதியான் மறவனுந்தான்;
மறவர்கள் சற்றும் மதியார் வடுகனென்ருல்;
உன்னுடைய வாள்திறத்தை ஒருக்காலும் எண்ணுன்காண்;
வேண்டா மடாராம வீரியங்கள் பேசாதே''

என்று கூறினுர். இராமப்பய்யர் மேலும்,

''அரக்கர் குலத்தை அனுமார் அறுத்தால்போல்
மறக்குலத்தை நானும் வாகாய்க் கருவறுப்பேன்;
எட்டாமல் ஓடி எங்கே இருந்தாலும்
சென்றிறங்கி எட்டாம்நாள் தென்னவன் பாருலகில்
நாடழித்துத் தீக்கொளுத்தி நன்னகரி பாழாக்கி
வெட்டிச் சிறைபிடித்து வேந்தன் சடைக்கனையும்
கட்டிக் கொடுவருவேன் கர்த்தனே உன்பாதம்;
ஆண்டவா இப்போ அனுப்புவிக்க வேணும்''

என்று வேண்டினுர். மன்னர் அனுமதி கொடுக்க,

'நடந்தான் புலிராமன் நல்லபெருஞ் சேனையுடன்.'

பல இடங்களில் போர்கள் நடைபெற்றன. சடைக்கத்தேவரும் அவருடைய மருகரான வன்னியத்தேவரும் வீரத்தோடு போர் புரிந்து வந்தார்கள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்துகொண்டிருந்தன. இராமநாதபுரம், இராமப்பய்யரிடம் சிக்கியது. சடைக்கத் தேவரும் வன்னியனும் இராமேஸ்வரத் தீவுக்குள் படைகளுடன் புகுந்துவிட்டார்கள். அரசர்கள், வீரர்கள், செட்டிமார்கள், பரத்தையர்கள் முதலிய பலரையும் கல்லெடுத்துக் கொடுக்குமாறு இராமப்பய்யர் கட்டளையிட்டுப் பாலத்தைக் கட்டி முடிக்கச் செய்தார். வன்னியன் கடும் போர் புரிந்தான்.

''பாளையத்தி லுள்ள படைத்தலைவர் எல்லோரும்
வன்னியுட கோபம் கண்டு மயங்குவாரும்
பாளையங்கள் எல்லாம் பலதிக்குத் தானேடி
நிர்த்தூளி யாக்கி நின்ருனே வன்னியுந்தான்.''

இராமப்பய்யர் பறங்கியர்களின் உதவியை நாடிக் கப்பல் உதவியும் படையுதவியும் பெற்றுப் போர் புரிந்தார். வன்னியும் பறங்கியரோடு கப்பற்போர் புரிந்து வெற்றி பெற்ருன். வன்னிக்கு அம்மை கண்டது. அம்மை கண்டும் வன்னியன் அஞ்சாது வெஞ்சமர் புரிந்தான். தீரனவன் வன்னியனும் சிவலோகந்தான் சேர்ந்தான். சடைக்கத் தேவர், இராமப்பய்யருக்குத் தூதனுப்பிச் சந்து செய்து கொள்ள விரும்பினுர். இராமப்பய்யரும் சடைக்கத்தேவரை வரவழைத்தார். கேட்ட கேள்விக்குச் சடைக்கத்தேவர் செருக்கோடு விடையளித்தார். மதுரைப் படைத்தலைவர் கட்டளைப் படி சடைக்கத் தேவர் சிறை செய்யப்பட்டு மதுரைக்குக் கொண்டுபோகப்பட்டார். திருமலை நாயக்கரிடத்தும் செருக்குடன் பேசவே, தேவர் சிறையில் அடைக்கப் பட்டார். ஒரு நாள் சடைக்கத் தேவர் காலில் மாட்டி யிருந்த சங்கிலி தாஞகவே உடைந்தது.

"காலில் விலங்கு கலீர்என்று தான்தெறித்துப்
போனதுவைக் கண்டு புகழ்ந்து மிகச்சடைக்கன்
மாயனுக்குச் சித்தம் வந்ததுகாண் என்றிருந்தான்."

இது கேட்டுத் திருமலை மன்னர் இந்நிகழ்ச்சி இறை யருளால் நடந்ததாகக் கருதிச் சடைக்கத் தேவரை அழைத்து ஆடை அணிகலன்களை அளித்துத் திரும்பவும் சென்று தம் நாட்டை ஆண்டுகொண்டிருக்குமாறு அருள் புரிந்தார்.

"விடை பெற்றுத் தான் சடைக்கன் வேகமுடன் கைதொழுது
சொக்கலிங்கம் மீனுட்சி துணையென்று தான்மறவன்
நின்றனுப்பிக் கொண்டு நீதியுடன் தெண்டனிட்(டு)
ஏறினன் தண்டிகையில் எல்லையற்ற சேனையுடன்;

சேனைத் தளம்சூழச் சென்றேகி யேபோனன்;
ராமநாத சுவாமி நல்லபெரும் பட்டணத்தில்
செங்கோல் செலுத்திச் சேவடியைக் கைதொழுது
மாயன் அருளால் மண்டலத்தை ஆண்டிருந்தான்."

டெய்லர் பாதிரியாரின் கீழை நாட்டு வரலாற்றுக் கையெழுத்துப் பிரதியில் (Taylor's Oriental Historical Manuscripts, vol. II. 24. 26) காணப்படும் இச்செய்தி மேற்குறித்த போரை வலியுறுத்துகிறது.

"இராசா திருமலைநாயக்கர் மதுரையில் பட்டங் கட்டிக் கொண்டு அவர் தம்பி குமார முத்து நாயக்கர் சின்னத் துரையுமாக இராச்சியம் ஆளையில், சீரங்கம் மதுரை முதல்க் கொண்டு விஷ்ட்டிணு தலங்கள் சிவதலங் களுக்கெல்லாம் தொண்ணூத்தி ஆறு கோபுரம் 'ராயர் கோபுர'மென்ற கோபுரம் எல்லாம் பெருசாய் ஒரு முகிற் தத்தில் அடிப்போட்டு சிறுது வேலையள் முடித்தார். மதுரையில்த் தெற்பக் குளமும் புதுமண்டபமும் அரண்மனையுங் கட்டிவைச்சார்.

"அப்போது கூத்தன் சேதுபதி குமாரன் தளவாய் சேதுபதி, சடைக்கத் தேவனென்றும் அவருக்கு இரண்டு நாமகறணம். அந்தச் சடைக்கத் தேவனென்கிறவர் அர மனைக்குப் பணமும் குடாமல் நிகாரித்து ரெம்பத் துற்மாற்கங்களாய் நடப்பித்துக்கொண்டு வந்தார்கள். அது சமாசாரம் இராசா திருமலை நாயக்கர் கேட்டு அவருக்குத் தாகிதையாய் நிருபம் எளுதி அனுப்பிவிச் சார்கள். அந்த நிருபத்தையும் தள்ளிப்போன மனுசரையுமடித்துக் கோபம் வைத்துத் தளவாய் இராமப்பய்யரையும் சகல தளமும் யெளுபத்திரண்டு பாளையகாரரையும் அனுப்பி இராமனாத புரத்து வரைக்குஞ் சண்டை பண்ணிக் கோட்டையை விட்டுப் போட்டு சடைக்கத் தேவர் ராமேசுபரத்தில்ப் போயிருந்

தார். தளவாயி இராமப்பய்யனவர்கள் இராமீசுரத்துக்குப் போய் சண்டை பண்ணி சடைக்கத் தேவனையும் பிடித்துக் கொண்டு வந்து மதுரையில் நிகளபந்தனம் பண்ணி இருந்ததில்ச் சிறுதனுளைக்கிப் பிறகு ராமேசுபரம் பாதை மாற்கங்களில் சில்லறையளாயிருந்துது. அப்படியிருக்கையில் வயிராகியள் லாடசன்னுசியள் வடக்கேயிருந்து இராமேசுர யாத்திரைக்கு வந்து இராசா அரமனை வாசலில் வெகுனுள் வரைக்கும் காத்திருந்து பிருது பண்ணிவிச்சுச் சேதுபதியை விடச்சொல்லி ரொம்ப வேண்டிக்கொண்டார்கள். ராசாவுக்கு ரொம்பத் தயவு வந்து சடைக்கன் சேதுபதியைவிட்டு இனிமேல் புத்தியாய் நடந்துக்கோ வென்று வஷ்த்திர பூஷணுதியளும் வெகுமதி கொடுத்து சீமையும் கொடுத்து அனுப்பிவிச்சார்கள்.''

இது, கொச்சைத் தமிழில் பிழைகள் மலிந்து கிடக்க எழுதப்பட்டுள்ளதெனினும், சேதுபதியுடன் திருமலை நாயக்கர் நடத்திய போருக்கு ஆதாரமாய் இருப்பதால் இங்கு எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இராமப்பய்யர், போர் நடந்தபோது இறந்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. ஆனுல், இராமப்பய்யர் அம்மானை, போர் முடிந்த பின்னும் அவர் உயிரோடிருந்ததைக் குறிப்பிடுகிறது. இதற்கு இந்த அம்மானையைவிட வேறு சான்று தேவையில்லை. நாயக்கருக்குப் பறங்கிகளின் உதவி கிடைத்ததையும் அம்மானை சொல்கிறது. இப்பறங்கிகள் போர்ச்சுகீசியர்களே. திருமலை இப்போர்ச்சுகீசியர்களுக்கு யாதா கோயில்களைக் கட்டிக்கொள்ளவும், மக்களைக் கிறிஸ்தவர்களாக்கிக்கொள்ளவும், டச்சுக்காரர்கள் மதுரை நாட்டில் கால் வைக்காதிருக்கவும் சலுகைகள் தருவதாக உறுதியளித்து, அவர்களுடைய உதவியைப் பெற்ருர்.

F. C. டான்வெர்ஸ் என்ற மேலை நாட்டினர் வெளியிட்ட அறிக்கை இச்செய்தியை மெய்ப்பிக்கின்றது. இது நிற்க.

போர் வெற்றியோடு முடிவுற்றது. முன்னே கண்டவாறு தளவாய்ச் சேதுபதியும் மதுரையில் சிறைவைக்கப் பட்டார். கூத்தன் சேதுபதியின் காமக்கிழத்தி மகனுரான தம்பி இராமநாதபுரத்துச் சீமைக்கு மன்னரானுர். எனினும், மறவர் நாட்டு அரசுரிமைப் போராட்டம் முடிவடையவில்லை. நாட்டில் அமைதி ஏற்படவே இல்லை. தளவாய்ச் சேதுபதியின் மருமக்களான இரகுநாத தேவரும் நாராயணத் தேவரும் நாட்டில் கலகம் செய்தார்கள். கள்ளர் தொல்லை மிகுந்தது. இராமேஸ்வரம் சென்ற பைராகிகள் மறவர் நாட்டின் அமைதியற்ற நிலையை நாயக்கரிடம் சொன்னுர்கள். தம்பிக்கு எதிர்ப்புகள் மிகுந்தன. தம்பியும் நாயக்கரிடம் மறுமுறையும் வந்து முறையிட்டு நாயக்கருடைய உதவியை வேண்டி நின்ருர். இப்போது உண்மை நிலையறிந்த திருமலை நாயக்கர் உடனே தளவாய்ச் சேதுபதியைச் சிறையிலிருந்து விடுவித்து இராமநாதபுரத்துக்கு அரசராக்கினுர்.

நாட்டில் அமைதி ஏற்பட்டது. ஆனுல், சில ஆண்டுகளுக்குப் பின் 1645-ல் தம்பியால் தளவாய்ச் சேதுபதி கொல்லப்பட்டார். அதன்மேல் திறமை மிக்க திருமலை நாயக்கர் மறவர் நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து இராமநாதபுரத்தை இரகுநாத தேவருக்கும், சிவகங்கையைத் தம்பிக்கும், திருவாடானையை இரகுநாதர் இளவலான தணக்கத் தேவருக்கும் அளித்தார். சிறிது காலத்திற்குள் தம்பி, நாயராயணத் தேவன் முதலியவர்கள் இறந்துவிட்டார்கள். பிரிந்த பகுதிகள் இரகுநாத தேவருக்குச் சேர்ந்துவிட்டன. இரகுநாத தேவர் மறவர் சீமை முழுமைக்கும் உரியவராகி நாட்டில் அமைதியை

நிலை நிறுத்தியதோடல்லாது, திருமலை நாயக்கருக்கு மிகவும் உண்மையுடையவராயும் இருந்து வந்தார். எட்டயபுரம் பாளையக்காரர் திருமலையை எதிர்த்தபோது இவர் அப்பாளையக்காரரை எதிர்த்துப் போர்புரிந்து வென்றார். அதனால், திருமலை நாயக்கர் மகிழ்ச்சி யடைந்து, கப்பங்கட்ட வேண்டியதில்லை என்று இரகுநாத தேவருக்குச் சலுகையளித்ததோடு முத்துக் குளிப்பதிலிருந்து கிடைத்த வருவாயில் ஒரு பகுதியைப் பெறும் உரிமையையும் கொடுத்து, 'நாட்டுக் காவலர்' என்ற பட்டமும் தந்து, தாம் நவராத்திரி விழாவைக் கொண்டாடுவது போல இராமநாத புரத்திலும் அவ்விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு இசைவும் அளித்து அவருக்குச் சிறப்புச்செய்தார். அக்காலத்தில் பேரரசர் சிறப்பாகச் செய்வதைத் தம் கீழுள்ள சிற்றரசர் களாயினும் குடிமக்களாயினும் எவரும் செய்யாத மரபு இந்த நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வந்தது. ஆதலால், சேதுபதியாகிய சிற்றரசருக்குத் திருமலை நாயக்கர் நவராத்திரி விழாவைத் தம்மைப் போலவே கொண்டாடும் தனிச் சிறப்பை அளித்தது சேதுபதிக்குப் பெறுதற்கரிய பெருமையாகும் என்றறிக.

8. மூன்றும் ஸ்ரீரங்கனோடு போர்

திருமலை நாயக்கர் மதுரை நாட்டு ஆட்சியை ஏற்ற போது, சிதைந்த பேரரசின் முடி வேந்தராய் இருந்தவர் மூன்றும் வேங்கடர் ஆவார். வரலாற்றாசிரியர் பலர் இவரை இரண்டாம் வேங்கடர் என்று குறிப்பிடு கின்றனர். உண்மையில் இம்மன்னர் மூன்றும் வேங்கடர் என்றே குறிப்பிடத் தக்கவர். இவருக்கு முன் பேரரசராய் இருந்தவர், இராமதேவர் என்பவர். இராமதேவர் இறந்ததும் மூன்றும் வேங்கடர் 1630-ல் பட்டத்துக்கு வந்தார். அப்போது இறந்துபோன இராமதேவர் சிற்றப்பனுரான திம்மராஜா தமக்கே பேரரசுப் பட்டம் உரியதென்று போரிடலானுர். இவர் ஆட்சியைக் கைப்பற்றி வேங்கடரைத் தமது சொந்த ஊராகிய ஆனைக்குந்தியிலேயே இருக்குமாறு செய்து விட்டார். மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கர்கள் மூன்றும் வேங்கடரை ஆதரித்தார்கள். திம்மருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஆட்சியைக் கவர வந்த வல்லாளர் என்று திம்மராஜா கருதப்பட்டார். எனினும் அவர், நாட்டில் கலகம் செய்துகொண்டேயிருந்தார். ஓரளவு அவருக்கு வெற்றியும் கிடைத்து வந்தது. இச் சமயத்தில் மூன்றும் வேங்கடர் தம்பியாராகிய சென்ன வேங்கடரின் மூன்றும் மகனுன இளவரசன் ஸ்ரீரங்கன் தன் பெரியப்பருக்காகப் பரிந்து வந்து, பழவேற் காட்டிலிருந்த டச்சுக்காரர்களுடைய உதவி பெற்றுத் திம்மராஜாவோடு போர் புரிந்து அவரை வென்று வேங் கடர்து அரசுரிமையை ஒப்புக் கொள்ளுமாறு செய்தான்.

திம்மர் கைப்பற்றியிருந்த பகுதிகளின் ஆட்சியை அவரே மேற்கொள்ளுமாறு விடப்பட்டார். இப்படியிருந்தும், திம்மராஜா வாளா இராமல் மேலும் கலகம் செய்யத் தொடங்கினர். செஞ்சி நாயக்கன் இப்போது திம்மராஜாவுடன் போர்புரிந்து 1635-ல் அவரைக் கொன்ருன். ஐந்தாண்டுகளாக நடந்து வந்த உள்நாட்டுப் போர் 1635-ல் திம்மராஜாவினது முடிவோடு நின்றது. நாட்டில் அமைதி ஏற்பட்டது. கொண்டி நாயக்கனிடம் பெனுகொண்டாவை ஒப்படைத்துவிட்டு வேங்கடர் வேலூர்க்குச் சென்று அதனைத் தலைமைப்பீடமாகக் கொண்டு அங்கிருந்து சிதைந்த பேரரசை ஆட்சி புரிந்து வந்தார்.

இப்படியிருக்க, மூன்ரும் வேங்கடர், செஞ்சி நாயக்கரோடு மிகுந்த நட்புறவு கொண்டிருப்பதைத் திருமலை நாயக்கரும் தஞ்சை நாயக்கரும் கண்டு, ஒருவேளை அவ்விருவரும் சேர்ந்து தங்கள் நாடுகள் மீது படையெடுக்கக் கூடும் என்று ஐயம் கொண்டு, வேங்கட மன்னரைச் சிறை செய்யச் சதி செய்து, அதில் வெற்றி பெருது தோல்வி யுற்ருர்கள். இதனுல், சினங்கொண்ட வேங்கடர் தஞ்சை, மதுரை நாயக்கர்கள் மேல் போர் தொடுத்தார். இரு நாயக்கர்களுக்கும் பேரரசுத் தலைவருக்கும் 1637-ல் போர் நடைபெற்றது. முடிவில் இரு கட்சியினரும் ஒருவாறு சந்து செய்து கொண்டனர்.

நாட்டில் அமைதி ஓரளவு நிலவிக் கொண்டிருந்தது. இதுவரைக்கும் தன் பெரியப்பரிடம் மிகவும் உண்மை அன்போடு இருந்து வந்த இளவரசன் ஸ்ரீரங்கன், எக்காரணத்தினுலோ வேங்கடருக்கு எதிரியாகிப் பிஜபூர்ச் சுல்தானை 1638-ஆம் ஆண்டும், 1641-ஆம் ஆண்டும் பேரரசின் மீது படையெடுக்குமாறு தூண்டி விட்டான். பிஜபூர்ப் படைத் தலைவன் ரண்டூலகான்

1638-ல் வேங்கடருக்குரிய பெங்களூரை முற்றுகை யிட்டான். துரோகி ஸ்ரீரங்கனும் அம்முஸ்லீம் படைத் தலைவனோடு சேர்ந்துகொண்டான். முதலில் வேங்கடர் முஸ்லீம் படைத் தலைவனுக்குப் பணம் கொடுத் தனுப்பினார். திரும்பவும் 1639-ல் ரண்டுலகான் படை யெடுத்து வந்த போது வேங்கடர், திருமலை நாயக்க ருடைய உதவியையும் மற்ற நாயக்கர்களுடைய உதவியையும் வேண்டினார். அப்போது மதுரைப் படைத்தலைவராகிய இராமப்பய்யர், தளவாய்ச் சேதுபதி என்ற இரண்டாம் சடையத் தேவரோடு இராமநாத புரத்தில் கடும்போர் புரிந்து கொண்டிருந்தார். வேங்கடர் வேண்டுகோளுக்கு இணங்கித் திருமலை நாயக்கர் இராமப்பய்யரைப் பெரும்படையுடன் முஸ்லீம் வீரர்களோடு போர் செய்து நாட்டுப் பகுதியை மீட்க அனுப்பி வைத்தார். இராமப்பய்யர் அம்மானை இந்த உண்மையை வெளியிடுகிறது.

இராமப்பய்யர் இராமநாதபுரத்தில் அத்தியுத்திக் கோட்டையில் இருபது நாள் தங்கியிருந்தார். அப்போது மதுரையிலிருந்து ஒற்றன் ஒருவன் வந்து,

“ முகிலருடன் பாச்சா முப்பதினா யிரங்குதிரை
கணவாயை வந்து கட்டிக்கொண்டா ரென்றுசொல்லிக்
கோலக்கொண்டை யான்குதிரைக் கூட்டப்
பெருந்தளமும்
ராயருடை சீமையெல்லாம் நாலுதிக்கும்
கொள்ளையிட்டு
விசையா புரமும் வேலூரும் கொள்ளை யிட்டுக்
கணவாய்கள் கோட்டையெல்லாம் கட்டிக்கொண்டான்
என்றுசொல்லி
இங்குவரப் பயணமாய் இருக்கிறன் என்றுசொல்லி
ராயருட காயிதமும் நமக்குவந்த தென்றுசொல்லி
மன்னன் புலி ராமனையும் வரவழைக்க வேணுமென்று

கர்த்தனுட காயிதமும் கடுகியே தான்கொடுத்துக்
காயிதத்தைக் கொண்டு கடுகியே ஓடிவந்தான;
மன்னன்புலி ராமய்யனை வந்துகண்டான் ஒற்றனுந்தான்;
காயிதத்தைக் கொடுத்துக் கைகட்டி நிற்கலுற்றான்."

இராமப்பய்யர் தம் படைத் தலைவர்களை அழைத்து அவர்களிடம் சொல்ல வேண்டுவன எல்லாம் சொல்லி இராமநாதபுரத்தை விட்டு மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார். இராமப்பய்யர்,

"மன்னன் திருமலையேந்திரனை வந்துகண்டு சந்தித்(து)
ஆண்டவனே,இப்போ அழைத்த பணிவிடையேன்?"
என்று கேட்க
"என்வார்த்தை தன்னை இனிக்கேளும் இராமா, நீ
கோலக்கொண் டையானும் குதிரைப் பெருந்தளமும்
கணவாய்கள் கோட்டையெல்லாம் கட்டிக்கொண
டார் என்று சொல்லி
விசையா புரமும் வேலூரும் கொள்ளையிட்(டு)
இங்குவரப் பயணமாய் இருக்கிறான் என்று சொல்லி
ராய ரதுக்கு நமக்கெழுதி வந்ததுகாண்.
அதுகண்டு நாமள் அழைப்பித்தோம் ராமய்யனே"

என்று திருமலை நாயக்கர் கூறி இராமப்பய்யரை வேங்கடருக்குப் படையுதவி புரிய அனுப்பினார். படைத் தலைவர் இராமப்பய்யர், மதுரையிலிருந்து புறப்பட்டுத் துவரைமான், சோழ வந்தான். வடமதுரை, திண்டுக்கல், தேக்கமலை, மணப்பாறை, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், சமயபுரக் கண்ணனூர், ஊட்டத்தூர், வாலிகொண்டாபுரம், ஆரணி ஆகிய இவ்வூர்கள் எல்லாவற்றையும் கடந்து,

"வேலூரு தன்னில் விரையவே வந்திறங்கி
வெங்களூர் தன்னில் விரையவே சென்றிறங்கி"

இராயரைக் கண்டார். இராயரும் செய்தியைக் கூறினார்.

இக்கேரி வேங்கட கிருஷ்ணய்யர் படை வீரர்களும் இராமப்பய்யர் படை வீரர்களும் ஒன்று சேர்ந்து பகைவர்களை எதிர்த்துப் போர் செய்தார்கள்.

"எல்லோரும் போயே எதிர்த்துப்போர் செய்தார்கள்;
மன்னன் புலிராமன் மண்டிப்போர் செய்யலுற்றார்;
இக்கரை வெங்கிட கிருஷ்ணய்யன் எதிர்த்துத்துரத்திவிட்டார்;
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனையுந்தான்
துலுக்கர் பெரும்படையை சூறையிட்டுத் தான்விரட்டி
ஆறு கடக்க அலேகுலேயத் தான் துரத்தி
வெட்டி விருதறுத்தான் வேந்தன் புலி ராமய்யனும்;
வெற்றி கொண்டு ராமய்யனும் வீரியங்கள் பேசிவந்தார்."

இராமப்பய்யர் பெங்களூரிலிருந்து விடை பெற்றுக் கொண்டு மதுரைக்குத் திரும்பினார். "துலுக்கர் துரை மக்களைத்தான் துரத்திவந்த சேவகன்காண்" என்று பெண்கள், வழிகளில் இவரைப் பாராட்டிப் பார்க்கலுற்றார்கள். இராமப்பய்யர் மதுரைக்கு வந்து திருமலே நாயக்கரைக் கண்டு, வெற்றிச் செய்தியைக் கூறிவிட்டு, உடனே இடையில் விட்டு வந்ததும் சேதுபதியோடு நடந்துகொண்டிருந்ததுமான போரில் கலந்துகொள்ளும் பொருட்டு விரைந்து போய், இராமநாதபுரத்தை அடைந்து, போர் முயற்சியை மேற்கொண்டு வெற்றியுற்றார்.

அம்மானே தவருன தமிழில் இருந்தாலும், வரலாற்றுச் செய்தியை உண்மைக்குப் பெரும்பாலும் மாறுபடாமல் கூறுகிறது. இதனுல், திருமலே கப்பங் கட்டாவிட்டாலும், பேரரசருக்கு ஆபத்து வேளையில் உதவி செய்தார் என்பது தெரிகிறது. தென் தமிழ் நாட்டு நாயக்கர்கள் உதவியால் வேங்கடர் முஸ்லீம் வீரர்களை வென்று சிறிது காலம் அவர்களது படையெடுப்பைத் தடுத்து நிறுத்தினர்.

ஆனால், பிஜபூர்ப் படைத்தலைவன் ரண்டூலகான் 1641-ல் வேலூரைத் தாக்க வந்தான். துரோகி ஸ்ரீரங்கனும் அவனோடு சேர்ந்துகொண்டான். பகைவர்கள் வேலூரை நோக்கிச் சென்றார்கள்; வழியிலிருந்த அரண்களைக் கைப்பற்றிக்கொண்டு வேலூருக்கு அருகில் பன்னிரண்டு கல்தொலைவில் பாசறை அமைத்துத் தங்கினார்கள். மறுமுறையும் நாயக்கர்களுடைய படையுதவியால் சிறிது காலம் வேலூர்க் கோட்டை பகைவர் கையில் சிக்காது பாதுகாக்கப்பட்டது.

கருநாடகப் பகுதியில் இருந்துவந்த குழப்பத்தைக் கண்ட கோல்கொண்டாச் சுல்தான், அப்பகுதியைக் கைப்பற்றும்பொருட்டுக் கருநாடகக் கடற்கரை வழியாகப் படையை அனுப்பினான். நெல்லூர் மாவட்டத்தில் ஒரு பகுதியை ஆண்டுவந்த வேலுகோட்டிதிம்மாவும், சென்னை, பூவிருந்தவல்லி ஆகிய இரண்டையும் ஆட்சி செய்துவந்த தாமரேலவேங்கடனும் கோல்கொண்டா வீரர்களைத் தடுத்து நிறுத்த முயன்றார்கள். பயன் ஏற்படவில்லை. இதனால், மூன்றாம் வேங்கடர் உளமுடைந்து சித்தூர் மாவட்டத்திலிருக்கும் நாராயணவரக் காட்டிற்குள் ஓடி ஒளிந்து வாழ்ந்து அநாதையாய் அக்காட்டு மலையில் 1641-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள், 10-ஆம் நாள் மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்தார்.

மூன்றாம் வேங்கடருக்குச் சந்ததி இல்லை. துரோகி ஸ்ரீரங்கனே பேரரசின் பட்டத்துக்குரியவன். இது வரைக்கும் பிஜபூர்ப் படைத்தலைவனான ரண்டூலகானோடு சேர்ந்து தன் பெரியப்பனையே எதிர்த்துவந்த துரோகி ஸ்ரீரங்கன், இப்போது நாராயணவரக் காட்டுமலை மேல் வேங்கடர் அரச வாழ்விழந்து புரப்பவர் இன்றி அநாதையாய் இறந்துவிட்டதை அறிந்ததும், ரண்டூலகானைக்

கைவிட்டுப் பேரரசைக் காக்கும்பொருட்டு எதிரியாகிப் பட்டத்துக்குரியவனாய் 1642-ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், 29-ஆம் நாள் சிதைந்த பேரரசின் மன்னனாய் முடி சூட்டிக் கொண்டான். இவனே மூன்றாம் ஸ்ரீரங்கன் என்று குறிப்பிடப்படுபவன். இவனது பண்பைக் கண்டு நாயக்கர்கள் இவனை வெறுத்தார்கள்.

மூன்றாம் ஸ்ரீரங்கன் தன் பெரியப்பனைக் காட்டிலும் திறமையிலும் தீரத்திலும் வீரத்திலும் மிகவும் மேம்பட்டவன். மூன்றாம் வேங்கடரோ அமைதியில் நாட்டமுள்ளவர். அவ்வாறு அமைதியை விரும்பிய வேங்கடரே, எண்ணி நிதானித்து செயலாற்ற வல்ல அந்தப் பேரரசரே, அரசியல் சுழற்சியில் மிகவும் அகப்பட்டு அல்லலுக்குள்ளாகி நாடிழந்து நகரிழந்து அரச வாழ்விழந்து அன்பிழந்து அநாதையாய்ப் புரப்பவர் இன்றி இறந்து பட்டாரென்றால், வீரமிருப்பினும் தீரமிருப்பினும் சூழ்ச்சித் திறமையிருப்பினும் அவசரப் பண்பையும் காலக் கழிவையும் கொண்ட மூன்றாம் ஸ்ரீரங்கன் அரசியற் பெரும்புயலில் எப்படி அகப்படாமல் தப்ப முடியும்? அதுவும் இளவரசனாய் இருந்தபோது உளத்தினில் பெரியப்பன் என்ற அன்பின்றி அப்பெரியப்பனுக்கே எதிரியாகித் துரோகியாகிப் புரிந்த வன்செயலுக்கு, அதுவும் முஸ்லீம் பகைவனோடு சேர்ந்து எதிர்க்கு மாறுசெய்த தீமைக்கு அவனே எப்படி இரையாகாமல் இருக்க முடியும்?

சுல்தான்களுக்குள் இருந்துவந்த பொறாமையால் ஸ்ரீரங்கனுக்குச் சில காலம் முஸ்லீம் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த வாய்ப்புக் கிடைத்தது. 1644 ஜனவரியில் கோல்கொண்டாச் சுல்தான், ஸ்ரீரங்கன் நாட்டின் மீது படையெடுத்தான். ஆனால், ஸ்ரீரங்கன், பிஜபூர்ச் சுல்தானது உதவியை நாடிப் பெற்றுக் கோல்கொண்டா

வின் படையெடுப்பை உதயகிரியோடு நிறுத்துமாறு செய்தான். இப்பொழுது பிஜபூர்ச் சுல்தான் உதவி தனக்கு இருந்ததால், ஸ்ரீரங்கன் வலிமை மிக்கவனாய்த் தமிழக நாயக்கர்களை அச்சுறுத்திப் பகுதிப் பணமாகப் பெரும்பொருளைப் பெற்று, அதில் ஒரு பகுதியைப் பிஜபூர்ச் சுல்தான் செய்த உதவிக்காகக் கொடுத்தான். இதனால், வெறுப்படைந்த திருமலைநாயக்கரும் செஞ்சி நாயக்கனும் ஸ்ரீரங்கனை எதிர்த்துப் போர் புரியக் கிளம்பினார்கள். கோல்கொண்டாச் சுல்தான் மறுபடியும் ஸ்ரீரங்கன் நாட்டின்மீது படையெடுத்து வந்தான். படை வீரர்கள் பழவேற்காடு வரைக்கும் எதிர்ப்பின்றிச் சென்றார்கள். பழவேற்காட்டில் கோட்டை கட்டி வாணிகம் செய்து வந்த டச்சுக்காரர்களின் படைத்தலைவன் கோல்கொண்டாப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தினான். அக்காலத்தில் வாணிகம் செய்துவந்த ஐரோப்பியர்கள் எந்த எந்தப் பகுதியில் இருந்தார்களோ, அந்த அந்தப் பகுதி அரசர் இசைவு பெற்றுக் கோட்டை கட்டிக் கொண்டு பாதுகாப்புப் படையுடன் வாணிகம் நடத்துவது வழக்கம். அத்தகைய நிலையில் இருந்த டச்சுப் படைத்தலைவன் கோல்கொண்டாப் படை வீரர்களுடன் போர்புரிந்து அவர்களை மேற்போகாதவாறு தடை செய்தான். இச்சமயத்தில் செஞ்சி நாயக்கன் கோல்கொண்டாவோடு சேர்ந்து தொல்லை கொடுக்காதிருக்கும் பொருட்டுச் சூழ்ச்சி மிக்க ஸ்ரீரங்கன் அச்செஞ்சி நாயக்கனுடன் சந்து செய்துகொண்டு கோல்கொண்டாப் படையை எதிர்த்து ஓரளவு வெற்றி கண்டதுமன்றி, அப்படையை நெல்லூர்வரையில் துரத்திச் சென்றான். ஆனால், கோல்கொண்டாவும் பிஜபூரும் வேற்றுமை நீங்கி ஒன்றுபட்டு எதிர்க்கத் தொடங்கியதும், பாவம்! ஸ்ரீரங்கன் இருபெரும்படைகளோடு பொருவது முடியா

தென்றறிந்து கோல்கொண்டாப் படைத்தலைவனோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டான். அதனால், இந்தக் கோல் கொண்டாப் படைத்தலைவன் பிஜபூர் சுல்தானுக்குப் பணம் கொடுத்து அவனை ஸ்ரீரங்கன் மீது படையெடுக்காதவாறு தடுத்து நிறுத்தினான். திருமலை நாயக்கர் தலைமையில் தெற்கு நாயக்கர்கள் ஸ்ரீரங்கனை எதிர்த்துப் போர் நடத்தும் வரைக்கும் முஸ்லீம் படையெடுப்புகள் நின்றிருந்தன. இது நிற்க.

திருமலை நாயக்கர் பேரரசருக்குக் கப்பம் கட்டாமல் முழுவுரிமை மன்னராக விரும்பினார். இவருக்கு முன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த முத்து வீரப்பரும் முழு வுரிமை மன்னராக முயன்று தோற்றார். திருமலை அவர் வழியில் முயன்று, அதற்கு ஏற்ற பல திட்டங்களைச் செய்து முடித்தார்; தலை நகரை மதுரைக்கு மாற்றினார்; மதுரை நாட்டில் கோட்டை கொத்தளங்களை அமைந்தார்; படைகளைப் பெருக்கினார்; இப்படிச் செய்திருந்தாலும் பேரரசர்களை எதிர்க்க வலியின்றி அவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் காட்டி வந்தார்; பேரரசர் படையுதவி நாடிய போது துணை புரிந்தும் வந்தார். அமைதியை விரும்பிய மூன்றும் வேங்கடர் தமக்குத் திருமலை கப்பம் கட்டாதிருந்தும் அவரை மதித்து வந்தாரேயன்றித் தண்டிக்கவில்லை. வீரமும் சூழ்ச்சியும் மிக்க மூன்றும் ஸ்ரீரங்கனோ, திருமலையை வாளா விட விரும்பாது ஒடுக்கி அடக்கவேண்டும் என்று எண்ணினான். என்றாலும், திருமலையும் அவனுக்குப் பகுதிப் பணம் கட்டாமல் மதிப்பையும் மரியாதையும் காட்டியே வந்தார். 1659-ல் திருச்சிராப்பள்ளியிலிருந்து நிக்கல்பாதிரியாருக்கு எழுதிய கடிதத்தில் புரொயென்சா பாதிரியார், "நாயக்க மன்னர்கள் நீண்ட காலமாகப் பேரரசருக்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய

பகுதிப் பணத்தைத் தவருது செலுத்தி வந்திருக்கிருர் கள். வலிமை மிகுந்து வரவே அவர்கள் மிகவும் செருக் குற்றுப் பேரரசுக்குக் கீழ்ப்படிந்து ஆட்சி புரிவதைச் சங்கடமானதாகக் கருதி வெறுக்கலானுர்கள். இப் பொழுது ஆண்டு வருகின்ற திருமலை நாயக்கர் தம் தந்தை (தமையன்) வழி நின்று, பேரரசின் பிடிப்பி லிருந்து விடுதலையடைய முடிவு செய்து விட்டார்; வெளிப்படையாகப் பேரரசை எதிர்க்கும் வலிமையின் மையால் பல ஆண்டுகளாகப் பகுதிப்பணம் கட்டாமல், அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் காட்டும் அறி குறியாக உயர்ந்த விலையுள்ள பொருள்களை மட்டும் கொடுத்து வருகிருர். வயதான நரசிங்கரோ (மூன்ரும் வேங்கடர்) போர்த் தொல்லையை உண்டு பண்ண எண்ணுமலும் ஏற்றுக் கொள்ள மறுக்காமலும் பாசாங்கு பண்ணி வருகிருர்,'' என்று குறிப்பிட் டிருப்பதைப் பார்த்தால், திருமலை நாயக்கர் பேரரசர் களிடம் நடந்து வந்த உண்மை நிலை திண்ணமாகத் தெரிகிறது. இந்தக் கடிதம் எழுதியவர், நன்கு தெரிந்து கொள்ளாது, தமையனைத் தந்தை என்றும் மூன்ரும் வேங்கடரை நரசிங்கர் என்றும் மாறுபடக் குறிப்பிட் டிருக்கிருர் என்றறிக.

திருமலை நாயக்கர், பேரரசர்களுக்குப் பகுதிப் பணம் கட்டாமல் இருந்ததற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. அக்கால நிலையை ஆழ்ந்து நோக்கினுல் உண்மை புலனு கும். கப்பம் பெறும் பேரரசு தன் சிற்றரசுக்கு ஆபத்து வரும்போது படையுதவியும் பணவுதவியும் புரிவது இயல்பு. தம் கீழடங்கிய ஒரு சிற்றரசர்மீது மற்ரெரு சிற் றரசர் படையெடுக்குங் காலத்தில், பேரரசர் படையெடுப் பவரைத் தடுத்து நிறுத்தி நீதி வழங்க வேண்டும். மைசூர் மன்னர் சாமராஜ உடையார் ஒரு காரணமு

மின்றி மதுரை நாட்டின்மீது படையெடுத்த போது பேரரசு படையுதவியோ பணவுதவியோ செய்யவில்லை; மைசூரை அடக்கித் தடுக்கவுமில்லை. திருமலை நாயக்கரே பெரும்பொருள் செலவிட்டுப் போர் புரிந்து வெற்றி பெற வேண்டியவரானார். எப்படிப் பொம்மைப்பேரர சனுக்குத் திருமலை, கப்பத்தை, அதுவும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியைக்கொடுக்க இசைவார்? இது மட்டு மல்லாமல், திருமலை முழுவுரிமை மன்னராக விரும்பிய தற்குக் காலச்சூழ்நிலையும் அமைவுடையதாய் இருந்தது. மைசூர் மன்னரே 1610-ல் முழுவுரிமை மன்னராகி விட்டார். அப்படியானால் திருமலை மட்டும் ஏன் முழு முழுவுரிமை மன்னராக விரும்பக்கூடாது? திருமலை முழு வுரிமை மன்னராக உறுதி பூண்டிருப்பதையும் பகுதிப் பணம் கட்டாதிருப்பதையும் கருதியே மூன்றாம் ஸ்ரீரங்கன் முதலில் மதுரை நாட்டின்மீது படையெடுத்து அவரை அடக்கியொடுக்க எண்ணினான்.

ஸ்ரீரங்கன், தன் எண்ணத்தை நிறைவேற்றக் கருதி ஏறக்குறைய 1645-ல் மதுரையை நோக்கிப் படை யெடுத்துச் சென்றான். இதையறிந்த திருமலையோ தஞ்சை, செஞ்சி நாயக்கர்களுடன் மறைமுக ஒப்பந்தம் செய்துகொண்டு ஸ்ரீரங்கனை எதிர்க்க முற்பட்டார். தஞ்சை நாயக்கன் இந்த மறைமுக ஒப்பந்தத்தை ஸ்ரீரங்கனிடம் வெளியிட்டுத் திருமலையைக் காட்டிக் கொடுத்துவிட்டான். வாழ்வதா வீழ்வதா என்பது இப்பொழுது திருமலைக்கு ஏற்பட்ட சிக்கல். இந்நிலையில் திருமலை முழுவுரிமை மன்னராகும் விருப்பத்தைக் கைவிட வேண்டும்; அல்லது ஸ்ரீரங்கனிடம் அடைக்கலம் புக வேண்டும். எண்ணியதை எண்ணியவாறு முடிக்க உறுதி கொண்ட திருமலை, துரோகி ஸ்ரீரங்கனைப் போலவே சூழ்ச்சி செய்து, கோல்கொண்டாச் சுல்தானை வேலூர்

மீது படையெடுத்துச் செல்லுமாறு வேண்டினர். ஒரு சிலர் திருமலை, பிஜபூர்ச் சுல்தானை வேண்டியதாகக் கூறுவர். திருமலையின் வேண்டுகோளுக்கு இணங்கிய கோல்கொண்டாச் சுல்தான் தனது படைத்தலைவனை வேலூரைத் தாக்க அனுப்பினான். தெற்கு நோக்கிப் போர் புரியச் சென்ற ஸ்ரீரங்கன் இதை அறிந்து உடனே தலைநகரைக் காக்கும் பொருட்டுத் திரும்பி வேலூரை அடைந்து, படையெடுத்து வந்த சுல்தான் வீரர்களைப் புறமுதுகிட்டோடச்செய்தான். கோல்கொண்டாச் சுல்தான் இழந்த புகழை மீட்கும் பொருட்டு மீண்டும் பெரும்படையுடன் வந்து தாக்கி வேலூரைக் கைப்பற்றினான். முஸ்லீம் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த நாயக்கர்களை ஒன்று சேர்ப்பதுதான் வழியென்று கண்ட ஸ்ரீரங்கன் அவர்களை நாடித் தெற்கே சென்றான். அவர்களும் அவனுடைய புது முயற்சியையும், கொடுப்பதாக வாக்களித்த சலுகைகளையும் நோக்கித் துணை புரிவதாய்க் கூறினார்கள். ஸ்ரீரங்கன் அவர்கள் நடத்திய விழாவிலும் விருந்திலும் கலந்து களிப்புற்று ஓராண்டைக் கடத்திவிட்டான்; முடிவில் நாயக்கர்கள் ஒருவரோடொருவர் பொறாமைப்பட்டு ஒன்றுகூடாமல் கைவிரித்துவிட்டார்கள். பேரரசன் இப்போது தஞ்சைக் காட்டில் நான்கு திங்கள் கள்ளர்களுக்கிடையே உள்ளம் மெலிந்து துன்புற்றுத் தங்கி வந்தான்; மைசூரில் புகலிடம் வேண்டினான். கந்திருவநரச ராஜா அன்புடன் ஸ்ரீரங்கனை வரவேற்று ஆதரவளித்தான். பேரரசில்லாது ஸ்ரீரங்கன் 1647-ல் பேரரசனாகக் கனவு கண்டு கொண்டு மைசூரில் இருந்து வந்தான்.

ஸ்ரீரங்கன் 1647-ல் வேலூரை விட்டோடிய பின்பு கோல்கொண்டாச்சுல்தான் செஞ்சிக்குப் படையெடுத்து சென்று அதை முற்றுகையிட்டான். தஞ்சை நாயக்கன்

விஜயராகவன் இதையறிந்து நடுநடுங்கி நெஞ்சுரமின்றிப் பகைவனிடம் தஞ்சம் புகுந்தான். ஆனால், திருமலையோ, உளம் தளராது பிஜபூர்ச் சுல்தானோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, அவனிடமிருந்து 17,000 குதிரை வீரர்களை உதவியாகப் பெற்றுத் தம்முடைய 30,000 வீரர்களுடன் செஞ்சி நோக்கிச் சென்று, அச்செஞ்சி நாயக்கனுக்குத் துணை புரிந்தார். செஞ்சி சிறந்த அரண்களையுடையது; பகைவர்கள் எளிதில் உட்புகாதவாறு அமைந்தது. திருமலையின் படையுதவியும் கிடைத்தது. எனவே, செஞ்சி சிலகாலம் முற்றுகையைத் தாங்கி நின்றது. செஞ்சி முற்றுகையை ஒழிக்கத் திருமலைக்கு உதவி செய்த பிஜபூர்ச் சுல்தானும், செஞ்சியை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த கோல்கொண்டாப் படைத்தலைவனும் ஒப்பந்தம் செய்துகொண்டு ஒன்றுபட்டுவிட்டார்கள். கோல்கொண்டாச் சுல்தான் இப்போது பிஜபூர்ச் சுல்தான் படைத்தலைவனிடம் செஞ்சிப்போரை ஒப்படைத்துத் தான் கைப்பற்றிய நாடுகளை ஒழுங்குபடுத்த வடக்கு நோக்கித் திரும்பினன். பிஜபூர்ச் சுல்தானின் துரோகத்தால் நிலை மாறியது. இதனுடன் செஞ்சிப் படை வீரர்களுக்கும் திருமலையின் படை வீரர்களுக்கும் மனவேறுபாடு தோன்றியது. சிறு வேறுபாடு சில நாள்களில் பெருகி வளர்ந்துவிட்டது. முற்றுகையிட்டிருந்த பகைவர்கள் தங்குதடையின்றிச் செஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்து கொள்ளையிடத் தலைப்பட்டார்கள். கோட்டைக்குள்ளே மலைமலையாகக் குவிந்துகிடந்த தங்கமும் வெள்ளியும் முத்தும் இரத்தினமும் பறிபோயின. செஞ்சி 1648-ல் பகைவர் வயமாயிற்று. திருமலை மதுரைக்குத் திரும்பினர். பிஜபூர்ச் சுல்தான் செஞ்சியைக் கைப்பற்றிவிட்டான்.

வெற்றி கண்ட பிஜபூர்ச் சுல்தான் தஞ்சைக்கும் மதுரைக்கும் சென்று கொள்ளையிடலானன். மதுரைத்

திருமலை நாயக்கர் பெரும்பொருள் கொடுத்து மதுரையைக் காக்க வேண்டியவரானுர் என்பர். ஆனுல், கள்ளர்கள் உதவியால் திருமலை நாயக்கர் செஞ்சியிலிருந்து வந்த பிஜபூர் வீரர்களோடு அஞ்சாது போர்புரிந்து அம்முஸ்லீம் வீரர்களை முறியடித்துத் துரத்தியதாக நாட்டு வரலாற்று நூல் கூறுகிறது.

பிஜபூர் வீரர்கள் செஞ்சிக்குத் திரும்பியதும், ஸ்ரீரங்கன் மைசூர் உதவியோடு இழந்த நாட்டைத் திரும்பவும் பெறுவதற்குப் படையெடுத்து வந்தான். மைசூர்ப் பகுதியைச் சார்ந்த இக்கேரி நாயக்கரான சிவப்ப நாயக்கரும் துணை புரிந்தார். வேலூர் மக்களும் பணவுதவி புரிந்தார்கள். திருப்பதிக் கோயில் பணமும் போருக்குக் கிடைத்தது. கந்திருவ நரசனும் சிவப்ப நாயக்கரும் ஸ்ரீரங்கனும் ஒன்றுபட்டு வேலூரை மீட்க முயன்ருர்கள். திருமலை நாயக்கர் இச்சமயத்திலாவது பகைமையை மறந்து இந்து சமயத்தையும் இந்து நாட்டையும் பாதுகாக்க உதவி புரிந்திருக்கலாம்; ஆனுல், அவர் மைசூர் மன்னன் கந்திருவ நரசனுனவன் ஸ்ரீரங்கன் உதவிபெற்றுப் பின்பு முன்போல மதுரையைத் தாக்கிக் கைப்பற்றக்கூடும் என்றஞ்சி, வேலூரைக் கைப்பற்றியிருந்த பிஜபூர்ச் சுல்தானுக்கு உதவி புரிந்தார். வரலாற்றுப்பேராசிரியர் K. A. நீலகண்ட சாஸ்திரியார், இறுதியில் மதுரை நாயக்கரும் ஸ்ரீரங்கனுக்கு உதவி புரிந்ததாகக் கூறுகிருர். எப்படியோ மூன்ரும் ஸ்ரீரங்கன் வேலூரை மீட்க முடியாமல் மைசூரில் தஞ்சம் புகுந்தான். கந்திருவ நரசராஜனும் சில காலமான பின்பு மூன்ரும் ஸ்ரீரங்கனைக் கைவிடவே, அவன் பெத்தனூரில் தஞ்சம் புகுந்து அலைந்து திரிந்து 16—12—1672-ல் மாண்டான்.

ஸ்ரீரங்கன், இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் 1653-ஆம் ஆண்டும் 1655-ஆம் ஆண்டும் தக்காணத்தில் அரசப் பிரதிநிதியாய் இருந்த அவுரங்கசீபு (1652-58) வாயிலாக முகலாயப் பெருவேந்தர் ஷாஜகானிடம் பிஜபூர் கோல்கொண்டாச் சுல்தான்களிடமிருந்து தனக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியதாகக் காண்கிறோம்.

1653-ல் ஸ்ரீரங்கன் சார்பில் அவனுக்கு முகவனாய் (ஏஜண்டாய்) இருந்த இராமா ராவ் என்பவன், அவுரங்க சீபுவினிடம் சென்று தன் அரசன் ஸ்ரீரங்கனுக்குக் கோல்கொண்டா பிஜபூர்ச் சுல்தான்களிடமிருந்து பாதுகாப்பளிக்க வேண்டினான். அவுரங்கசீபு அதைக் கேட்டு ஒன்றும் செய்யவில்லை. மற்றுமொரு முறை ஸ்ரீரங்கன் 1655-ல் சீனிவாசன் என்பவனைத் தூதனுப்பினான். அவன் அவுரங்கசீபுவைக் கண்டு தன் அரசர் முகலாயப் பேரரசருக்கு இரண்டரைக் கோடி ரூபாயும், இருநூறு யானைகளும் அணிகலன்கள் அனைத்தும் கொடுப்பதோடு இரு சுல்தான்களிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக ஆண்டுதோறும் பகுதிப்பணம் கட்ட இசைவதாகவும், முகலாயருடைய ஜாகீர்தாராக இருக்க விரும்புவதாகவும், தன் அரசர் இந்துவாக இருப்பதால் முகலாயப் பேரரசர் ஷாஜகான் அவரை நம்பாவிட்டால் அவர் (ஸ்ரீரங்கன்) தம்முடைய உற்றார் உறவினருடனும் மற்றவர்களோடும் இஸ்லாம் சமயத்தைத் தழுவ விழைவதாகவும் கூறினான். அவுரங்கசீபு இதற்கும் ஒன்றும் செய்ய இணங்கவில்லை. இதை வரலாற்றுப் பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் தம்முடைய அவுரங்கசீபு வரலாற்றில் குறிப்பிட்டிருப்பதைச் சத்தியநாத ஐயர், 'பதினேழாம் நூற்றாண்டில் தமிழகம்' என்னும் தமது நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இதைக் காணும்பொழுது மூன்றும் ஸ்ரீரங்கனுக்கு எதையும் செய்யும் பண்பு இருந்து வந்தது நன்கு விளங்குகிறது. பாவம்! ஸ்ரீரங்கன் செய்த எந்த முயற்சியும் பயனடையாமற் போயிற்று.

இந்து சமயத்தைப் பாதுகாத்த விஜய நகரப் பேரரசின் கடைசிச் சின்னம், வேலூர் பறிபோனதோடு, அடியோடு அழிந்து மறைந்தது. வேலூர் வீழ்ச்சிக்குப் பின் தென்னகத்தில் பிஜபூர்ச் சுல்தானும் கோல்கொண்டாச் சுல்தானும் தங்கள் ஆட்சியை விரிவாக்கிக் கொண்டார்கள்.

9. மூக்கறுப்புப் போர்
அல்லது
இரண்டாவது மைசூர்ப் போர்

மைசூர் மன்னனான கந்திருவ நரச ராஜா (1638 - 1659), முன்பு பிஜபூர்ச் சுல்தானோடு சேர்ந்து தன்னைத் தாக்குமாறு தூண்டி வேலூரை மீட்க முடியாதவாறு வஞ்சகச் செயலைப் புரிந்து அழிவு செய்த திருமலை நாயக்கர்மீது நெஞ்சாரப் பழிவாங்க எண்ணி மதுரை மேல் படையெடுக்கத் துடித்துக்கொண்டிருந்தான். முஸ்லீம் படைகள் மதுரையை விட்டகன்றதும், கந்திருவ நரச ராஜா தன் படை வீரர்களை மதுரைமீது ஏவினான். மைசூர் வீரர்கள் படையெடுத்துச் சென்று சேலம் மாவட்டத்தைச் சார்ந்த நீர்வளமும் நில வளமும் மிக்க சத்திய மங்கலத்தை எத்தகைய எதிர்ப்பும் இல்லாது 1656-ல் எளிதாகக் கைப்பற்றிப் பின்பு மதுரை நகரையும் முற்றுகையிட்டுக் கவர அந்நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். போய்க்கொண்டிருந்த வழி முழுதும் அரக்க மனம் படைத்த இவ்வீரர்கள் இரக்க மின்றி ஊர்களைக் கொள்ளையடித்தும் எரியூட்டியும் துன்புறுத்தியது மட்டுமல்லாமல், மைசூர் அரசன் கட்டளைப்படி தங்கள் கையில் அகப்பட்ட ஆண் பெண் குழந்தைகளின் மூக்குகளை அறுத்துக் கொடுமை செய்து கொண்டே சென்று மதுரையை நெருங்கினார்கள்.

திருமலை நாயக்கர் அப்போது நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். நாயக்கருக்கு வயது அப்பொழுது எழுபத்தைந்து இருக்கும். நகரில் போதிய படை வீரர்கள் இல்லை. பாளையக்காரர்களைத் திரட்டிச்

சேர்க்கவும் நேரம் இல்லை. என்ன செய்வார் பாவம்! திருமலை நாயக்கர், 'விடங்கொண்ட மீனைப் போலும் வெந்தழல் மெழுகுபோலும் படங்கொண்ட பாந்தள் வாயில் பற்றிய தேரை போலும்' மனங்கலங்கி நின்றார்; திருக் கோயில்களில் திருமுழுக்குகள் நடத்தி இறை வழி பாடு செய்தார்; கடைசியாகத் தம் மூத்த மனைவியை அழைத்து இரகுநாத சேதுபதிக்கு நிலையை விளக்கி உதவி கோரி முடங்கல் எழுதியனுப்புமாறு கூறினார். முடங்கலைக் கண்டதும் சேதுபதி தடங்கலின்றி, 25,000 வீரமறவர்களைத் திரட்டிக்கொண்டு வந்து மதுரைக் கோட்டை மதிலுக்கும் பகைவருடைய படை வீட்டிற்கும் இடையில் நிறுத்தி, அஞ்சாதிருக்குமாறு திருமலைக்குச் செய்தியனுப்பினார். திருமலை நாயக்கரும் 35,000 வீரர்களைத் திரட்டிச் சேதுபதியின் சேனையோடு சேர்த்து மைசூர்ப்படையை எதிர்த்துப் போரிடுமாறு அனுப்பினார். மைசூர்ப்படைத் தலைவன், இந்தப் பெரும் படையைக் கண்டு அஞ்சி, மைசூரிலிருந்து உதவிப்படை வரும்வரைக்கும் காலம் தாழ்த்திக் கொண்டிருந்தான்; நாயக்கருடைய படைத்தலைவனை வஞ்சகப் பார்ப்பனன் ஒருவனைப் பணம் கொடுத்துச் சரிப்படுத்தவும் சூழ்ச்சி செய்தான். அப்பார்ப்பனப்படைத் தலைவனும் சூழ்ச்சி வலைப்பட்டதால், போரில் மதுரைப்படை சிறிது பின் வாங்கியது. சேதுபதியின் படை வீரர்களோ, அஞ்சாது அப்படைத் தலைவனைச் சிறையிலிட்டு மைசூர்ப் படையைப் பேராற்றலுடன் எதிர்த்துப் போர்செய்து புறங்காட்டியோடுமாறு செய்துவிட்டார்கள்.

எதிரிகள் திண்டுக்கல்லை அடைந்து, அங்குத் தங்கி மைசூரிலிருந்து வரும் உதவிப் படையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறிது காலத்திற்குள் மைசூரி லிருந்து 20,000வீரர்கள் அடங்கிய ஓர் உதவிப்படை

வந்து சேர்ந்தது. அப்படை வரவும், மைசூர்ப் படை வீரர்கள் ஊக்கம் மிகுந்து, தங்களை விடாது துரத்தி வந்த மதுரை வீரர்களோடு போரிடத் தொடங்கினார்கள். கடும்போர் நடந்தது. மைசூர்ப் படையில் 12,000 வீரர்களும், மதுரைப் படையில் 12,000 வீரர்களும் மடிந்தார்கள். தப்பினால் போதும் என்று எஞ்சி நின்ற வீரர்களோடு மைசூர்ப்படை, தன் நாட்டை நோக்கி ஓடியது. இரகுநாத சேதுபதி மதுரையைக் காத்தார். திருமலை மிகவும் மகிழ்ந்து சேதுபதியின் பேருதவியை, ஆபத்தில் செய்த அரிய செயலை, நன்கு பாராட்டி, விலையுயர்ந்த பரிசுகளும், 'திருமலை சேதுபதி' என்ற பட்டமும், 'இராணி சொல் காத்தார்' என்ற பேரும் அளித்ததோடன்றித் தங்களுக்கு மட்டுமே உரிமையாய் இருந்த சிங்கமுகச் சிவிகையையும் திருப்பூவணம், திருச்சுழியல், பள்ளிமடம் என்னும் ஊர்களையும் கொடுத்தார்; மேலும், ஆண்டுதோறும் கட்ட வேண்டிய கப்பத்தை எப்பொழுதும் செலுத்த வேண்டுவதில்லை என்றும் கூறினார். இது நிற்க.

மூக்கறுப்புப் போரின் தொடர்ச்சி:

மைசூர் வீரர்கள் மதுரைமீது படையெடுத்து வந்த போது, அவ்வீரர்கள் தங்கள் கையில் அகப்பட்டவர்கள் முதியவர்களாயினும் இளைஞர்களாயினும், ஆண்களாயினும் பெண்களாயினும், சின்னஞ் சிறியவர்களாயினும் பென்னம் பெரியவர்களாயினும், பெரிய குழந்தைகளாயினும் சிறிய குழவிகளாயினும், கண்டவர்கள் எல்லாரையும் மூக்கறுத்துக் கொடுமை செய்தார்கள். சிறை பிடித்த கைதிகளின் மூக்குகளையும் இரக்கமின்றி அறுத்துச் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு அனுப்பினார்கள். மதுரை நாடு முழுதும், அரக்க மனம் படைத்த இவ்வீரர்

களால் மிகவும் துயரமுற்றது. இப்படி மைசூர் வீரர்கள் செய்த கொடுமையைத் திருமலை நாயக்கர் கேட்டு மிகவும் உளம் பொங்கிப் பழிக்குப்பழி வாங்க எண்ணித் தம் தம்பியாராகிய முத்தியாலு நாயக்கர் என்ற குமார முத்து நாயக்கரை மைசூருக்குச் சென்று பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று பெரிதும் வற்புறுத்தினர். குமார முத்து நாயக்கர் படை வீரர்களைத் திரட்டிக் கொண்டு திண்டுக்கல் சேர்ந்ததும், அங்கு அரங்கண்ண நாயக்கரும், பதினெண் பாளையக்காரர்களும் தங்கள் படை வீரர்களுடன் குமார முத்துவோடு சேர்ந்தார்கள். குமார முத்துவும் அரங்கண்ண நாயக்கரும் மைசூர்மீது படையெடுத்துச் சென்று, வழியில் சில கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு, நஞ்சன்கூடு வரையில் சென்றார்கள்; வழியில் அகப்பட்டவர்களை அம் மைசூர் வீரர்கள் செய்தவாறு, இளைஞர் என்றும் முதியோர் என்றும் ஆண் என்றும் பெண் என்றும் பாராமல், மூக்கறுத்துக் கொண்டே போனார்கள். அவர்கள் மைசூர் மன்னனையும் சிறைப்படுத்தி மூக்கறுத்தார்கள் என்பர்.

இப்போர் 1659–ஆம் ஆண்டில் முற்றுப்பெற்றது. திருமலை நாயக்கரும், மைசூர் மன்னனான கந்திருவ நரச ராஜாவும் ஆகிய இருவருடைய முதுமைப் பருவத்திலே தான் இம்மூக்கறுப்புப் போர் நடைபெற்றது. குமார முத்து இப்போரை நடத்தியபோது, நாயக்கர் நோய் வாய்ப்பட்டிருந்தார். குமார முத்துவின் வெற்றியைக் கண்டு களிக்க நாயக்கர் உயிரோடில்லை; மறைந்து விட்டார்.

மூக்கறுப்பு நடந்திருக்குமா?

மூக்கறுப்பது பண்டைக் காலத்துத் தண்டனை முறை. இராமபிரானை அடைவதற்குச் சீதையே

தடையாய் இருப்பதாகச் சூர்ப்பநகை கருதிச் சீதைக்குத் தீங்கிழைக்க முயன்றபோது, இலக்குவன் அவ்வரக்கியின் 'மூக்கும் காதும் வெம்முரண் நகிற் கண்களும் முறையால் அறுத்துப் போக்கினன்' என்று கம்ப ராமாயணம் கூறுகிறது. இக்கொடுமையையே அரக்க மனம் படைத்த இரக்கமற்ற மைசூர் வீரர்களும் செய்தார்கள். பழிக்குப் பழி வாங்க மதுரை வீரர்களும் அக் கொடுஞ்செயலையே அடுத்துப் புரிந்தார்கள். ஆதலால், மூக்கறுப்புப் போரும் நடந்திருக்குமா என்று எவரும் ஐயுற வேண்டுவதில்லை. புரொயென்சா சாமியார் நிக்கல் சாமியாருக்கு 1659-ல் எழுதிய கடிதத்தில், "மைசூர் மன்னர் சிறை பிடித்தவர்களின் மூக்குகளை அறுக்குமாறு கட்டளையிட்டிருந்தார். மைசூர் வீரர்களோ, தங்கள் கைகளில் அகப்பட்ட ஆண் பெண் குழந்தைகள் இவர்களுடைய மூக்குகளை அறுத்துக் கோணிப்பைகளில் நிரப்பி வெற்றிச் சின்னங்களாக மைசூர்க்கு அனுப்பிவைத்தார்கள். நாயக்கர் தம்மை இதனால் மிகவும் அவமானப்படுத்தியதாகக் கருதி இதனை எதிர்த்துப் பழிக்குப்பழி வாங்குமாறும் கட்டளையிட்டார். அவருடைய படை வீரர்கள், போரிடுவதைவிட மூக்கறுக்கவே மைசூர்க்குச் சென்றனர்கள். இதனால், 'மூக்கறுப்பு வேட்டை' என்றே இப்போருக்குப் பெயர் கொடுக்கப்பட்டது. முதலில் இந்தக் கொடுமைக்குக் காரணராயிருந்த மைசூர் மன்னர் மூக்கை இழந்து தண்டனையடைந்தார்," என்று எழுதியிருப்பதிலிருந்து இவ்வுண்மை உறுதியடைகிறது.

குரோஸ் என்பாரும் தமது கிழக்கிந்தியத் தீவுகளிற் பிரயாணம்' என்னும் நூலில் இதை "மைசூர் வீரர்களின் தனி முறைகள்" என்றும், "மூக்கறுப்பதில் அவர்களுக்கிருந்த தனித்திறமை" என்றும் எழுதியுள்ளார். மைசூர் நாட்டு அரசிதழின் (Mysore Gazetteer) பதிப்பாசிரியர்,

"மன்னர்களுக்குத் துரோகம் செய்தவர்களின் மூக்கை அறுப்பது பண்டைக்கால வழக்கம்" என்று குறிப்பிட்டிருக்கிருர். ரைஸ் என்பவர், சாசனச் சான்று கொண்டு, போரிடுவோர் எதிரிகள் பேரச்சங்கொள்ளும் பொருட்டு இத்தகைய வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்று வரைந்துள்ளார். 1673க்கும் 1681க்கும் இடையில் மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் கருநாடகப் பகுதியிலும் பயணஞ்செய்த ஆங்கில நாட்டு அறுப்பு மருத்துவர் டாக்டர் பிரையர் என்பார், "ஸ்ரீரங்கப் பட்டண அரசரை (கந்திருவ நரச ராஜாவை)க் குறித்துச் சொல்லாமல் விட்டுச் செல்வது முடியாது; ஏனென்ருல் அவரது போர் முறை மற்றவர்களுடைய போர் முறையிலிருந்து வேறுபட்டது. அவர், பகைவர் மூக்குகளை ஒருவகைக் கருவியால் போர்க்களத்திலோ தங்கும் பாசறையிலோ எளிதாகவும் திறமையாகவும் அறுப்பதற்குத் தேர்ச்சியுண்டாகுமாறு தம் வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிருர். அறுத்த மூக்குகள் மன்னரது காலையுண்டிக்கு அனுப்பப்படும். மூக்கறுத்தல் உறுப்புக் குறைவை உண்டாக்குவதால் பலர் அவரோடு போர் புரிவதற்குக் கருதுவதேயில்லை. தமது சமயம் பிறரைக் கொல்வது கூடாது என விதிப்பதால் அவர் இப்படிச் செய்து வருகிருர்," என்று எழுதியுள்ளார்.

1679 ஜனவரி செயின்ட் ஜார்ஜ் கோட்டைத் தீர்மானத்திலும் மைசூரின் மூக்கறுப்பு வழக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. "பகைவர்களைக் கொல்லாமல் அவர்களுடைய மேல் உதட்டை மூக்குடன் அறுப்பது மட்டும் அவர்களுக்கு (மைசூர் வீரர்களுக்கு) வழக்கம். அதற்காக ஒரு வகையான இரும்புக் கருவியை உடன்கொண்டு செல்கிருர்கள் அவ்வீரர்கள். அதனல், அவர்கள் மிகத்திறமையாக மூக்கையும் மேலுதட்டையும்

அறுத்துவிடுகிறார்கள். மூக்குகளின் எண்ணிக்கை கொண்டு மைசூர் நாயக்கர் அவ்வீரர்களுக்குப் பரிசளிக்கிறார்; மீசையுள்ள மேலுதட்டைக் கண்டால் மிகுதியாகப் பரிசளிக்கிறார். போர் முறை இவ்வாறு கொடுமையாய் இருந்ததால், ஒருவரும் அவர்களுடைய செயலில் தலையிடுவதில்லை. அவர்கள் இவ்வாறு செய்வதில் பிடிவாதமாய் இருந்து தங்களை எதிர்த்தவர்களை அழித்திருக்கிறார்கள். இப்படிச் செய்வதனால் பகைவர்கள் உடனடியாகச் சாவாவிட்டாலும், மிகவும் நொந்துவெந்து வருந்திப் பையப்பைய இறப்பார்கள்,'' என்று அத்தீர்மானம் கூறுகிறது.

இச்சான்றுகள் எல்லாவற்றையும் சத்தியநாத ஐயர் எடுத்துக்காட்டியுள்ளார். இதனால், மைசூர் அரசன் அரக்க மனத்தோடு இரக்கமின்றி மிகக் கொடிய மூக்கறுப்புப் போரைச் செய்தான் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

முடிவுரை:

கருநாடக ஆளுநர் வரலாறு (History of the carnatic Governors), மைசூர்ப் படையெடுப்பிலிருந்து மதுரையைப் பாதுகாத்தவர் இரகுநாத சேதுபதி என்று குறிப்பிடுகிறது. ஏசு கழகத் தொண்டர்கள் கடிதங்களும் இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றன. அக் கடிதங்கள் மைசூர்ப் படையெடுப்புக்கு எதிராக மதுரைப் படையெடுப்பைக் குறிக்கின்றனவேயன்றி, யார் தலைமை தாங்கிச் சென்றார் என்று கூறவில்லை. மெக்கன்சி கையெழுத்துப் பிரதிகள் திருமலை நாயக்கரின் இறுதிக் காலத்தில் குமாரமுத்து, அரங்கண்ண நாயக்கர் ஆகிய இருவர் தலைமையில் மைசூர்மீது மதுரை நாட்டுப் படையெடுப்பு நடந்ததாகக் குறிப்பிடுகின்றன. அவை,

மைசூர்ப் படையெடுப்பைத் தோல்வியுறுமாறு செய்தவர் குமாரமுத்து என்றும் கூறுகின்றன. எனவே, தெளிவு காண்பதற்கில்லை. சேதுபதியே மைசூர்ப் படையெடுப்பை முறியடித்தார் என்றும், மைசூர்ப்படையெடுப்பில் அந் நாட்டு வீரர்கள் மதுரை நாட்டில் செய்த கொடுமைக் காகப் பழிக்குப் பழி வாங்கத் திருமலை நாயக்கர் கருதிக் குமார முத்துவையும் அரங்கண்ண நாயக்கரை யும் மைசூர்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டு மக்கள் மூக்கையும் அந்நாட்டு மன்னன் மூக்கையும் அறுத்து வரச்செய்திருக்க வேண்டும் என்றும் நாம் ஒரு வாறு முடிவு செய்யலாம்.

10 கோயில் திருப்பணிகள்

திருமலை நாயக்கர் கடவுள்பக்தி மிக்கவராய் இருந்த தால், மதுரைக் கோயில்களில் மட்டும் அன்றி வேறு கோயில்களிலும் திருப்பணிகள் செய்ததாக அறிகிறோம். மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதியில் கிளிகளை வைத்தி ருக்கும் இடத்துக்குத் தெற்கு வடக்காய் ஒரு மண்டபம் இருக்கிறது. இதைச் சங்கீத மண்டபம் அல்லது சங்கிலி மண்டபம் என்பர். இது முன்பு கரியமாணிக்கப் பெருமாள் கோயில் சந்நிதியில் இருந்ததாம். கி. பி. 1311-ல் மாலிக்கபூர் படையெடுப்பில் முஸ்லீம்கள் அம் மண்டபத்தை இடித்துவிட்டார்கள். அது சிதைந்த நிலையில் நீண்ட நாள்களாய்க் கிடந்தது. திருமலை நாயக்கர், மதுரைக்கு வந்து நிலையாக மதுரையைத் தலைநகராக அமைத்து ஆட்சி செய்யத் தொடங்கி யதும், அச்சிதைந்த மண்டபத்திலிருந்த பெரிய தூண்களையும் மற்றைய உறுப்புகளையும் பெயர்த்துக் கொண்டு வந்து மீனாட்சியம்மன் சந்நிதியில் அமைத் தார். இவ்வுறுப்புகள் கரியமாணிக்கப் பெருமாள் சந்நிதியில் இருந்தவை என்பதற்கு அக்கால்களே போதிய சான்றுகளாகும். வைணவக் கோயில்களில் காணக்கூடிய அனுமார், பஞ்சபாண்டவர் உருவங்கள் அத்தூண்களில் பொறிக்கப்பட்டுள்ளன. சிதைந்த கரிய மாணிக்கப் பெருமாள் சந்நிதி பிற்காலத்தில் ஒருவாறு செப்பனிடப்பட்டது. ஆனால், கரியமாணிக்கப்பெருமாள் உருவச்சிலை அதில் இப்போது இல்லை. இக்கோயில் மண்டபம் இப்பொழுது சமயக் கூட்டங்கள் நடத்தப் பயன்படுத்தப்படுகிறது. இப்போது இதனைக் கூட்டு

வழிபாட்டு மண்டபம் என்பர். இதற்கு வடக்காடி வீதியில் உள்ள புகழ்பெற்ற திருவள்ளுவர் கழகத்துக்குப் பக்கத்திலிருக்கும் மொட்டைக் கோபுரம் என்னும் வடக்குக் கோபுர வாயிலுக்கு எதிரில்பெரிய வாயில் இருப்பதைக் காணலாம்.

மேற்குறித்த மண்டபத்திற்குத் திருப்பணி செய்த தோடு திருமலை நாயக்கர் பின்னும் மீனாட்சியம்மன் திரு முன்பு அறுகாற்பீடத்தில் இரு பெருவாயிற்காவலர் (துவார பாலர்) உருவங்களையும், சொக்கநாதர் திரு முன்பு அறுகாற்பீடத்தில் இரு பெருவாயிற்காவலர் உருவங்களையும் செய்து வைத்தார்; அந்த இரண்டு இடங்களிலும் பலி பீடங்களையும் கொடிக் கம்பங்களையும் (துவஜஸ்தம்பங்களையும்) அமைத்து, அவற்றைப் பொன்னால் கவசம் செய்து மாட்டி அணி செய்தார். இத்திருப்பணிகளை மதுரைக் கோயிலின திருப்பணி மாலைச் செய்யுள்கள் அறிவிக்கின்றன.

"பின்னிய செஞ்சடைச் சொக்கர்தம்
ஆறுகாற் பீடத்தினும்
மின்னெழில் அம்மைதன் ஆறுகாற்
பீட மிசையினுந்தான்
இன்னருள் பெற்றரு ளுந்துவார
பாலரை யேயமைத்தான்
பொன்னணி தாரார் புயத்தான்
திருமலை பூபதியே.''

—திருப்பணிமாலை-86

என்னும் பாடலால் திருமலை பூபதி துவாரபாலரை அமைத்த செய்தியும்,

"நன்னுதல் அங்கயற் கண்ணி
தனக்கு நலம்பெறவே
உன்னத மாகுங் கொடிக்கம்பம்
மாபலி பீடமுடன்

சொன்னம் அளித்துப்பொன் பூசுவித்
தான்சுக போகன் எங்கள்
மன்னன் திருமலை பூபன்
மதுரை வரோதயனே.''

—ஷ 85

என்னும் செய்யுளால் பலிபீடம் கொடிக் கம்பங்கள் அமைத்துப் பொன் தகட்டுக் கவசம் இட்டு அழகு படுத்திய செய்தியும் அறிகிறோம். துவாரபாலர் உருவங்கள் தாமிரத்தால் செய்யப்பட்டிருந்தனவாம்.

மேலும், திருமலை, மீனாட்சியம்மன் கோயிலில் இடிபட்ட பகுதிகளைப் புதுப்பித்த அழகையும் அழுத்தத்தையும் திருப்பணிமாலை சிறப்பித்துக் கூறுகிறது. அதைக் குறிப்பிடும் பாடல் இது:

''உரக்கவெகு ரொக்கம் கொடுத்துப் படங்குதூண்
உத்திரம் முதல் பழங்கல்
ஓடிந்தன பிடுங்கிநவ மாய்அமைத் துக்காரை
யோடுசீ ரணம் அகற்றி
அரைத்த சுண் ணும்பைவெல் லச்சாறு விட்டுநன்
ருய்க்குழைத் துச்செங்கலும்
அடுக்காப் பரப்பிக் கடுக்காயொ(டு) ஆமலகம்
அரியதான் றிக்காய் உழுந்(து)
ஒருக்கால் இருக்கால் இடித்து நன் னீரினில்
ஊறிய கடுஞ்சாறும்விட்(டு)
ஊழிக்கா லங்களினும் அசையாத வச்சிரக்
காரைவிட் டோங்கும் அம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலும்
செப்பமிடு வித்துநன் ருய்ச்
செய்வித்த புண்ணியம் சதகோடி புண்ணியம்
திருமலை மகீபனுக்கே.''

—ஷ 82

உடைந்த பழங்கற்களையும் உத்திரங்களையும் பிடுங்கி விட்டுப் புதியவற்றை அமைத்து, அரைத்த சுண்ணும்பை வெல்லச் சாறு விட்டு நன்ருய்க் குழைத்துச் செங்கற்களை அடுக்காகப் பரப்பிக் கடுக்காயுடன் ஆமலகம் (நெல்லிக் காய்), தான்றிக்காய், உழுந்து இவற்றை ஒருமுறை இரு முறை இடித்து நன்னீரில் ஊறிய கடுஞ்சாறும் விட்டு ஊழிக்காலங்களிலும் அசையாத வச்சிரக்காரை இட்டு மீனுட்சியம்மன் கோயிலின் இடிபட்ட பகுதிகளைச் செப் பனிட்டுப் புதுப்பித்தார் என்று இச்செய்யுள் கூறுகிறது. இப்பாட்டிலிருந்து அக்காலத்தில் எப்படிக் கட்டடங்களை உறுதியாகக் கட்டினுர்கள் என்பதை அறிகிருேம்.

மதுரை மீனுட்சியம்மன் திருக்கோயிலைத் திருமலை நன்கு புதுப்பித்ததோடு, திருப்பரங்குன்ற முருகன் கோயில், அழகர் கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருவரங்கம் பெரிய கோயில், திருவானைக் காவிலிருக்கும் சிவன்கோயில், நெல்லையப்பர் கோயில் ஆகியவற்றிலும் திருப்பணிகளைச் செய்திருக்கின்ருர். கள்ளழகர் கோயில் தெற்குச் சுற்றில் திருமலை நாயக்கர் உருவம் ஒரு தூணில் இருப்பதைக் காணலாம்.

11. மதுரைக் கோயில் சீர்திருத்தம்

முன்னுரை:

திருமலை பூபதி வைணவராயினும், சோமசுந்தரப் பெருமான்மீது ஆழ்ந்த பக்தி பூண்டிருந்தார். அவருக்கு இருந்துவந்த நோய் மதுரைச் சோமசுந்தரப் பெருமான் திருவருளால் நீங்கியது என்பதே இதற்குக் காரண மாகும். ஆதலால், அவர் மீனுட்சி சுந்தரேஸ்வரர் திருக் கோயிலில் பல சீர்திருத்தங்களைச் செய்யலானார். மதுரைத் தூய மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் தமிழா சிரியராய் இருந்த மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் மிகவும் முயன்று மிகுந்த ஆராய்ச்சி செய்து 1922-ல் 'திருமலை நாயக்கர் சரித்திரம்' என்ற அரிய நூலை இயற்றினர். மதுரை இ. மு. கோபால கிருஷ்ணக் கோனர் அவர்கள் அந்நூலை வெளியிட்டுள்ளார்கள். அந்த அரிய நூலில் மு. கோவிந்த சாமி ஐயரவர்கள் 'சிவாலயச் சீர்திருத்தம்' என்னும் தலைப்பில் பற்பல அரிய செய்திகளை விரிவாக எழுதியிருக்கிறார்கள். இங்குள்ளது அவர் எழுதிய அரிய செய்தியைத் தழுவியதேயாகும்.

திருமலை நாயக்கர் காலத்தில் மதுரைக் கோயில் ஆட்சி அபிடேக பண்டாரம் என்பவரிடம் இருந்தது. பண்டாரத்தின் ஆட்சியில் கோயில் சீர்கேடான நிலையில் கிடந்தது. வழிபாட்டு முறைகள் நன்ருக நடைபெற வில்லை. கோயில் வருவாய் முழுவதும் அப்பண்டாரத் தால் கொள்ளையடிக்கப் பட்டு வந்தது. திருமலை நாயக்கர், தலைநகரைத் திரிசிரபுரத்திலிருந்து மதுரைக்கு மாற்றி அங்கே நிலையாக வசிக்கத் தொடங்கியதும்,

கோயிலின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டார். அங்கயற் கண்ணி அம்மை ஒரு நாள் நாயக்கர் கனவில் தோன்றி, "திருமலையே, என்னை ஒருவரும் கவனிக்க வில்லையே!" என்று சொன்னதாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. கோயிலின் பாழ்பட்ட நிலையை நன்கறிந்த நாயக்கர், கோயிலில் சீர்திருத்தம் செய்ய எண்ணிக் கோயிலதிகாரியாய் இருந்து வந்த அபிடேக பண்டா ரத்தைக் குருவாகக் கொண்டு, அப்பண்டாரத்துக்குப் பணம், நிலம் முதலியவற்றைக் கொடுத்து, அவரிட மிருந்து கோயில் ஆட்சியை ஏற்றுக்கொண்டார். அபிடேக பண்டாரம் தம் பெயர் உலகத்தில் என்றும் நிலைத்திருக்கவேண்டும் என்று எண்ணிச் சுவாமி கோயில் இரண்டாம் பிராகாரத்தைக் கட்டி முடித்தார். அப் பண்டாரத்தின் உருவம் காளியம்மனுக்கு எதிரிலுள்ள தூணில் இருப்பதாகக் கூறுவர். அவர் கட்டிய அப்பிராகாரம் கி. பி. 1736க்கு மேல் 1740-ஆம் ஆண்டுக்குள் சந்தாசாகிபு படையெடுப்பினுல் இடிக்கப் பட்டுப் போகப் பின்பு திருப்பணி செய்தவர்கள் அதைக் கட்டிமுடித்தார்களாம்.

கட்டளைகளை ஏற்படுத்தியது:

திருமலை நாயக்கர் மீனுட்சி சுந்தரர் கோயில் ஆட்சியை ஏற்றுக்கொண்டு கோயில் ஊழியர்களை வற்புறுத்தி வேலைவாங்கத் தொடங்கினர். அது வரைக்கும் விருப்பம் போல நடந்துகொண்டு கோயிற் பணத்தைக் கொள்ளையடித்து வந்த ஊழியர்கள், அப்படிச் செய்ய இயலாமற் போகவே, கலகம் செய்யத் தொடங்கினர்கள். நாயக்கர் அவர்களுக்கு இன்னுரை கூறிக் கோயிலுக்கு 12,000 பொன் (24,000 ரூபாய்) வருவாய் கொடுக்கக் கூடிய இராவத நல்லூர்

(அயலானூர்), வலையபட்டி, வலையன்குளம், தொட்டிய பட்டி, நெடுமதுரை, கொம்பாடி, பெரிய ஆலங்குளம், ஒற்றையாலங்குளம், சொக்கநாதன் பட்டி, ஆண்டி பட்டி, தாதன் பட்டி, சின்னமநாயக்கன்பட்டி, போடி நாயக்கன் பட்டி, கொண்டையன் பட்டி, தும்பிச்சி நாயக்கன் பட்டி, சம்பகுளம், விராலி பட்டி, கிண்ணிமங் கலம், சடைச்சி பட்டி முதலிய கிராமங்களை விட்டுக் கொடுத்துத் தம் பெயரால் ஒரு கட்டளை ஏற்படுத்தினர். அக்கட்டளை மீனாட்சியம்மனுக்கு உச்சிக் காலம், மாலைக் காலம், நள்ளிரவு ஆகிய இக்காலங்களிலும், சுந்தரேசப் பெருமானுக்கு உச்சி வேளையிலும் நடந்து வருகிறது. இளவேனிற்கால விழாவும் (வசந்தோற்சவம்), தெப்பத் திருவிழாவும் அக்கட்டளை வருவாயிலிருந்து நடத்தப் படுகின்றன.

கோயில் ஆட்சியில் ஒழுங்கு ஏற்பாடு:

கோயில் வழிபாடு நடத்தி வந்தவர்கள் பட்டர்கள். இவர்களுள் விக்கிரமபாண்டியர் பட்டர் வகை என்றும், குலசேகரபாண்டியர் பட்டர் வகை என்றும் இரு வகையினர் உண்டு. இவர்களுக்குள் பூசை செய்வது குறித்தும் மரியாதை பெறுவது பற்றியும் நீண்ட நாள் களாகச் சச்சரவு இருந்து வந்தது. நாயக்கர், கோயிலாட் சியை ஏற்றதும் ஒழுங்கு செய்யக் கருதி விக்கிரம பாண்டியர் பட்டர் வகையினரைக் கருவறையுள் (மூலஸ்தானத்தில்) திருமுழுக்கு, வழிபாடு முதலிய வற்றைச் செய்துவரவும், குலசேகரபாண்டியர் பட்டர் வகையினரை உற்சவர் திருமுழுக்கு, அணிசெய்தல் முதலியவற்றைக் கவனித்து வரவும் திட்டம் செய்தார்; கோயில்களின் வேலைகளை விக்கிரம பாண்டியர் பட்டர் வகையினர் ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை முதல் மறு

செவ்வாய் வரையில் 16 நாள்களும், குலசேகர பாண்டியர் பட்டர் வகையினர் செவ்வாய் மாலை முதல் ஞாயிறு மாலை வரையில் 12 நாள்களும் பார்த்து வருமாறு செய்தார்; முதல் மரியாதை விக்கிரம பாண்டியர் பட்டர் வகைக்கும், அடுத்தது குலசேகர பாண்டியர் பட்டர் வகைக்கும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்; 'ஸ்தானீகர்'* அதிகாரத்தை அந்த அந்த வகையினர்க்குள் வயது முதிர்ந்தவரே பார்த்து வருமாறு செய்தார்; திருவிழாக் காலங்களில் கட்டளை முதலியவை இருவகையினர்க்கும் சரிபாதியாக இருக்கு மாறு பண்ணினர்; திருக்கலியாணம் முதலான பெருவிழாக்களில் இரு வகுப்பினரும் இருந்து செய்யும் படியான சிறப்பையும் கொடுத்தார்; திருவாபரணங்களை எடுக்கவும் வைக்கவும் வேறு கோயில் தொடர்பான வற்றைச் செய்யவும் வகைக்கு ஒருவராக இருவர் இருந்து கண்காணிக்குமாறு ஏற்பாடு செய்தார். இவர் களுக்கு 'நிர்வாகக்காரர்கள்' என்ற பெயர் கொடுத்து, இவ்வேலை பார்ப்பதற்காகப் பல கிராமங்களை விட்டுக்

---

*ஸ்தானீகர்—காமிகாகமம் என்னும் நூலில் ஆசாரிய லட்சணப் படலத்தில் ஆசாரியரைப் பற்றிய செய்திகள் கூறப் பட்டுள்ளன. தேவகாரியம் பார்ப்போர் ஆசாரியர், அர்ச்சகர், ஸ்தானீகர், பாசகர், பரிசாரகர் என ஐவர் ஆவர். (1) ஆசாரியர் நாட்பூசை, உற்சவம், பிரதிஷ்டை, பிராயச் சித்தம் (கழுவாய்) இவை செய்வதற்கு உரியவர். (2) அர்ச்சகர் நாட்பூசை மட்டும் செய்தற்கு உரியவர். இவர் உற்சவம், பிரதிஷ்டை, பிராயச்சித்தம் இவற்றைச் செய்தல் கூடாது. (3) ஸ்தானீகர் திருவீதி திருமேனிகட்கு (உற்சவ ருக்கு) அலங்காரம் மட்டும் செய்யலாம்; மூலலிங்கத்தைத் தொடுதல் கூடாது. (4) பாசகர் சமையல் மட்டும் செய் வதற்கு உரியவர். (5) பரிசாரகர் அபிடேக தீர்த்தம், பூஜைக்கு வேண்டும் பொருள்கள் முதலியவற்றைச் சித்தம் செய்பவர். ஸ்தானீகர் பொறுப்புள்ளவரும் ஆவார்.

— தமிழ்ப் பொழில்

கொடுத்தார். இவ்வேற்பாடுகளால் கோயில் ஆட்சியில் ஒழுங்கும் அமைதியும் உண்டாயின.

விழாக்களும் அணிகலன்களும்:

நாயக்கர் இவ்வாறு பட்டர்கள் நிருவாகத்தை ஒழுங்கு செய்த பின்பு, சாத்திர வல்லுநரும் தமக்கு அமைச்சருமாய் இருந்த நீலகண்ட தீட்சிதருடனும் ஸ்தானீகர்களோடும் இருந்து நன்காய்ந்து, ஆண்டில் நான்கு பெருவிழாக்களையும் மற்றும் சில சிறு விழாக்களையும் ஏற்படுத்தினர்.

சோமசுந்தரப் பெருமான் திருவிளையாடல்களுள் சிலவற்றைத் திருமலை நடத்திக்காட்ட விரும்பி அவற்றிற்கு வேண்டிய திருவாபரணங்களைச் செய்து வைத்தார். இரத்தினத்தாலும், நன்முத்தாலும் செய்யப்பட்ட குதிரை வாகனத் தலை முடிப்பாகை, திருமலை நாயக்கர் அணிந்திருந்தது போன்ற நாயக்கமார் இரத்தினக் கொண்டை, திருக்கலியாண முடி, நீலநாயகப் பதக்கம், குதிரை இரத்தின அங்கவடி, வீரகண்டை, இருதலைப் பட்சிப் பதக்கம், இரத்தின சூரியகாந்திப் பூ, இரத்தின வெண்டயம், நாகர் ஒட்டியாணம், குசாந்தரப் பதக்கம், துரைப் பதக்கம், சங்கு சக்கரப் பதக்கம், இரத்தினச் செங்கோல், பள்ளியறைக் காளாஞ்சி, சொர்ணக் கும்பா, பவளக்கொடி மாலை ஆகியவை திருமலை நாயக்கர் செய்து கொடுத்தவற்றுள் இன்றுள்ள சிலவாகும்.

மாசி விழாவைச் சித்திரைக்கு மாற்றியது:

திருமலை நாயக்கர் காலத்துக்கு முன்பு மீனாட்சியம்மன் திருக்கலியாண விழாவும் தேரோட்ட விழாவும் மாசித் திங்களில் நடந்து வந்தன. மாசித்

திருவிழாவே பெரிய திருவிழாவாய் இருந்தது. மாசித் திருவிழாவில் சுவாமி சுற்றிவரும் தெருக்கள் கிழக்கு மாசி வீதி, மேலே மாசி வீதி, தெற்கு மாசிவீதி, வடக்கு மாசி வீதி எனப்பட்டன. அந்த அந்த மாதத்தில் சுவாமி சுற்றி வருவதைக் கொண்டே தெருக்களுக்குப் பெயர்கள் வைக்கப்பட்டன. மாசித் திங்களில் தேரோடும் வீதி மாசி வீதி எனப்பட்டது. மாசித் திங்கள் அறுவடைக் காலமாய் இருந்ததால், தேரை இழுப்பதற்கு ஆள்கள் கிடைப்பது அரிதாயிற்று. நாயக்கர் இரண்டு பெரிய தேர்களைச் செய்துவைத்தார். அவற்றை இழுப்பதற்குச் சிற்றூர்களிலிருந்து ஆள்களை அமைப்பதும் இயலாமல் இருந்தது. ஆள்கள் இழுக்காமால் தேரோட்டம் நடப் பதோ முடியாது. அக்காலத்தில் திருமாலிருஞ்சோலே மலேயிலிருந்து கள்ளழகர் எழுந்தருளிச் சித்திரா பௌர்ணமி யன்று மதுரைக்கு மேற்கே பரவைக்கு அருகிலிருக்கும் தேனூர் வரை வந்து போவது வழக்க மாய் இருந்தது. சித்திரைத் திங்கள் இளவேனிற் காலமாய் இருந்ததாலும், மக்களுக்கு அறுவடை முடிந்து ஒய்வுக் காலமாய் இருந்தமையாலும் பல ஊர்களிருந்து மக்கள் தேனூருக்கு ஆயிரக்கணக்காக வந்து கொண்டிருந்தார்கள். திருமலே நாயக்கர் இதைக் கண்டு மாசித்திங்களில் நடந்து வந்த மீனாட்சியம்மன் திருக்கலியாண விழாவையும் தேரோட் டத்தையும் சித்திரைத் திங்களிலும், சித்திரையில் நடை பெற்று வந்த விழாவை மாசியிலும் மாற்றிவைத்தார்; மீனாட்சியம்மன் கோயில் பெருவிழாவை ஒட்டிக் கள்ளழகர் தேனூர்க்குப் போவதைவிட்டு மதுரைக்கு அருகிலிருக்கும் வண்டியூர் வரைக்கும் வருமாறு செய்தார். அப்படிச் செய்ததால் தேரை இழுப்பதற்கு ஆள் கிடைப்பது எளிதாயிற்று. அதுமட்டுமல்லாமல்

மீனுட்சியம்மன் கோயிற் பெருவிழாவும் கள்ளழகர் மதுரைமாநகர்க்கு வருகை புரியும் விழாவும் அடுத்தடுத்து நடைபெறவே, ஆயிரக்கணக்கான மக்கள் மதுரைக்குத் திரண்டுவந்தார்கள். சித்திரைத் திருவிழாவும் மிகப்பெரும் விழாவாயிற்று. இதுமட்டுமா? இல்லை. சிவராஜதானியாகிய மதுரையம்பதியில் திருமால் விழாவும் நடக்கும் வழக்கமும் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் மனத்தில் சைவம் வேறு என்றும் வைணவம் வேறு என்றும் வேறுபாடு தோன்ருத சமரசநோக்கமும் வேரூன்றி விட்டது. இவ்விருவிழாக்களும் சேர்ந்ததால் மதுரை நகரம் பெருவிழா நகரமாக விளங்கலாயிற்று.

திருவிளையாடல் விழாக்கள்:

சோமசுந்தரப் பெருமான் மதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்களையும் விழாக்களாக நடத்திக்காட்ட விரும்பியவாறு திருமலை நாயக்கர், சித்திரைத் திங்கள் விழாவில் 9-ஆம் நாள் திக்விஜயமும், 10-ஆம் நாள் திருக்கலியாணத்தோடு குண்டோதரனுக்கு அன்னமிட்டதும் ஆகிய திருவிளையாடல்களை நடத்த ஏற்பாடு செய்தார்.

வைகாசித் திங்களில் வசந்த விழா நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆவணித் திங்களில் முதல் நாள் கரிக்குருவிக்கு உபதேசித்ததும், இரண்டாம் நாள் நாரைக்கு முத்தியளித்ததும், மூன்ரும் நாள் நவமணி விற்றதும், நான்காம் நாள் தருமிக்குப் பொற்கிழி அளித்ததும், ஐந்தாம் நாள் உலவாக்கோட்டை அருளியதும், ஆரும் நாள் அங்கம் வெட்டியதும், ஏழாம் நாள் வளையல் விற்றதும், எட்டாம் நாள் குதிரைக் கயிறு மாறியதும், ஒன்பதாம் நாள் பிட்டுக்கு மண் சுமந்ததும், பத்தாம் நாள் விறகு விற்றது

மாகிய திருவிளையாடல்களை நடத்துமாறு செய்தார் நாயக்கர். ஒன்பதாம் திருநாளன்று பிட்டுக்கு மண் சுமந்த விழா நிகழ்ச்சியில் கூலியாளாக வந்த சிவபெருமானைப் பிரம்பால் பாண்டியன் அடித்தது போலத் திருமலை நாயக்கர் தாமே யானைமேல் ஏறிக் கொண்டு இரத்தினச் செங்கோலை ஏந்திக் கூலியாளாக வேடம் புனைந்து நின்ற பட்டரை அடிப்பது போலச் செய்வது வழக்கமாம்.

புரட்டாசித் திங்களில் அரண்மனையில் மிகச் சிறப்பாக நவராத்திரி விழாவில் ஒன்பது நாளும் அவர் கொலு வீற்றிருப்பது போலவே, திருக்கோயிலிலும் மீனாட்சியம்மன் கொலுவிருக்குமாறு செய்தார்.

தெப்பத் திருவிழா:

நாயக்கர், தைத்திங்களில் கல்யானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடலை நடத்த ஏற்பாடு செய்தார்; தமது பிறந்த நாளாகிய தைப்பூசத்தன்று வண்டியூர்த் தெப்பக் குளத்தில் தெப்பத்திருவிழா நடத்துமாறு செய்தார்; இத்திங்களிலே வலை வீசிய திருவிளையாடலையும், யானை எய்த திருவிளையாடலையும் நடத்தச் செய்தார். இத்தெப்பத் திருவிழா இன்றும் மிகமிகச் சிறப்பாக நடந்து வருகிறது. சித்திரைத் திருவிழாவிற்கு அடுத்த பெருவிழாவாக இது நடைபெறுகிறது.

மேற்பார்வையிட ஏற்பாடு:

இவ்வாறு நாயக்கர் மீனாட்சியம்மன் கோயில் நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்து, பல விழாக்களை ஏற்படுத்தித் தாமே சிறிது காலம் மேற்பார்த்துக்கொண்டிருந்து, பின்பு பூவணநாத பண்டாரத்தைத் தம் கட்டளைக்கு அதிகாரியாக நியமித்து மேற்பார்த்து வரு

மாறு செய்தார்; கோயில் நிகழ்ச்சிகளைத் தம் சார்பில் கண்காணித்து வருமாறு தம்முடைய குருவாகிய பெத்தவாரய்ய தீட்சா சுவாமியவர்களை மேற்பார்ப் பவர்களுள் ஒருவராக நியமித்து அதற்காகச் சில ஊர் களையும் விட்டுக்கொடுத்தார்.

விழா நகர்:

இப்படித் திருமலை நாயக்கர், மதுரையை விழா நகர மாக்கினர். இன்று மதுரையம்பதியை விழா நகரம் என் கிறோம். புகை வண்டி நேரக் குறிப்பேடும் மதுரையை விழா நகரம் என்று புகலுகின்றது. இவ்வண்ணம் மதுரை யைத் திருவிழாப் பெருநகர் என்று புகழ்வதற்குக் காரண மாய் இருந்தவர் திருமலை நாயக்கரேயாவார்.

12. கட்டிய அரிய கட்டடங்களும் வெட்டுவித்த தெப்பக்குளமும்

முன்னுரை:

மதுரை நகரின் இன்றைய மாண்பு பண்டைப் பாண்டியர் ஆண்ட சிறப்பினுல் மட்டுமன்று; தண்டமிழ்ச் சங்கம் இருந்து ஒண்தீந்தமிழ் ஆய்ந்த பெருமையினுல் மட்டுமன்று; திருமலை மன்னர் மஹால் கட்டிப் புது மண்டபம் அமைத்துத் தெப்பக்குளம் வெட்டுவித்துக் கலைநகராக்கிய நிலையாலுமாகும். ஷாஜஹான் தாஜ்ஹால் கட்டிப் புகழ்பெற்றுன். இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கட்டிப் பெருமையடைந்தான். கங்கைகொண்ட சோழன் சோழேச்சுரத்தை அமைத்துக் கலைப்புகழ் எய்திஞன். மதுரைப் பெருநாட்டை ஆட்சி செய்த திருமலை நாயக்கரோ மஹால், புது மண்டபம், தெப்பக் குளம், இராய கோபுரம் இவற்றை அமைத்துக் கலைப் புகழ் மேவிஞர். தாஜ் மஹால் பாரத நாட்டுக்கு உலகப் புகழ் தந்தது. தஞ்சை மாநகர்ப் பெருவுடையார் கோயில் தமிழகத்திற்குக் கலைப்புகழ் கொடுத்தது. கங்கை கொண்ட சோழேச்சுரம் இன்று இடிந்து அழிந்து போயினும் வெற்றி வரலாற்றுச் சின்னமாய் இருந்து பிற்காலச் சோழர்களுக்குப் பெருமையளித்து நிற்கிறது. திருமலைகட்டிய கட்டடங்கள் மதுரை நகர்க்குப் பெரும் புகழ் நல்கி வருகின்றன.

தெப்பக் குளம்:

திருமலை நாயக்கர் மதுரைக்கு வந்து ஆட்சிசெய்யத் தொடங்கியதும் முதல் முதலாகச் செய்தது பெரிய

திருமலை நாயக்கர் மஹாலின் வடபகுதி

[By Courtesy of Archaelogical Survey of India]



திருமலை கட்டிய மஹாலின் சிதைந்த பகுதி
[By Courtesy of Archaelogical Survey of India]



மதுரை வண்டியூர்த் தெப்பக்குளம்
[By Courtesy of Archaelogical Survey of India]

தெப்பக்குளம் வெட்டுவித்ததாகும். இதுதென்னிந்தியாவிலுள்ள பல தெப்பக்குளங்களுள் மிகவும் பெரியதும் செப்பமானதும் அழகானதுமாகும். இது மதுரைக்குக் கிழக்கில் உள்ள மாரியம்மன் கோயிலுக்குத் தெற்கில் இருக்கிறதால், இதனை மாரியம்மன் தெப்பக்குளம் என்பர்; வண்டியூர் என்னும் கிராமத்துக்கு அருகில் இருப்பதால் வண்டியூர் தெப்பக்குளம் என்றும் கூறுவர். இதில் அழகிய இயற்கைச் சூழல் அமைந்த மையமண்டபம் அமைந்திருக்கிறது. அந்த மைய மண்டபத்தின் நடுவில் விமானத்தோடு கூடிய ஒரு மண்டபமும், நான்கு மூலைகளிலும் விமானத்தோடு அமைந்த நான்கு மண்டபங்களும் அழகாகக் காட்சி அளிக்கின்றன. மரங்கள் பல உள்ள ஒரு தோப்பு இந்த மைய மண்டபத்தில் இயற்கைச் சூழலை உண்டு பண்ணியிருக்கிறது. இத்தெப்பக்குளம் தெற்கு வடக்கில் 1000 அடி நீளமும், கிழக்கு மேற்கில் 950 அடி அகலமும், 9½ வட்சம் சதுர அடிப்பரப்பும் உடையது. இக்குளத்தைச் சுற்றிக் கருங்கல்லால் ஏறக்குறைய 4அடி உயரத்தில் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. சுவருக்கு அடுத்து உட்புறமாகக் குளத்தைச் சுற்றி வருவதற்கு 5 அடி அகலத்தில் கல் வரிசை அமைந்திருக்கிறது. அதன்மேல் இருவர் நடந்து அக்குளத்தைச் சுற்றி வரலாம். ஒரு பக்கத்துக்கு 3 படித்துறைகளாக 12 படித்துறைகள் இருக்கின்றன. வையை ஆற்றிலிருந்து இதற்குத் தண்ணீர் வருவதற்கு வாய்க்கால் உண்டு. இப்போது இவ்வாய்க்கால் தூர்ந்து கிடக்கிறது. இத்தெப்பக்குள வேலை கி. பி. 1635-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களுக்குச் சரியான ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்களில் முடிவு பெற்றது.

முக்குறுணிப் பிள்ளையார்:

இத்தெப்பக் குளத்தை வெட்டியபோது அவ்விடத்தில் ஏறக்குறைய 6 அடி உயரமும் 4 அடி அகலமுமுள்ள மிகப் பெரிய விநாயகர் உருவச் சிலை கிடைத்தது. அவ்விநாயகர் சிலை சோமசுந்தரப் பெருமான் கோயிலில் தெற்குச் சுற்றில் திருமலை நாயக்கரால் வைக்கப்பட்டிருக்கிறது. அவ் விநாயகரை முக்குறுணிப் பிள்ளையார் என்று கூறுவர். அப்பிள்ளையாருக்கு 18 படி அரிசியில் மிகமிகப் பெரிய கொழுக்கட்டை செய்து படைப்பதுண்டு. இத்திட்டத்தையும் திருமலை நாயக்கரே ஏற்பாடு செய்தார்.

ஐராவதேசுவரர் கோயில்:

இத்தெப்பக் குளத்திற்கு மேற்கில் திருமலை நாயக்கருடைய தமையனாராகிய முத்துவீரப்ப நாயக்கர் ஒரு கோயில் கட்டி முடித்திருந்தார். இக்கோயிலை ஐராவதேசுவரர் கோயில் என்பர். இப்பொழுது இக்கோயிலுக்கு முத்தீசுவரன் கோயில் என்னும் பெயர் வழங்கப்படுகிறது. இப்பொழுது இக்கோயில் பாழ்பட்டுக் கிடக்கிறது. இக்கோயிலுக்குப் போவார் ஒருவரும் இல்லை.

தெப்பவிழா:

திருமலை நாயக்கர் இத்தெப்பக்குளத்தைச் சிறப்படையச் செய்யவேண்டும் என்று எண்ணித் தம் பிறந்த நாளாகிய தைப்பூச நட்சத்திரத்தில் தெப்பவிழா நடத்த முடிவுசெய்து, மீனாட்சி சுந்தரேஸ்வரரைத் தைப்பூசத்தில் எழுந்தருளச் செய்து தெப்பவிழா நடத்தி மகிழ்ந்தார்; ஆண்டுதோறும் இவ்விழாவை நடத்தத் திடியன்புத்தூர் என்னும் கிராமத்தை விட்டுக் கொடுத்தார். இப்பொழுதும் தைப்பூசத்தில் தெப்பத்

திருவிழா மிகச் சிறப்பாக ஆயிரக் கணக்கான மக்கள் வந்து கண்டு மகிழ ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. மதுரையில் நடக்கும் மிகப் பெரிய சித்திரைத் திருவிழாவிற்கு அடுத்த பெரு விழாவாக இருப்பது இத்தெப்பத் திருவிழாவே.

தெப்பக்குளத்தை வெட்டுவித்தவர் திருமலையே:

சிலர் இந்தத் தெப்பக் குளத்தைப்பற்றித் தவறான செய்தி கூறி வருகின்றனர். மஹால் கட்டுவதற்கு மண் எடுத்த இடம் பெரும்பள்ளமாகி விட்டதால், திருமலை நாயக்கர் அதை ஒழுங்குபடுத்தித் தெப்பக் குளமாக அமைத்தார் என்று கூறுகின்றனர். அப்படிச் சொல்வதற்கு இல்லை. திருப்பணி மாலையிலிருக்கும்

'மகரம்எறி கடல்ராம வாளியால் முனிகையால்
மாறனுர் தாட்சிலம்பால்
மாதவன் எடுத்தஅவ தாரமீ னத்தினுல்
வருசுப்ர மண்யன் வேலால்
தகர்பட்டு வெந்துபய மாய்ப்பின்ன மாகிமிகு
தாழ்வாகி உடலம்வற்றித்
தரைபட்டும் ஒருகாலம் நிறைவுற்றும் இப்படித்
தளர்ந்துகடை பட்டவதனுல்
புகலரிய சத்தசா கரமும்அதன் நடுவிலே
புவனநவ கண்டங்களும்
பொன்மேரு நிகர்மேவு மண்டபமும் மதுரேசர்
புகழநவ மாய்ப்புதுக்கித்
திகழ்செய்திரு மலைநாய கர்சமுத் திரம்எனும்
தெப்பக்கு ளம்கண்டனன்
சிகரபுய பலவிசய சுமுகமுத் துக்ருஷ்ண
திருமலை மகீபாலனே

—டி.81

என்னும் இச்செய்யுள் திருமலை மகிபர் தெப்பக்குளத்தை அமைத்த செய்தியையும், அதன் சிறப்பையும் எடுத்து விரிவாகக் கூறுகிறது. டெய்லர் பாதிரியாரின் கீழை நாட்டு வரலாற்றுப் பிரதியும் இதனைக் குறிப்பிடுவதை இந்நூலின் 71-ஆம் பக்கம் பார்க்கலாம்.

புதுமண்டபம் அல்லது வசந்த மண்டபம்:

இது நாயக்கர் கட்டிய சிறந்த கட்டடங்களுள் ஒன்று. இது மிகுந்த சிற்ப வேலைப்பாடு அமைந்த கல்மண்டபம். ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் இளவேனில் விழா (வசந்தோற்சவம்) நடைபெறுவதற்கு இம்மண்டபம் கட்டப்பட்டதால், இதனை வசந்த மண்டபம் என்றும், நாயக்கர் காலத்தில் இது புதிதாகக் கட்டப்பட்டதால் இதனைப் புதுமண்டபம் என்றும் கூறுவர். நாயக்கர் இம்மண்டபத்தைச் சோமசுந்தரப் பெருமான் கோயிலுக்கு முன் அமைக்க முடிவு செய்தார். அப்போது அவ்விடத்தில் கோயில் அர்ச்சகர்களுடைய வீடுகள் இருந்தன. அச்சமயம் கோயில் ஆட்சியும் அபிடேக பண்டாரத்தினிடம் இருந்தது. ஆதலால், நாயக்கர் தாமே அப்பண்டாரத்திடம் நேரே சென்று தம் கருத்தை வெளியிட, அப்பண்டாரமும் அக்கருத்தை ஆதரித்து அவ்விடத்தை எடுத்துக்கொள்வதற்கு இசைந்தார். கோயிலின் வடபகுதியில் விக்கிரம பாண்டியர் பட்டர் வகைக்குப் பதினாறு மனைகளும், குலசேகர பாண்டியர் பட்டர் வகைக்குப் பன்னிரண்டு வீடுகளும் கட்டிக் கொடுத்து, அவ்விடத்தைக் கைப்பற்றிக்கொண்டு, எல்லா வீடுகளையும் இடித்து மட்டப் படுத்தி, 1628 மேத்திங்களுக்குச் சரியான அக்ஷய ஆண்டு வைகாசித் திங்கள் 10-ஆம் நாள் பூர்வபட்சத்தில் நன்னாள் வைத்து மண்டபம் கட்டுவதற்குத் தொடங்கி,

1635, மேத் திங்களுக்குச் சரியான ஸ்ரீமுக ஆண்டு வைகாசித் திங்களில் முடித்துவிட்டார். இது சிற்ப வேலைப்பாடுகளுடன் முடிய 7 ஆண்டுகள் சென்றன.

இவ்வரிய புது மண்டபத்தைக் கட்டியவர் திருமலை நாயக்கரே என்பதைக் கீழ் வரும் மதுரைத் திருப்பணி மாலைச் செய்யுள் வலியுறுத்துவதைக் காணலாம்:

"தரணிபுகழ் மேருகிரி பலவுரு வெடுத்துநற்
சந்நிதா னத்தில்வந்து
தவமுற்ற தென்னநூற் றிருபத்து நாலுகால்
தன்னிலே எந்தநாளும்
திரமான புதுமையா மண்டபம் கட்டியே
சித்திரமும் எழுதியந்தச்
செய்யமண் டபம்அணியும் மாலையென இருபால்
சிறந்தமண் டபம்இயற்றிக்
குரவார் கருங்குழல் அங்கயற் கண்ணம்மை
கொன்றையணி சொக்கேசனுர்
கூடிவிளை யாடியும் வசந்தமெனும் நல்விழாக்
கொண்டருள வேசெய்தனன்
பரராச சேகரன் பரராசபூஷணன்
பரார ராசதிலகன்
பரராசர் பணிமுத்து கிருஷ்ணப்ப 'பூபனருள்
பாலதிரு மலைபூபனே." —ஷை 80

இம்மண்டபம் 333 அடி நீளமும், 105 அடி அகலமும், 25 அடி உயரமும் உள்ளது. இதில் 124 சிற்பத் தூண்கள் இருக்கின்றன. மேல் தளம் கல்லால் மூடப்பட்டுள்ளது. இதன் உள் வரிசைக் கால்களில் திருமலை நாயக்கர் உருவமும் அவருக்கு முன் இருந்த ஒன்பது நாயக்கர் களுடைய உருவங்களும் செதுக்கப் பட்டுள்ளன. மண்ட பத்தின் மேற்கு ஓரத்தில் கருங்கல் சவுக்கை ஒன்று இருக்

கிறது. திருவிழாக்காலத்தில் குளிர்ச்சியாயிருக்குமாறு மண்டபத்தின் தெற்கு வடக்குப் பக்கங்கள் தண்ணீர் நிரப்பி வைக்கும் பொருட்டு அகழிபோல அடிவாரம் இருக்கிறது. மழை பெய்தால் இப்பொழுதும் அவ்விரு பக்கங்களிலும் தண்ணீர் நிறையத் தேங்கிவிடும். கோடைக்காலத்தில் இவ்வகழி போன்ற அமைப்பில் தண்ணீர் நிரப்பி விட்டால் இடம் குளிர்ச்சியாக இருக்கும். மக்கள் இங்கு மகிழ்ச்சியாக இருக்கமுடியும். இப்பொழுது இவ்வரிய சிற்ப வேலை மிகுந்த மண்டபம் முழுதும் பல வகையான கடைகள் இருக்கின்றன. கடைகள் இக்கலை மலிந்த மண்டபத்தின்காட்சியைக் கெடுத்து நிற்கின்றன. இப்புது மண்டபத்தைக் கட்டிய சிற்பி சுமந்திர மூர்த்தி ஆசாரி என்பர்.

திருமலையின் கலையார்வம் :

திருமலை பூபதிக்குக் கட்டடக் கலையின்மீதிருந்த அளவு கடந்த ஆர்வத்தைக் குறித்துக் கதை ஒன்று சொல்லப்படுகின்றது: ஒரு நாள் சுமந்திர மூர்த்தி ஆசாரி ஒருருவத்தைச் செதுக்குவதில் மெய்ம்மறந்து ஆழ்ந்து கிடந்தான்; வெற்றிலை பாக்குப் போடவும் ஓய்வு ஒழிவு இன்றி இவ்வேலையில் கருத்தூன்றி இருந்தான். அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் பையன் ஏதோ ஒரு வேலையாக வெளியே போயிருந்தான். ஆசாரியே அப்பையனை வெளியே அனுப்பினவன். உருவச்சிலையை செதுக்கிக்கொண்டிருந்த ஆசாரி, பையனை வெளியே அனுப்பியதை மறந்து, பின்னால் பார்க்காமல் கையை நீட்டிக்கொண்டு வெற்றிலை பாக்குக் கேட்டான். அந்த நேரத்தில் மண்டப வேலையைக் கண்காணிக்கும் பொருட்டுத் திருமலை நாயக்கர் அங்கு வந்திருந்தார். ஆசாரி வெற்றிலை பாக்குக் கேட்பதைக் கண்டு அவர் வெற்றிலையைக் கிழித்துச் சுண்ணாம்பு தடவிப் பாக்கை

பொடி செய்து சுருள் பண்ணிக் கொடுத்துக்கொண் டிருந்தார். ஆசாரியும் பையன் கொடுப்பதாக எண்ணி வாங்கி வாயில் போட்டு மென்றுகொண்டு வேலையை ஊன்றிச் செய்துவந்தான். தற்செயலாகத் திடீரென்று ஆசாரி திரும்பியபோது வெற்றிலைச் சுருளைக் கொடுத்துக் கொண்டிருந்தவர் திருமலை நாயக்கர் என்றறிந்ததும் நடு நடுங்கி, "ஐயோ! அரசர்பெருமானுரே, என்ன தவறு செய்து விட்டேன்!" என்று சொல்லி வருந்தி வெற்றிலைச் சுருளை வாங்கிக்கொண்டிருந்த இரண்டு விரல்களையும் தன் கையிலிருந்த சிற்றுளியால் வெட்டிக்கொண்டான். நாயக்கர், அவனுக்கு அரசர் மீதிருந்த பெருமதிப்பையும் உண்மைத் திறமையையும் கண்டு பாராட்டி இரண்டு விரல்களையும் பொன்னல் செய்துகொடுத்தார். இக்கதை திருமலை நாயக்கருக்கு இருந்த கலையார்வத்தைக் காட்டு கிறது.

நெடுநாளைக்கு முன் ஐரோப்பியர் ஒருவர் இப்புது மண்டபத்தை அரசர்களுடைய உருவச் சிலைகள் தெரியு மாறு படம் பிடித்திருக்கிறுர். அவர் இதனைச் சத்திரம் என்று அடிக்குறிப்பு எழுதியுள்ளார். அவர் பார்த்த போது பலர் இதில் பகல் வேளைகளிலும் இரவிலும் படுத் துறங்கிக் கொண்டிருந்திருப்பர். அதைக் கண்ட அந்த ஐரோப்பியர் சத்திரம் என்று கருதிவிட்டார் போலும்! புது மண்டபத்தைச் சத்திரம் என்னும் அடிக்குறிப்புப் போட்டுள்ள படத்தைச்சென்னைக் கோட்டைப் பொருட் காட்சிச் சாலையில் (Madras Fort Museum) காணலாம்.

இராய கோபுரம்:

புது மண்டபம் முடித்துச் சில நாள்களான பின்பு, நாயக்கர் ஆவணி மூல வீதியைக் கோயிலுடன் சேர்த்து, அதையும் ஒரு பிராகாரமாகக் கருதி, ஆவணி மூலவீதி யைச் சுற்றி மதிலெடுத்துப் புது மண்டபத்திற்கு எதிரில்

இராய கோபுரம் கட்ட எண்ணிக் கி. பி. 1654 நந்தன ஆண்டில் நல்வேளையைக் குறிப்பிட்டு, வேலையைத் தொடங்கினர். அதே முறையில் அவருடைய ஆளுகைக் குட்பட்ட ஊட்டாத்தூர் முதல் கன்னியா குமரி வரையிலுமுள்ள சைவ வைணவத் திருத்தலங்களில் இராய கோபுரங்கள் கட்டத் திட்டமிட்டு அதே நல்வேளை யில் 64 இடங்களில் வேலை தொடங்கினர். பண முட்டுப்பாட்டாலோ வேறு எக்காரணத்தாலோ மதுரை இராய கோபுரத்தைப் போலவே மற்ற இடங்களில் உள்ள கோபுரங்களும் குறை வேலையாகவே முடியாமல் நின்றுவிட்டன. மதுரையில் குறையாய் நிற்கும் இராய கோபுரத்தை ராயர் கோபுரம் என்பர். மதுரை இராய கோபுரத்தின் முதல் தளமே, கோயிலின் மற்றக் கோபுரங்களில் உள்ள முதல் தளத்துக்கு இரண்டு மடங்கு உயரம் இருக்கின்றது. இதன் வாயில் ஏறக் குறைய 60 அடி உயரமுள்ளது. இந்த இராய கோபுரம் கட்டி முடிந்திருந்தால், அக் கோபுரங்களுக்கு இது தலைமணி யாய் விளங்கியிருக்கும். "இக்கோபுரம் முடிந்திருந்தால் இந்தியாவிலிருக்கும் மிகச் சிறந்த கட்டடங்களுள் இதுவும் ஒன்ருக விளங்கும்" என்று மதுரை நகரவை ஆணையராய் இருந்த J. P. L. ஷெனுய் I. A. S., Bar-at-law அவர்கள் தமது கோயில் நகரம்-மதுரை' என்னும் சிறந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மஹால் கட்டியது:

திருமலை நாயக்கர் மஹால் என்பது நாயக்கர் கட்டிய கலை மலிந்த மற்ருெரு மிகப்பெரிய முக்கியமான கட்டடமாகும். இது நாயக்கரிடமிருந்த அடிமைகளால் கட்டப்பட்டது என்றும், இதற்குக் கட்டட அமைப்புத் திட்ட வரைவுப் படம் (Plan) ஓர் இத்தாலிய நாட்டுக் கட்டடச் சிற்பியால் வரைந்து கொடுக்கப்பட்டது

என்றும், அதன்படி இம்மஹால் அமைக்கப் பட்டது என்றும், ஏசு கழகத் சமயத் தொண்டர்கள் (Jesuit Missionaries) எழுதிய முடங்கல்களால் அறிகிறோம். உண்மையில் இக்கட்டடத்தைக் கட்டியவர்கள் திறமை மிக்க தொழிலாளர்களேயன்றி அடிமைகள் அல்லர் என்பதறிக.

இப்பொழுதுள்ள மஹால் (Palace) முன்னிருந்ததன் நான்கில் ஒரு பங்குதான் இருக்கும் என்பர். நாயக்கர் காலத்தில் இவ்வரண்மனை தெற்கு மாசி வீதி வரை விரிந்திருக்க வேண்டும். நவுபத்கானு தெருவில் இவ்வரண்மனைக்கு முகப்பு இருந்திருக்க வேண்டும்; ஏனெனில் அரண்மனை முகப்புகளில் முற்காலத்தில் நவுபத்கானு வாத்தியம் என்று சொல்லப்படும் பதினெண் வாத்தியங்கள் காலை மாலைகளில் வாசிப்பது வழக்கம். இப்பொழுதும் அரண்மனை முகப்பு இருந்த தெருவிற்கு நவுபத்கானுதெரு என்னும் பெயர் வழங்கு கிறது.

திருமலை அக்காலத்தில் கட்டிய இந்த அரண்மனை எப்படியிருந்தது என்பதை டெயிலர் பாதிரியார் பதிப் பித்துள்ள கையெழுத்துப் பிரதிவாயிலாக அறிகிறோம். இதில் சொர்க்க விலாசம், ரங்க விலாசம் என இரண்டு முக்கியமான பகுதிகள் இருந்தன. இவை தவிரப் பதினெட்டு வகை இசைக் கருவிகள் இசைக்கும் இடம், பல்லக்கு முதலியவை வைக்கும் இடம், படைக்கலம் வைக்கும் இடம், பூசை செய்யும் இடம், அரியணை மண்டபம், அரச மாதேவிகளின் அந்தப்புரம், நாடக சாலை, உறவினர்களும் பணியாளர்களும் உறையும் இடங்கள், வசந்த வாவி, பூங்காக்கள், சுற்றுமதில் முதலியவை இந்த அரண்மனையில் இருந்தன. திருமலை

நாயக்கர் சொர்க்க விலாசத்திலும் அவர் தம்பி ரங்க விலாசத்திலும் வசித்தனர்.

இப்பொழுது எஞ்சியுள்ள பகுதி சொர்க்க விலாசப் பகுதியாகும். இப்பொழுதுள்ள அரண்மனையின் நுழை வாயில் முன்னமே வைக்கப்பட்டதன்று; அக்காலத்தில் இக்கட்டத்தின் வடக்கே இருந்ததாம். இக்கட்டடத்தின் கிழக்குப் புறங்களில் பக்கத்துக்கு ஒரு சிகரமாக இரண்டு சிகரங்கள் இருப்பதே இப்பக்கத்தில் நுழைவாயில் இருந்ததில்லை என்பதைக் காட்டும்.

அரண்மனையின் உள்ளே நுழைந்ததும் ஒரு பெருமுற்ற வெளியையும் சுற்றிலும் 40 அடி உயரமுள்ள தூண்கள் தாங்கிய கட்டடமும் காணலாம். மேற்கில் வேலைப்பாடு மிகுந்த கட்டடப் பகுதி ஒன்று உள்ளது. முற்றத்தின் வடக்கிலும் தெற்கிலும் நடுவிலும் சாலை வடிவமான மிகவும் உயர்ந்த கட்டடப் பகுதிகள் உள.

இரண்டு குதிரைச் சிற்பங்கள் அலங்கரிக்கும் படிகளின் வழியே போனல் மேற்கில் அழகு வாய்ந்த பகுதியை அடையலாம். இதுவே சொர்க்க விலாசம் என்பது. இங்கே உள்ள மிகவும் உயர்ந்த தூண்களும் அழகு மிக்க சுதை வேலைப்பாடுகளும், குவிந்து மேலே தோன்றும் விமானங்களும் அக்காலக் கலைத் திறனுக்கு எடுத்துக் காட்டுகளாகும். இப்பகுதியின் நடுவில் மிகவும் பரந்த இடமும் அதன் மேல் குவிந்து உயரச் செல்லும் விதானமும் நாம் சொர்க்கத்தில் நிற்கிறேமோ என்று எண்ணுமாறு செய்யும். அதனுல்தான் இதற்குத் திருமலை நாயக்கர் சொர்க்க விலாசம் என்று பெயரிட்டார் போலும்! இவ்விடத்தில் கல் பீடத்தின் மேல் நடுவில் யானைத் தந்தத்தால் ஆன நுண்ணிய வேலைப்பாடு அமைந்த மண்டபம் போன்ற அமைப்பு வைக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் இரத்தினக்



சொர்க்க விலாசம்

நன்றி : தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை



நாடக சாலை

நன்றி : தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

கற்களால் செய்யப்பட்ட அரியணை இருந்தது. திருமலை அதன்மீது அமர்ந்து கொலு வீற்றிருப்பது வழக்கம்.

ஆண்டுதோறும் மீனாட்சியம்மன் கோயிற் பெருவிழாவில் எட்டாம் நாள் திருமலை மன்னன் அங்கயற்கண்ணி அம்மையார்க்கு முடிசூட்டு விழா நடத்தி, அக்கோயிலிலிருந்து செங்கோலைப் பெற்று, வீதி உலாவாகக் கொண்டு வந்து, இந்தச் சொர்க்க விலாசத்து அரியணையில் வைத்துத் தாம் அருகில் கீழே உட்காருவது வழக்கம். செங்கோலுக்கும் சிறப்பான வழிபாடுகள் நடக்கும். அங்கு குழுமியிருந்த பட்டர் முதலியவர் களுக்குப் பரிசுகள் வழங்குவதும் வழக்கம். அன்று முழுவதும் செங்கோல் அங்கேயே இருக்கும். மறுநாள் திருமலை அச்செங்கோலுக்கு மீண்டும் வழிபாடு செய்து கோயிலுக்கு எடுத்துச் சென்று அம்மனின் காலடியில் வைத்து வணங்குவது வழக்கம். இஃது அவர் மீனாட்சி அம்மையின் அடியவராக — பிரதிநிதியாக — இருந்து நாட்டை ஆள்வதாகக் குறிப்பிடும் அடையாளமாகும்.

நவராத்திரிவிழாவில் ஒன்பது நாள்களும் திருமலை அரசர் இச் சொர்க்க விலாசத்து அரியணையில் கொலு வீற்றிருப்பார். சிற்றரசர் அப்போது அங்கு வந்து திறை செலுத்துவது வழக்கமாம். இப்போது இருக்கும் வாயிலுக்கு நேர் எதிராக இருப்பதுதான் இந்தச் சொர்க்க விலாசம். இந்தச் சொர்க்க விலாசத்திற்கு முன்னுள்ள முற்றத்தில்தான் திருமலை ஊரிலுள்ள காலத்தில் தீப்பந்த விளையாட்டு நடப்பதுண்டு.

இந்தச் சொர்க்க விலாசத்தின் மேற்கில் இருந்த கட்டடமே அந்தப்புரமாகும். இங்கு இரண்டு அறைகள் இருந்தன. இங்கு அரசமாதேவியரும் மற்றப் பெண்களும் இசை கேட்டு மகிழ்வர். இங்குத் தென்மேற்கு மூலையில் அரண்மனையின் மேலே போகப்

படிகள் இருக்கின்றன. திருமலை மன்னர் இம்மாடியி லிருந்து குடிமக்களுக்குக் காட்சி அளிப்பது வழக்கம்.

சொர்க்க விலாசத்தின் வடமேற்கில் கிழக்கு மேற்காக நீண்டதும் மிகவும் எழில் வாய்ந்ததுமான ஒரு பகுதி இருக்கிறது. இதன் மேற்கில் இருபுறமும் மேலே செல்வதற்கு மாடிப்படிகள் உள்ளன. இதுவே நாடக சாலை என்று குறிக்கப்படுவது. மாலை நேரங்களில் திருமலை இங்கிருந்து நாட்டிய மகளிர் ஆடும் பல கூத்து களைத் தீப்பந்த வெளிச்சத்தில் கண்டு களிப்பது வழக்கம்.

அந்தப்புரத்தின் மேற்கில் ஆயுதசாலை இருந்தது. நாடகசாலையின் மேற்கில் வசந்த வாவி இருந்தது. இதற்கும் வடக்கில் மற்போர் செய்யும் இடம் இருந்தது. இவற்றிற்கு மேற்கில் உறவினர் வசித்த கட்டடங்கள் இருந்தன.

நாடகசாலையின் வடகிழக்கில் கிழக்கு நோக்கி தேவிபூசைக் கோயில் இருந்தது. இதில் ராஜராஜேஸ்வரி திருவுருவச்சிலை வைக்கப்பட்டு வழிபடப்பட்டது. இக் கோயிலின் முன் பூங்காவும் குளமும் இருந்தன.

இக்கோயிலின் வடக்கில் ஒரு சந்தாக இருக்கும் தெருவில் உயரமான பத்துத் தூண்கள் இருப்பதை இன்றும் காணலாம். இவை இடிந்து போன அரண் மனையின் பகுதியைச் சேர்ந்தவை. இவற்றின் மேற்கில் தான் ரங்கவிலாசம் இருந்தது.

இவற்றின் வடக்கில் தெற்குமாசி வீதியை நோக்கி ஒரு நுழைவாயில் இருந்தது. இங்குக் காவல் ராஜாக்கள் இருந்தார்கள்.

பத்துத் தூண்களின் கிழக்கில்தான் அரண்மனையின் நுழைவாயில் இருந்தது. அதன் முகப்புச் சிறந்த வேலைப்

பாடுடையதாய் விளங்கியது. இப்பகுதியை நவபத்காஞ என்பர். இது இருந்த இடமே இன்றிருக்கும் நவபத்காஞ தெருவாகும். அக்காலத்தில் இங்குக் காலையிலும் மாலையிலும் பதினெட்டு வகையான வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன.

இவை அனைத்தையும் சுற்றியே உயரமான மதில் இருந்தது. இது 900 அடி நீளமும் 660 அடி அகலமும் 40 அடி உயரமும் கொண்டது. மிகவும் அபாயமாயிருந்ததால் இச்சுவர் 1837-ல் இடித்துத் தள்ளப்பட்டது. இம்மதிலுக்கு வெளியில் மலர் வனங்களும் அவற்றின் நடுவில் ஒரு கட்டடமும் இருந்தனவாம். இதில் திருமலை மன்னர் தம் மனைவியருடன் தங்குவதுண்டாம்.

இந்த மஹால் இந்து-முஸ்லீம்-காத்திக் சிற்ப முறையில் அமைந்திருக்கிறது என்றும், இது போன்ற செம்மையான முறையில் அமைந்த அரண்மனைக் கட்டடத்தைத் தென்னகத்தில் காண்பது அரிது என்றும் முன் குறித்த ஷெஞய் கூறியுள்ளார். இத்தகைய அரண்மனையில்தான் திருமலையரசர் தமது 75-ஆம் வயது வரை வசித்து வந்தார்.

மஹால் எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடிந்தது என்பது தெரியவில்லை. கி. பி. 1636, ஏப்ரல் திங்கள், பவ ஆண்டு சித்திரையில் புகுமனை விழா நடத்தி நாயக்கர் இவ்வரண்மனையில் குடி புகுந்ததாகத் தெரிவதால், இது 1636-ல் முடிந்திருக்க வேண்டும் என்று நாயக்கர் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய சத்தியநாத அய்யர் குறிப்பிட்டுள்ளார். ஆனல், தமிழ் நாட்டரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் வெளியீடு, இவ்வரண்மனையைத் திருமலை மன்னர் 1639-ல் கட்டிமுடித்ததாகக் கூறுகிறது.

சொக்கநாத நாயக்கர் திருமலை மன்னரின் பேரர். இவர் தந்தையாரான இரண்டாம் முத்துவீரப்பர் நான்கு திங்களே மதுரைப் பெருநாட்டை ஆண்டு மாண்டார். தந்தை இறந்ததும் சொக்கநாதர் 1659-ல் பட்டம் கட்டிக் கொண்டு 1682 வரை ஆட்சி செய்தார். தஞ்சை அரசர் அடிக்கடி படையெடுத்துத் தொல்லை கொடுத்த தால், இந்தச் சொக்கநாதர் அத்தொல்லையை ஒழிக்கக் கருதிப் பட்டத்துக்கு வந்த ஆறும் ஆண்டு அதாவது 1665-ல் தலைநகரைத் திருச்சிக்கு மாற்றினர். திருச்சி அரண்வலிமை மிக்கதாய் இருந்ததே அவர் தலைநகரை மாற்றியதற்குக் காரணமாகும். தலைநகராய் ஏற்படுத்தப் பட்ட திரிசிரபுரத்தில் அவர் பெரிய அரண்மனை கட்ட எண்ணி, மதுரையில் தம் பாட்டனர் திருமலை, பாடு பட்டுக் கட்டிய பீடு மிக்க மஹாலின் பெரும்பகுதிகளை இடித்து, அதிலிருந்த சித்திரப் பதுமைகளையும் வேறு அரிய சாமான்களையும் திருச்சிக்குக் கொண்டு போகச் செய்தார். அவரால் எழில்மிக்க அரண்மனை அழிந்தது. கொண்டு சென்ற பொருள்களால் திருச்சிராப்பள்ளியில் அரண்மனையும் கட்டப்படவில்லை. சொக்கநாதர் மதுரை அரண்மனையை இடித்துக் கொண்டுபோன செய்தி ஆண்டிரி பிரியரி (Rev, Father Andre Freire) சாமியா ரானவர் பால் ஒலிவியர் (Rev. Paul Father Oliviar) சாமியாருக்கு எழுதிய கடிதத்தில் காணப்படுகிறது. சென்ற நூற்றுண்டில்கூட அரண்மனையின் இடிந்த சில பகுதிகள் நின்று கொண்டிருந்தனவாம். காலப்போக்கில் பல பகுதிகள் அழிந்து விட்டன.

கி. பி. 1857-ல் இப்போது எஞ்சியுள்ள சொர்க்க விலாசத்தின் பல பகுதிகளில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. கி. பி. 1858-ல் பெய்த கடுமழையினுல் மேற்பகுதியில் ஒரு சுவர் விழுந்துவிட்டது; பல பகுதிகளுக்குச் சேதம்

ஏற்பட்டது. 1868-ல் சென்னை ஆளுநராய் இருந்த நேப்பியர்பிரபு, சிதைந்த மஹாலைப் பாதுகாக்கும் பொருட்டுப் பெரும்பொருள் செலவு செய்து பழுது பார்த்து அந்த அரண்மனையை இன்றைய நிலையில் இருக்குமாறு செய்தார். இடிந்த சில பகுதிகள் கட்டப் பட்டன. மேலே விரிசல் கண்ட பகுதிகளில் இரும்புக் கம்பிகள் போட்டு முறுக்கப்பட்டன. சுதைவேலைகள் பழுது பார்க்கப்பட்டன. வண்ணங்கள் ஓரளவுக்கு முன்போலத் தீட்டப்பட்டன.

திருமலை நாயக்கர் மஹாலைப் பற்றி ஒரிரு கதைகள் செவிவழிச் செய்தியாகக் கூறப்படுவதுண்டு. அத்தகைய கதைகளுள் இக்கதை ஒன்று. மஹால் கட்டிமுடிந்ததும் ஒருநாள் திருமலை மன்னர், "இவ்வளவு உறுதியான கட்டடத்தில் கள்வர்கள் நுழைய முடியுமா?" என்று சிலரைக் கேட்டாராம். அதைக் கேட்ட ஒருவன், "காப்பானின் கள்வன் மிகும்" என்று சொன்னனும். "எங்கே பார்ப்போம்" என்று நாயக்கர் சொல்லிவிட்டு இருக்க, அன்றிரவு கள்வன் ஒருவன் அவருடைய படுக்கை அறையின் மேல்தளத்தில் பெரிய தொளை செய்து கொண்டு, அவரது படுக்கை தொங்கவிடப்பட்டிருந்த சங்கிலி வழியாக இறங்கிச் சில பொருள்களைத் திருடிச் சென்றன். இதனை அறிந்த திருமலை நாயக்கர் மறுநாள் கள்வன் நேரில் வந்து உண்மையை ஒப்புக் கொண்டால் அவனுக்கு ஒரு கிராமத்தை விட்டுக் கொடுப்பதாய்ப் பறையறைவித்தார். கள்வன் நாயக்கர் முன்வந்து உண்மையைக் கூறி ஒப்புக்கொள்ள, மன்னர் முன்னர்ப் பறையறைவித்தவாறே ஒரு கிராமத்தை அவனுக்கு விட்டுக் கொடுத்தாராம். இப்போதும் அரண்மனையைப் பார்க்கச் செல்வோருக்கு அங்குள்ள வழிகாட்டி ஓர் அறையின் மேல் தளத்தில் காணப்படும் அகன்ற

துவாரத்தைக் காட்டி, "இதுதான் திருமலை நாயக்கர் மஹால் அறையில் ஒரு கள்வன் புகுந்து திருடிய வழி" என்று கூறுவதுண்டு. இக்கதை உண்மையாகவும் இருக்கலாம்.

தமுக்கம்:

இந்த மஹால் அல்லாமல் திருமலை நாயக்கர் மதுரை நகருக்கு வெளியில் ஒரு சிறிய கட்டடமும் கட்டினர். அக்கட்டடம் இப்பொழுது வையை ஆற்றுக்கு வடகரையில் இருக்கிறது. இப்பொழுது அது காந்தி பொருட் காட்சிச்சாலை (Gandhi Museum) ஆக மாற்றி அமைக்கப் பட்டிருக்கிறது. தமுக்கம் என்னும் தெலுங்குச் சொல்லுக்குக் கோடைக்கால விடுதி என்பது பொருள். யானை, புலி, கரடி முதலிய விலங்குகளையும் மற்போர் வீரர்களையும் பொருதவிட்டு, அக் காட்சிகளைக் காணவே இது கட்டப்பட்டதாம். இதனை மங்கம்மாள் கட்டியதாகவும் கூறுவர்.

பொதுநலப் பணிகள்:

திருமலை மன்னர் கோயிலைச் செப்பனிடுவதிலும், அரிய பெரிய கட்டடங்களைக் கட்டுவதிலும், தெப்பக் குளம் அமைப்பதிலும் கவனம் செலுத்தியதோடு மட்டும் நிற்கவில்லை; மற்றும் பொதுநலத்துக்குரிய சாலைகள் அமைப்பதிலும், சத்திரங்கள் கட்டுவதிலும் அவர் நாட்டம் செலுத்தினர். அவர் ஊட்டாத்தூர் முதல் கன்னியாகுமரி வரையில் சாலை அமைக்கச் செய்து இடையிடையே பிரயாணிகள் தங்குவதற்குச் சத்திரங்களும் கட்டி வைத்தார்; சத்திரங்கள் கட்டி வைத்ததன்றிச் சில சத்திரங்களில் அன்னதானம் செய்யுமாறும் ஏற்பாடு செய்தார். சிறிது காலத்துக்கு முன்பு வரையில் மதுரைக் கோயில் திருமலை நாயக்கர் கட்டளையிலிருந்து திருப்

பாலைச் சத்திரம் நடந்து வந்ததாம். அன்றியும், மதுரையிலேயே சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்கும் இடையில் சித்திரை வீதியிலிருந்த ஒரு கட்டடத்தில் அன்னதானம் நடந்ததாக மதுரைத் திருப்பணி மாலைச் செய்யுள் குறிப்பிடுகிறது. அச்செய்யுள் வருமாறு:

“முனைவேல் விழிஅங் கயற்பண்ணி சந்நிதி
 முன்மடத்துள்
அனைவோர்க்கும் அன்னமும் தோழியம் மாடன்
 அறைக்கும்அனு
தினம்மே தினியில் நடக்கும் படிக்(கு) ஈந்(து)
 இசையுங் கொண்டான்
புனவேலி தந்தனன் கச்சித் திருமலை
 பூபதியே.” —83

நாயக்கர் கண்மாய்களைப் (ஏரிகளை) பாசிக் குத்தகைக்கு (மீன் குத்தகைக்கு) விட்டு, அப்பணத்தால் வேறு பல கண்மாய்களை வெட்டுவித்தார் என்பது ஏசு கழகத் தொண்டர் கடிதம் ஒன்றால் புலனாகிறது.

கலையார்வமே காரணம்:

திருமலை நாயக்கருக்கு நில வரியிலிருந்தும் முத்துக் குளிப்பதிலிருந்தும் பிற வழிகளிலிருந்தும் ஆண்டுதோறும் ஒரு கோடி இருபது லட்சம் ரூபாய் வருவாய் வந்திருக்கும் என்று நெல்சன் துரை கணக்கிட்டுள்ளார். ஆனால் சத்தியநாத ஐயரவர்கள் ஏறக்குறைய 91 லட்ச ரூபாய்தான் நாயக்கருக்கு ஆண்டு வருவாயாக இருக்கக் கூடும் என்று கருதுகிறார்கள். அவ்வருவாயிலிருந்து அவர் போர்களுக்குப் பெரும்பொருள் செலவு செய்ய

வேண்டியவராயிருந்தார். அப்படியிருந்தும், இவ்வரிய பெரிய கலைக் கட்டடங்களை எப்படிக் கட்டினர் என்பதை நினைக்கும்போது, நாம் வியப்படையாமல் இருக்க முடியாது. ஆழ்ந்த இறைப்பற்றும் நிறைந்த கலைப்பற்றும் இவ்வரிய கட்டடங்களைக் கட்டியதற்கும் தெப்பக் குளம் வெட்டியதற்கும் காரணமாக இருக்க வேண்டும் என்று கருதலாம். புது மண்டபத்தையும் இராய கோபுரத்தையும் மஹாலையும் தெப்பக்குளத்தையும் போய்க் காணும்போதெல்லாம் இவை 'செய்வித்த புண்ணியம் சதகோடி புண்ணியம் திருமலை மகீபனுக்கே' என்று திருமலை நாயக்கரைப் போற்றுமல் இருக்க முடியாது.

13. அன்ருட வாழ்க்கையும் இறுதிக்கால முடிவு பற்றிய ஆராய்ச்சியும்

முன்னுரை:

திருமலை நாயக்கர் அடிநாளில் சிற்றரசர் போல இருந்து மூன்றும் ஸ்ரீரங்கன் வீழ்ச்சிக்குப் பின் முழுவுரிமை மன்னராகி விட்டார். இவருக்கு 200 மனைவிமார்கள் இருந்தார்கள். இருவரே 'பட்ட மகிஷிகள்.' இவ்வுண்மையைத் திருமலை நாயக்கர் உருவச் சிலை, இரு மனைவிமார்களோடு இருப்பது கொண்டு கண்டு கொள்ளலாம்.

பெண்கள் பலரை மணந்து கொள்வது, ஆசியா கண்டத்திலேயே தொன்று தொட்டு வருவது. தமிழகத்திலும் இத்தீய வழக்கம் சங்க காலம் முதல் அண்மைக் காலம் வரையில் இருந்து வந்தது. சங்க காலத்தில் இவ் விதிக்கு விலக்காக ஒருவர் இருவரைக் காண்கிருேம். நூற்றுக் கணக்கான மனைவியரை மணந்து கொள்வது இந்நாட்டு இந்து மன்னர்களிடமும் முஸ்லீம் வேந்தர்களிடமும் இருந்து வந்த வழக்கமாகும். இத் தீய மண முறையே, இந்தியாவில் இந்து மன்னர்கள் ஆட்சியையும் முஸ்லீம் அரசர்கள் ஆட்சியையும் நிலைகுலைத்து, அரசுரிமைப் போர்களையும் உள் நாட்டுக் கலகங்களையும் உண்டுபண்ணி, அவ்வாட்சிகளை அடிக்கடி வீழ்ச்சியுறச் செய்தது; அரசர்களின் ஆட்சிக் காலத்தையும் சுருக்கியது.

இருநூறு மனைவிமார்களைத் திருமலை மன்னர் மணந்திருந்தாலும், 75 வயது வரையில் வாழ்ந்தது வியக்கத்

தக்கது; அரசுரிமைப் போராட்டத்திற்கு வழியில்லாமல் இருந்ததும் பாராட்டுக்குரியதே.

அன்றாட வாழ்க்கை:

நாயக்கர் அன்றாட வாழ்க்கை இப்படியிருந்திருக்கக் கூடும் என்று திருமலை நாயக்கர் சரித்திரம் எழுதிய மு. கோவிந்தசாமி ஐயவரர்கள் கற்பனை செய்திருக்கிறார்கள். கற்பனையும் வரலாற்றுக்கு வேண்டுவதே. ஆனால், அக் கற்பனை பொருத்தமாகவும் படிப்பவர்களுக்குச் சுவையுடையதாகவும் இருக்க வேண்டும். வரலாற்றுக்கு நடுவு நிலைமையோடு உண்மை காண்பதுதான் உயிர்; இன்றியமையாதது. உண்மைக்கு மாறுபடக் கூறுவது ஒரு நாட்டு வரலாற்றிற்குச் செய்யும் பெருந்தீமையாகும். ஐயரவர்கள், "திருமலை நாயக்கருடைய வாழ்நாளைப் பற்றிய வரலாறுகளைக் குறித்து நாம் நன்கு தெரியக் கூடியதற்கு வேண்டிய ஆதாரங்கள் நமக்கு இல்லை. ஆனாலும், இப்படித்தான் அவர் தம் வாழ்நாளைப் போக்கியிருப்பார் என்று ஒருவாறு ஊகிக்கலாம்," என்று உண்மையைக்கூறி நாயக்கரது அன்றாட வாழ்வை நன்றாகப் புனைந்துள்ளார்.

காலையில்:

திருமலை நாயக்கர் விடியற்காலையில் பள்ளிவிட்டெழுந்திருக்கும் நல்ல பழக்கமுள்ளவர். பெருத்த வயிறும் பருத்த உடலும் இருந்த போதிலும், அவர் சோம்பலின்றிச் சுருசுருப்பாகவே இருந்து வந்தார்; வைகறை யாமத்தில் படுக்கை விட்டெழுந்து வேறு முக்கியமான அலுவல் ஒன்றுமில்லையாயின், தாம் புதிதாகத் தொடங்கிய கட்டட வேலையைக் கண்காணிக்கச் செல்வதுண்டு. சில சமயம் அவர் வையை ஆற்றைக் கடந்து

தமுக்கம் சென்று புலியை எருமைக் கடாவுடன் பொருத விட்டும், மற்போர் வீரர்களை ஒருவரோடு ஒருவர் போர் செய்யச் செய்தும் வேடிக்கை பார்ப்பார்; சில சமயங் களில் ஊருக்கு வெளியிலே குதிரை ஏறிச் சென்று, சிறுத்தைப் புலியை உலாவித்திரியும் மானின்மீது பாயவிட்டு வேடிக்கை காண்பார்.

நண்பகலில்:

வெயிலேறவும் அவர் அரண்மனைக்கு வந்து நீராடி விட்டு வழிபாட்டை முடித்து உணவு கொள்ளச் செல்வார்; பின்னர்ச் சிறிது நேரம் ஓய்வெடுப்பார்.

மாலையில்:

மாலைப் பொழுதில் அவர் இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியிலேறிக்கொண்டு காற்று வாங்கச் செல்வார். ஒரு நாள் அவ்வாறு அவர் வண்டியில் சென்ற போது கோயில் பட்டர் வீட்டு ஐந்து வயது சிறுவன் அவ்வண்டியில் அகப்பட்டுக் கொள்ளும் நிலையில் இருந் தான். நாயக்கர் சிறுவனைக் கண்டு வண்டியை நிறுத்தச் செய்து, கிழிறங்கி, "ஏலனிவாரு" என்று சொல்லி, அச் சிறுவனைத் தம் வண்டியில் ஏற்றி அழைத்துக்கொண்டு போய் அச்சிறுவனுடைய தந்தையை வரவழைத்துப் பையனை ஒப்படைத்தார்; அச்சிறுவன்மேல் அருளுள்ளங் கொண்டு பட்டன் புத்தூர் என்ற கிராமத்தை விட்டுக் கொடுத்தார். பெற்றோர் அன்று முதல் அப்பையனுக்குத் திருமலை ராஜேந்திரப்பட்டர் என்று பெயர் வழங்க லாயினர். அப்பரம்பரையினர் அக்கிராமத்தை அனுப வித்துக்கொண்டு வருவதாய் மு. கோவிந்தசாமி ஐயரவர் கள் 1922-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆராய்ச்சி செய்தல்:

வெளியிற்போய் வந்ததும் தமக்கு விருப்பமிருந்தால் அவர் பண்டிதர்களை உடன் வைத்துக்கொண்டு தம்முன் கொண்டுவரப்பட்ட வழக்குகளை வாயாற்கேட்டுத் தெளிந்து முடிவு செய்வார். அவர், நன்ருய்க் கற்ற பார்ப்பனர்களை உடன் வைத்துக்கொண்டு வாதம் செய்யச் செய்தும், சாஸ்திரத் தொடர்பான சொற் போர் நடத்தப் பண்ணியும் கேட்டு மகிழ்வதும் உண்டு. இவ்வாறு பெருமன்னர் அக்பரும் செய்ததாய்ப் பினியன் என்ற அறிஞர் எழுதிய அக்பர் வரலாற்றில் காண் கிரேம். நொபிலி சாமியார் எழுதிய கடிதத்தில், "அவர் (திருமலை நாயக்கர்) என்னைத் தமிழிலும் தெலுங்கிலும் வடமொழியிலும் பேசச்சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார்," என்று குறிப்பிட்டிருக்கிருர். சதுரங்கம் ஆடுவோர், அபிநயம் செய்வோர், நடிப்போர், ஜாலவித்தை செய் வோர், பம்பாட்டிகள், மற்போர் வீரர்கள் இவர்கள் கூப்பிடும்போது உடனே வருவதற்கு அரண்மனைப் பக்கத்தில் இருக்குமாறு அவர் இடம் கொடுத்து வைத் திருந்து, அவர்களுள் விரும்பியவர்களை அவ்வப்போது வரவழைத்து வித்தைகளைச் செய்யச் சொல்லி அந்தப்புர மாதர்களுடன் இருந்து கண்டு களிப்பார்.

விளக்கு வைத்ததும்:

மாலையில் விளக்கு வைத்ததும் நாயக்கர் கொலு மண்டபத்திற்குள் வருவார். வந்தவுடன் தீப்பந்த வணக்கம் நடைபெறும்; அஃதாவது, வேலையாள்களுள் சிலர் தீப்பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு வந்து மன்னரை வணங்குவர். சிலர் கையில் தீப்பந்தங்களை வைத்துக்கொண்டு பல விளையாட்டுகளைச் செய்வர். என்றைக்குத் தீப்பந்த வணக்கம் இல்லையோ,

அன்றைக்கு அரசர் ஊரில் இல்லையென்றோ உடல்நல மின்றியுள்ளார் என்றோ மக்கள் தெரிந்து கொள்வார் கள். தீப்பந்த வணக்கம் முடிந்ததும், மன்னர் அரசியல் செய்திகளைக் குறித்தும், ஊர் நடப்பைப் பற்றியும், வேறு செய்ய வேண்டுவன குறித்தும் அமைச்சர்களுடனிருந்து ஆராய்வார்.

நள்ளிரவில்:

முடிவாக, நாயக்கர் நள்ளிரவில் கோயிலுக்குப் போய் அர்த்த சாம தரிசனங் கண்டு, அரண்மனைக்கு வந்து, உணவருந்தித் துயில் கொள்வார்.

பண்டைத் தமிழ் மன்னர் வேலை முறை:

இறையனார் அகப்பொருளின் 40-ஆம் நூற்பாவிற் குரிய உரையில் பிற்கால நக்கீரர், "தலைமகனால் தலை நின்று ஒழுகப்படுவன தருமம், அருத்தம், காமம் என மூன்று; அம்மூன்றினையும் ஒரு பகலை மூன்று கூறிட்டு முதற்கண் பத்து நாழிகையும் அறத்தொடு படச் செல்லும், இடையன பத்து நாழிகையும் அருத்தத் தோடு படச் செல்லும்; கடையன பத்து நாழிகையும் காமத்தொடு படச் செல்லும். ஆதலான், தலைமகன் முதற்கண் பத்து நாழிகை தருமத்தோடு படுவான்; தலைமகளும் வேண்டவே தானும் வேண்டிப் போந்து அத்தாணி புகுந்து அறம் கேட்பதும் அறத்தொடு படச் சொல்வதும் செய்யும்; நாழிகை அளந்துகொண்டு இடையன பத்து நாழிகையும் இறையும் முறையும் கேட்டு அருத்தத்தினோடு பட்டனவே செய்து வாழ் வானும்; அவ்வருத்தத்து நீக்கத்துக்கடையன பத்து நாழிகையில் தலைமகளுழைப்போதரும்," எனறு கூறுவ தால், பண்டைக்காலத் தமிழ்நாட்டு மன்னர்கள் ஒரு

முறையை வகுத்து அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என அறியலாகும். அதுபோலவே திருமலை மன்னரும் அன்றாட வாழ்வை முறை வகுத்து நடத்தி யிருக்க வேண்டும் என்பதில் ஐயப்பட வேண்டுவதில்லை யன்றோ? (2½ நாழிகை-1 மணி நேரம்)

எழுபத்தைந்து வயது:

இரு மைசூர்ப் போர்கள், திருதாங்கூர்மீது போர், சேதுபதியுடன் போர், விஜயநகரப் பேரரசுடன் போர் ஆகிய ஐந்து போர்களால் கவலை மிக்கவராய் இருந்தும், 200 மனைவிமார்களுக்குக் கணவராய் இருந்தும், விடியற் காலையில் எழுந்திருக்கும் பழக்கத்தாலும், பல கட்டடங் களில் கருத்தைச் செலுத்திச் சுருசுருப்பாய் இருந்த தாலும், கடவுள் பக்தியோடு வாழ்க்கை நடத்தியதாலும் 75 ஆண்டுகள் திருமலை மன்னர் நிலவுலகில் நலமுற வாழ்ந்தார் எனலாம்.

திருமலையின் சாவு குறித்த கதைகள்:

முடி சார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்ப லாவது இயற்கையன்றோ? திருமலை மன்னர் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா? திருமலை மன்னர் இரண் டாவது மைசூர்ப்போர் முடிவடைந்த போதுதான் மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்தார்; இயற்கைச் சாவையே அடைந்தார். அவரது சாவைக் குறித்து மூன்று வகையான கட்டுக்கதைகள் வழங்கி வருகின்றன.

பட்டர் மனைவியுடன் திருமலை நாயக்கர் தொடர்பு கொண்டிருந்தார் என்றும், ஒரு நாள் அவளிடம் போய்த் திரும்பி வந்தபோது வழியிலிருந்த கிணற்றில் தெரியாது விழுந்துவிட்டதால் இறந்துபட்டார் என்றும் கூறுவது ஒரு கதை. இருநூறு மனைவிமார்களையுடையவர்,

பட்டர் மனைவியோடு தொடர்பு கொள்ள வேண்டுமா? அதுவும் 75-ஆம் வயதில் அப்படி இருக்க இயலுமா? விரும்பினால் பட்டர் மனைவியை அரண்மனைக்கு வரவழைக்க இயலாதா? குறும்புக்காரர் யாரோ இப்படிக் கட்டிய பொய்க்கதை இது. ஒழுக்கத்தைத் தமது இராமகாதையில் மிக மிக வற்புறுத்தும் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரைக் குறித்தும் ஒழுக்கக் கேடான கதையை ஒழுக்கக் கேடுள்ளவர்கள் கட்டி விட்டார்கள். அது போலவே இதுவும் ஒன்று.

மற்றொரு கதை, பட்டர் வகையினர் கோயிலின் நில அறையில் புதையல் இருப்பதாக அழைத்துச் சென்று, வெளியே வாராதவாறு பெருங்கல்லை முகப்பில் மூடிவிட்டு வந்து, 'மீனாட்சியம்மன் பொற்பாத கமலங் களில் திருமலை மன்னர் ஒன்றுபட்டுவிட்டார்,' எனக் கூறி விட்டனர் என்பது. பேரரசரை, உலகம் அறிந்த ஒரு மன்னரை, இப்படிப் பட்டர் வகையினர் எளிதாகக் கொன்றுவிட இயலுமா? திருமலை மன்னரின் மனைவி மக்கள், உறவினர் எல்லாரும் அப்பட்டர் வகையினரை வாளா விட்டிருக்கக் கூடுமோ? இச்செய்தி நாடு முழுதும் பரவியிராதா? பொது மக்களே அத்தகைய நிகழ்ச்சி நடந்திருந்தால் பட்டர்களைக் கொன்று குவித்திருப்பார் களே! ஆதலால், இதுவும் நம்ப முடியாத கட்டுக்கதையே.

இன்னொன்று, திருமலை மன்னர் கிறிஸ்தவராய் மாறி விட்டதால் பட்டர்களது சூழ்ச்சிக்குப் பலியானார் என்பது. பல அறங்களையும் திருப்பணிகளையும் செய்து வந்த நாயக்கர் பிற்காலத்தில் போர்களால் ஏற்பட்ட பெருஞ் செலவால் அவற்றைச் செய்யாது போகப் பட்டர் வகையினர், 'மன்னர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிவிட்டதால் அவர் செய்துவந்த அறங்களும் கட்டளைகளும் இனிச் செய்யாது தடைபடலாம்,' என்று

கருதிச் சூழ்ச்சி செய்து அவரைக் கொன்று விட்டனர் என்பது. இதுவும் தவறனதே. திருமலைச் சவுரி என்று நாயக்கருக்குப் பெயருண்டு. சவுரி என்னும் பெயரைக் கிறிஸ்தவப் பெயர் என்று பலர் கருதி விட்டனர். சவுரி என்பது வைணவப் பெயர். சவுரிராசப் பெருமாள் என்று திருமாலுக்கும் பெயர் வழங்கக் காணலாம். சவுரி என்பதைக் கிறிஸ்தவப் பெயராகக் கருதிய கிறிஸ்தவ அன்பர் ஒருவர் 'மன்னர் இரத்த சாட்சியானுர்,' என்று கூறுவதற்குக் கட்டிவிட்ட கதை இது.

திருமலை இயற்கையாகவே இறந்தார்:

கதை கட்டினவர்கள் அத்தனை பேர்களும் பட்டர் வகையினரையே மையமாகக்கொண்டு கட்டிவிட்டார்கள். உண்மையில் திருமலை நாயக்கர் இயற்கையான சாவினுல் முதிர்ந்த வயதில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. திருமலை மன்னர் திடீரென்று இறந்துவிடவில்லை; நீண்ட காலமாக, இரண்டு மூன்று ஆண்டுகளாக, நோய்வாய்ப் பட்டிருந்தே இறந்தார். பாயும் படுக்கையுமாய் இருந்த போது மைசூர் மன்னர் தம் வீரர்களை மதுரை நகர்மீது படையெடுக்குமாறு அனுப்பியதை அறிந்த திருமலை நாயக்கர், தம் தம்பியாராகிய குமாரமுத்து நாயக்கரை அழைத்து, "நான் நோயால் வருந்துகிறேன் என்பதை மைசூரார் தெரிந்து நம் நாட்டின்மீது படையெடுத்து வந்து சில பகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர். ஆகையால், நீ உடனே வீரர்களைத் திரட்டிக் கொண்டுபோய் அவர்களைத் துரத்தியடித்து, அவர்களது சீமையையும் பிடித்து வரவும்," என்று வேண்டிக்கொண்டதாக மெக்கன்சி கையெழுத்துச் சுவடி குறிப்பிடுகிறது. மற்றும் ஏசு கழகச்

சமயத் தொண்டர் புரோயன்ஸி சாமியார் திரிசிரபுரத்திலிருந்து 1659-ஆம் ஆண்டில் கோசாரின் நிக்கல் சாமியாருக்கு எழுதிய கடிதத்தில், "திருமலே நாயக்கர் இவ்வெற்றிச் செய்தியைக் (இரண்டாம் மைசூர்ப் போரின் வெற்றியை) கேட்டு மகிழ்ச்சியடையக்கொடுத்து வைக்கவில்லே. மண்ணுலகில் செய்த விவரங்களைக் கூறுமாறு கடவுள் அவரை விண்ணுலகிற்கு அழைத்து விட்டார். முப்பதாண்டு அரசாட்சி புரிந்து, எழுபத்தைந் தாவது வயதில் இறந்தார். அவருடைய உயர்ந்த குணங்கள் மறக்கத்தக்கன அல்ல. ஆனால், இறுதிக் காலத்தில் அவர் செய்த சிற்சில தவறுகள், அவர் முன் அடைந்த புகழைச் சிறிது மறைத்துவிட்டன. அவர் மிகவும் வனப்பும் வியப்பும் வாய்ந்த கட்டடங்களைக் கட்டினார். பேர் பெற்ற மதுரைக் கோயிலும், இன்னும் பல பொதுக் கட்டடங் களும், தீப்ஸ் (Thebes) நாட்டிலுள்ள உயர்ந்த கட்டடங் களைப்போலக் கனமானதும் மிகப் பெரியதுமான அரண்மனையும் அவரால் கட்டப்பட்டன. ஆனாலும், அவர் கிறிஸ்தவ சமயத்தை விரும்பி அதன்மேல் பற்றுக் காட்டி வந்தார். எனினும், அவர் அச்சமயத்தைத் தழுவத் துணிந்தாரில்லே; ஏனெனில், இந்நாட்டார் வழக்கப்படி அவரை ஆட்டி வைத்துக்கொண்டிருந்த அவருடைய இருநூறு மனைவிமார்களுமே அவர் கிறிஸ்தவராவதற்குப் பெருந்தடையாய் இருந்து வந்தார்கள்," என்று எழுதியுள்ளார்.

திருமலே மன்னரே தம் தம்பியாரிடம் தாம் நோய் வாய்ப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டதாக மெக்கன்சி கையெழுத்துச் சுவடி கூறுவதிலிருந்தும், புரோயன்ஸி சாமியார் எழுதிய கடிதத்திலிருந்தும் திருமலே மன்னர் இயற்கையாகவே பிணியினாலும், வயது முதிர்ச்சியாலும்

இறந்தார் என்பதை நன்கறியலாம். இவ்விரண்டு சான்றுகளைவிட வேறென்ன வேண்டும்?

எப்படி இக்கதைகள் எழுந்தன?

உண்மை இப்படியிருக்கப் பின் எப்படி இக்கதைகள் எழுந்தன? பெண் உடை அணிந்த கொலைஞன் ஒருவன் அரண்மனையில் மூன்று நாள்கள் ஒளிந்திருந்து மன்னரைக் கொல்ல முயன்றான். நாயக்கர் நல்ல காலமாகக் கொல்லப்படாமல் தப்பினார். ஒரு முறை நாயக்கருக்குத் தலையில் பெரும்பிளவை வந்தது. அதிலிருந்தும் அவர் பிழைத்தார். ஆதலால், தவறான இக்கதைகள் உலவத் தொடங்கிவிட்டன.

முடிவு:

கி. பி. 1584 க்குச் சரியான பார்த்திப ஆண்டு, தைத் திங்கள், பூச நல்லோரையில், வடுகரான விஜய நகர நாயக்கர் பரம்பரையில், முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு இரண்டாம் புதல்வராய்ப் பிறந்து, ஓரளவு கல்வி கேள்விகளில் சிறந்து, தம் தமையனாராகிய முதலாம் முத்துவீரப்ப நாயக்கருக்குப் பின், தமது 39-ஆம் வயதில், கி. பி. 1623-ல் அரியணை ஏறித் திருப் பரங்குன்றத்து முருகன்திருக்கோயில், வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருவரங்கம் பெரிய கோயில், கள்ளழகர் கோயில் ஆகிய இவற்றில் திருப்பணிகள் செய்து, மதுரைக் கோயிலில் சில இடங்களைப் புதுப்பித்த தோடு அதில் பல சீர்திருத்தங்களை உண்டாக்கிப் பல திருவிழாக்களை நடத்துமாறு கட்டளைகளை ஏற்படுத்தி மதுரையைத் தலைநகராக்கியதால் புது மண்டபம், கோடை விடுதி (தமுக்கம்), மஹால், தெப்பக்குளம் இவை

அமைத்து, ஐந்து போர்களிலும் வெற்றிபெற்று விளங்குமாறு நின்று, 26 ஆண்டுகள் மதுரைப் பெருநாட்டை ஆட்சி புரிந்த பெருமை மிக்க நாயக்கர், முழுவுரிமை பெற முயன்று வெற்றி கண்ட வீரர், தமக்குப் பின் வருவோரை உரிமை வேந்தர்களாய் ஆளுமாறு செய்த திருமலை மன்னர், அந்தோ! தமது 75-ஆம் வயதில் கி. பி. 1659 பிப்பிரவரிக்குச் சரியான விளம்பி ஆண்டு மாசித் திங்கள் 5-ஆம் நாள் இறவாப் புகழை நிறுவி மண்ணுலக வாழ்வைவிட்டு மறைந்தார். அவரது பூதவுடல் அழிந்தது; ஆனால், அவரது புகழுடல் அழியவில்லை; என்றும் அழியாது, அழியாது!

14. நாயக்கரும் ஐரோப்பியரும்

முன்னுரை:

இது வரைக்கும் மதுரை நாட்டை ஆட்சி புரிந்த திருமலை நாயக்கர் நடத்திய போர்கள், ஆற்றிய கோயில் திருப்பணிகள், செய்த திருக்கோயிற் சீர்திருத்தங்கள், கட்டிய கலைக்கட்டடங்கள், வெட்டிய தெப்பக்குளம், வாழ்வின் முடிவாராய்ச்சி ஆகிய இவையனைத்தும் கண்டோம். இனி மதுரை நாட்டில் வந்து வாணிகமும் கிறிஸ்தவசமயத் தொண்டும் நிகழ்த்திய ஐரோப்பியர்களிடத்தில் அவர் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதைக் காணலாம்.

டச்சு வாணிகர் அட்டூழியம்:

மதுரை நாட்டில் வாணிகம் நடத்தி வந்த ஐரோப்பியர்கள் போர்ச்சுகீசியரும் டச்சுக்காரர்களும் ஆவார்கள். அவர்கள் மதுரை நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் தங்கள் வாணிகத்தை நடத்தி வந்தார்கள். இவ்வாறு வாணிகம் நடத்தி வந்த ஐரோப்பிய நாட்டினருக்குள் வாணிகப் போட்டியால் பொறாமையும் பகைமையும் இருந்து வந்தன. திருமலை நாயக்கர் தம் நாட்டில் அவர்கள் நிகழ்த்திய எச் செயல்களிலும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை; அவர்களிடமிருந்து பெற்ற வருவாயோடு உள நிறைவு கொண்டாரே யன்றி, அவர்கள் நடத்திய பகைமைப் போராட்டங்களில் முடிவான செயலாற்றும் திறனின்றி நடுவுநிலை வகித்து விட்டார். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தளவாய்ச்-

சேதுபதி என்னும் இரண்டாம் சடையத் தேவரோடு நடத்திய கடும்போரில் முன்னவர் இராமேஸ்வரத் தீவில் புகுந்து போரிடலானுர் என்றும், அப்பொழுது நாயக்கர் பறங்கியரான போர்ச்சுகீசியருடைய கப்பற்படை உதவி கொண்டு போர் புரியச்செய்து வாகை சூடினுர் என்றும் முன்னர்க் கண்டோமன்ரூே? அவ்வுதவி பெறுவதற்காக நாயக்கர் போர்ச்சுகீசியருக்குப் பல சலுகைகள் கொடுப்பதாய் வாக்குறுதியளித்திருந்தார்; டச்சுக்காரர் களைப் பகைவராய்க் கருதுவதாய் ஒப்புக்கொண்டார். தமது நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் அவர்கள் விரும்பும் இடத்தில் அரண் எழுப்பி அதில் ஒரு போர்ச்சு கீசியத் தலைவனேடு 50 போர்ச்சுகீசிய வீரர்களும் 100 ஊழியர்களும் 3000 பரதவர்களும் பாதுகாப்புக்காகத் தங்கியிருக்க உடன்பட்டிருந்தார்; இராமேஸ்வரத்தில் ஒரு கிறிஸ்தவக் கோயிலையும், பாம்பனுக்கும் பாண்டி நாட்டுத் தொண்டிக்கும் இடையில் ஏழு மாதா கோயில்களையும் தம் செலவில் கட்டிக் கொடுக்கவும் ஏற்றுக் கொண்டிருந்தார்; தம் நாட்டுக் குடிமக்களுக்குள் விரும்பியவர்களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றுதல் செய்து கொள்ளவும் அனுமதி கொடுத்திருந்தார்; அப் போர்ச்சுகீசியர் இலங்கை மீது படையெடுத்தால், அவர் களுக்குப் படையுதவியும் பிறவுதவியும் செய்ய உறுதி யளித்திருந்தார். அந்த நேரத்தில் தளவாய்ச் சேதுபதியை வெல்வதற்காக நாயக்கர் கவலையின்றி இந்தச் சலுகைகள் எல்லாம் கொடுத்திருக்க, அவர்கள் எப்படி வாளாவிருக்க முடியும்? சமயம் நேரும்பொழுது அவர்கள் அச்சலுகைகள் எல்லாவற்றையும் பயன்படுத் தாதிருக்கக் கூடுமோ? கி. பி. 1646-ல் போர்ச்சுகல் மன்னன் இந்தியாவில் இருந்த தன் அரசப்பிரதிநிதிக்கு ஆங்காங்குள்ள இந்திய அரசர்களை டச்சுக்காரர்களுக்கு

எதிராகப் போர் நடவடிக்கைகளை எடுக்குமாறு தூண்டும் படி கட்டளையிட்டான். உடனே அவ்வரசப் பிரதிநிதி, வேண்டியதை வேண்டியாங்கு வேண்டும் பொழுது யாண்டும் செய்வதாகத் தங்களுக்கு வாக்களித்திருந்த, திருமலை நாயக்கருக்கு டச்சுக்காரர்களைக் கடற்கரைப் பட்டினங்களிலிருந்து வெளியேற்றுமாறு கூறினான். கி. பி. 1648-ல் நாயக்கர் டச்சுக்காரர்களைக் காயல் பட்டினத்திலிருந்து துரத்திவிட்டார். இப்படி டச்சுக் காரர்களைத் துரத்தியடித்தவர், கடற்கரைப்பட்டினங் களில் படைகளை நிறுத்தி மக்களுக்குப் பாதுகாப்பளித் திருக்க வேண்டும். நாயக்கர் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை.

போர்ச்சுகல் நாட்டின் சார்பில் நின்று திருமலை நாயக்கர் தங்களைக் காயல் பட்டினத்திலிருந்து வெளியேற்றி அவமதித்ததற்காக டச்சுக்காரர்கள், சினங் கொண்டு அவர்மீது பழி வாங்க முடிவு செய்து, 1649, பிப்பிரவரித் திங்கள், 10-ஆம் நாள் 10 கப்பல்களோடு திருச்செந்தூரில் இறங்கிப் பெரும்பெயர் முருகன் திருக்கோயிலைக் கைப்பற்றி, அதனைப் பாதுகாவலளிக்கும் அரணாக வேண்டுவன செய்து அமைத்துக்கொண்டு, அங்கிருந்த படைவீரர்களோடு தூத்துக்குடிக்குச் சென்று அப்பட்டினத்தில் இருந்த பரதவர்கள் நாயக்கரோடு சேர்ந்து சூழ்ச்சி செய்து அங்கிருந்த டச்சுச் சார்பாளனைத் (Agent) துரத்தியதற்குத் தண்டத் தொகை (Penalty) கொடுக்குமாறு வற்புறுத்தினார்கள். அப்பரதவர்கள், 'தண்டத் தொகை கொடுக்கக் கையில் பணம் ஒன்றும் இல்லை,' என்றார்கள். டச்சுக்காரர்களோ அவர்களை வாளா விடவில்லை; தூத்துக்குடியில் பாதி நகரத்தையே தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். டச்சுக் காரர்களுக்கு இருந்த துணிவுதான் என்னே! பரதவர்கள்

கையில் பணம் இல்லை என்று கூறியும், டச்சுக்காரர்கள் விடாமல் அவர்களைக் குறிப்பிட்ட தொகைக்கு முறிச்சீட்டு எழுதித் தருமாறு வற்புறுத்தி, அதை வாங்கிக்கொண்டு, மூன்று நாள்களுக்குப் பின்பு பிப்பிரவரித் திங்கள், 13-ஆம் நாள் அப்பட்டினத்தை விட்டுச் சென்றார்கள்; சென்றபோது கடற்கரையிலிருந்த மீன் பிடிக்கும் படகுகளையும் இழுத்துக்கொண்டு போய் விட்டார்கள். வாணிகம் செய்ய வந்த ஐரோப்பியர்கள் இந்த நாட்டில் செய்த அட்டூழியங்கள் இத்தகையன எத்தனையோ உண்டு. அரசர்களின் கவலையீனத்தால் நம் மக்கள் ஐரோப்பியர்கள் செய்த எல்லையற்ற தொல்லைகள் எல்லா வற்றையும் அக்காலத்தில் அனுபவித்து வந்தார்கள். 1658-ல் இந்த டச்சுக்காரர்கள் தூத்துக்குடியைப் போர்ச்சுகீசியரிடமிருந்தே கைப்பற்றி விட்டார்கள். இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் காணும் போது திருமலை நாயக்கர் மதுரை நாட்டுக் கடற்கரைப் பகுதிகளை ஐரோப்பியர்களுக்கு விட்டுக் கொடுத்து, அவர்களிடமிருந்து கப்பம் பெற்றுக் கொண்டு, அவர்கள் அங்கு நடத்திவந்த எந்த நடவடிக்கைகளிலும் சிந்தனை செலுத்தாமலும் அக்கறை காட்டாமலும் குடிமக்களைத் தொல்லைப்படவிட்டுக் கவலையற்றிருந்தார் என்பது நன்கு புலனாகும்.

15. கிறிஸ்தவ சமயப் பணியும் நாயக்கர் மேற்கொண்ட நெறியும்

இராபர்ட்-டி நொபிலி:

வீரப்பநாயக்கர் (1572 - 1595) காலத்தில்தான் மதுரை நாட்டில் கிறிஸ்தவ சமயப் பிரசாரம் முதல் முதல் தமிழ் நாட்டில் தொடங்கியது. 1592-ல் ஏசுகழகத்தின் (Jesuit Society) பாதிரிமார்கள் முதல் முதலாக மதுரைச் சமயப் பணிக்கழகத்தை (Madura Mission) பெர்னண்டஸ் என்ற போர்ச்சுகீசிய பாதிரியார் தலைமையில் ஏற்படுத்தி, நாயக்கரிடம் இசைவு பெற்று, மதுரையில் மாதா கோயில் ஒன்று கட்டிக் குருமார் குழுவை ஏற்படுத்திப் பதினன்கு ஆண்டுகள் சமயப்பிரசாரம் செய்து உயர்குல இந்துக்களைக்கிறிஸ்தவ மதத்தில் சேர்ப்பதற்கு முயற்சி செய்தார்கள். எனினும் உயர்குல இந்துக்கள் எவரும் அம் மதத்தில் சேர வில்லை. பாதிரிமார்களின் முயற்சி பயனற்றுப் போயிற்று. ஆனல், திருமலை நாயக்கர் ஆட்சியில் மதுரைக் கிறிஸ்தவ சமயப் பணிக் கழகம் 1624-ஆம் ஆண்டிலிருந்து புதிய முன்னேற்றப் பாதையில் நடக்கத் தொடங்கியது. இராபர்ட்-டி- நொபிலி பாதிரியார் முயற்சி பயனுறத் தொடங்கியது. அவர் ரோமாபுரியில் செல்வக் குடும்பத் தில் பிறந்து, ஏசு கழகத் தொண்டராகி, இந்தியாவிற்கு 1605-ல் வந்து சேர்ந்து, தொண்டு புரிந்துகொண்டிருந் தார். அக்காலத்தில் லிஸ்பன் நகரத்திலிருந்து இந்திய நாடு வந்து சேரப் பன்னிரண்டு திங்களாகுமாம். அவர் அப்படிப்பட்ட ஓராண்டுக் கப்பல் பயணத் தொல்லைக்கும்

கவலைப்படாமல், சமயப்பணி புரியும் பெரும் பற்ருல் இந்தியாவிற்கு வந்து, ஆங்காங்குத் தொண்டு செய்து, நாளடைவில் மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

இந்திய மனப்பான்மைக்கு ஏற்றுவாறு கிறிஸ்தவ சமயத்தை ஒரு சிறிது மாற்றி,இந்துக்கள் அதனைத் தழுவு மாறு பணி புரிய வேண்டுமென்று பேராவல் கொண்டவர் நொபிலி பாதிரியார். அதனுல், அவர் மற்ற ஏசு கழகத் தொண்டர்களைப் போல அல்லாமல் மொட்டையடித்துக் கொண்டு, காவியுடை அணிந்து, காலில் கட்டை மிதியடி மாட்டிக்கொண்டு, நெற்றியில் சந்தனப்பொட்டு வைத்துக் கொண்டு, தமிழ் நாட்டுத் துறவுக் கோலத் தோடு புலால் உணவை அறவே வெறுத்துத் தள்ளி, மரக்கறி உணவை உண்டு, வாழ்வை நடத்தி வந்தார்; இப்படிச் செய்தது மட்டும் அல்லாமல், மாளிகையில் வசிக்காமல் தாமே அமைத்த ஓலைக்குடிசையில் குடியிருந்து கொண்டு, தொண்டு புரிந்து வந்தார்; தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் செம்மையானதேர்ச்சி பெற்று, அம்மொழிகளில் பேசியும் சொற்போர் புரிந்தும் வந்தார்; தத்துவ போதகர் என்று பெயர் பூண்டு பொதுமக்களிடம் பழகிச் சமயத் தொண் டாற்றினர்.

இத்தகையவர் தமிழர் மனப்பான்மைக்கு ஏற்ற வாறு சில பழக்க வழக்கங்களை ஏற்றுக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பி வந்ததால், மற்ற ஏசு கழகத் தொண்டர்கள் அவர் மீது குற்றம் சாட்டித் தொல்லை கொடுத்தார்கள். நொபிலி பாதிரியார் விடாமல் பத்தாண்டுகள் மேலதிகாரிகளோடு போராடித் தாம் செய்தது தவறு அன்று என்று மெய்ப்பித்து வெற்றி பெற்ருர். இந்து சமயத் துறவி போலக் கோலம் பூண்டு தொண்டு புரிந்து வந்தும், சிவ ராஜதானியாய் விளங்

கும் செந்தமிழ் மதுரை, 'தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்' என்று சைவப் பற்று மிகுந்து வாழும் தமிழ் மக்கள் உள்ள கூடல், சமயப் பற்றுக்குத் தொன்றுதொட்டு உறைவிடமாய் விளங்கி வரும் திருமதுரை, நொபிலியின் சமயத் தொண்டுக்கு இடமளிக்கவில்லை. எதிர்ப்புக் கிளம்பியது. ஆதலால், அவர் புதிய இடத்திற்குச் சென்று மதுரை ஏசு சமயப் பணிக்கழகத் தொண்டை நடத்தத் தொடங்கினர்.

நொபிலி பாதிரியார் மதுரையை விட்டுத் திரிசிர புரத்துக்குப் போயிருக்கலாம். ஆனல், அங்கும் மத மாற்றத்துக்குக் கடுமையான எதிர்ப்புத் தோன்றி விட்டது. எனவே, அவர் திரிசிரபுரத்துக்குப் போகாமல், திருமலை நாயக்கருக்கு அடங்கிய இராமச்சந்திர நாயக்கர் ஆண்டு வந்த சேந்தமங்கலத்திற்கு 1623 ஜூன் திங்களில் போய்ச் சேர்ந்தார். இராமச்சந்திரரோ, நொபிலி பாதிரியாரை அன்போடு வரவேற்றுர். சில காலமான பின்பு பாதிரியார் சேந்தமங்கலத்தை விட்டுச் சேலத்திற்குச் சென்றுர். மதுரை நாயக்கருக்கு அடங்கிய தளபதி நாயக்கர் சேலத்தை ஆண்டுவந்தார், முதலில் சேலம், அடிகளார்க்கு ஏற்ற இடமாக இருக்க வில்லை. ஆனல், தளபதி நாயக்கரின் தம்பியே பாதிரி யாருக்குச் சீடரானதும், நிலைமை மாறிவிட்டது. தளபதி நாயக்கரும் அவரிடம் அன்போடும் பண்போடும் நடந்து வந்தார். அப்படியிருந்தும், சிலர் பாதிரியாரை மதுரை யிலிருந்து துரத்தப்பட்ட பறங்கி என்று இழித்துக் கூறி வந்தனர். என்றுலும், சிற்றரசருடைய அன்பாலும் ஆதரவாலும் நொபிலி பாதிரியாரது சமயப் பணி அங்கு இடையூறின்றி நடைபெற்று வந்தது.

இவ்வாறு செவ்வையாகத் தொண்டு புரிந்து வந்த போது, மதுரையில் இருந்த வைக்கோ பாதிரியார் நோய்

வாய்ப்படவே, மேலதிகாரியின் கட்டளைக்கிணங்கி நொபிலி பாதிரியார் திரும்பவும் மதுரைக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, அவர் சேலத்துப் பணியை மார்ட்டின்ஸ் பாதிரியாரிடம் ஒப்படைத்து விட்டு, 1627-ல் மதுரையைநோக்கிப் புறப்பட்டார். திரிசிர புரத்தை அடைந்ததும் அங்கே அவரிடம் வைக்கோ பாதிரியார் உடல் நலமுற்று வருவது அறிவிக்கப்பட்டது. அதனால், அவர் திரிசிரபுரத்திலே தங்கித் தமது சமயப் பணியை நடத்தலானார். இது வரைக்கும் தமிழகத்தில் வடக்குப் பகுதியில் நொபிலியும், தெற்குப் பகுதியில் வைக்கோவும் செய்து வந்த கிறிஸ்தவ சமயப் பணி எத்தகைய இடையூறும் இன்றி நடைபெற்று வந்தது.

அப்படியே எப்பொழுதும் இருக்க இயலுமா? திரிசிர புரத்தில் எதிர்ப்புப் புயல் வீசத் தொடங்கிவிட்டது. 1627-ல் நொபிலி, சமயப் பணியைத் தொடங்கியதால், திருச்சியை ஆண்டு வந்த நாயக்கர் அவரைச் சிறையில் அடைத்தார். பொதுவாகப் பாதிரிமார்கள் பல ஆண்டு களாய் இன்னல்களுக்கு ஆளானார்கள். சிறப்பாக, 1630-ல் பாதிரிமார்கள் மிகுதியாகத் துன்புறுத்தப் பட்டார்கள். இவ்வாண்டில்தான் திருமலை நாயக்கர் முதல் மைசூர்ப் போரில் ஈடுபட்டிருந்தார். இக்காலத்தில் தான் பாதிரிமார்களுக்கும் இவ்வின்னல்கள் ஏற்பட்டன. 1634—1635-ல் திருவாங்கூர் மீது நடத்திய படையெடுப் பாலும், 1637-ல் தளவாய்ச் சேதுபதியுடன் நிகழ்த்திய போராலும் இந்நிலை நீடித்துக் கொண்டிருந்தது. 1638-ல் நொபிலி, திருச்சியிலிருந்து மதுரைக்குச் சென்றார். வைக்கோ பாதிரியார் இறந்த பின்பு கொச்சிக்குச் சென்று அங்கே சிறிது காலம் சமயத்தொண்டு செய்து விட்டு மதுரைக்குத் திரும்பியதும், நொபிலி பாதிரியார் சிறையில் அடைக்கப்பட்டார். மதுரையில் இருந்த

மற்றப் பாதிரிமார்களும், திருச்சிராப் பள்ளியில் இருந்த பாதிரிமார்களும் சிறை செய்யப்பட்டார்கள். இத் தொல்லை நீடிக்கவில்லை. சேதுபதியுடன் நிகழ்த்திய போரில் போர்ச்சுகீசியருடைய கப்பற்படையுதவியைப் பெறும்பொருட்டுத் திருமலை நாயக்கர், அவர்களுக்குச் சில சலுகைகள் அளிப்பதாய் ஒப்புக் கொண்டிருந்தார். அவற்றுள் மதமாற்றத்துக்கு ஒப்புக் கொண்டதும் ஒன்று என்பதைக் கண்டோம். அம்மத மாற்ற உரிமைச் சலுகையால், சேதுபதி போருக்குப்பின் பாதிரிமார் களைத் துன்புறுத்தி வந்தது கைவிடப்பட்டது. இப்படிச் சிறிது காலம் இருந்தது.

1640-ல் இந்துக்கள் கிறிஸ்தவரானவர்களையும் பாதிரி மார்களையும் மீண்டும் துன்புறுத்தினார்கள். 17-1-1644-ல் திருச்சிராப்பள்ளி ஆளுநரே கிறிஸ்தவர்களைத் துன் புறுத்துமாறு கட்டளை பிறப்பித்தார். எனவே, நொபிலி பாதிரியார் திருமலை நாயக்கரை நேரில் கண்டு முறை யிட்டார். அதனால், நாயக்கர், உடனே பாதிரிமார்கள் மதமாற்றம் செய்தலைத் தடை செய்யக் கூடாது என்றும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்த பொருள்களைத் திருப்பிக் கொடுத்துவிடல் வேண்டும் என்றும் பொதுக் கட்டளை பிறப்பித்தார். பாதிரிமார்களுக்கும் கிறிஸ்தவர் களாய் மதம் மாறியவர்களுக்கும் இருந்த இன்னல் ஒருவாறு நீங்கியது.

1648-ல் நொபிலி பாதிரியார் நோயுற்றதால், அவர், உடல் நலமுற இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திற்குச் சென்றார்; அங்கிருந்து சென்னையிலுள்ள மைலாப் பூருக்குப் போனார். அவ்விடங்களில் இருந்த போதும் அவர் வாளா இருக்கவில்லை; இலக்கியப் பணியில் ஈடு பட்டிருந்தார். மதுரை நாட்டில் 36 ஆண்டுகள் சமயத் தொண்டு புரிந்து, சென்னையைச் சேர்ந்த மயிலைக்குச்

சென்ற நொபிலி பாதிரியார், 1660-ல் தமது 79-ஆம் அகவையில் அங்கே காலமானார்.

திருமலையின் தலையீடு :

1644-ல் திருமலை நாயக்கர் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தலாகாது என்று பொதுக்கட்டளை பிறப்பித்திருந்தும், அவர்களைத் துன்புறுத்துவது நின்றபாடில்லை. பால்தசார் டா காஸ்டா என்ற பாதிரியார், "நம் பகைவர்கள் எண்ணற்றவர்களாயும் குற்றத்தை மறக்க முடியாதவர்களாயும் இருப்பதால் மதுரை நாயக்கரது நல்லெண்ணம், அடிக்கடி ஏற்படும் இன்னல்களிலிருந்து கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கப் போதுமானதாய் இல்லை," என்று கடிதம் எழுதியிருப்பதால், இவ்வுண்மை புலனாகிறது. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவது மேலும் மேலும் மிகுந்ததேயன்றிக் குறையவில்லை. 1653-ஆம் ஆண்டிலும் ஒரு மாகாண ஆளுநர் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துமாறு கட்டளையிட்டார். கிறிஸ்தவர்களும் இந்துக்களை எதிர்த்தார்கள். இதைக் கண்டு இந்த ஆளுநர் சினம் கொண்டு தம் மாகாணத்துச் சிற்றூர்களிலிருந்த கிறிஸ்தவர்கள் எல்லாரையும் துன்புறுத்துமாறு செய்தார். ஆல்வாரஸ் அக்கொடுமையைச் திரிசிபுரத்து ஆளுநர் தலைவரிடம் போய் முறையிட்டுக் குறை நீக்க வேண்டினார். உடனே அவர் அக்கொடுமைகளை நிறுத்தும்படி கட்டளையிட்டார். அப்போது மதுரையிலிருந்த டா காஸ்டா பாதிரியாரும் திருமலை நாயக்கரிடம் அக்கொடுமைகளைக் குறித்து முறையிட்டார். நாயக்கர் அம்முறையீட்டைக் கேட்டு அக்கொடுமைகளை உடனடியாக நிறுத்துமாறு கீழ் அதிகாரிகளுக்குக் கட்டளை அனுப்பினார். எதிரிகள் அக்கடுமையான கட்டளையைக் கண்டு நடுநடுங்கினார்களேனும், 1659-ல் மறுபடியும் கிறிஸ்தவர்களைத்

துன்புறுத்தியே வந்தார்கள். ஆல்வாரஸ் பாதிரியார் சிறையில் அடைக்கப்பட்டுப் பின்பு விடுதலை செய்யப் பட்டார். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்த கிறிஸ்தவ சமயத் தொண்டர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அதனால், டா காஸ்டா பாதிரியார் மதுரைக்குச் சென்று அரும்பாடு பட்டுத் திருமலை நாயக்கரைக் கண்டு குறைகளைக் கூறி முறை யிட்டார். அதைக் கேட்ட திருமலை நாயக்கர் உடனே பாதிரிமார்களுடைய பொருள்களை அவர்களுக்குத் திருப்பித் தருமாறும், அவர்கள் விரும்பிய இடங்களில் விரும்பியபடி வசிக்குமாறும் செய்யும்படி திருச்சிராப் பள்ளி ஆளுநருக்குக் கட்டளையனுப்பியதோடு, தம்மிடம் முறையிட்ட பாதிரியாருக்கு விலையுயர்ந்த பரிசுகளையும் கொடுத்தனுப்பினார். இது 1650 க்கும் 1659 க்கும் இடையில் நடைபெற்றது. இதனால், திருமலை நாயக்கர் அடிக்கடி தலையிட்டுக் கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க வேண்டிய நிலை இருந்து வந்தது என்பதை அறியலாம். சில வேளைகளில் நாயக்கர், பொது மக்கள் சினத்தை அடக்க முடியாத நிலையில் இருந்தார். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இந்துக்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றியபோது, இந்துக்களாகிய பொதுமக்கள் கொதித் தெழுந்தார்கள். பொதுமக்களின் சமயவுணர்ச்சி வீறிட் டெழும் காலத்தில் திருமலை நாயக்கரும் என்ன செய்ய முடியும்? அவரும் பொதுமக்கள் கருத்தைப் புறக்கணிக்க முடியுமா? புறக்கணித்தால் உள்நாட்டுக் குழப்பந்தானே ஏற்படும்? ஆதலால், அவர், சமரச மனப்பான்மை யுடையவராயிருந்தும், பல சமயங்களில் கண்டும் காணா தவர் போன்றிருந்தார்; சில சமயங்களில் தலையிடலானார்.

திருமலையின் சமயப் பொறுமை

பொதுவாகத் திருமலை நாயக்கர் கிறிஸ்தவ சமயத்திற்கு அனுதாபம் காட்டியதாகக் கூறலாம். இது பெரும்பாலான இந்துக்களிடம் இன்றும் காணப்படும் ஒப்புயர்வற்ற பொதுப்பண்பாகும். இஃது உலகறிந்த உண்மை. பொதுவாக இந்துக்கள் சமயப் பொறுமையை மேற்கொண்டு, விரிந்த மனப்பான்மையோடு எந்தச் சமயத்தையும் அழிக்க முயன்றதில்லை என்பதை வரலாறே நன்கு எடுத்துக் காட்டும். அந்த இந்து சமயப் பரம்பரையில் வந்த திருமலை நாயக்கரும், கிறிஸ்தவ நெறியினரிடம் அன்பாக நடந்துகொண்டார். இதைத் தவறுக எண்ணிய புரொயன்சா பாதிரியார் திருமலை நாயக்கர் கிறிஸ்தவ சமயத்தை விரும்பிப் போற்றிப் பாதுகாத்து வந்ததாகக் கருதிவிட்டார். திருமலை நாயக்கர் ஆழ்ந்த வைணவ பக்தராயினும், சைவத்தில் வெறுப்புக் கொள்ளாமல் மதுரைத் திருக்கோயிலில் பெருந்திருப்பணிகளைச் செய்ததோடு சில சீர்திருத்தங்களையும் புரிந்து, பல விழாக்களை நடத்த ஏற்பாடு செய்தவர். அந்தப் பெருநோக்கோடு திருமலை நாயக்கர் கிறிஸ்தவ சமயத்திற்கும், அச்சமயத்தொண்டரிடத்தும் மதிப்புக் காட்டி வந்தார்; எனினும், போர்கள் நடந்த காலங்களில் அந்தச் சமயத் தொண்டர்கள் செய்த தகுதியற்ற செயல்களைத் தடுத்து நிறுத்தினர். இதனால், அவர் அச்சமயத்தைத் தழுவ விரும்பினரல்லர் என்பது நன்கு புலனாகும். திருமலை நாயக்கர் கிறிஸ்தவராக விரும்பினர் என்றோ, கிறிஸ்தவராகி விட்டார் என்றோ கருதியது வெறுங்கற்பனையன்றி உண்மையன்று என்பதையறிக.

16. திருமலை நாயக்கரின் பண்பாராய்ச்சி

குறை கூறுவது முறையா? :

முடிவாகத் திருமலை நாயக்கரின் அரும்பண்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம். இந்தியப் பண்டை ஆராய்ச்சி (Indian Antiquary) என்ற இதழில் கல்வித் துறையைச் சேர்ந்த அறிஞர் V. அரங்காச்சாரியார், M.A.L.T அவர்கள் மதுரை நாயக்கர்களைப் பற்றி எழுதியுள்ளார்கள். அவர், திருமலையைப் பற்றியும் அவருடைய பண்புகளைப் பற்றியும் அவ்விதழில் ஆராய்ந்து எழுதியதில் நாயக்கர் பண்புகளைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார். அவர், 'திருமலை, மதுரை நாயக்கர் பரம்பரையில் பெரும் பெருமைக்குரியவன் எனக் கூறுவதற்கு ஒரு சிறிதும் தகுதியற்றவன்,' என்றும், 'ஆண்மை நலனோ ஆட்சித் திறனோ அரசியல் அறிவோ உள்ளவன் என்பதற்கும் தகுதி இல்லாதவன்,' என்றும், 'நெஞ்சமின்றி வஞ்சச் செயல்கள் புரிந்த துரோகியினும் கொடிய துரோகி,' என்றும், 'அக்காலத்தில் தன் பேரறிவைத் தீயவழியில் பயன்படுத்திய கொடும்பாதகன்,' என்றும், 'அரசியல் நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் உடைத்தெறிந்த ஓர் அழிம்பன்,' என்றும், 'மானமோ நாட்டுப் பற்றோ ஒன்றுமின்றிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தன்னலத்தை போற்றிய சுயநல வாதி,' என்றும், 'தன் மதிப்பையும் தன் மனச் சான்றையும் கொன்று தன் சமயத்தையும் தன் நாட்டையும் மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்த துரோகி,' என்றும், 'முடிவில் தன்னை அடிமையாக்கிக்கொண்டது மன்றித் தென் தமிழ் நாட்டு இந்து

மன்னர்களையும் அடிமையாக்கிய கயவன் — மிலேச்சன்' என்றும் வசை மாரி பொழிந்துள்ளார். அறநெறிப் பான்மையாலும், அவர் காலத்தில் ஸ்ரீரங்கனைக் குறித்து மிகுதியான செய்திகள் அறிய வாய்ப்பில்லாதிருந்தமையாலும் அறிஞர் அரங்காச்சாரியார் ஒரு சிறிதும் இரக்கமின்றித் திருமலை நாயக்கரை அரக்கராக, ஆண்மையற்றவராக, அருந்திறன் இல்லாதவராக, கயவரினும் கேடுகெட்ட கயவராகத் தீட்டியிருப்பதைப் பிற்கால ஆராய்ச்சிகளை நன்கறிந்த வரலாற்றாசிரியர் சத்தியநாத ஐயர் எடுத்துக் காட்டி, "இக்கூற்றுகள் அனைத்தும் நடுவுநிலை ஆராய்ச்சி முறைக்கு ஏற்றதாக அமையவில்லை. இவற்றை ஆழ்ந்து நோக்கி ஆராய்வது பாழ்பட்ட வீண் வேலை," என்று தமது நூலில் திருமலையின் பண்புகளைக் கூறுமிடத்து, அடக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அக்கால நிலையை எண்ணாது, அக்கால அரசியல் சூழ்நிலையை உன்னாது, மூன்றாம் ஸ்ரீரங்கனது பண்புகளை நோக்காது, உளத்தியலை ஓராது, மன்னர் திருமலையின் பண்புகளைக் குறை கூறுவது பொருத்தமாகாது. இவையனைத்தையும் எண்ணிப் பார்த்துத் திருமலையின் பண்பைக் குறித்து முடிவு கட்டவேண்டும்.

திருமலை பெருவீரரல்லர்:

திருமலை நாயக்கர் தாம் செய்த போர்களைத் தாமே முன் நின்று நடத்தாமல், தமது படைத் தலைவர் இராமப்பய்யரிடமோ இரகுநாத சேதுபதியிடமோ தம்பி குமார முத்துவிடமோ அவற்றின் பொறுப்பை ஒப்படைத்ததனால், அறிஞர் அரங்காச்சாரியார், அவரை வீர மன்னராகக் கருதவில்லை. பேரரசனை மூன்றாம் ஸ்ரீரங்கனோடு நடத்திய போரைத் தவிர மற்றப் போர்களை அவர் நடத்தவில்லை என்பது உண்மைதான். இராமப் பய்யரே, மைசூர் முதலில் மதுரை மீது படையெடுத்த

காலத்தில் அஞ்சாது வெஞ்சமர் புரிந்து மைசூர் வீரர்களைத் துரத்தியதோடு, மைசூரில் புகுந்து வாகை சூடித் திரும்பினர். அவரே திருவாங்கூர் மீது படையெடுத்துச் சென்று வெற்றி கண்டார். அவரே தளவாய்ச் சேதுபதியுடனும், கூற்றுவன் போல மாற்ருரோடு அருஞ்சமர் புரிந்த வன்னியப் பெரு வீரனேடும் கடும்போர் புரிந்து வெற்றியோடு திரும்பினர். சேதுபதி போர்க்கிடையில் பேரரசருக்கு உதவி புரியப் பெங்களூர்ப் பகுதிக்குச் சென்று முஸ்லீம் வீரர்களைப் புறங்கண்டு திரும்பியவரும் இராமப்பய்யரே. ஆனல், அரும்போர்கள் புரிந்து பெரும் புகழுற்ற வீரப் பெருமகனர் இராமப்பய்யர் காலஞ்சென்ற பின்னர், மூன்ரும் ஸ்ரீரங்கனேடு தொடுத்த போரைத் திருமலை முன்னின்று நடத்தினர் என்பதையும், செஞ்சி முற்றுகையை நீக்கப் படைத் தலைமை தாங்கி விரைந்து அஞ்சாது சென்று வெஞ்சமர் புரிந்தார் என்பதையும் நாம் மறத்தலாகாது. இரண்டாவது முறை மைசூர் படையெடுத்த காலத்தில் திருமலை நோய்வாய்ப் பட்டுப் பாயும் படுக்கையுமாய் இருந்ததனுற்ருன், அவர் இரகுநாத சேதுபதியின் உதவியை நாடினர்; மைசூருக்குள் நுழைந்து மக்களைத் தாக்கிக் கண்டவர்களுடைய மூக்கறுத்துப் பழி வாங்குமாறு தம் தம்பி குமார முத்துவை அனுப்பி வைத்தார். ஆதலால், அறிஞர் அரங்காச்சாரியார் கருதுமாறு திருமலை நாயக்கரை வீரமற்ற கோழை என்ருவது தீரமற்ற வீரர் என்ருவது கருதலாகாது. ஆனல், அவர் வீரப்பெரும்புகழை விரும்பாதவர் என்றும், பெரு வீரச் செல்வர் அல்லர் என்றும் மட்டும் நாம் கூறலாமேயன்றிக் கோழை என்று நினைப்பது உண்மைக்கு மாறுபட்டதாகும்.

வைரத்தைக் கொண்டு வைரத்தை அறுப்பது:

இந்து வேந்தர்களுக்குள் நடந்த போர்களில் திருமலை சமயவுணர்ச்சியோ இனவுணர்ச்சியோ இன்றி,

முஸ்லீம்கள் உதவியை நாடி, அழிவுக்கு வழி தேடியது. மறைக்க முடியாத, மன்னிக்க முடியாத குற்றம் என்றும் பலரும் குறை கூறுகின்றனர். இதற்கு மூன்றும் ஸ்ரீரங்கனே முதல் முதல் வழி காட்டியவன். அவன் தான் அன்பு காட்டிய தன் சிற்றப்பனுக்கே எதிராக முஸ்லீம் மன்னனை ஏவினன். வேலூரை இழந்த பின்னும் அவன் தன்னுடைய 'ஏஜன்டான' இராமா ராவை 1653-ஆம் ஆண்டில், அப்போது தக்காணத்து அரசப் பிரதிநிதியாய் இருந்த அவுரங்கசீபுவினிடம் தூதனுப்பித் தனக்குக் கோல்கொண்டா பிஜபூர்ச் சுல் தான்களிடமிருந்து பாதுகாப்பளிக்குமாறு வேண்டினன்; 1655-ஆம் ஆண்டில் மறுபடியும் சீனிவாசன் என்பவனைத் தூதனுப்பி முகலாயப் பேரரசின் கீழ் ஜாகிர்தாராய் இருக்க விரும்புவதாகவும், முகலாயப் பேரரசர் ஷாஜகான் தன்னை இந்துவாக இருப்பது கருதி நம்பா விட்டால் இஸ்லாம் மதத்தை உற்றூர் உறவினருடனும் மற்றப் பணியாள்களோடும் தழுவுவதற்குச் சித்தமாக இருப்பதாகவும் சொல்லியனுப்பினன். இத்தகைய பண்பினன் ஸ்ரீரங்கன் என்று அறியும் பொழுது, திருமலை அவனிடத்தில் நடந்து கொண்டதைப் பெருந்தவருக, மன்னிக்க முடியாத குற்றமாக, அரும் பெருங்குறை யாகக் கருத முடியுமா? வைரத்தைக் கொண்டன்றே வைரத்தை அறுக்க வேண்டும்? இந்து அரசருக்கு மாருக முஸ்லீம் வேந்தரையும், முஸ்லீம் மன்னருக்கு எதிராக இந்து வேந்தரையும் உதவிக்குக் கோருவது அக்கால அரசியற் சூழ்நிலையில் காண முடியாததன்று. தலைக் கோட்டைப் போருக்கு முன் சுல்தான்கள் தங்களுடைய போர்களில் இந்து மன்னரான இராமராயருடைய உதவியை நாடியதைக் காண்கிறேம். இச்செயல் அக் காலத்தில் புதியதாகவோ அறமற்றதாகவோ கருத

முடியாதது. எனவே, இதைப் பெருங்குறையாக, பழியாக, அருந்திறல் மிக்க திருமலை மீது சுமத்தி அவரை இழித்துக் கூறுவது பொருந்தாது, பொருந்தாது.

காலச் சூழ்நிலை:

ஒரு சிலர் திருமலை முழுவுரிமை மன்னராக முயன்று முடிவில் வெற்றி பெற்ற செயலை வெறுத்துக் குறை கூறுகின்றனர். வாய்ப்புக் கிடைத்தபோது எவர்தாம் மேலதிகாரத்தை உதறித் தள்ளி முழுவுரிமை மன்னராகா திருந்தனர்? அப்படியானவர்கள் எண்ணற்றவர்கள். எத்தனையோ பெருமன்னர்கள் இத்துறை வாயிலாகவே வந்ததை உலக வரலாறு எடுத்துக் காட்டுமே! பேரரசு நன்னிலையில் இருந்த வரையிலும், சிற்றரசுக்குப் படையுதவி யளித்துக் காத்துவந்த வரைக்கும் மதுரை நாயக்கர்கள் பேரரசுக்கு உண்மை அன்புடையவர்களாய் அடிபணிந்து முடி வணங்கிப் பகுதிப்பணம் கட்டித் தகுதியாகத்தான் இருந்து வந்தார்கள்; பேரரசுக்கு ஆபத்து வந்த காலத்தில் படையுதவி புரிந்து நின்றூர்கள். மதுரைப் படைத் தலைவர் அரியநாத முதலியார் தலைக்கோட்டைப் போரில் படையுதவி புரிந்தது இதற்குச் சான்றூகும். அப்பேரரசர்களும் மதுரை நாட்டுக்கு ஆபத்து நேர்ந்த போதெல்லாம் படையுதவி தந்து பாதுகாத்தார்கள். தலைக்கோட்டைப் போரில், பேரரசு வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியடைந்து சிதைந்துவிட்ட பின்னரும், மதுரை நாயக்கர்கள் அச்சிதைந்த பேரரசின் தலைவர்களைப் புறக்கணித்ததில்லை; மதியாமலிருந்ததுமில்லை. மைசூர் நாடு பேரரசிலிருந்து பிரிந்து முழுவுரிமை நாடாகி வழிகாட்டியது. இக்கேரியும் முழுவுரிமை நாடாகியது. பேரரசும் அவற்றை ஒப்புக்கொண்டது. ஆகவே, முதலாம் முத்துவீரப்பர் முழுவுரிமை மன்னராக முயற்சி

செய்தார். திருமலை நாயக்கர் தம் தமயனார் வழியைப் பின்பற்றிக் கப்பங்கட்டாதிருந்தா ரெனினும், மூன்றும் வேங்கடருக்கு உதவிபுரியாமல் இல்லை; மூன்றும் வேங் கடர் பட்டத்துக்கு வந்தபோது அவரை ஆதரித்தார்; அவர் படை யுதவியை நாடியபோது இராமப்பய்யரை அனுப்பித் துணைபுரிந்தார். மூன்றும் வேங்கடரும் திருமலையைப் பகைத்துக்கொள்ளாது மதித்து வந்தார். மூன்றும் வேங்கடருடைய சாசனமே இதற்குச் சான்று பகர்கின்றது. துரோகி மூன்றும் ஸ்ரீரங்கன் ஆட்சியை ஏற்ற பின்னும், திருமலை அவனை மதித்து நடந்து வந்தார். முதலில் மைசூர், படையெடுத்து வந்தபோது, பேரரசிடமிருந்து உதவி கிடைக்கவில்லை. போருக்குப் பெரும்பொருள் செலவாகிக்கொண்டிருந்தது. எவ்வித உதவியும் செய்யாதிருந்த பொம்மை முடிவேந்தருக்குத் திருமலை எப்படிக் கப்பம் கட்ட ஒருப்படுவார்? மூன்றும் ஸ்ரீரங்கன் சுல்தான் உதவி பெற்று அச்சுறுத்தியபோது, திருமலை பகுதிப் பணம்கட்டினார். அதனால், வெறுப்புக் கொண்ட திருமலை எப்படி யாகிலும் முழுவுரிமை மன்னராக உறுதிகொண்டு திட்டத்தோடு செயலாற்றி வெற்றி பெற்றார். மூன்றும் ஸ்ரீரங்கன் அவசரப் பண்பின்றி நிதானமாகச் செயலாற்றியிருந்தால், நிலையே வேறாக மாறியிருக்கும். அக்காலச் சூழ்நிலையைக் கருத்தில் இருத்தி நோக்கினால் இக்குறையைப் பெருங் குறையாகக் கருதுவது பொருந்தாது.

புரொயன்சா கூறுவது :

புரொயன்சா பாதிரியார், "மூன்று நாயக்கர்களும் தங்களிடமிருந்த எல்லாப் படைகளுடனும் ஸ்ரீரங்கனோடு ஒன்று சேர்ந்திருந்தால், ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்தலையும் ஒருவரோடொருவர் வேறுபட்டிருத் தலையும் பயன்படுத்திய பொதுப்பகைவனை எளிதாக

வென்றிருக்கலாம்,'' என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும், அவர் மைசூரோடு திருமலை ஒத்துழைத்திருக்கலாம் என்றும் கூறியுள்ளார். உண்மைதான். அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பாவாகலாம். மீசை முளைக்க வேண்டுமே! அந்தக்கால நிலை அப்படியில்லையே! அந்தக் குறையினாற்றானே இம்மாபெருநாடே—பழம் பெருமை மிக்க பாரத நாடே — சீரும் சிறப்புமிழந்து, வந்தவர்கள் எல்லாருக்கும் அடிமையாகி வெந்து கிடந்தது? ஒற்றுமை மனநிலை தோன்றாதது இந்நாட்டுக் குரிய சாபம். என்ன செய்வது!

மாறுபட்ட செய்தியால் வேறு சொல்வதற்கில்லை:

இறுதியில் திருமலை மைசூர் செய்த இன்னலை மறந்து வேலூரைப் பாதுகாக்க முனைந்திருக்கலாம்; விஜய நகரத்தின் கடைசிச் சின்னமாய் இருந்த வேலூரைப் பாதுகாத்திருக்கலாம். இதில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஸ்ரீரங்கனது இறுதி முயற்சியில் திருமலை மட்டும் உதவி செய்ய மறுத்ததாகக் கூறுவர் சிலர். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் தமது 'தென்னிந்திய வரலாற்'றில் செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் ஆபத்தை உணர்ந்து படையுதவி புரிந்தும் வேலூரைப் பாதுகாக்க முடியாமல் போயிற்று என்று குறிப்பிடுகிறார். இந்த மாறுபட்ட கருத்தை நோக்கும் பொழுது திருமலையை இதற்காகக் குறை கூறுவதற்கில்லை.

குறை இல்லாமல் இல்லை:

இவ்வளவும் கூறியதனால் திருமலைக்குக் குறையே இல்லை என்று சொல்லிவிட முடியாது. சமய வுணர்ச்சி மிக்க திருமலைக்கு ஒரு செயலில் வெற்றி பெறவேண்டும் என்று தோன்றிவிட்டால், சமய

வுணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் கொன்று, எண்ணியவாறு திண்ணமாய் முடித்துக்காட்டும் இழிந்த மனப்பான்மையும் மாண்பிறந்த மானவுணர்ச்சியும் மிகுந்திருந்தன. தளவாய்ச் சேதுபதியோடு நடத்திய போரில் திருமலை எப்படியும் சேதுபதியை வென்றாக வேண்டும் என்று கருதினர். சேதுபதி இராமேஸ்வரத் தீவில் புகுந்து போராடினார். அவரோடு போரிடக் கப்பற்படையுதவி வேண்டும். அவர் போர்ச்சுகீசியரிடமிருந்து கப்பற்படையுதவி பெறுவதற்காக அவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்க வாக்குறுதியளித்தார்; தம் நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் அவர்கள் விரும்பும் இடத்தில் கோட்டை கட்டிக்கொண்டு படையுடன் தங்கியிருக்க இசைவளித்தார்; இராமேஸ்வரத்தில் ஒரு கிறிஸ்தவக் கோயிலும், பாம்பனுக்கும் பாண்டி நாட்டுத் தொண்டிக்கும் இடையில் ஏழு மாதா கோயில்களும் தம் செலவில் கட்டித்தரவும் ஏற்றுக் கொண்டார்; தம் நாட்டுக் குடிமக்களுள் விரும்புகிறவர்களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றிக்கொள்ளவும் அனுமதி கொடுத்திருந்தார். இதனால், யார் எப்படிப் போனாலும், எது எவ்வாறு அழிவுபட்டாலும் கவலைப் படாமல், தம் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும் இழிபண்பு அருந்திறல் வாய்ந்த திருமலை நாயக்கருக்கு இருந்ததை ஒருவரும் மறுக்க முடியாது; மறைக்கவும் இயலாது.

தவற்றைத் திருத்திக்கொள்ளும் பண்பு:

இத்தகையபண்பு இருப்பினும், திருமலை நாயக்கரிடம் பல நல்ல, விரும்பத் தகுந்த, பாராட்டு தற்குரிய அரும் பண்பு இருந்தது. ஒருவர் திருமலை நாயக்கரிடம் வந்து 'நல்ல போலவும் நயவ போலவும் தொல்லோர் சென்ற நெறிய போவும்' மற்றொரு

வரைக் குறித்துக் கூறினல், அவர் அக்கூற்றுகளை ஆய்ந்தோய்ந்து பாராது நம்பித் தவறிழைப்பதுண்டு; ஆனல், உண்மையை அறிந்ததும் அத் தவற்றைத் திருத்திக்கொள்வதுமுண்டு. இராமப்பய்யர்மீது சிலர் பொருமையால் தவருன செய்தியைக் கூறி அவரை மைசூரில் போர் நடத்திக்கொண்டிருந்த போதே அப் போரைக் கைவிட்டு மதுரைக்குத் திரும்பிவருமாறு கட்டளையிட்டனுப்பும்படி வற்புறுத்தினர். திருமலை அவ்வாறே இராமப்பய்யருக்குக் கட்டளையனுப்பினுர். இராமப்பய்யரோ, அக்கட்டளையைப் புறக்கணித்துத் தொடர்ந்து போரை நடத்தி வாகைசூடி மதுரைக்குத் திரும்பினுர். திருமலை உண்மையை உணர்ந்து, அவரைத் தண்டிக்கவில்லை; பொன்னும் பொருளும் அளித்துப் பாராட்டினுர். தம்பி இராமநாதபுரச் சீமையின் அரசுரிமை தனக்கே உரியது என்று சொல்லித் தன்னை அரசனுக்கத் திருமலையை வேண்டினன். திருமலை நாயக்கர் போர் செய்து தளவாய்ச் சேதுபதியைச் சிறைப்படுத்தித் தம்பியைச் சேது நாட்டுக்கு மன்னனுக்கினுர். தம்பிக்கு எதிராக நாட்டில் கலகம் நடந்தது. உண்மையை அறிந்ததும் திருமலை உடனே தளவாய்ச் சேதுபதியை விடுதலை செய்து அவரை மறவர் நாட்டுக்கு மன்னராக்கினுர்.

நன்றி மறவாமை:

காலத்தாற்செய்த உதவியை ஞாலத்தினும் மாணப் பெரிதாக மதிக்கும் நற்பண்பு, திருமலை நாயக்கரிடம் கண்ட பெரும்பண்பு. இரண்டாவது முறை மைசூரானது மதுரைமீது படையெடுத்தபோது, இரகுநாத சேதுபதி, நாயக்கருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அம்மைசூர் வீரர்களோடு வெம்போர் புரிந்து, அவர்களைத் துரத்தியடித்து மதுரையைக் காத்தார். அதற்காக நாயக்கர்

அவருக்குப் பொன்னும் பொருளும் பட்டமும் இன்ன பலவும் நன்களித்துப் பாராட்டினர்.

திருமலையின் சமயப்பண்பு மிகவும் பாராட்டத் தக்கது. இவர் வைணவ ராயினும் மதுரைமீனாட்சியம்மன் கோயிலில் அரிய திருப்பணிகள் செய்து பல விழாக்கள் தொடர்ந்து நடக்க ஏற்பாடுகள் செய்தார்; கிறிஸ்தவ ராகிவிட்டார் என்று நம்பும் அளவுக்குக் கிறிஸ்தவ சமய முன்னேற்றத்திற்கு மதுரை நாட்டில் ஆதரவளித்தார். இந்தியப் பண்பாட்டுக்குரிய வகையில் இவர் சமயத்தில் சமரச நோக்கையே கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

முடிவுரை:

மேலும், திருமலை நாயக்கர் மக்கள் நலத்தைக் கருதியே வாழ்ந்தார்: நாட்டு வருவாயை நாட்டு மக்கள் நலத்துக்காவே நன்முறையில் செலவு செய்தார்; போக்கு வரத்துக்காக நெடுஞ்சாலைகளை அமைத்தார்; கண் மாய்களை வெட்டுவித்தார்; அறச்சாலைகளை நிறுவி ஆதரவற்றோர்க்கு அன்னதானம் செய்தார்; மதுரைக் கோயிலிலும் கள்ளழகர் கோயிலிலும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலிலும் திருவரங்கப் பெருங் கோயிலிலும் பலப்பல திருப்பணிகளைச் செய்தார்; அங்கயற்கண்ணி தன்னொடு அமரும் ஆலவாய்ப் பெரு மானுக்குத் திருவிளையாடல் விழாக்களை நடத்தும் பொருட்டுப் பல கிராமங்களை விட்டுக்கொடுத்தார்; தைப்பூசத்தில் தெப்ப விழா நடத்தக் கட்டளைகளை ஏற்படுத்தினர்; அழகிய அரண்மனையைக் கட்டி அற்புதச் சிற்பவேலைப்பாடுகளுடன் அமைந்த புது மண்டபத்தை எழுப்பிக் கண் கொள்ளாக் காட்சியளிக் கும் மைய மண்டபத்தோடு கூடிய தெப்பக்குளத்தை

வெட்டுவித்து, மதுரைத் திருநகரை விழா நகராகவும் கலைநகராகவும் தலைநகராகவும் பெருநகராகவும் செய்தார்; ஆழ்ந்த கலையார்வமும், நிறைந்த இறைப்பற்றும் கொண்டு வாழ்ந்தார்; நாட்டு நலம் கருதி நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து நல்லாட்சி புரிந்தார்; வல்ல மன்னராய், திறல் மிக்க வேந்தராய் விளங்கினார். இவ்வாறெல்லாம் திருமலை நாயக்கர் நல்லன பலவும் செய்து வல்லவராய் இருந்து செவ்வையாக ஆட்சிபுரிந்து வந்ததால் மக்கள், அவரைக் கோயிலில் வைத்துக் கும்பிட்டு வந்தார்கள்; இப்போதும் கும்பிட்டு வருகிறார்கள். இன்றும் மீனாட்சியம்மன் கோயிலுக்குள்ளிருக்கும் திருச்சுற்றில் வைத்துள்ள திருமலைநாயக்கர் உருவத்தை மக்கள் வழிபட்டு வருவதைக் காணலாம். 1709-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் ஏசு கழகத் தொண்டர் எழுதிய கடிதம் ஒன்று, திருமலை நாயக்கர் இறந்ததும் கோயில் அமைத்து வழிப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்" என்னும் பொய்யா மொழிக்கு மெய்யான இலக்கியமானார் திருமலை நாயக்கர் என்பதறிக.

இத்தகைய நற்பண்புகளுக்கிடையே திருமலை நாயக்கரிடம் ஒரு சிறிய இழிபண்புடன் சில குறைகள் கலந்து நின்றதை ஒரு பொருட்டாகக் கருதுவது கூடாது. ஏசு கழகத் தொண்டர்களும் தம் கடிதங்களில் திருமலை நாயக்கரின் அரும்பெரும் பண்புகளைப் பெரிதும் மதித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறையற்றவர்கள் குவலயத்தில் இல்லை. நீருக்கும் நுரையுண்டு; நெல்லுக்கும்

உமியுண்டு; பூவிற்கும் புல்லிதழுண்டு. ஆகையால், உலகப் பொதுமறை அளித்த வான்புகழ் வள்ளுவர்,

> "குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்"

என்று அறிவுறுத்தியிருப்பதைத் தெரிந்து, திருமலையின் ஒரு குறையை, அல்லது ஒரு சில குறைகளை மறந்து, அவருக்கு இருந்த பல நற்பண்புகளை நினைவு கொண்டு, அவரை மதிப்பிடுவோமானால், "மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம் உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்" என்று குகன் பரதனுக்குக் கூறியதுபோல, நாமும் திருமலையைத் தம் முன்னோர் பின்னோர் புகழனைத்தையும் தம்புகழாக்கிக் கொண்டார் என்றே கூறிப் பாராட்டவேண்டும்.

17. திருமலை நாயக்கர் காலத்து அரசியல் முதலிய பொதுச்செய்திகள்

முன்னுரை :

வரலாற்றிற்குக் குறுநில மன்னர்களோ முடிவேந்தர்களோ பேரரசின் தலைவர்களோ, சர்வாதிகாரிகளோ, படையாட்சித் தலைவர்களோ, இடையிலே புகுந்து ஆட்சியைக் கவர்ந்தவர்களோ நடத்திய போர்களையோ வெற்றி — தோல்விகளையோ தொகுத்துக் கூறுவது மட்டும் போதாது; அவற்றோடு அவர்கள் மேற்கொண்டிருந்த அரசியல் முறைகளையும், அக்கால நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளையும், பொருளாதார சமய நடவடிக்கைகளையும், அவ்வப்போது அவர்கள் காட்டிய கலையார்வத்தையும், ஆக்கிய இலக்கியப் பணிகளையும் எடுத்துக் காட்டுவதும் வேண்டும். இவ்விரண்டும் அமைந்த வரலாறுதான் செம்மையான அறிவியல் முறையில் பொருந்திய வரலாறாகும். இக்கருத்து இந்நாளில் வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருப்பதாகும். ஆதலால், திருமலை நாயக்கர் காலத்து அரசியல், சமுதாய, பொருளாதார, கலை இலக்கிய வரலாறுகளை இங்குக் காண்போம்.

மதுரை விசுவநாத நாயக்கர் பரம்பரை கி.பி. 1529-ல் தொடங்கியது. விசுவநாதர் (1529-64), முதலாம் கிருஷ்ணப்பர் (1564-72), வீரப்ப நாயக்கர் (1572-95), இரண்டாம் கிருஷ்ணப்பர் (1595-1601), முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609), முதலாம் முத்து வீரப்பர் (1601-23) ஆகிய அறுவரும் விஜயநகரப்

பேரரசின் கீழ் ஊழியர்களான ஆளுநர்களாகவே இருந்து மதுரைநாட்டை ஆட்சி செய்து வந்தார்கள். திருமலை நாயக்கரே (1623-1659) சிதைந்த பேரரசின் முடி மன்னனாய் இருந்த மூன்றும் ஸ்ரீரங்கனோடும் பலவகையில் போராடி, வெற்றிகண்டு, முழுவுரிமை மன்னராய் மதுரைநாட்டை ஆண்டார். இவர்களுக்குமுன் மதுரை நாடு 1378 லிருந்து 1529 வரையில் ஏறத்தாழ 151 ஆண்டுகள் விஜயநகரப் பேரரசின் கீழ் அப்பேரரசினுல் நியமிக்கப்பட்ட மண்டலேஸ்வரர்களுடைய கண் காணிப்பில் இருந்து வந்தது. இந்நிலைகள் எல்லா வற்றையும் நம் உளத்தில் இருத்தித் திருமலைவேந்தர் காலத்து அரசியல், பொருளாதார, சமுதாய, கல்வி, கலை நிலை முதலியவற்றை ஆராய்தல் வேண்டும்.

மதுரை நாட்டின் பரப்பு :

திருமலை காலத்தில் மதுரைப் பெருநாடானது இன்றைய சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, இராமநாத புரம், கன்னியாகுமரி மாவட்டங்களையும், திருவனந்த புரமும் அடங்கிய பெரும்பரப்புடையதாய் இருந்தது. இப்பகுதிகளில் பாதுகாவலுக்காகச் சில ஊர்களில் கோட்டைகள் இருந்ததை அறிகிறோம். இம்மன்னர் காலத்தில் திண்டுக்கல், தாராபுரம், கோயம்புத்தூர், தணைநாயக்கன் கோட்டை, சத்தியமங்கலம், அந்தியூர், ஈரோடு, காங்கயம், விஜயமங்கலம், கருவூர், நாமக்கல், சேதைமங்கலம், பெரிய சேலம், சேமலூர், சங்ககிரி, சாமப்பள்ளி, ஆற்றூர், அனந்தகிரி, பரமத்தி, அரவக் குறிச்சி, மோகனூர் ஆகிய ஊர்களில் கோட்டைகள் இருந்தன.

நாட்டுப் பாதுகாவல் :

ஒவ்வொரு முக்கியமான நகரமும் கோட்டை கொத்தளங்களால் சூழப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டையிலும் தகுந்த போர்வீரர்கள் இருந்ததோடு வேண்டிய போர்க்கருவிகளும் நன்ருய்ப் பழக்கப்பட்ட யானைகளும் குதிரைகளும் இருந்தன. அவைகளைப் படைத்தலைவர்கள் மேற்பார்த்து வந்தார்கள். அப் படைத்தலைவர்களே அக்கோட்டைகளின் பாது காவலுக்கு உத்தரவாதமுள்ளவர்கள். மதுரை நகரில் 72 கொத்தளங்கள் இருந்தன. இன்றியமையாமை ஏற்பட்ட காலத்தில் அந்த 72 கொத்தளங்களையும் 72 பாளையக்காரர்கள் வந்து காத்துவந்தார்கள்.

பெரிய பாளையக்காரர்கள் சிறிய பாளையக்காரர்களை மேற்பார்த்து வந்தார்கள். எடுத்துக் காட்டாகத் திண்டுக்கல் பாளையக்காரராகிய அரங்கண்ண நாயக்கர் பதினெட்டுப் பாளையக்காரர்களுக்குத் தலைவராய் இருந்து வந்ததைக் குறிப்பிடலாம். இவ்வாறே வெவ்வேறு பகுதிகளுக்கும் தலைவர்கள் இருந்து வந்ததுண்டு. இவர்கள் எல்லாருக்கும் தலைவராயிருந்தவர் தளவாய். சாதாரண காலங்களில் இத்தகைய ஏற்பாடு போதுமானதாய் இருந்தது. அதிகமாய்ப் படை வேண்டியதாயிருந்தபோது தளவாய் அந்த அந்தப் பாளையக்காரர்களுக்கு இவ்வளவு படைவேண்டும் என்று கட்டளை அனுப்பினுல், உடனே அப்பாளையக் காரர்கள் படைத்தலைவர்களுக்கும் கிராம அதிகாரிகளுக் கும் சொல்லியனுப்பிப் படையைத் திரட்டிக்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் வந்து சேர்வார்கள். நெருக்கடி யான சமயம் நேர்ந்தால் சேதுபதியும், இன்னும் உள்ள முக்கியமான தலைவர்களும் போரில் கலந்துதவி புரிய

அழைக்கப்படுவதுண்டு. 1656-ல் மைசூர் மன்னர் மதுரையைக் கைப்பற்றப் பெரும்படையை அனுப்பினர். எழுபத்தைந்து வயதான திருமலை நாயக்கர் அப்போது நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். நகரில் போதிய படைவீரர்களும் இல்லை. என்ன செய்வார்! அவர் தம் மூத்த மனைவியை அழைத்து இரகுநாத சேதுபதிக்குத் தம் நிலையை விளக்கி உதவி வேண்டி முடங்கல் எழுதியனுப்பக் கூறினர். முடங்கலைக் கண்டதும் சேதுபதி தடங்கலின்றி 25,000 வீரமறவர்களைத் திரட்டிக்கொண்டு வந்து மதுரைக் கோட்டை மதிலுக்கும் பகைவரது படைவீட்டிற்கும் இடையில் நிறுத்தி, அஞ்சாதிருக்குமாறு திருமலைக்குச் செய்தி அனுப்பினர். திருமலை நாயக்கரும் இதற்குள் 35,000 வீரர்களைத் திரட்டிச் சேதுபதியின் படையோடு சேர்த்து மைசூர்ப் படையை எதிர்த்துப் போரிடுமாறு அனுப்பி வைத்தார். இப்படி நெருக்கடியான நேரத்தில் பாளையப் பட்டுத் தலைவர்கள் படையுதவி செய்திருக்கிறார்கள்.

தலைநகரம் :

தலைநகரம் நாயக்கர் காலத்தில் மாறிக்கொண்டே இருந்தது. விசுவநாதர் காலத்திலிருந்து முதலாம் முத்து வீரப்பர் காலம் வரைக்கும் அஃதாவது 1529லிருந்து 1615 வரைக்கும் மதுரை நகரே தலைநகரமாய் இருந்தது. முதலாம் முத்துவீரப்பர் 1616-ல் திரிசிரபுரத்தைத் தலைநகராக்கினர். திருமலை நாயக்கரோ ஆட்சியை ஏற்ற பதினோராம் ஆண்டில் 1634-ல் திரும்பவும் மதுரை நகரை மதுரை நாட்டின் கோநகராக்கிவிட்டார். இவருக்குப்பின் இவர் பேரரான சொக்கநாதர், (1659-1683) ஆட்சிக்கு வந்ததும், 1665-ல் மறுபடியும் திரிசிரபுரத்தை மதுரை நாட்டுக்குத் தலைநகராக்கினர்.

திருச்சியே திரும்பவும் மாருமல் நாயக்கர் ஆட்சியின் இறுதிவரைக்கும் கோநகராகவே நிலேத்திருந்தது. இங்கிருந்துதான் திருமலேக்குப்பின் வந்த இரண்டாம் முத்துவீரப்பர், சொக்கநாதர், மூன்ரும் முத்துவீரப்பர், மங்கம்மாள், விஜயரங்க சொக்கநாதர், மீனுட்சி அரசி ஆகியவர்கள் மதுரை நாட்டை ஆட்சி செய்து வந்தார்கள். இவர்கள் மதுரையிலிருந்தே ஆண்டு வந்ததாய்ப் பெரும்பாலோர் கூறுவது தவறு என்பது அறிக.

மத்திய அரசாங்கம் (Central Government)

மத்திய அரசாங்கம், அதிகாரம் முழுவதையும் தன்னிடத்தில் அடக்கி மடக்கி வைக்கவில்லே. பாளேயப்பட்டு முறையினுல் ஸ்தல ஆட்சி முறைக்கு வழி வகுக்கப்பட்டிருந்தது. அந்த அந்தப் பாளேயப்பட்டுகளில் நீதி வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருமலே நாயக்கர் அமைச்சர் குழுவின் உதவியோடு ஆட்சி செய்தார். ஆனுல், அவர் அமைச்சர் குழுவுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும் என்பதில்லே. எனினும், அவர் பொதுமக்கள் கருத்தை நன்கு மதித்தே நடந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஆட்சியில் தளவாயே முக்கியமானவர். அமைதிக்கால ஆட்சிப் பொறுப்பும் போர்க்காலப் படையாட்சிப் பொறுப்பும் ஆகிய இரு பொறுப்போடுகூடிய பெருநிலேயில் இருந்தவர் இவர். அமைச்சர் பதவியும் படைத்தலேவர் பதவியும் சேர்ந்த பதவியே தளவாய்ப் பதவியாகும். இத்தகைய பதவி தமிழரசர்கள் காலத்தில் இருந்ததே இல்லே. நாயக்க அரசர் காலத்திற்ருன் இத்தகைய பதவியே தமிழகத்தில் புதிதாகத் தோன்றியது. இத்தகைய பதவியை ஏற்ற முதல் தமிழர் அருந்

திறல் மிக்க பெருவீரர் திலகம் அரியநாதர் ஆவார். இவர் பிரதானிப் பதவியையும் ஏற்றிருந்தார். இவருக்குப் பின் பிரதானிப் பதவி தனியாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. தளவாயின் வேலை பொதுத் தன்மை வாய்ந்தது. உள் நாட்டில் அமைதியை நிலை நாட்டும் பொறுப்பும், வெளி நாட்டின் கொள்கையை உருவாக்கும் பொறுப்பும் தள வாய்க்கு இருந்தன. அரசாங்கத் துறைகள் எல்லாவற் றிற்கும் தளவாயே தலைவர். ஆதலால், இவர் நாட்டில் மிகுந்த அதிகாரம் உள்ளவராய் இருந்தார். அதனால், அக்காலத்தில் மதுரை நாட்டில் கிறிஸ்தவ சமய ஊழியம் செய்து வந்த பாதிரிமார்கள் தளவாயை அரசப் பிரதி நிதி என்றே குறிப்பிடலானார்கள். திருமலை காலத்தில் இருந்த தளவாய், வீரப் பெரும் புகழ்பெற்ற அருந்திறல் வாய்ந்த இராமப்பய்யர் ஆவார். இவரது பெரு வீரத்தை, இராமப்பய்யர் அம்மானை என்னும் நூலை இயற்றியவர்,

"ஆஸ்தான போசன் அதிவீர ராமயன்மேல்
மன்னர்கள் மெச்சும் மதியூகி ராமயன்மேல்
மாற்றலர்கள் சிங்கம் மன்னன்புரை ராமயன்மேல்
திக்குஅடங்க வெட்டித் திறைகொண்ட ராமயன்மேல்
ஆராரும் பாடுகின்ற அம்மானை பாடுகிறேன்"

என்று பாடியிருப்பதைக் காணலாம்.

அடுத்த முக்கியமான பதவி வகித்தவர் பிரதானி. இப்பதவி இக்கால நிதியமைச்சர் பதவியாகும். இப் பிரதானியின் வேலை அரசாங்க வரவு செலவுக் கணக்கைக் கவனிப்பதே. என்றாலும், பிரதானிக்கு உள் நாட்டு ஆட்சியில் மிகுந்த செல்வாக்கும் இருந்தது. தளவாய் ஊரில் இல்லாத காலங்களில் பிரதானிக்கு மிகுந்த அதிகாரம் இருந்திருக்கும் போலும்.

பிரதானிக்கு அடுத்துப் பெரும் பதவி வகித்தவர் இராயசம் (Chief Secretary of the Government) ஆவார்.

இவர் அரசாங்கத் தலைமைச் செயலாளர். இவர் நாட்டின் நிருவாகத்தைக் கண்காணித்து வந்தவர். இவருக்கும் மிகுந்த அதிகாரம் இருந்தது.

இந்த மூவரே திருமலை நாயக்கர் ஆட்சிக்குழுவில் மிகுந்த அதிகாரமும் செல்வாக்கும் உள்ளவர்களாய் இருந்தவர்கள். மற்ற முக்கியமான அலுவலர்கள் அரசாங்கக் கணக்கரும் (Chief Accountant), ஸ்தானுதி பதியும் (Foreign Secretary) ஆவார்கள். முன்னவர் அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர்; பின்னவர் அரசர் சார்பில் வெளிநாட்டு வேந்தர்களோடு விவகாரங்களைக் கவனித்தவர்.

திருமலை அரசாங்கத்தின் தன்மை :

திருமலை நாயக்கரின் அரசாங்கம் சமயப்பற்றுடைய தாகவே இருந்தது. இந் நாளைய இந்திய அரசாங்கத்தைப் போல அவ்வரசாங்கம் மதப்பற்றற்றதாய் இல்லை. நாகரிகம்மிக்க இக் காலத்திலேயே சில நாட்டு அரசுகள் குறிப்பிட்ட மதப் பற்றுள்ளதாய் இருக்கும்போது, அக் காலத்தில் திருமலை ஆட்சி அப்படியில்லாமல் இருந் திருக்க இயலுமா? குடிமக்கள், சமயத்தில் பற்றுள்ளவர் களாய் இருந்தார்கள். திருமலையும் மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவராய் இருந்தார். ஆதலால், திருமலை யின் ஆட்சியும் மக்களின் ஆன்ம நலம் கருதிச் சமயச் சார்புள்ளதாய் இருந்தது. ஆனால், திருமலை நாயக்கர் இந்தியப் பண்பாட்டுக்கு ஏற்ற நிலையில் வைணவ சமய வெறியராய் இல்லாமல், சிவன் கோயில்களுக்கும் வைணவ சமயக் கோயில்களுக்கும் திருப்பணிகள் செய் தார். இது மட்டுமா? சிவராசதானியாகிய மதுரைமா நகரில், தென்னுடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று கருதி வந்த பாண்டிய நாட்டுப் பழம்

பதியில், மீனாட்சியம்மன் கோயில் பெரு விழாவோடு வைணவ சமயக் கள்ளழகர் திருவிழாவையும் இணைத்து நடைபெறச் செய்து சிவ நெறியையும் வைணவ நெறியையும் ஒன்றுபட்டுச் சிறப்படைய வழி காட்டினார். மேலும் அவர் அப்போதுதான் புதிதாகத் தமிழ் நாட்டில் புகுந்த கிறிஸ்தவ சமயத்துக்கும் ஓரளவு ஆதரவு தந்தார். தம் நாட்டில் இருந்த இந்துக்கள் கிறிஸ்தவர்களை இன்னலுக்குள்ளாக்கிய போதெல்லாம் திருமலை, பாதிரிமார்கள் முறையீட்டைக் கேட்டு அவ்வின்னலைத் தடுத்து நிறுத்தினார். திருமலை நாயக்கருக்கு இருந்த சமயப் பெருநோக்கு அக்காலத்து ஐரோப்பிய நாட்டிலுங் கூட இருந்ததில்லை; இங்கிலாந்திலும் இருந்ததில்லை.

சிற்றூர் ஆட்சி:

சிற்றூர்களின் பெயர்கள், காலத்துக் காலம் மாறி வந்துள்ளன. சங்க காலத்தில் தமிழகத்தில் குறிஞ்சி நிலத்து ஊர்க்குச் சிறு குடி அல்லது குறிச்சி என்றும், முல்லை நிலத்து ஊர்க்குப் பாடி என்றும், மருத நிலத்து ஊர்க்கு ஊர் என்றும், நெய்தல் நிலத்து ஊர்க்குப் பட்டினம் அல்லது பாக்கம் என்றும், பாலை நிலத்து ஊர்க்குப் பறந்தலை என்றும் பெயர்கள் இருந்தன. நாயக்கர் ஆட்சியில் வடுகர் அல்லது கன்னடர் வாழ்ந்த சிற்றூர்களுக்கு ஊர் என்றும், கள்ளர்கள் வாழ்ந்திருந்த சிறு கிராமங்களுக்குப் பட்டி அல்லது குறிச்சி என்றும், கோட்டை மதிலால் சூழப்பட்ட கிராமங்களுக்குக் கோட்டை என்றும், நன்செய் நிலங்கள் நிறைந்து பார்ப்பனருக்கு உரியனவான சிற்றூர்களுக்கு மங்கலம் என்றும், மதுரை நாட்டில் பெயர்கள் வழங்கலாயின. மேலும் கிராமங்களுக்குச் சமுத்திரம், குடி, புரம், குளம் முதலிய பெயர்களும் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாகக்

கீரனூர், கோவில் பட்டி, ஆழ்வார் குறிச்சி, நிலக் கோட்டை, திருமங்கலம், அம்பா சமுத்திரம், விளாங் குடி, சமயபுரம், பெரியகுளம் என்னும் ஊர்களைக் குறிப்பிடலாம். தண்டமிழ் வழங்கும் பாண்டி நன்னாட் டில் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பல சிற்றூர்களின் தூய தமிழ்ப் பெயர்கள் தெலுங்குப் பெயர்களாய் மாறிவிட்டன.

வரியை எளிதாய் வசூலிப்பதற்காகச் சிற்சில கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட பல தொகுதிகளாய் மதுரை நாடு பிரிக்கப்பட்டிருந்தது. இத் தொகுதிகளும், பரப்பு நிலைக்கும் சிறப்பு நிலைக்கும் ஏற்றவாறு பெயர் களைக் கொண்டிருந்தன. மறவர் நாட்டுத் தொகுதி களுக்கு மாகாணங்கள் என்றும், கள்ளர் நாட்டுத் தொகுதிகளுக்கு நாடுகள் என்றும், மதுரை நகரை அடுத்திருந்த தொகுதிகளுக்கு மதுரை மகாநாடு என்றும் பெயர்கள் வழங்கின. திருமலை நாயக்கர் காலத்தில் இவற்றிற்குச் சீமை என்றும் பெயர் வழங்கியது.

விஜயநகர ஆட்சி வருவதற்கு முன் சங்ககாலத் திலும் பல்லவர் காலத்திலும் பிற்காகாலச் சோழ பாண்டியர் காலத்திலும் தமிழகச் சிற்றூர்களில் தன்னாட்சி (Self-rule) இருந்தது. சிறப்பாகப் பிற்காலச் சோழர் காலம் சிற்றூர் ஆட்சிக்குப் பொற்காலமாகும். சோழர் ஆட்சியில் சிற்றூர், பேரூர், மாவட்டம் ஆகிய இவற்றில் பொதுமக்கள் மிக நன்றாய்ப் பங்கு கொண்டி ருந்த தன்னாட்சி முறை இருந்து வந்தது. இத்தகைய தன்னாட்சி முறை தமிழகத்தில் தவிரத் தென்னிந்தியா வில் வேறு எப்பகுதிகளிலும் — ஏன்? — வடஇந்தியா விலும் இருந்ததில்லையாம். சபை, ஊர், நாடு ஆகிய உள்ளாட்சி நிலையங்கள் தமிழகத்தில் பிற்காலச் சோழர் கள் ஆட்சியில் தன்னாட்சி நடத்தியதோடு வரி வாங்கவும்,

பஞ்ச காலத்தில் வரியைத் தள்ளுபடி செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தன. மேலும் இவை கோயில்களை மேற்பார்த்து வந்ததுடன், அறநிதிகளின் பொறுப்பையும் ஏற்றுக் கண்காணித்து வந்தன. இன்னும் இவை பொதுமக்களது பணத்தை வாங்கி வைப்பு நிதியாய் வைத்துக் கொண்டு மக்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன்கள் வழங்கிய வங்கிகளாயும் பணி புரிந்தன. இத் தகைய நற்றொண்டாற்றிய 'ஸ்தல ஸ்தாபனங்கள்' தமிழகத்தில் விஜயநகர ஆட்சி ஏற்பட்ட பின்பு படிப்படியாய் மங்கி வந்து மறையலாயின.

பெரும்பாலார் பிற்காலச் சோழர் ஆட்சியில் இருந்த உள்ளூர் ஆட்சி முறை அப்படியே விஜயநகர மண்டலேஸ்வரர்கள் ஆட்சியிலும், நாயக்கர் நேரடி ஆட்சியிலும் தமிழகத்தில் இருந்து வந்தாக எண்ணுகின்றனர். அப்படி இல்லை. அவை வடுகர் ஆட்சியில் படிப்படியாகக் குறைந்து மறைந்தன என்பது சாசன ஆராய்ச்சியால் கண்ட உண்மையாகும். ஏன் அவை மங்கி மறைந்தன? காரணங்கள் இல்லாமல் இல்லை. மாலிக்கபூர், குஸ்ருகான், உலூகான் (மகமது-பின்-துக்ளக்) படையெடுப்புகளால் கோயிற் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. மதுரை நாட்டில் 48 ஆண்டுகள் முஸ்லீம் ஆட்சி நடைபெற்றது. விஜயநகர ஆட்சியாளர்கள் — நாயக்கர் — உள்ளாட்சியை ஆர்வத்தோடு போற்றிக் காக்கவில்லை. அவர்கள் ஆயக்கார் முறையைத் தமிழகத்தில் ஏற்படுத்தினார்கள். இக் காரணங்களால்மேற்குறித்த உள்ளாட்சி நிலையங்கள் 14-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் 15-ஆம் நூற்றுண்டிலும் சிறிது சிறிதாக மங்கி வந்தன. 16-ஆம் நூற்றுண்டில் விசுவநாதர் (1529-64) ஆட்சியிலேயே ஏற்பட்ட பாளையப் பட்டு முறையால் அவை முற்றும் மறையத் தொடங்கி

விட்டன. தமிழகத்தில் எங்கெங்கோ சிற்சில இடங்களில் மட்டும் சபை, ஊர், நாடு ஆகியவற்றின் பணிகள் நடை பெற்று வந்தன. டாக்டர் கிருஷ்ணசாமிப் பிள்ளை, தமிழகச் சாசனங்களை நூற்றுக் கணக்காக ஆராய்ந்து இந்த உண்மையை தமது நூலில்* கூறியிருப்பதோடு, புகழ்பெற்ற வரலாற்றுப் பேராசிரியர்களான க.அ. நீலகண்ட சாஸ்திரியாரும் டாக்டர், மகாலிங்கமும் இவ் வுண்மையை முன்னரே தெரிவித்திருப்பதையும் குறிப் பிட்டிருக்கிறார்.

15-ஆம் நூற்றுண்டிலேயே மதுரை நாயக்கர் ஆட்சி தொடங்கியதற்கு முன்பே பிற்காலச் சோழர் காலத்துச் சிற்றூர் ஆட்சிமுறை மறைந்து போகச் சிற்றூர்களில் கர்ணம், மணியக்காரர், தலையாரி முதலிய பன்னிருவர் அடங்கிய ஆயக்கார் முறை தோன்றிவிட்டது. முன்னைய ஆட்சிகளில் இத்தகைய சிற்றூர் அலுவலர் தமிழ்க் கிராமங்களில் இருந்ததே இல்லை. கர்ணமும் மணியக் காரரும் தலையாரியும் அரசாங்கத்தால் நியமிக்கப் பெற்றவர்கள். கிராமத்தின் வரி முதலிய வருவாயைக் கணக்கெழுதியதோடு, கிராமத்தின் நிலப்பரப்பு, எல்லை கள், இறையிலி நிலங்களின் எண்ணிக்கை, கிராமத்தின் தோப்புகள், தோட்டங்கள், குளங்கள், கிணறுகள், வாய்க்கால்கள் ஆகிய இவற்றின் எண்ணிக்கை, சுடுகாடு, இடுகாடு இவற்றின் பரப்புகள், இவரிவர்க்கு இந்த இந்த நிலங்கள் உரியவை என்பது போன்ற விவரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்திருக்கும் வேலையும் கர்ணத் துக்கு இருந்தது. கர்ணத்தின் உதவியுடன் வரி வசூ லிப்பது முதலிய பணிகள் மணியக்காரருக்கு இருந்தன.

* 'The Tamil Country under Vijayanagar,' by Dr. A. Krishnasawmy, Reader in History, Annamalai University.

தலையாரிக்கு இருந்த பணி ஊர்காவல் (Police Duty) வேலையாகும்.

கள்ளர், மறவர் ஆகிய இவர்கள் குடியிருந்த ஊரில் வரி வாங்கிய அலுவலருக்கு அம்பலக்காரர் என்றும், மற்றவர்கள் இருந்த ஊரில் வரி வாங்கிய அலுவலருக்கு மணியக்காரர் என்றும் பெயர்கள் வழங்கின. மணியக் காரர்கள், வரியை வசூலித்துத் தத்தம் மாகாண அதிகாரிகளிடத்தில் கொண்டுபோய்ச் செலுத்து வார்கள். அவர்கள் அதை மறுபடியும் கணக்குப் பார்த்துப் பிரதானியிடம் 'இருசால்' செய்வார்கள்.

ஆயக்காரர் முறையிலுள்ள மற்றவர்களான புரோகிதர் (Priest), நீர் வழங்குநர் (Waterman), தட்டார், கருமார், தச்சர், குயவர், வள்ளுவர், மயிர் வினைஞர் (Barber), தோல்வினைஞர், (செருப்புத் தைப் போர்) ஆகியவர்கள், சிற்றூர் மக்கள் வேலைக்காக இருந் தவர்கள். இவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வர்கள் அல்லர். ஆனல், அரசாங்கம் இவர்களுக்குப் பாரம்பரிய உரிமையோடு மானியம் வழங்கியது. இவர் கள் மானியமாகப் பெற்றிருந்த நிலத்துக்கு ஜோடி என்னும் அரசாங்க வரியை (Quit-rent) சிறிய அளவில் கட்டவேண்டியிருந்தது. ஊராரும் இவர்களுக்கு அறுவடைக் காலத்தில் குறிப்பிட்ட அளவு நெல் அளந்து கொடுப்பது வழக்கம்.

மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தும் இப்புது முறையே இருந்தது என்று சொல்லத் தேவையில்லை. இந்த முறையே ஆங்கில ஆட்சியிலும் இருந்தது; இன்றைக்கும் கிராமங்களில் ஓரளவு இருந்தும் வருகிறது.

நீதிமுறை:

மதுரை நாட்டு ஆட்சியாளரே நீதிபதியாய் இருந்தார். ஆனால், அவரே எல்லா வழக்குகளையும் கேட்டு ஆராய்ந்து தீர்ப்புக் கூறவில்லை. இது செய்யக் கூடியதாயும் இருப்பது இயலாது. ஆதலால், தலை நகரில் நீதி மன்றம் இருந்தது. அங்கு வழக்குகளை விசாரிக்க நடுவர்கள் இருந்தார்கள். பிரதானியே நீதித்துறையைக் கண்காணித்து வந்தார். அவரே நீதிபதியாயும் பணியாற்றியதுண்டு. வீரப்ப நாயக்கர் (1572-1595) காலத்தில் இவ்வீரப்பரும், தளவாயும் பிரதானியுமாய் இருந்த அரியநாத முதலியாரும் சேர்ந்து ஒரு வழக்கை விசாரணை செய்து தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். இதனால், நீதித்துறையைக் கண்காணித்த பணியும் பொறுப்பும் பிரதானிக்கு இருந்தமை நன்கு புலனாகும்.

சிற்றூர்களிலும் நீதி மன்றங்கள் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் பொது மக்களால் நன்கு மதிக்கப் பெற்ற இருவர் நடுவர்களாய் இருந்தனர். இவ் வுண்மை ஜான்நியுஹாப் என்பவர் எழுதிய குறிப்பால் தெரிகிறது. நீதி மன்றங்கள் பல இருந்தாலும், அரசரிடம் முறையிடக் கூடாது என்ற நியதி இல்லை. பெரும்பாலும் அரசர், கோயில் விவகாரங்களைப் பற்றிய வழக்குகளையும், யாருக்குக் கோயிலில் முதல் மரியாதை செய்வது, யாருக்கு இரண்டாவது மரியாதை செய்வது, யார் யார் எந்த எந்த வாகனத்தில் போகவேண்டும், யார் யார் பல்லக்கில் ஏறிச் செல்லத் தகுதியுடையவர்கள் என்பன போன்ற வழக்குகளையும் விசாரித்து முடிவு கூறினார்கள். பிற வழக்குகளையும் ஆட்சியாளர்கள் தீர்ப்புக் கூறாமல் இல்லை. மேற்குறித்த வீரப்ப நாயக்கர் தம்மிடம் முஸ்லீம்கள் முறையிட்ட நில வழக்கைக் கேட்டு, அதற்கு ஆவணம் இருந்த

தைக் கண்டு. அந் நிலம் முஸ்லீம்களுக்கே உரியதென்று தீர்ப்பளித்தார். இந்த முறையே திருமலை காலத்தும் இருந்திருக்க வேண்டும்.

நடுவர்கள் ஆட்சி, ஆவணம், சாட்சி ஆகிய இவற்றைக் கொண்டு வழக்குகளை ஆராய்ந்ததோடு, சில வேளைகளில் கடவுள் நம்பிக்கையை நாடிச் சில வழக்குகளில் சோதனை முறையை (Ordeal) மேற் கொண்டதுமுண்டு. காய்ச்சிய நெய்யில் கையிடுவது இச்சோதனை முறையாகும். காய்ச்சிய நெய்யில் கைவிட்டவனுக்கு உண்டாகும் புண், குறித்த காலத் திற்குள் ஆறிவிட்டாற்ருன் அவன் வழக்கு வெற்றி யடைந்ததாகும்; அல்லாவிட்டால் தோல்வியுற்றதாகும்.

ஒரு சில சட்டங்களும் இருந்தன. ஒருவர் அடைமானமாக வைத்த உடைமையைப் பன்னிரண்டு ஆண்டுகள் வரையிலுமே அடைமானம் பெற்றவரிடம் இருத்தல் வேண்டும் என்றும், அப்பன்னிரண்டு ஆண்டு களுக்குப்பின் எவ்விதத் தொகையும் கேளாமல் அப் பொருளை அதற்கு உரியவனிடம் ஒப்புவித்தல் வேண்டும் என்றும் சட்டம் இருந்ததாக அறிகிறோம். அரசர் செய்யும் முடிவோ, ஓர் இனத்தார் செய்யும் முடிவோ பரம்பரை வழக்கமோ சட்டமாய் இருந்து வந்தது.

பாளையங்களில் பாளையப்பட்டுக்காரர்களே வழக்கு களை விசாரித்து முடிவு கூறினர்கள். அவர்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

பெரும்பாலும் வழக்குகள் பஞ்சாயத்தாரால் முடிவு செய்யப்பட்டன. வழக்குகளுக்காக மக்களுக்கு வீண் செலவு ஏற்பட்டதில்லை; காலமும் வீணனதில்லை.

நிலத்தொடர்பின பொருள் (Civil) வழக்காயிருப்பினும் கொலைத் தொடர்புடைய குற்ற (Criminal) வழக்காயிருப்பினும் கட்சிக்காரர்களுக்குள் மத்தியஸ்தம் செய்து கொள்ளும்படி விட்டதுமுண்டு.

களவுக்குக் கடுமையான தண்டனை இருந்தது. களவு செய்தவன் கை வெட்டப்பட்டதுமுண்டு; அவனுக்கு நிலமிருந்தால் அது பறிமுதல் செய்யப்பட்டதுமுண்டு; அவன் கிராமத்திலிருந்தே துரத்தப் பட்டதுமுண்டு.

அக்கால நீதிமுறையில் ஒரு குறை இருந்தது. இக்காலத்தில் சட்டத்தேவதைக்கு முன் தோட்டியும் தொண்டைமானும் சமமாகவே கருதப்படுவர்; அரசனும் ஆண்டியும் ஒரே நிலையில் வைக்கப்படுவர். இந்நிலை அக்காலத்தில் இல்லை. அக்காலத்தில் பார்ப்பனருக்கு ஒரு நீதி என்றும் மற்றவர்களுக்கு ஒரு நீதி என்றும் காணும் குறைபாடு இருந்தது.

கடற்கரைப் பகுதியின் ஆட்சி:

மதுரை நாட்டின் கடற்கரைப் பகுதிகளின் ஆட்சி, அக்காலத்தில் இந்நாட்டில் வாணிகம் செய்ய வந்த போர்ச்சுகீசியரிடமும் டச்சுக்காரரிடமும் இருந்து வந்தது. நாயக்கர்கள் இந்த அயல்நாட்டு வணிகர்களிடமே கடற்கரைப் பகுதிகளை ஒப்படைத்து விட்டு வரி வாங்கிக்கொண்டு, அவர்கள் அப்பகுதிகளில் என்ன அட்டூழியங்களைச் செய்தாலும் கவலையற்றுக் கிடந்தார்கள். திருமலை அரசர் காலத்தில் தூத்துக்குடியில் டச்சுக்காரர் 1649-ல் நடத்திய வன் செயலே இதற்குப் போதிய சான்றாகும்.

அரசாங்க வரவுசெலவு

திருமலை மன்னரது அரசாங்க வருவாயில் முதன்மையானது நிலவருவாயேயாகும். கிருஷ்ணதேவராயர் காலத்தில் பேரரசு முழுதும் இருந்த நிலங்கள் நன்கு அளக்கப்பட்டன. இது நிலவரி விதிப்பு முறைக்காகச் செய்யப்பட்ட சிறந்த ஏற்பாடு. நிலங்கள் நன்செய் (நஞ்சை), புன்செய் (புஞ்சை) என்று பிரிக்கப்பட்டு நிலவரி விதிக்கப்பட்டது. தமிழ் மன்னர்கள் காலத்தில் ஆறில் ஒரு கடமையாக நிலவரி வாங்கப்பட்டது. திருமலை நாயக்கர் காலத்தில் விளைவில் அரைப்பங்கு வாங்கப்பட்டது. நன்செய் வரி நெல்லாகவும் புன்செய் வரி காசாகவும் வாங்கப் பட்டதாய் அறிகிறோம். நிலவரி யல்லாது வேறு வரிகளும் திருமலை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டிருந்தன. அவை வத்தை வரி, காவல் வரி என்பவை. அவையன்றித் தொழில் வரிகளான தறிவரி. உலைவரி, கடைவரி, தச்சுவரி, தேன்வரி, நெய்வரி, செக்கு வரி, மாட்டுவரி, சலவை செய்வோர் துவைக்கும் கல் வரி, சாமான் கொள்முதல் விற்று முதல்வரி முதலியவைகளும் இருந்தன. இவற்றோடு ஏர்வரி, தேருழியம் ஆகியவையும் இருந்தன. நாயக்கர் காலத்தில் ஆறுகளில் வெள்ளம் ஓடும் காலத்தில் மக்கள் கடந்து செல்வதற்கு அரசாங்கமே வத்தைகளையும் வத்தை செலுத்துபவர்களையும் வைத்திருந்தது. இந்த ஏற்பாட்டிற்கான செலவை ஈடு செய்யும் பொருட்டு வாங்கிய வரியே வத்தைவரியாகும். ஊர்காவலுக்கு உள்ள நிருவாகச் செலவுக்கு வாங்கியது காவல்வரி. தேவையிருந்து அரசர் கட்டளையிட்டால் ஒவ்வொரு குடியானவனும் கலப்பை ஒன்றுக்கு ஒவ்வோர் ஆள்வீதம் அனுப்பியது ஏர் வரி. திருமலைநாயக்கர் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு இரண்டு பெரிய தேர்களைச் செய்து வைத்தார். தேரோட்டத்

தன்று இத் தேர்களை இழுக்க மிகுந்த ஆள்கள் தேவைப் பட்டார்கள். அதற்காக ஒவ்வொரு கிராமத்திலிருந்து இத்தனை இத்தனை ஆள்கள் தேர்ஊழியத்திற்கு வர வேண்டும் என்பது தேரூழியம்.

முத்துக் குளித்தெடுப்பதாலும் கடற் சங்கு விற்பனையாலும் வருவாய் வந்தது. பாம்பன் தீவுமுதல் கன்னியாகுமரி வரையிலுமுள்ள கடற்கரை முழுவதும் திருமலை நாயக்கருக்கு உரியது. அக்கடற்கரையில் அள விறந்த முத்து எடுக்கப்பட்டது. முத்துக்குளிக்கும் கப்பல் ஒன்றுக்கு வரி 120 ரூபாய் விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு 600 அல்லது 700 கப்பல்கள் இருந்தன. ஆக அவ்வழியில் திருமலை மன்னருக்கு ஏறக்குறைய 72,000 ரூபாய் ஆண்டுக்கு வருவாய் கிடைத்தது. அத் தொழிலை தூத்துக்குடிப் பரதவர்களே செய்து வந்தார்கள். அவர் களுக்கு மிகுந்தவரி போடப்பட்டபோது,அதை அவர்கள் தாங்க முடியாது தங்கள் மதகுருவாகிய ஏசு கழகத் தொண்டரிடம் முறையிட்டார்கள். அவர் அவ்வரிச் சுமையைக் குறைப்பதற்காகத் திருமலை மன்னரைக் கண்டு பேசிஅவ்வரிச் சுமையைக் குறைத்தார். அப் பாதிரியார் அந்தோனி ரொபினு சாமியார். அவர் மியூஷஸ் விதலஸ்கி சாமியாருக்கு எழுதிய கடிதம் இது:

தூத்துக்குடி. கி. பி. 1627ஆம் நவம்பர் மீ 24.

அந்தோனி ரொபினு சாமியார், மியூஷஸ் விதலஸ்கி சாமியாருக்கு எழுதியது:—

"இந்த வருடம் கடற்கரையோர மெல்லாம் யாதொரு சண்டை சச்சரவின்றிக் கடவுள் கிருபையால் சமாதானமாயிருக்கிறதென்று சந்தோஷமாய்த் தெரி விக்கின்றேன். கடவுள் கிருபையால் பதிதர்களுக்குள்ளும் (புறச்சமயத்தவர்களுக்குள்ளும்) பரவர்களுக்குள்ளும்

யாதொரு சச்சரவும் இல்லை. இச்சமாதானத்திற்குக் காரணம் தூத்துக்குடி, மதுரை நாயக்கர் ஆளுகைக்கு வந்ததே காரணம். நாயக்கர், இராஜாங்க உத்தரவை அனுப்பி என்னை அங்கு வரவழைத்தார். அவ்வுத்தரவு முழுநீளமுள்ள மெல்லிய வெள்ளைச் சல்லாவில் கஸ்தூரி தோய்த்த அவரது கை முத்திரையுடன் இருந்தது. இது அவர் செய்யக் கூடிய 'அபீஷ்டம்' (மிகு விருப்பம்) என்பார்கள். அதைக் கொண்டு போகிறவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். அதற்குத் தட்டுத் தடை இல்லை. அவ்வமயம் நாயக்கர் திரிசிரபுரத்தில் இருந்தார். அவ்வுத்தரவைப் பெற்றுக்கொண்டு, நான் அங்குச் சென்றேன். அவர் என்னை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். நான் அவரிடம் ஏழைப் பரவர்கள் (பரதவர்கள்) படும் கஷ்டத்தையும், அவர்களுடைய நெருக்கடியான நிலைமையையும் தெரிவித்தபோது, அவர் மிகக் கவனமாயும் அன்பாயும் கேட்டார். "உங்களுக்கு ஏதாவது தேவை இருக்குமா?" என்றார். "எனக்கு ஒன்றும் வேண்டாம். வருடந்தோறும் 800 பதக்கம் கொடுக்க முடியாமல் வருந்தும் ஏழைப் பரவர்கள் மீது கருணை காட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் அந்த வரியை மூன்று வருடத்துக்கு 'வஜா' செய்திருப்பதாகவும், அதற்கு அப்பால் அவர்கள் 500 [1]பதக்கம் கொடுத்து வரும்படிக்கும், முன் வழக்கமாய்க் கொடுத்து வந்த இருநூறு மாடுகளுக்குப் பதிலாக ஐம்பது மாடுகள் கொடுத்து வரும்படிக்கும் உத்தரவளித்து, அந்தப்படி ஓர் ஓலையில் அதிகார உரிமைப் பத்திரமும் எழுதிக் கொடுத்தார். 'விக்கிரக ஆராதனை செய்யும் இவ்வரசர்

---

1. பதக்கம் – ஹாலந்து தேசத்து நாணயம் அதன் மதிப்பு ரூ 2 - 33.

செய்ததைப் போல வேறே எந்தக் கிறிஸ்தவ அரசனுவது வரி மன்னிப்புச் செய்வானு?' என்பதைத் தாங்களே யோசித்துக் கொள்ளலாம். கடவுள் அவருக்கு ஞானஸ்நானம் பெறும்படி அருள்வாராக.

"நான் திருச்சிக்குப்போன முக்கிய காரணம் சிம்மள தேசத்துச் சேனுதிபதி என்னைப் போய் நாயக்கரை நேரில் கண்டு, அவர் தேசத்தில் வசிப்பதற்கு உத்தரவு கேட்ட டென்மார்க் தேசத்தாருக்கு உத்தரவு அளிக்காதிருக்கும்படி செய்து விட்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதை நிறைவேற்றுவதே யாகும். இந்த டென்மார்க்கு தேசத்தார் நாயக்கரின் தேசமாகிய கன்னியாகுமரியில் வசிக்க உத்தரவு கேட்டு, அதற்கு வரியாக 4000[2] குருஸடோர்களுக்குமேல், கொடுப்பதாகவும் வருடந்தோறும் 3000 குருஸடோர்கள் கொடுப்பதாகவும் சொன்னுர்கள். கடவுள் கிருபையால் நாயக்கர் அவர்களுக்கு உத்தரவளிக்கவில்லை.

"நாயக்கர் ஒரு சேசு சபை சாமியார் எப்போதும் மதுரையில் இருந்து வரவேண்டும் என்றும், அவர்கால க்ஷேபத்திற்காக 10 பதக்கமும் ஒரு [3]கண்டி அரிசியும் கொடுப்பதாகச் சொன்னுர். அதே பிரகாரம் அங்கே வீக்கோ சாமியாரை வைத்துக்கொண்டு அவருக்கு அவ்வாறு உதவி வருகிருர். என் பிரயாணம் கிறிஸ்தவர்களுக்கு மிக்க நலமாயிருந்தது; ஏனெனில் நமக்கு நாயக்கர் தயவு இருப்பதால் நம்மை மிகுந்த கௌரவத்தோடு நடத்துவார்கள்."

இந்தக் கடிதத்திலிருந்து பரதவர் துயர் தணிக்கும்படி திருமலைநாயக்கர் வரியைத் தள்ளுபடி செய்ததை

2. குருஸடோர் - போர்ச்சுகல் தேசத்து நாணயம். மதிப்பு ரூ 1 - 07.

3. கண்டி - 20 மணங்கு.

அறிந்து கொள்வது மட்டுமன்றி, ஐரோப்பியர்பால் அவர் வைத்திருந்த மதிப்பும், திருமலே நாயக்கரைப் போல எந்தக் கிறிஸ்தவ அரசரும் செய்யமாட்டார் என்று ஓர் ஐரோப்பியப் பாதிரியாரால் அவர் பாராட்டப் பட்டிருப்பதையும் தெரிந்து கொள்கிறேம். மேலும் ஓர் ஐரோப்பிய நாட்டார் மற்ருெரு நாட்டாரை வாணிகம் செய்யத் தடுப்பதையும் அறிந்து கொள்கிறேம்.

திருமலே நாயக்கருக்கு முத்துக் குளித்தலோடு சங்கு குளித்தலும் இருந்தது. அதற்கு அவரே உரியவர். சங்குகள் நிரம்பக் கிடைத்தன. அவை தூய வெண்மையாயும் பளபளப்பாயும் இருந்தன. அவற்றை வங்காள நாட்டினர் வளையல் செய்வதற்காக வாங்கினர்கள். சாதாரணமான சங்குகளோடு விலேயுயர்ந்த அரிய வலம்புரிச்சங்குகளும் கிடைத்தன. இவற்ருல் வருவாயும் கிடைத்தது.

இவையல்லாமல் காட்டு வருமானமும் நீதிமன்றத்தில் விதிக்கப் பட்ட ஒறுப்புப் பணமும் (Fines) கிடைத்தன. கடல் - தரைவழிச் சுங்கவரியும் ஓரளவு கிடைத்தது.

மேலும் பாளேயப்பட்டுக்காரர்கள் தங்கள் பாளேயத்திலிருந்து பெற்ற வருவாயில் மூன்றில் ஒரு பங்கு திருமலே நாயக்கருக்குக் கொடுத்து வந்தார்கள். இது விசுவநாதர் ஆட்சிக்காலத்திலிருந்து பாளேயப்பட்டு முறையால் கொடுக்கப்பட்டு வந்ததாகும்.

சுருங்கக் கூறினுல் நிலவரியாலும் வணிக வரியாலும் கைத்தொழில் வரியாலும் நீதிமன்றம் விதித்த தண்டத் தொகையாலும் காட்டு வருமானத்தாலும் கடல் - தரை வழிச் சுங்க வரியாலும் உப்பள வருமானத்தாலும்

பாளையப்பட்டுகளிலிருந்தும் கிடைத்த பகுதிப் பணத்தாலும் திருமலை நாயக்கருக்குப் பெரும் வருவாய் கிடைத்து வந்தது எனலாம்.

வரிகள் அக்டோபர் திங்களில் நவராத்திரி விழாக்காலத்தில் வசூலிக்கப்பட்டன. இவ்வரிகளை ஒருவரே கட்டியதில்லை. பலர் பலவகையில் தத்தமக்குரிய வரியைக் கட்டினர். ஆதலால், இவ்வரிகள் மக்களுக்குப் பெருஞ்சுமையாக இருந்திருக்க மாட்டா? அப்படியிருந்தால் ஏசுகழகத் தொண்டர்கள் இவ் வரிச்சுமையால் பொதுமக்கள் இன்னலுற்றதைத் தங்கள் கடிதங்களில் குறிப்பிடாமல் இருந்திருக்க மாட்டார்கள்.

இக்காலத்தைப்போலத் திருமலை அரசாங்கத்துக்கு மிகுந்த சாலையமைப்புக்கோ தெருக்களுக்கு விளக்கு போடுவதற்கோ பொதுமக்கள் கல்விக்கு உதவி செய்வதற்கோ செலவு செய்யும் இன்றியமையாமை இருந்ததில்லை; திங்கள் தோறும் ஊழியர்களுக்கு லட்சக்கணக்காகக் கொடுக்கும் சம்பளச் செலவும் இருந்ததில்லை. அரசாங்க அலுவலர்களுக்கு மானியங்களாக நிலங்கள் கொடுக்கப்பட்டன. ஊர் பாதுகாப்புச் செலவும் மிகுதியாய் இல்லை. பாளையப்பட்டுக்காரர்களே தத்தம் ஊர்களைப் பாதுகாத்து வந்தார்கள். நீதி மன்ற நிருவாகச் செலவும் இருந்திருக்க வழியில்லை. ஆயினும், திருமலை நாயக்கர் தாம் மேற்கொண்ட போர்களுக்காக மிகுதியாய்ச் செலவு செய்ய வேண்டியவராய் இருந்தார். போர்ச் செலவிலும் பெரும்பகுதி பாளையப்பட்டுக்காரர்களின் பொறுப்பாய் இருந்தது. திருமலை நாயக்கர் மீனாட்சியம்மன் கோயில் சீர்திருத்தத்தில் ஈடுபட்டுக் கோயில் திருவிழாக்களுக்கும் பல அரிய கட்டடங்கள் கட்டியதற்கும் பெருஞ்செலவு செய்திருக்கவேண்டும். பொதுப்பணிகளை (Public works) ஒட்டிய வகையில்

திருமலை நாயக்கர் ஒரு சிலசாலைகள் அமைத்ததற்கும் நீர்பாசன வசதிகள் செய்ததற்கும் ஓரளவு செலவு செய் திருத்தல் வேண்டும். அரண்மனைச் செலவும் ஆடம்பரச் செலவும் திருமலை நாயக்கருக்கு மிகுதியாய் இருந்து வந்தன.

மதுரை நாயக்கர் வரலாற்றை அரிய ஆராய்ச்சி யுடன் திறம்பட ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட வரலாற்றுப் பேராசிரியர் சத்தியநாத ஐயர் திருமலை நாயக்கருக்குக் கிடைத்த ஆண்டு வருவாய் ஏறக்குறைய 1 கோடி 26 லட்சம் ரூபாய் இருக்கலாமென்று குறிப்பிட் டிருக்கிறார். இவ்வருவாயைக் கொண்டே திருமலை நாயக்கர் நான்கு போர்களை எப்படி நடத்தியிருக்கக் கூடும்? எப்படிப் பெருங் கட்டடங்களைக் கட்டியிருக்கக் கூடும்? போருக்குப் பாளையக்காரர்கள் உதவி கிடைத் தது.எனினும், அவ்வுதவி போதுமானதாய் இருந்திருக்க இயலாது. மதுரை நாட்டுக் கருவூலத்தில் பெரிய அளவு பணம் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க இடந் தருகிறது. கருவூலத்தில் (Treasury) எப்படிப் பணம் சேர்ந்தது? ஒவ்வொர் அரசரும் செலவு போக எஞ்சிய பணத்தைக் கருவூலத்தில் சேர்த்து வைப்பது வழக்க மாய் இருந்தது. பின் வந்தவர்கள் முன்னோர் வைப்பாக வைத்த அந்தப் பணத்தை இன்றியமையாத நிலை ஏற்பட்டாலன்றி மற்றப்படி செலவு செய்ததில்லை. இப்படித் திருமலைக்கு முன்னிருந்தவர்கள் சேர்த்து வைத்த பணம் கருவூலத்தில் தேங்கியிருந்தது. இந்த வழக்கம் விஜயநகரப் பேரரசிலும் இருந்து வந்தது. இப்படி மதுரை நாட்டுக் கருவூலத்தில் இருந்த பணத்தைக் கொண்டுதான் திருமலை, போர்களை நடத்தி யிருக்கவேண்டும்; பல லட்சம் ரூபாய் செலவு செய்து அரிய கட்டடங்களைக் கட்டியிருக்கவேண்டும்; கோயில்

களில் பெரிய திருப்பணிகள் செய்திருக்கவேண்டும். திருமலை நாயக்கர் இப்படி மதுரை நாட்டு மக்கள் கொடுத்த பணம் அனைத்தையும் மதுரை நாட்டு மக்களுக்கே செலவிட்டார் என்பது பாராட்டுக்குரியது.

மக்கள் நிலை

திருமலை நாயக்கர் காலத்தில்போர்கள் நடந்தனவே அல்லாமல் சைவவைணவச் சமயச் சண்டையோ சாதிச் சண்டையோ இருந்ததில்லை. மதுரையில் நிரம்ப விழாக்கள் நடைபெற்றன. திருமலை காலத்திற்றான் மதுரை வீரன் வாழ்ந்து மறைந்து சாதாரண மக்கள் வழிபடுந் தெய்வமானதாய் மதுரை வீரன் கதையால் அறிகிறோம்.

திருமலை நாயக்கர் காலத்தில் நொபிலிபாதிரியார் கிறித்தவ சமய பிரசாரத்தை தொடங்கியபோது மதுரையில் எதிர்ப்புக்கிளம்பியது. திரிசிரபுரத்திலும் வேறு ஊர்களிலும் இச்சமயத்துக்கு எதிராக இந்துக்கள் கடுமையாகக் கிளர்ச்சி செய்தார்கள். பொதுவாகக் கிறிஸ்தவர்கள் இன்னலுக்கு ஆளானார்கள். சிறப்பாக 1630-ல் பாதிரிமார்கள் மிகுதியாகத் துன்புறுத்தப் பட்டார்கள். மைசூர் போராலும் மறவர் நாட்டில் நடத்திய போராலும் இந்நிலை நீடித்துக் கொண்டிருந்தது. திருமலை நாயக்கர் அடிக்கடி தலையிட்டு இத்துன் புறுத்தலைத் தடுத்தார். கிறிஸ்தவ நாடான இங்கிலாந்தில் 18 ஆம் - நூற்றாண்டு வரையிலும் ரோமன் கத்தோலியர்க்கு இன்னலான நிலை இருந்து வந்ததை பெருநாவலர் பர்க்கின் பேருரையிலும் ஆங்கில நாட்டு வரலாற்றிலும் காண்கிறோம். அதை நோக்க மதுரை நாட்டில் கிறிஸ்தவ சமயத்துக்கு எதிராக நடந்த ஒரு சில கிளர்ச்சிகளும் துன்புறுத்தல்களும் பெருமளவில்

இருந்தவை என்று சொல்ல முடியாது. பெரும்பாலும் மதுரை நாட்டு மக்களும் திருமலை நாயக்கரும் இந்து சமயப்பண்பாட்டுக்கு ஏற்றவாறு கிறிஸ்தவர்களிடம் விரிந்த நோக்குடனும் பரந்த மனப்பான்மையுடனும் நடந்து கொண்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

திருமலை நாயக்கர் காலத்திற்முன் மதுரை மீனாட்சி யம்மன் கோயில் பெருவிழாவும் சித்திரைத் திருவிழாவும் வைகாசி வசந்த விழாவும் நவராத்திரி விழாவும் தைப்பூச விழாவும் மிகச் சிறப்பாய் நடைபெறத் தொடங்கின.

கல்விநிலை

பொது மக்களிடம் கல்வியைப் பரப்புவது அரசாங் கத்தின் கடமைகளுள் ஒன்று என்பது இக்காலக் கொள்கையே அல்லாது அக்காலக் கொள்கை யன்று. ஒவ்வொரு சிற்றூரிலும் தனிப்பட்டவர்களால் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடந்து வந்தன. பொது மக்கள் ஆசிரியர்களை ஆதரித்து வந்தார்கள். திருமலை நாயக்கர் காலத்தில் மதுரையில் பெரினண்டஸ் பாதிரியார் இந்து சமய மாணவர்களுக்காக ஒரு தொடக்கப் பள்ளி வைத்து நடத்தினர்.

கல்வி முறை திருமலை மன்னர் காலத்தில் இனத்துக் குத் தக்கவாறு அமைந்திருந்தது. பார்ப்பனருக்குக் கல்வி கற்பித்த முறை மற்றவர்களுக்குக் கற்பித்த முறை யிலிருந்து மாறுபட்டிருந்தது. பெரும் புலவர்கள் வேத பாடசாலைகளில் வேதங்களையும் சாத்திரங்களையும் பார்ப் பனச் சிறுவர்களுக்குக் கற்பித்தார்கள். இப்பாட சாலைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டன. மதுரை நகரில் 10,000 க்கும் மேற்பட்ட பார்ப்பனச் சிறுவர்கள் கல்வி பயின்று கொண்டிருந்ததாய் நொபிலி

பாதிரியார் கடிதத்தால் அறிகிறோம். பார்ப்பனர்களுக்கு சமயக் கல்வியளிப்பதே திருமலை காலத்து நோக்கமாய் இருந்தது.

திருமலை, வடமொழியையும் தெலுங்கு மொழியையும் ஆதரித்தாரே அன்றித் தமிழ் மொழியை ஆதரிக்கவில்லை; தமிழ்ப்புலவர்களையும் ஆதரிக்க வில்லை. சுப்பிரதீபக்கவிராயர், "திருமலை நாயக்கர் காதல்" என்ற நூலை இயற்றி அவரது அவையில் அரங்கேற்றியபோது, அவர் அதன் சுவை அறியாது, 'அரவம் அத்வானம்' என்று கூறினராம். அப்புலவர் அந்த நூலின் பெயரைக் 'கூளப்ப நாயக்கன் காதல்' என்று மாற்றி யமைத்துக் கூளப்ப நாயக்கரிடமே சென்று, அவர்முன் அரங்கேற்றி அவரிடம் பரிசு பெற்றாராம். சுப்பிரதீபக் கவிராயர், திருமலை மேல் கொண்டிருந்த வெறுப்பை மறவாமல் தமது 'விறலிவிடு தூதில்' ஒரு பரத்தை கூறுவதுபோல, ,'சந்தியிலே மாமியிட்ட சண்டையிலே வந்ததொரு தொந்தி வடுகன் சுகிப்பானே" என்று திருமலை நாயக்கர் பெயரைச் சொல்லாமல் மறைமுகமாய் அஞ்சாமல் அவரைத் தொந்தி வடுகன் என்று குறிப்பிட்டுத் திட்டியிருக்கிறார். தொந்தி வயிற்றோடு இருந்தவர் திருமலை நாயக்கர். அதனாற்றான் புலவர் திருமலையைத் தொந்தி வடுகன் எனக் குறிப்பிட்டார்.

துறவியாய் இருந்த காரணத்தால் குமர குருபரரைத் திருமலை மன்னர் சமய நோக்கோடு ஆதரித்தார்; அவர் மீது அன்பு காட்டினர். அவரும் திருமலை மீது அன்பு கொண்டு தமது மீனாட்சியம்மன் குறம் என்னும் நூலின் இறுதியில்,

'நீர்வாழி! தென்மதுரை நின்மலனார் அருள்வாழி!
கார்வாழி! அங்கயற்கண் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி! கூடல்நகர்த் திருமலை பூபதிவாழி!
பேர்வாழி! அவன் செல்வம் பெரிதூழி வாழியவே!"

என்று வாழ்த்தியருளினார்.

திருமலை நாயக்கர் காலத்துத் தமிழ்ப் புலவர்கள்

தண்ணார் தமிழளித்த தண்பாண்டி நன்னாட்டில், பல கழகங்கள் நிறுவிப் பைந்தமிழ் வளர்த்த பாண்டி நாட்டில், நல்ல தமிழ் வளர்த்த நன்மதுரைப் பெரு நாட்டில், வடுகரான திருமலை நாயக்கர் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியை வளர்க்க முனையவில்லை. அவர் இந்து சமயத்தையும் சைவத்தையும் வைணவத்தையும் அழிந்து விடாமல் பாதுகாத்தாரே அன்றி, இச் சமயங்களை வளர்த்ததற்கு அடிப்படையாய் இருந்த தமிழ் மொழியை ஆதரிக்க நினைத்தாரில்லை. அவர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்திருந்தால் அவர் மீது எத்தனையோ சிறு பிரபந்தங்களாயினும் தோன்றியிருக்குமே! குமரகுருபரர் மீது திருமலை நாயக்கர் அன்பு காட்டியிருந்தும், அவர் கூட இவ்வரசர் மீது ஒரு பிரபந்தமும் இயற்றவில்லை; தாம் இயற்றிய மீனாட்சியம்மை குறம் என்னும் சிற்றிலக்கியத்தின் இறுதியில் மட்டும் திருமலை பூபதி வாழி என்று வாழ்த்தினார். அவர் துறவியாய் இருந்ததனால் திருமலை மீது ஒரு சிறு பிரபந்தமும் இயற்றவில்லை போலும்!

குமரகுருபரர் முன்னே குறிப்பிட்டவாறு திருமலை காலத்தில் வாழ்ந்தவர். இவர் நெல்லை மாவட்டத்தி லுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் சண்முக சிகாமணி கவிராய ருக்கும் சிவகாமி சுந்தரி அம்மையார்க்கும் அருந்தவப் புதல்வராய்ப் பிறந்து ஐந்து ஆண்டுகள் வரைக்கும் ஊமையாய் இருந்து, பின்பு பேசிக் கல்வி கற்றுச் சிறந்த புலவராயும் நலம் மிக்க கவிஞராயும் விளங்கியவர். இவரே திருப்பனந்தாள் மடத்தைச் சேர்ந்த குமாரசாமி மடத்தைக் காசியில் நிறுவியவர். இவர் காசியிலேயே இறைவன் திருவடிநீழலுற்றார்.

இவர்கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லிமாலை, சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் யாப்பிலக்கண நூல் முதலியவற்றை இயற்றினர். திருமலை நாயக்கர் வேண்டுகோளால் இவர் திருக்குறள் கருத்துகளை வைத்து நீதிநெறி விளக்கம் என்னும் அரிய சிறிய நூலையும் இயற்றி யுள்ளார்.

அஷ்டப் பிரபந்தம் இயற்றிய மணவாளதாசர் என்ற பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் திருமலை நாயக்கரிடம் அலுவல் பார்த்தவர் என்பர். இவரே அஷ்டப் பிரபந் தத்தை இயற்றியவர். அழகர் அந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்து அந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கத்து ஊசல், திருவேங்கடத்து அந்தாதி, திருவேங்கட மாலை, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்னும் எட்டு நூல்களும் அஷ்டப் பிரபந்தம் எனப்படும். திரிபு, யமகம், சிலேடை ஆகிய இவ்வகைப் பாடல்களை இயற்றுவதில் இணையற்றவர் இவர்.

சுப்பிரதீபக் கவிராயர் என்பவர் திருமலை மன்னர் காலத்தவர் என்பதை முன்னமே கண்டோம். இவர் கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடு தூது ஆகியவற்றை இயற்றியவர். இவர் பழனியில் இருந்தவர். இவர் 1710-ல் தமிழகம் வந்த பெஸ்கி என்ற வீரமாமுனிவரான இத்தாலிய நாட்டுக் கத்தோலிக்கப் பாதிரியாருக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர் என்பர். அப்படியானல் கவிராயர் நீண்டகாலம் வாழ்ந்தவராதல் வேண்டும்.

இராபாட்-டி-நொபிலி பாதிரியாரும் (Robert de Nobili) திருமலை காலத்தில் மதுரை நாட்டில் கிறிஸ்தவ சமயத்

தொண்டு செய்தவர் என்று முன்னரே அறிவோம். இவர் காவியுடையும் சந்தனப் பொட்டும் கடுக்கனும் பொற்பூணூலும் அணிந்து தம்மை இத்தாலிய நாட்டுப் பார்ப்பனர் என்று கூறிக்கொண்டு கிறிஸ்தவ சமயப் பிரசாரம் செய்து வந்தவர். இவர் தம் பெயரையும் தத்துவ போதகர் என்று மாற்றிக் கொண்டாராம். இவர் கிறிஸ்தவ சமய பிரசாரத்துக்காகத் தமிழில் உரைநடை நூல்களை இயற்றினர்.

நொபிலி பாதிரியார் ஞானோபதேச காண்டம், மந்திரமாலை, ஆத்தும நிர்ணயம், தூஷண நிக்கிரகம், சத்திய வேத லஷண சகுண நிவாரணம், பரமசூட்சு மாபிப்பிராயம், கடவுள் நிருணயம், புனர்ஜன்ம ஆட்சேபம், நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி, சேசுநாதர் சரித்திரம், தவசுச்சதம், ஞானதீபிகை, நீதிச்சொல், அநித்திய நித்திய வித்யாசம், பிரபஞ்ச விரோத வித்யாசம், தமிழ்—போர்ச்சுகீசு அகராதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

காளமேகப் புலவர் தமது பாடல்கள் சிலவற்றில் குறிப்பிட்டிருக்கும் திருமலைராயர் என்னும் பெயரைக் கண்டு பலர் திருமலைராயரைத் திருமலை நாயக்கராக நினைத்து மயங்குவதைக் காண்கிறோம். திருமலைராயர் என்பவர் வேறு; திருமலை நாயக்கர் வேறு. திருமலைராயர் என்பவர் விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாய்த் தமிழகத்தில் இருந்தவர். இவர் சாளுவ வம்சத்துக் கோப்பயன் என்பவர்க்குப் புதல்வர். இவருக்குரிய பட்டப் பெயரோ விதரணராமன் என்பது. இவ்வுண்மையைக் காளமேகப் புலவர் தமது 'இந்திரன் கலையாய்' என்று

தொடங்கும் தனிப்பாடலில்,

"என்னைநிலை செய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்தர புயனும் கோப்பயன் உதவு
மகிபதி விதரண ராமன்"

என்று கூறுவதால் நன்கறியலாம், இவர் செய்த அறங்களைப் பற்றிய சாசனங்கள் திருவானைக்கா, தஞ்சைப் பாபநாசம், பட்டீச்சுரம், ஸ்ரீரங்கம், தஞ்சைப் பெரிய கோயில் இவற்றில் உண்டு. திருவானைக்காவின் கோயில் சாசனம் இவரைக் 'கோபராஜாவின் குமாரர் சாளுவத் திருமலை ராஜா' என்று குறிப்பிடுகின்றது. திருமலை ராயர் புதிதாக அமைத்துக்கொண்டு ஆட்சி செய்த நகரே இன்றைய காரைக்கால் பகுதியில் இருக்கும் திருமலைராயன் பட்டினமாகும். இவர் காலம் கி.பி. 1454-1468 ஆகும். இச்செய்தியைத் திரு. மு. அருணசலம் அவர்கள் இயற்றிய அரிய நூலாகிய 'தமிழ் இலக்கிய வரலாறு-15ஆம் நூற்றுண்டு' என்னும் நூலில் விரிவாய்க் காணலாம். திருமலை மன்னருக்கு (1623-1659) முற்பட்டவர் திருமலைராயர் என்பதறிக.

தமிழகத்தில் குடியேறியவர்கள்

சங்க காலத்திலேயே ஆரியர்கள் தங்கள் வேத மதத்தைப் பரப்பத் தமிழகத்தில் குடியேறினர்கள். அக்காலத்திலும் ஆய் அண்டிரன் என்ற ஆந்திரனும் இருங்கோவேள் என்ற கன்னடனும் தமிழகத்தில் இருந்ததைப் புறநானூற்றுப் பாக்கள் தெரிவிக்கின்றன. விஜயநகர ஆட்சியில் வடுகர்களான நாயக்கர்களும், ரெட்டியார்களும், கன்னடர்களும் பலவகைத் தொழில்களை மேற்கொண்டு தமிழ்நாட்டில் குடியேறி வாழ்ந்து வந்தார்கள். திருமலை நாயக்கர் பட்டுநூல் நெசவுத்

தொழிலை மதுரையில் வளர்க்கச் சௌராட்டிரர்களை மதுரை நகரில் குடியேறச் செய்தார். இந்தச் சௌராட்டிரர்கள் திருமலை மன்னர் காலத்தில் அவருடைய சரிகை வேலைப்பாடமைந்த துணிகளை நெய்வதற்காக மதுரைக்கு வந்து குடியேறி, அவரது அரண்மனையைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்து வரலானார்கள் என்பது செவி வழிச் செய்தியாகும். இவர்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். சௌராட்டிரர் என்னும் சொல்லுக்குக் கதிரவனை வழிபடுவோர் என்பது பொருள். இவர்கள் முன்னோர்கள் கத்தியவார் என்று சொல்லப்படும் சௌராட்டிர நாட்டைச் சேர்ந்தவர்களானதால், இவர்களைச் சௌராட்டினர் என்று கூறுவதும் பொருந்தும். இவர்களின் முன்னோர்கள் அந்நாட்டில் பட்டுநூல் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களுள் ஒரு பகுதியினர் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் குமாரகுப்தன் என்ற மன்னன் விருப்பத்திற்கு இணங்கி மாளவ நாட்டிலிருக்கும் மந்தசோர் நகரத்தில் குடியேறினர். இவர்கள் அங்கு குடியேறியது குறித்து அங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றனவாம். அக் கல்வெட்டில் சௌராட்டிரர்கள் பட்டவாயகர் என்று குறிக்கப்பட்டுள்ளார்கள். இத்தொடரின் நேரான மொழி பெயர்ப்பு, பட்டு நூல்காரரர் என்பது. இவர்கள் கஜினி முகமது ~~படை~~ படையெடுப்பால் மந்தசோரைவிட்டுத் தேவகிரியை அடைந்து அங்கு வசித்தார்கள். அத் தேவகிரி மீது மாலிக்கபூர் படையெடுத்தபோது இவர்கள் விஜய நகரத்தை அடைந்து அங்கு வசித்து வந்தார்கள். விஜய நகரம் தலைக்கோட்டைப் போரில்-1565-ல்-முஸ்லீம்களால் அழிக்கப்பட்டபோது, இம்மக்கள் அதைவிட்டு விஜய நகரத்துக்குத் தொடர்புடைய மதுரைக்கு வந்து சிறிய அளவில் குடியேறினர்கள். திருமலை நாயக்கர் காலத்தில்

அவர் விரும்பியவாறு சௌராட்டிரர்கள் பெருமளவில் மதுரையில் அரண்மனையைச் சுற்றிக் குடியேறி நிலையாக வாழ்ந்து வரலானார்கள். இவர்கள் கடவுள் பக்தி மிகுந்தவர்கள்; திருவிழாக்களில் கலந்து கொள்வதில் பெரு விருப்புமிக்கவர்கள். இவர்கள் மொழி சௌராட்டிரம். இதற்கு எழுத்துகளும் உண்டு. சமய இலக்கியங்களும் இம்மொழியில் சிறிய அளவு இருக்கின்றன. இம்மொழி பிராக்கிருத மொழியினத்தைச் சேர்ந்தது. சௌராட்டிர மொழியில் தெலுங்கு, மராத்தி, தமிழ் முதலிய சொற்களும் கலந்திருக்கின்றன. இதற்குக் காரணம் இவர்கள் பல இடங்களில் குடியேறிக் குடியேறி வந்ததேயாகும்.

கலைநிலை

சமுதாய வாழ்வில் கலை தலைசிறந்த இடம் பெறுகிறது. இக்கலை மக்கள் உள்ளக் கிளர்ச்சியால் மலர்கிறது. இப்படி மலருங் கலையைத் தமிழர்கள் தெய்வத்தன்மை பொருந்தியதாய்க் கருதித் தெய்வக் கலை என்றார்கள். பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார், மனுநிதிச் சோழன் மகன் வீதிவிடங்கன் கலை பயின்றதைக் கூறுகையில், "சிவமுயன்று அடையும் தெய்வக்கலை பல திருந்த ஓதி" என்றார். தெய்வக் கலைகளான சிற்பம், ஓவியம், நடனம் ஆகிய கலைகளைத் தமிழ்மக்கள் தெய்வத்துக்கே பயன்படுத்தினார்கள். ஆதலால், தமிழகம் தெய்வக்கலை மலிந்த கோயில்கள் நிறைந்த பொன்னகமாய் விளங்குகிறது. இக்கலை நிலையும் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வந்தது. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் சிற்பக் குன்றுகளும் கற்கோயில்களும் தோன்றின; பிற்காலச் சோழர்கள் நாளில் மிக அழகான கோபுரங்கள் எழும்பின; விஜயநகர மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பெருங் கோபுரங்களும் ஆயிரக்கால் மண்டபங்

களும் எழும்பின. மதுரை நாயக்கர்கள் விஜயநகரத்தி லிருந்து வந்து ஆட்சியை மேற்கொண்டவர்களாதலால், அவர்கள் அந்தப் பெருமுறையை ஏற்றுத் தங்கள் காலத்தில் மதுரை நாட்டில் இருந்த சில கோயில்களுக்குக் கோபுரங்கள் கட்டினார்கள்; மண்டபங்கள் அமைத்தார்கள்; சிற்பங்களைச் செய்வித்தார்கள்; ஓவியங்களைத் தீட்டினார்கள். மாமதுரை நகரிலுள்ள கோயிற் சிற்பங்களுக்கும் கவின்கலைக்கட்டடங்களுக்கும் காரணமானவர்கள் விசுவநாத நாயக்கரும் திருமலை பூபதியுமே ஆவார்கள். இவ்விருவருள் கலைச்செல்வம் மிகுந்த புது மண்டபத்தைக் கட்டித் தென்னகத்துத் தாஜ்மகால் என்னுமாறு வனப்பு மிகுந்த அரிய அரண்மனையை எழுப்பிக் கண்கவரும் அழகிய தெப்பக் குளத்தை அமைத்து, மீனாட்சியம்மன் கோயிலில் திருப்பணிகள் நடத்திப் பற்பல விழாக்களைப் பிற்காலத்திலும் நடைபெறுமாறு ஏற்பாடு செய்து, மாமதுரை நன்னகரை இனிய கலைநகராயும் விழாநகராயும் செய்த பெருமை திருமலை மன்னனுக்கே உரியது என்பதில் ஐயமில்லை. இக்கலைச் செல்வங்கள் இருக்கும் வரைக்கும் திருமலையின் புகழ் மங்காது, மறையாது.

அ. கி. ப. நூல்கள்

நல்ல தமிழ் எழுத வேண்டுமா?

இது மாணவர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அலுவலக எழுத்தர்களுக்கும் வெளியீட்டு நிலையங்களுக்கும் அச்சகங்களுக்கும் பிழை நீக்கித் தமிழ் எழுத உதவுவதோடு உடனடிப் பார்வைத் திருத்தக் கையேடாகவும் பயன்படும் இன்றியமையாத நூலாகும். ஐம்பது ஆண்டுகள் பட்டறிவால் இயற்றப் பட்டது இந்நூல். (ஐந்தாம் பதிப்பு). ரூ. 6-00

கவிஞராக

கவிதை எழுதும் முறையை எளிய நடையில் பலரும் நன்கு தெரிந்து கொள்ளுமாறு விளக்கமாக வழிகாட்டுவது இது. ரூ. 5-00

பேச்சாளராக

இது பேச்சாளராவதற்குப் பெருந்துணை புரியும் அரிய வழிகாட்டி. (நான்காம் பதிப்பு) ரூ. 2–50

திருக்குறளும் புதுமைக் கருத்துகளும்

இது திருக்குறளில் காணப்படும் அரசியல், பொருளாதாரம், உடல்நல வழிகள், பண்பாடு, சர்வோதயம் ஆகிய கருத்துகளை எடுத்துக் காட்டுவது. (இரண்டாம் பதிப்பு) ரூ. 1-50

வாழ்க்கைக் கலை

இது வாழ்க்கையை நன்கு நடத்துவதற்கு வழி காட்டுவது. (ஏழாம் பதிப்பு) ரூ. 3-00

எங்கள் தோட்டம்

இந்நூல் சிறுவர்கள் பாடி மகிழும் பாடல்களின் தொகுப்பு; படிக்க இனிப்பது; படங்கள் நிரம்பியது. ரூ. 2-00

மதுரை நாயக்கர் வரலாறு

இது மதுரை நாட்டை ஆண்ட 13 நாயக்கர்களைப் பற்றியும், அவர்கள் காலத்தைப் பற்றியும் விரிவாகக் கூறுவது. (மூன்றும் பதிப்பு) ரூ. 10-00